Pl. 24

5785

PRESENTED BY:
V. PR. VL. M.
KASIVISWANATHAN [illegible]
PAGANERI.

5752

தனவைசிய இளைஞர் கலைக்கழ்,
பாகனேரி.

H. 24

PRESENTED BY:
V. PR. VL. M.
KASIVISVANATHAN [illegible]
PAGANERI.

எல்லோரும் ஓர் குலம்

(ஐக்ய நாடுகள் சபையும்-வாலிபர்களும்)

எழுதியவர்கள் :

எலினார் ரூஸ்வெல்ட்

ஹெலன் பெரிஸ்

தமிழாக்கம்

கே. எஸ். ஜம்புநாதன்

டபிள்டே கம்பெனி—கார்டன் சிடி, நியூயார்க்

வெளியிட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு.

B-1

பதிவு உரிமை 1950;

எலினர் ரூஸ்வெல்ட், ஹெலன் பெரிஸ்

ஆகியவர்களுடையது.

Published by Higginbothams Ltd. and Printed by A. Sendall at
The Associated Printers (Madras) Ltd., Madras.

By special arrangement with The Junior Literary Guild and
Doubleday & Co. Inc., Garden City, New York.

பொருளடக்கம்.

1.	பிரதிக்ஞை	7
2.	குழந்தைகள் சகாய நிதி ...	37
3.	மனம் ஒன்று, பாஷையும் ஒன்று...	49
4.	சேவையே செல்வம்	68
5.	அகண்ட ஜோதி	82
6.	சுகாதார ஸ்தாபனம்	101
7.	பாலவனத்தில் மணியோசை ...	123
8.	திக்கற்றவர்களுக்கு	150
9.	எல்லோரும் ஓரினம்	165
10.	ஒரே கீதம்—ஒரே உலகம் ...	176
11.	ஜீவாதார உரிமைகள்	193

ஒரு வார்த்தை

(மொழிபெயர்ப்புப் பற்றி)

மனித சமுதாயம் முழுவதும் ஓர் குலம் என்ற எண்ணம் பல நாட்களாக இருந்தும் செயலில் மாறியது சமீபத்தில்தான். ஐக்யநாடுகள் சபை, எதிர்காலப் பிரஜைகளான குழந்தைகளின் முன்னேற்றத்துக்காகவும், ஒற்றுமைக்காகவும், பல்வேறு ஸ்தாபனங்களின்மூலம் செய்துவரும் வேலைகளைப் பற்றி தெளிவாகவும் சுருக்கமாகவும் கொடுக்கிறது இந்தப் புத்தகம். ஐ. நா. சபையில், ஆசியா நாடுகளுக்கு வழிகாட்டுவதுபோல, இந்தியா பிரதான ஸ்தானம் வகித்து அற்புதமாக வேலை செய்து வருகிறது. ஐ. நா. சபையின் விசேஷ எஜென்ஸிகளான ஒவ்வொரு சர்வ தேச ஸ்தாபனத்திலும் இந்தியா பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. மனமுவந்து அள்ளிக் கொடுப்பதுடனும், இந்திய அறிஞர்களின் சேவையையும் அளித்திருக்கிறது. சர்வ தேச அரங்கத்தில் ஒவ்வொரு துறையிலும் இந்தியா செய்யும் சேவையைப் பற்றி புத்தகமாக எழுதலாம். அமெரிக்காவின் நல்லெண்ணத்தையும் நல்லுறவையும் நன்றுகப் புரிந்து கொண்டு சர்வதேச அரங்கில், கட்சிப் பற்றின்றி, மனித சமுதாயம் உய்யவும் எல்லோரும் ஓர் குலமாக வாழவும் இந்தியா அமெரிக்க நாடுகளுடனும், ஜனநாயகத்திலும் மனித உரிமைகளிலும் நம்பிக்கை கொண்ட மற்ற நாடுகளுடனும் தோள் கொடுத்து நிற்கிறது.

'சர்வதேச சபையும்—யுவர்களும், சம பாகஸ்தர்கள்' என்று பொருள்படும் ஆங்கிலப் பெயரை 'எல்லோரும் ஓர் குலம்' என்று தமிழாக்கியிருக்கிறேன். சரளமாகவும், கோவையாகவும் சொல்ல வேண்டும் என்ற ஆசையில் நூல் முழுவதும் மொழி பெயர்ப்புச் செய்திருக்கிறேன். தமிழ் மக்கள், இந்த நூலைப் பெரிதும் வரவேற்பார்கள் என்பதே என்னுடைய நம்பிக்கை.

மொழிபெயர்ப்பாளர்.

முகவுரை

ஐக்கியநாடுகளின் அமைப்பைப்பற்றி என்னுடைய கணவர் எத்தனையோ கனவுகளும் ஆசைகளும் கொண்டிருந்தார். அவற்றைப்பற்றி அவர் பேசும்போதே இந்த மாதிரி ஒரு புத்தகம் எழுத வேண்டும் என்ற ஆசையும் எனக்குத் தோன்றிற்று. என்னுடைய கணவர் மக்களுடைய க்ஷேமத்தையே கருதினர். சர்வதேச ஸ்தாபனத்தைப்பற்றிப் பேசினர். அவர் மக்களை—மனித சமுதாயத்தை—நேசித்தார். எல்லோரும் ஒருகுலமாக வாழ முடியும் என்று நம்பினர்.

இந்தப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சிறுவர்களைப்பற்றிக் கதை கதையாகப் படிக்கும்போது நானும் அவர்களுடன் கலந்து கொள்ளவே விரும்பினேன். ஆர்தருடைய பால் பவுடர் பயத்தையும், கைரியாவின் முரட்டுத்தனத்தையும், கோவூர் அத்தையின் பெருமையையும் பெருமிதத்தையும் நொண்டி பிராங்கியின் உத்சாகத்தையும் அவர் பெரிதும் ரசித்திருப்பார்.

ஐ. நா. சபையின் வேலையைப் பற்றியும், குழந்தைகளின் உத்சாகத்தைப் பற்றியும் கிடைத்த செய்திகளை எல்லாம் இதில் சேர்க்க வேண்டும் என்று நானும் ஹெலன் பெரிசும் ஆசைப் பட்டோம். ஒரே புத்தகத்தில் அத்தனை சம்பவங்களையும் கதைகளையும் அடக்கி விடுவது சுலபமாகத் தோன்றவில்லை. ரேடியோ செய்தி, கட்டுரைகள், பேட்டிகள், ஊழியர்களின் குறிப்புகள், என்று விதம் விதமான தகவல்களிலிருந்து மிகவும் முக்கியமான சிலவற்றை மட்டும் பொறுக்கி எடுத்தோம். ஐ. நா. சபையின் பாகஸ்தர்கள் யுவர்கள்—எதிர்கால ஐக்ய உலகத்தின் பிரஜைகள் யுவர்கள்—என்று எண்ணியதுடன், அவர்களுடைய ஐக்யத்துக்காகவும், பரஸ்பரம் அறிமுகத்துக்காகவும் நடந்த சம்பவங்களையும் ஐ. நா. சபையின் வேலைத் திட்டத்தையும் மட்டுமே இங்கு தொகுத்துக் கொடுத்திருக்கிறோம். ஐ. நா. சபையின் பல்வேறு ஸ்தாபனங்கள் செய்துகொண்டிருக்கும் வேலைகளைப்

பற்றியும், சுவாரஸ்யமான சம்பவங்களையும் சேகரித்துக் கொடுத்த நண்பர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றி. சிறுவர்களுக்கும் எங்களுடைய நன்றி உரித்தாகுக.

ஹைட் பார்க், நியூயார்க்,
ஆகஸ்டு 1950.

எலினர் ரூஸ்வெல்ட்.

எல்லோரும் ஓர் குலம்

1. பிரதிக்ஞை

அமெரிக்க நாட்டிலுள்ள ஸான்பிரான்ஸிஸ்கோ நகரில் 1945-ஆம் ஸ்ரீ ஜூன்மீ 26-ஆம் தேதியன்று ஐம்பது தேசங்களின் பிரதிநிதிகள் கூடினர்கள். அன்றுதான் அவர்கள் எதிர்காலப் பிரஜைகளான எல்லா நாட்டுக் குழந்தைகளும் பரஸ்பரம் துவேஷமின்றி, சுகமாகவும், சந்தோஷமாகவும் ஒரே குடும்பத்தாரைப்போல வாழ வேண்டும்—வாழ வழி செய்ய வேண்டும்—என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள். அன்று ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் ஐம்பது நாட்டுப் பிரதிநிதிகளும் ஏகோபித்த மனத்துடன் கையெழுத்திட்டார்கள். ஐக்கிய நாடுகளின் சாசனத்தின் ஆரம்ப வார்த்தைகள் வருமாறு: 'ஐக்கிய நாடுகளின் பிரஜைகளான நாங்கள் யுத்த நாசத்தில் சிக்காமல் நம்முடைய சந்ததியார்களைக் காப்பாற்ற உறுதிகொண்டுள்ளோம்.' எதிர் காலத்தில் யுத்தமே இல்லாமல் சர்வதேச சமரஸமும் சமாதானமும் ஏற்படவேண்டும் என்பதே அங்கு கூடியிருந்த அரசியல்வாதிகளின் ஆசை. குழந்தைகளையும் வாலிபர்களையும் கண்ணுக்குக் கண்ணைக காப்பாற்றவேண்டும் என்று அவர்கள் நிச்சயித்தார்கள்.

எல்லாக் குழந்தைகளும், இன வர்க்க பேதமின்றி, நல்ல உணவு, ஆரோக்கியம், மனச்சந்துஷ்டி, பரஸ்பர நல்லுறவு இவைகளை அனுபவித்து வாழவேண்டும். சர்வதேச ஒற்றுமையும் சமாதானமும் சுபிட்சமும் நிறைந்த புது உலகத்தை நம்முடைய குழந்தைகளுக்காகச் சிருஷ்டிக்க வேண்டும் என்பதே ஐ.நா. ஸ்தாபனத்தின் பிரதான வேலை. ஒவ்வொரு நாட்டுச் சர்க்காருடனும் கலந்து திட்டமிட்டு குழந்தைகளுக்குச் சுக வாழ்வு

அளிக்க ஐ. நா. ஸ்தாபன கோஷ்டிகள் நாடு நாடாகச் சென்றார்கள். உலகிலுள்ள பல நாட்டுக் குழந்தைகள் எல்லோரும் இனி ஒரே குலம். தம் தம் நாட்டில் வசித்தாலும் குழந்தைகள் எல்லோரும் ஐக்கிய நாடுகள் என்ற குடும்பத்தின் சம பாகஸ்தர்கள்: ஐ. நா. ஸ்தாபனத்தின் முயற்சியினால் நாடு விட்டு நாடு சென்று வாலிபர்களும் யுவதிகளும் புதிதாக ஏற்பட்ட உறவை வலுப்படுத்திக்கொள்வார்கள். ஒருவரையொருவர் நன்றாகத் தெரிந்துகொண்டு சௌஜன்யமாக வாழ நெருங்கிப்பழகுவார்கள்.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் கூடிய அறிஞர்களுக்கு உடனடியாகக் கவனிக்கவேண்டிய பிரச்னை ஒன்று காத்திருந்தது. இரண்டாவது உலக யுத்தத்தில் பல நாடுகள் அழிந்து அல்லோலப்பட்டன. அந்த நாடுகளிலுள்ள பல குழந்தைகளும், யுவதிகளும் வாலிபர்களும் வீடு வாசல்களையும் பெற்றோர்களையும் இழந்து அனாதைகளாகிவிட்டார்கள். தங்க இடமின்றி, உண்ண உணவு இன்றி, ஆயிரமாயிரம் குழந்தைகள் தவித்தனர். மழைக்கும் பனிக்கும் வெயிலுக்கும் பயந்து ஒதுங்க, இடிந்து பாழடைந்த வீடுகளிலும், சாக்கடைப் பள்ளங்களிலும், பயனற்ற ரெயில்வே வண்டிப் பெட்டிகளிலும், ஒண்டிக்கொண்டு தவித்தார்கள். குடும்பங்கள் சிதறுண்டு மூலைக்கு மூலை ஓடின. பல குழந்தைகள் பெற்றோர்களைவிட்டுப் பிரிந்தனர். தாயும் தகப்பனும் உயிருடன் இருக்கிறார்களா, எங்கு இருக்கிறார்கள்—அல்லது இறந்து மடிந்தார்களா என்றுகூடத் தெரியாமல் பல குழந்தைகள் தவித்தனர். ஒரு சில குடும்பங்கள் கஷ்டங்களை எதிர்த்து நின்று பிரியாமலிருந்தார்கள். ஆனாலும் அவர்களால் சந்தோஷமாக வாழ முடியவில்லை. பசியும் பனியின் கொடுமையும் அவர்களை வாட்டின. இவர்களுக்குத் தங்க இடமும், உண்ண உணவும், வைத்திய வசதியும் கொடுத்துக் காப்பாற்ற ஐ.நா. ஸ்தாபனம் முன் வந்தது. குழந்தைப் பருவத்திலுள்ள இந்த ஸ்தாபனம் மிகவும் பெரியதொரு பொறுப்பை ஏற்றுக்கொண்டது.

பண உதவி, பண்ட உதவி என்றுல்கூடச் சுலபமாகச் செய்துவிடலாம். பிரிந்துபோய்த் தவிக்கும் குடும்பத்தினரைத் தேடிக் கண்டு பிடித்து ஒன்று சேர்ப்பது—அதுவும் தேசம் தேசமாகத் தேடித் திரிந்து கண்டு பிடிப்பது சுலபமான காரியமல்ல. மனித சமூகத்துக்குச் செய்ய வேண்டிய கடமை, சர்வதேச சமரஸ சமாதானத்துக்கும் சுக வாழ்வுக்கும் முதல் வேலை இது என்று நிச்சயித்து, மிகவும் துணிச்சலுடன் இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. ஆரம்பத்தில் ஐ.நா. ஸ்தாபன ஊழியர்கள் எப்படி வேலை செய்தார்கள், எங்கு எங்கு அலைந்தார்கள்? துப்பறியும் போலீஸ்காரனைப்போல, வேவு பார்த்து எப்படி வேலை செய்தார்கள், உயிருக்கும் துணிந்து சேவை செய்யவேண்டும் என்ற ஆர்வத்தில் என்ன என்ன செய்தார்கள்—இவை எல்லாம் புத்தகம் புத்தகமாக எழுத முடியும். மயிர்க் கூச்செறியும் சம்பவங்களும், இரத்தக் கண்ணீர் வடிக்கும் சம்பவங்களும் அவர்கள் அனுபவித்தார்கள்.

ஹனு ஸ்போடிவாவுக்கு (Hana Spotiva) 1942-ஆம் ஆண்டில் மூன்று பிராயம்தானே யிருந்தது. அழகான குழந்தை; பொன்னிறமான மேனி, தங்கச் சுடர் தெறிக்கும் மயிர்; குறு குறுத்த நீலக் கண்கள். செக்கோஸ்லாவாக்கியாவிலுள்ள லிடிஸ் நகரத்தில் அவள் பிறந்தாள். 1942-ஆம் ஜூன் மாதத்தில் ஒரு நாள் நாஜி வீரர்கள் ராணுவ லாரிகளில் வந்து லிடிஸ் நகரில் இறங்கினர்கள். ஹனுவின் பெற்றோர்களையும், ஊரிலுள்ள மற்றவர்களையும் தெருவில் வந்து அணி வகுத்து நிற்கும்படி உத்திரவிட்டார்கள். ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாகப் பிரித்து நிறுத்தினர்கள். பதினைந்து வயதுக்கு மேற்பட்ட ஆண்களை மிஷின் துப்பாக்கி கொண்டு சுட்டுத் தள்ளினர்கள். ஆம்! சுட்டுத்தள்ளினர்கள். தெருக்களில் இரத்த வெள்ளம் பெறுகிற்று. பிணக் குவியல்களைக் கண்டு பெண்கள் கதறினர்கள். ஹனுவின் தாயாரையும் மற்றப் பெண்களையும் ராணுவ லாரிகளில் ஏற்றினர்கள். அவர்களிடமிருந்து குழந்தைகளைப் பிரித்து வேறு லாரிகளில் அடைத்

தார்கள். சிறைகளில் அடிமைகளாக வேலை செய்ய பெண்களை கொண்டுபோனார்கள்.

ஹனுவைச் சேர்த்துச் சுமார் நூறு குழந்தைகள் இருந் தார்கள் அங்கே. அவர்கள் எல்லோரையும் ஒரே லாரியில் அடைத்துக்கொண்டு கிளம்பினர்கள். போகும்போதே ஊரைத் தீக்கிரையாக்கினர்கள். நெருப்புப் பற்றிக்கொண்டு கூரைகள் வெடித்து வீழ்ந்தன. பிணங்கள் கரிந்து பொசுங்கின. எங்கே பார்த்தாலும் புகையும் நாற்றமும். குழந்தைகள் பயத்தால் நடுங்கி அலறினர்கள். லாரிகள் புறப்பட்டன.

லிடிஸ் மக்கள் செய்த குற்றம்தான் என்ன? படு கொலை நடத்தும்படி என்ன நேரிட்டுவிட்டது? நாஜிகளின் பேயாட்டத் துக்கு ஆளாகக் காரணம் என்ன? ஜர்மனியனை ஜெனரல் ஹேடிரிச் (S. S. General Heydrich) என்பவன் செக் நாட்டில் கொலை செய்யப்பட்டானும். அதற்காக பழிக்குப் பழி வாங்கி விட்டார்கள். நாஜிகளை எதிர்த்து நிர்ப்பவர்கள்—நாஜிகளுக்குத் தீங்கு நினைப்பவர்கள்—என்ன பாடுபட நேரிடும் என்பதற்கு லிடிஸ் நகர சொக்கப்பானை உதாரணமாக இருக்கட்டும் என்று நாஜிகள் கொக்கரித்தார்கள். ஆனால் நாகரிக மக்கள் அதை ஒரு படிப்பினையாக ஏற்றுக்கொள்ளவில்லை. லிடிஸ் அட்டூழியம் போன்றதொரு சம்பவம் எதிர் காலத்தில் எங்குமே நடக்கக் கூடாது என்று மக்களை உறுதிகொள்ளச் செய்தது.

ஹனுவை எங்கே கொண்டு போனார்கள்? மற்றக் குழந் தைகளின் கதி என்ன ஆயிற்று? எவருமே கவனிக்க முடிய வில்லை. ஐந்து வருஷங்கள் சென்றன. யுத்தம் முடிந்துவிட்டது. நாஜிகளின் கொட்டம் அடங்கி அழிக்கப்பட்டனர். இதன் நடுவே சர்வதேச ஸ்தாபனம் தோன்றிற்று. ஜர்மனியிலுள்ள எஸ்லிங்கன் (Esslingen) என்னும் நகரிலுள்ள ஒரு பழைய மாவு மில் கொட்டடியில் சில ஊழியர்கள் கூடினர்கள். கையில் கிடைத்த தஸ்தவேஜுகளை எல்லாம் படித்துப் பார்த்தார்கள். குடும்பம் சிதறி மூலைக்கு ஒருவராக ஓடிப்போனவர்களை ஒன்று

சேர்த்து சொந்த வீடுகளில் குடியேற்றவேண்டும் என்ற நல் லெண்ணத்துடன் கூடியவர்கள் இவர்கள்; சர்வதேச சபையின் சார்பாக காணுமற்போன குழந்தைகளை கண்டுபிடிப்பதற்காக அமைக்கப்பட்ட ஸ்தாபன ஊழியர்கள் இவர்கள்.

சிறை முகாமில் தவித்துக்கொண்டிருந்த ஹன்னவின் தாயார் விடுதலையடைந்தாள். அவளுக்குக் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை. யுத்தத்தின் கொடுமையிலிருந்து தான் தப்பியதுபோல மகளும் தப்பியிருக்க மாட்டாளா என்ற ஆசை. தன்னுடைய குழந்தையைக் கண்டு பிடித்துத் தரு மாறு அவள் கேட்டுக்கொண்டாள். நாஜிகளின் அட்டூழியங் களுக்கு ஆளான குழந்தைகளைப் பற்றியும் அவர்கள் தூக்கிச் சென்ற குழந்தைகளைப்பற்றியும் செக் சர்க்கார், ஏறக்குறைய தகவல் சேகரித்து ஒரு பட்டியல் தயாரித்திருந் தார்கள். அதிலிருந்து ஹன்னவின் போட்டோவை எடுத்துக் கொண்டு அந்த ஊழியர்கள் ஊர் ஊராய் அலைந்தார்கள். சிறு வயதில் எடுத்த போட்டோ என்றாலும் ஹன்னவின் படத் தைப் பார்த்தவர்கள் அதை எளிதில் மறந்துவிட முடியாது. எவ்வளவு அழகு வாய்ந்த குழந்தை! தற்காலம் வயது எட்டு ஆகிவிட்டதே, உருவம், வடிவம் பெருகியிருக்கவேண்டும். அடையாளம் கண்டு பிடிக்க இயலுமா? அவள் உயிருடன் இருக்கிறாளா? இறந்துவிட்டாளா? உயிருடன் இருந்தால் எந்த நாட்டில் எந்த ஊரில் இருக்கக்கூடும்? இப்படிக் கேள்வி மேல் கேள்வியாகத் தோன்றிற்று. இருந்தாலும் ஊழியர்கள் மனம் தளரவில்லை.

குழந்தைகளை ஏற்றிச்சென்ற ராணுவ லாரிகள் எங்கு எங்கு சென்றன என்று புலன் விசாரிக்க ஆரம்பித்தார்கள். ஹன்ன வைப்பற்றிய குறிப்புகளை எடுத்துத் தனியாக வைத்துக் கொண்டு அவளைத் தேட ஆரம்பித்தார்கள். ஹன்னவும் மற்றக் குழந்தை களும் முதலில் பிரேகிற்குச் (Prague) சென்றார்கள். அங் கிருந்து போலந்திலுள்ள லோட்ஸ் (Lcdz) கைதி முகாமுக்குச் சென்றார்கள். முகாமில் நாஜிகள் அந்தக் குழந்தைகளை இன

வாரியாகப் பிரித்தார்கள். அழகுள்ள குழந்தை, அழகில்லாத குழந்தை என்றோ, விவரம் தெரிந்த குழந்தை, பால் குடிக்கும் மழலை என்றோ பிரிக்கவில்லை. நாஜிகளின் வர்க்க உணர்ச்சிக்கு ஏற்ற முறையில் ஆர்யபரம்பரைக் குழந்தைகள் தனியாகவும், மற்றக் குழந்தைகள் தனியாகவும் பிரிக்கப்பட்டார்கள். ஆர்ய பரம்பரைக் குழந்தைகளை நாஜி **லெபன்ஸ்பான்** (Lebensborn) வீடுகளுக்கு அனுப்பினர்கள். லெபன்ஸ்பான் என்பதற்கு ஜீவ ஊற்று என்று பொருள். லெபன்ஸ்பான் வீடுகளில் இந்தக் குழந்தைகளுக்கு சகல வசதிகளும் அளித்து சிறந்த நாஜிகளாக வாழ பயிற்சி யளிக்கப்படும். பயிற்சி முடிந்ததும் பதவியிலுள்ள நாஜி அதிகாரிகள் அவர்களை வளர்ப்புக் குழந்தைகளாக ஏற்றுக் கொள்வார்கள். அந்தக் குழந்தைகளின் வாழ்க்கையும், (பெயரும் பிறந்த தேதியுங்கூட) மாறிவிடும். ஜீவ ஊற்றில் முழுகி எழுந்த குழந்தைகள் அல்லவா? வளர்ப்புப் பெற் றோர்களின் பெயருக்குத் தக்கபடி குழந்தையின் ஜாதகத்தை எழுதி விடுவார்கள். ஒவ்வொரு குழந்தைக்கும் இன்ஷி யூரன்ஸ் பாதுகாப்பு அளிக்கப்படும்.

லோட்ஸ் முகாமில் கிடைத்த தஸ்தவேஜுகளிலிருந்து ஹலு வும் வேறு பதினேரு குழந்தைகளும் லெபன்ஸ்பான் குழந்தை களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்று தெரிந்தது. பிற் பாடு கிடைத்த இன்ஷியூரன்ஸ் பாலிஸிகள் இதை ஊர்ஜிதம் செய்தன. மற்றக் குழந்தைகள் என்ன ஆனார்கள்? சுட்டுக் கொல்லப்பட்டார்களா? நடுத்தெருவில் விரட்டி யடிக்கப்பட்டார் களா? அவர்களைப்பற்றி எவ்விதமான தகவலும் கிடைக்க வில்லை. கிட்டத்தட்ட நூறு குழந்தைகளில் பன்னிரண்டு பேர் களுக்குத்தான் நாஜிகளின் பரீட்சைப்படி வாழும் உரிமை கிடைத்தது.

நாஜி பரம்பரைக்கு லக்ஷணமான நீலக்கண்கள், தங்க நிறமான தலைமயிர், குறுகுறுத்த பார்வை, துணிவு, புத்தி சாலித்தனம், உடல்கட்டு இவை எல்லாம் ஹலுவுக்கு இருந்த தால் அவள் உயிர்தப்பமுடிந்தது. மேலும் மேலும் விசாரித்த

தில் அவள் உயிருடன் இருக்கிறாள் என்று மட்டும் தெரிந்ததே தவிர எங்கு இருக்கிறாள் என்று தெரியவில்லை. அவளை வளர்ப்புக் குழந்தையாக ஏற்றுக்கொண்டவர்களின் விலாசமும் கிடைத்தது. ஆனாலும் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சில தினங்களுக்கெல்லாம் பிராங்பர்ட்டைச் (Frankfort) சேர்ந்த ஒரு கிராமத்தில் ஹனு இருப்பதாக செக் சர்க்கார் பொதுநல அபிவிருத்தி இலாகாவுக்கு தந்திமூலம் செய்தி கிடைத்தது. பிராங் பர்ட்டிலுள்ள நாஜி கலெப்புக் கோர்ட்டிலுள்ள ஒருவன் கொடுத்த தந்தி இது. செக் சர்க்கார் உடனே ஹனுவின் தாயாருக்குத் தகவல் கொடுத்தார்கள். அவள் எஸ்லிங்கனிலுள்ள சர்வதேச குழந்தைகள் தேடும் ஸ்தாபனத்துக்குத் தெரியப்படுத்தினாள். உடனே ஒரு கோஷ்டி குழந்தையைத் தேடிக்கொண்டு கிளம்பிற்று. பிராங்பர்ட்டுக்குச் சென்றபோது செக் நாட்டுக் குழந்தை எதுமே அந்த வட்டாரத்தில் இல்லை என்று தெரிந்தது. உடனே நாஜி கலெப்புக் கோர்ட்டுக்குப் போய் தந்தி கொடுத்தவனைப்பற்றி விசாரித்தார்கள். அங்கும் ஏமாற்றம் தான் கிடைத்தது. தகவல் கொடுத்த பேர்வழியே அங்கு கிடையாது. யாரோ விஷமத்துடன் செய்த காரியம் இது. குழந்தையைத் தேடிச் சென்றவர்கள் சும்மா இருக்கவில்லை. பிராங்பர்ட்டிலிருந்துதான் தந்தி யடிக்கப்பட்டதால் அந்த வட்டாரத்தில் எதாவது புலன் அகப்படும் என்ற நம்பிக்கையுடன் பலரை விசாரித்தார்கள்.

பக்கத்தூரில் வசிக்கும் ஒரு நாஜி அதிகாரியின் விதவை செக் நாட்டுச்சிறுமி ஒருத்தியை வளர்ப்பதாகச் செய்திவந்தது. குழந்தைக்கு கிட்டத்தட்ட எட்டு வயது இருக்கும் என்று தெரிந்தது. தொடர்ந்து விசாரித்ததில் அந்தச் சிறுமிதான் ஹனு ஸ்போடிவா என்று தெரிந்தது. அவளைப்பற்றி அங்கு கிடைத்த தஸ்தவேஜுகளில் அவளுடைய பெயர் ஹனு ஸ்போட் என்று குறிப்பிட்டிருந்தது. ஸ்வீகாரப்பத்திரத்தில் ஹனு ஸ்போட் என்றிருந்தாலும் முழுப்பெயரைக் குறித்த கடிதம்

ஒன்றும் கிடைத்தது. அவர்கள் தேடிக்கொண்டிருந்த குழந்தை கிடைத்துவிட்டாள்.

ஆனால் எஸ்லிங்கன் ஊழியர்கள் நேராக அவளை அழைத்து வரப்போகவில்லை. கிடைத்த சாட்சியங்களைக்காட்டி, அவளை தாய்நாட்டுக்கு அழைத்துச் செல்ல அனுமதி கோர பிராங் பர்ட்டிலுள்ள ராணுவ சர்க்கார் கார்யாலயத்துக்குச் சென்றார் கள். மறுநாள் குழந்தையை அழைத்துச் செல்ல நாஜி அதி காரியின் வீட்டுக்குச் சென்றார்கள். ஹனுவைக் கூப்பிட்டால் வருவாளா? அவளிடம், "நீ ஜெர்மானியக் குழந்தையல்ல, செக் நாட்டுக் குழந்தை. உன்னைப் பெற்ற தாய் அந்த நாட்டில் இருக்கிறாள்"—என்று சொன்னால் கேட்பாளா? புரிந்து கொண்டு அந்நியர்களான தங்களுடன் கிளம்பிவிடுவாளா? விஷயம் தெரியாத காலத்தில் தாயைவிட்டுப் பிரிந்த குழந்தை மறுபடியும் பெற்ற தாயைப் பார்த்தால் அடையாளம் கண்டு பிடித்துவிடுமா?—இப்படி எல்லாம் எஸ்லிங்கன் கோஷ்டியார் சம்சயப்பட்டுக் கொண்டிருக்கவில்லை. எத்தனையோ குழந்தை கள் பழகிய இடங்களிலிருந்து வர மறுத்துவிட்டன. நினைவு தெரிந்தது முதல் வளரும் இடத்தை விட்டுவிட்டு, முகம் தெரி யாதவர்களிடம் உறவு கொண்டாடிக்கொள்ள அவர்கள் விரும்ப வில்லை. தேச பக்தியைப்பற்றியோ, உற்றார் உறவினர்களைப் பற்றியோ எடுத்துச் சொல்லி அந்தக் குழந்தைகளைத் திருப்பு வதும் கஷ்டமாகத்தானிருந்தது. ஹனுவும் இவர்கள் மாதிரி யாகத் தானிருப்பாளோ என்கிற சந்தேகமிருந்தது. நல்லவேளை யாக ஹனு மூரண்டு பிடிக்கவில்லை. மூன்று வயசுக் குழந்தை யாக இருந்தபோது எடுத்த போட்டோவுக்கும் இப்போது அவள் இருப்பதற்கும் விசேஷ மாறுதலில்லை. வளர்ச்சியினாலேற் பட்ட மாறுதலே தவிர, ஜாடை மாறவில்லை. கோஷ்டியைச் சேர்ந்த ஒருவர், மிகவும் நயமாக ஹனுவிடம், அவள் பிறந்த கிராமத்தைப்பற்றியும் அவளுடைய தாயைப்பற்றியும் ஹனுவை நினைத்துக்கொண்டு அவள் அழுதுகொண்டிருக்கிறாள் என்றும் அவளுக்கு தெரிந்துள்ள ஜெர்மன் பாஷையில் சொன்னார். தங்களுடன் வந்தால் தாயாரிடம் கொண்டுபோய் விடுவதாகச்

சொன்னார். ஹனு கிளம்பிவிட்டாள். புறப்படும் முன் தனது எல்லா சாமான்களும் இருக்கின்றனவா என்று தீர்மானமாக தெரிந்துகொண்டாள். ஹனுவின் வளர்ப்புத் தாயார் ஹனு தன்னுடைய சொந்தக் குழந்தை என்று வாதம் செய்தாள். குழந்தையை அழைத்துச் செல்வோம் என்று உறுதியுடன் சொன்ன பிறகே அவள் பேசாமலிருந்தாள்.

பிரேகிற்குச் செல்லுமுன்பு ஹனுவை அழைத்துக் கொண்டு பிராங்பர்ட்டுக்குச் சென்றார்கள். அங்குள்ள சர்வதேச அகதிகள் முகாமில் ஹனு இருந்தாள். செக் நாட்டுக் குழந்தைகள் பலர் அங்கிருந்தார்கள். கூடியமட்டில் எல்லாக் குழந்தைகளையும் தேடிவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும். 76 குழந்தைகள் அகப்பட்டு விட்டார்கள். அவர்களை பிரேகிற்கு ஸ்பெஷல் ரெயிலில் அழைத்துச் சென்று அங்கிருந்து அவரவர் கிராமங்களுக்கு அனுப்பினர்கள். குழந்தை வருகிறாள் என்று தெரிந்ததும் ஹனுவின் தாயார் பிரேக் ரெயில்வே நிலையத்துக்கு வந்துவிட்டாள். வழி நெடுக ஹனு தன்னுடைய தாயாரைப்பற்றியும் குடும்பத்தார்களைப்பற்றியும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டே வந்தாள். சின்னக் குழந்தையாக இருந்தாலும் அவளுக்குத் தாய் பாஷை மறக்கவில்லை. தாயாரைப் பார்த்ததும் "அம்மா, நான் வந்துவிட்டேன்" என்று செக் பாஷையில் பேசி தாயாரை அணைத்துக்கொண்டாள். தாய் ஆனந்த பாஷ்பம் பொழிந்தாள். குழந்தையை வாரி அணைத்துக்கொண்டாள். அந்த ஆனந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் மறக்கவே முடியாது.

1946-ஆம் வருஷம் லக்ஷக்கணக்கான மக்களும், குழந்தைகளும் ஐரோப்பாவில் வீடு வாசல்களை இழந்து நாடுவிட்டு நாட்டில் அகதிகளாகத் தவித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் கஷ்ட நிலைமையை நிவர்த்தி செய்யவேண்டும். அது காரணமாக ஐ. நா. ஸ்தாபனத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச அகதிகள் முகாமைச் சேர்ந்தவர்கள் தான் எஸ்லிங்கன் கோஷ்டியார்.

1945-ஆம் வருஷம் இரண்டாவது உலக யுத்தம் முடிந்த போது ஜர்மனியிலும் ஹங்கேரியிலும் சுமார் எண்பது லக்ஷம் மக்கள் அகதிகளாக இருந்தார்கள். இவர்கள் அத்தனை பேரும் வேறு நாட்டினர்கள். நாஜிகளால் சிறைப் பிடிக்கப்பட்டு சிறை முகாம்களில் இருந்தவர்கள். விடுதலை யடைந்ததும், ரெயில் மூலமாகவும், நடந்தும் தாய்நாடு சேர ஆயிரம் ஆயிரம் பேர்கள் கிளம்பிவிட்டார்கள். நேச தேச ராணுவத்தாரும், செஞ்சிலுவை சங்கத்தாரைப்போன்ற பல தொண்டர் படைகளும் இந்த அகதிகளுக்கு உதவி செய்ய முன்வந்தார்கள். ஐக்கிய நாடுகள் சாசனம் உருவாகவில்லை அப்போது. ஆனாலும், சர்வதேச சமரஸ மனப்பான்மையுடன், பல நாட்டு மக்கள் ஒற்றுமையுடன் வேலை செய்தார்கள். ஐக்கிய நாடுகள் அகதிகள் கஷ்ட நிவாரண குடியேற்ற சபை (United Nations Relief and Rehabilitation Administration) என்று ஒரு ஸ்தாபனம் ஏற்பட்டது. இதைச் சுருக்கமாக 'அன்ரா' (UNRRA) என்றே அழைத் தார்கள். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் அகதிகளுக்கு உதவி செய்ய நிரந்தரமாக ஏற்பாடு செய்வதற்கு முன்பு நேச நாடுகள் ஆரம்பித்த உதவிதான் 'அன்ரா' ஸ்தாபனம்.

நாஜி வீரர்கள் வாழ்ந்த பாசறைகள், போலீஸ் கொட்டடிகள், ஹோட்டல், நாடகக் கொட்டகை போன்ற பொதுக் கட்டடங்கள், விளையாட்டு மைதானங்கள் ஆகிய பல இடங்களைக் கைப்பற்றி, அகதிகள் தங்குவதற்காக வசதிகளை 'அன்ரா' ஸ்தாபனத்தார் ஏற்பாடுகளைச் செய்தார்கள். இவை தவிர பல இடங்களில் கூடாரங்கள் அடித்து முகாம்களை ஆரம்பித்தார்கள். எல்லோ ருக்கும் உணவு கொடுக்கவும் நடவடிக்கை எடுத்துக்கொண்டார் கள். வெயிலுக்கும் பனிக்கும் பயந்து ஒதுங்கிக் கொள்ள இடமும், உயிரை வைத்துக்கொண்டு வாழ உணவும்தான் கிடைத் தது. சௌகர்யத்தை எண்ணிப்பார்க்க முடியவில்லை; பயனு மில்லை. ஆனாலும் அகதிகளுக்கு சொர்க்க போகமாகவே இருந்தது.

எண்பது லக்ஷம் அகதிகள்! இவர்களுக்கு உணவும் இடமும் கொடுப்பதுடன் சொந்த ஊர்களுக்கும் அனுப்பும் பொறுப்பை 'அன்ரா' ஸ்தாபனம் எடுத்துக்கொண்டது. குண்டு வீச்சிலுல் தேசத்துக்கு தேசம் ரெயில் போக முடியாமல் பல இடங்களில் பாதைகள் சேதமடைந்திருந்தன; பாலங்கள் உடைக்கப்பட்டுக் கிடந்தன. பாதை நேராக இருந்த இடங்களுக்கும் போவதற்குத் தேவையான ரெயில் வண்டிகள் கிடையாது. ரோடு மார்க்கமாக அனுப்புவதற்கும் போதுமான மோட்டார் வசதி கிடைக்கவில்லை. இருந்தாலும் அகதிகளை அனுப்ப 'அன்ரா' ஸ்தாபனம் முயன்றது. முதலில் எத்தனை பேர்கள் தாய்நாடு திரும்ப விரும்புகிறார்கள் என்று கணக்கு எடுத்தார்கள். அறுபத்தைந்து லக்ஷம் மக்கள் சொந்த நாடு செல்ல விரும்பினார்கள். 1946-ஆம் வருஷம் முடிவுக்குள் அவர்கள் திரும்பிவிட்டார்கள். அவர்களுக்கு சாகஸத்துடன் 'அன்ரா' உதவிற்று.

மிகுதியிருந்த பதினைந்து லக்ஷம் பேர்களுக்கு வீடுவாசல் கிடையாது. சொந்த நாடுகளுக்குத் திரும்பவும் அவர்கள் விரும்பவில்லை. பெரும்பாலும் அவர்களிருந்த கிராமங்கள் குண்டு வீச்சிலுல் தரைமட்டமாகிக் கிடந்தன. 'அன்ரா' ஸ்தாபனத்தின் வேலை முடிவுக்குவரும் கட்டத்தில் இருந்தது. இந்தச் சமயத்தில்தான் சான்பிராஸ்ஸிஸ்கோவில் கூடிய ஐ.நா. பிரதிநிதிகள் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார்கள். இவர்களை ஏற்றுக்கொள்ள எந்த எந்த நாடுகள் விரும்புகின்றன? அங்கு குடியேறியபின்பு, இவர்கள் பிழைக்க வழி என்ன செய்வது? இவர்களுக்கு வீடுவாசல் தேடிக் கொடுக்கும் பொறுப்பை யார் எடுத்துக்கொள்வது? யுத்த காலத்தில் உயிருக்கு ஆசைகொண்டு மூலைக்கு ஒருவராக ஓடிய குடும்பங்களை ஒன்று சேர்க்க யார் முயற்சி எடுத்துக்கொள்வது? தவறிப்போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பது எப்படி? வேறு நாடுகளில் இவர்களுக்குப் புகலிடம் கிடைக்கும் வரையில் உணவும் இடமும் கொடுத்துக் காப்பாற்றும் பொறுப்பை யார்

எற்றுக்கொள்வார்கள் ? இந்த மாதிரிப் பல பல பிரச்னைகளை ஐ. நா. பிரதிநிதிகள் சிந்திக்கலானார்கள்.

ஐ.நா.வின் ஆதரவில் சர்வதேச அகதிகள் ஸ்தாபனம் ஒன்று அமைக்க முடிவு செய்தார்கள். பலாத்காரமாக எவரையும் எந்த நாட்டுக்கும் அனுப்பக்கூடாது. மனித உணர்ச்சியை மதித்து நடக்கவேண்டும். யார் எங்கே வாழ விரும்புகிறார்களோ அங்கு தேவையான வசதிகளைச் செய்து தர வேண்டும். இந்த லக்ஷியத்துடன் அகதிகள் கஷ்ட நிவாரண ஸ்தாபனம் (International Refugee Organisation) ஆரம்பிக்கப்பட்டது. இரண்டு வருஷ காலம் இந்த ஸ்தாபனத்தை நடத்த பண உதவி செய்ய பதினெட்டு நாடுகள் ஒப்புக்கொண்டன.

வில்லியம் ஹாலம் டக் (William Hallam Tuck) என்ற அமெரிக்க எஞ்சினீயர் இந்த ஸ்தாபனத்தின் முதல் டைரக்டர்-ஜனரலாக நியமிக்கப்பட்டார். அகதிகளுக்கு உதவி செய்வதில் ஏற்கனவே ஈடுபட்டிருந்த நூற்றுக்கணக்கான ஊழியர்கள் ஹாலம் டக்கின் கீழ் வேலை செய்ய முன்வந்தார்கள். இவர்களில் பலர் பெண்மணிகள் என்பதைக் குறிப்பிடவேண்டும். மூன்று வருஷகாலம் இவர்கள் அதியற்புதமாக வேலை செய்தார்கள். அகதிகளுக்கு இடமும் பிழைப்பும் கொடுக்க முகாம்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதி சீக்கிரத்தில் ஐரோப்பா முழுவதும் எழுநூறு முகாம்கள் ஏற்பட்டன. இவர்களுக்கு உணவும், துணி மணிகளும் இதரத் தேவைகளும் உலகம் முழுவதுமுள்ள நாடுகளில் இருபத்தேழு நாடுகளிலிருந்து வந்தன. கூட்டம் பெருத்துவிட்டதால், கொள்ளை நோய் பரவி சாவு ஏற்படாமல் முன் ஜாக்கிரதையாக இருக்க சுகாதார வசதிகளைக் கவனிக்கவும் தடுப்பு மருந்துகளைப்போடவும் சுகாதார நிபுணர்களும், டாக்டர்களும், நர்ஸுகளும் வந்தார்கள். அகதிகளை ஏற்றுக்கொள்ள பல நாடுகள் சம்மதித்தன. இவர்களை ஏற்றிச் செல்ல கப்பல்கள் தயாரிக்க வேண்டியதாயிற்று. முப்பத்தாறு கப்பல்கள் அகதிகளை ஏற்றிக்கொண்டு பல பிரயாணங்கள் செய்தன. அகதிகள் ஸ்தாபனத்தில் வேலைசெய்ய நாற்பது நாடுகளிலிருந்து ஊழி

யர்கள் பொறுக்கப்பட்டார்கள். இவர்களில் ஒவ்வொருவருக்கும் உலகிலுள்ள முக்கியமான பாஷைகள் பேசமுடியும். எல்லோரும் ஒரே குடும்பமாக மனித சமூகத்துக்குச் சேவை செய்கிறோம் என்ற ஆசையுடன் ஐக்யமாக உழைத்தார்கள்.

அகதிகளும் மிகவும் பொறுமையுடன் வாழ்ந்தார்கள். வெளி நாடுகளுக்குச் செல்லவேண்டும் என்று நிச்சயித்தாலும், வசதி கிடைக்கும்வரையில் அவர்கள் முகாமில் சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. தம்மாலியன்ற வேலையைச் செய்து ஒவ்வொருவரும் ஸ்தாபனத்துக்கு உதவி செய்தார்கள். ஒவ்வொரு முகாமும் ஒரு சிறு நகரம் போலவே இருந்தது. பள்ளிக் கூடம், ஆஸ்பத்திரி, பொதுச் சமையலறை போன்ற இடங்களில் ஆசிரியர்களாகவும், டாக்டர்களாகவும், தொண்டர்களாகவும் அகதிகள் வேலை செய்தார்கள். அகதிகளில் தச்சர்கள் முகாம்கள் அமைக்கவும், வீடுகள் கட்டவும் உதவி செய்தார்கள். சமையல் செய்யத் தெரிந்தவர்கள் பொது உணவுச் சாலையில் வேலை செய்தார்கள். தையல்காரர்களும், தோல் வேலை செய்பவர்களும், தம் தம் தொழில்களைச் செய்தார்கள்.

அகதிக் குழந்தைகளுக்கும் சிறுவர்களுக்கும் கல்வி கற்பிப்பதில் எல்லோரும் ஊக்கம் காட்டினர்கள். படிக்கப் புத்தகமோ, எழுத காகிதமோ இல்லையென்றாலும் கிடைத்த வசதிகளைக் கொண்டு குழந்தைகளுக்குக் கல்வி போதிக்க ஆசிரியர்கள் முயன்றார்கள். மனப்பாடமாகவே சிலர் சொல்லிக் கொடுத்தார்கள். கணக்கு, சரித்திரம், பூகோளம், என்ற பாடங்களுடன் ரேடியோ, விஞ்ஞானம், மோட்டார் ரிபேர், தையல், கட்ட வேலை, தச்சு, கருமான், என்று பல பல தொழில்களில் சிறுவர்களுக்கு கல்வி புகட்டப்பட்டது. சுருங்கச் சொன்னால் ஒவ்வொருவரும் தமக்குத் தெரிந்ததை பிறருக்குக் கற்றுக்கொடுக்க விரும்பினர்கள். பல நாடுகளிலிருந்து வந்த ஆசிரியர்கள் அவர்களுடைய ஆர்வம், கல்வி போதிக்கும் முறை, இவை எல்லாமே விசித்திரமாக இருந்தன. என்றாலும் அந்த அனுபவம் சர்வதேச சமரஸத்தை ஸ்தாபிக்க அடி கோலிற்று.

வெளி நாடுகளுக்கு அனுப்பவேண்டும் என்பதில் மட்டும் ஸ்தாபனம் அக்கறை காட்டவில்லை. ஒவ்வொருவரும், புதுச் சூழ்நிலையிலிருந்தாலும் தம் தம் விருப்பத்துக்கு ஏற்றபடி வாழ்க்கை நடத்தவேண்டும் என்றே ஸ்தாபன ஊழியர்கள் எண்ணினர்கள். ஆகவே ஒவ்வொரு அகதியைப்பற்றியும் புள்ளி விபரம் சேகரிக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொருவருக் கும் 'ரிகார்டு ஷீட்' தயாரித்து, அதில், அவரவர் யோக்ய தாம்சம், ஆர்வம், முதலியவற்றை எழுதிக்கொண்டார்கள். ஒரு பெண்ணுக்கு சங்கீத ஞானம் இருக்கிறது, பியானோ வாத்தியம் வாசிக்க விரும்புகிறாள் என்றால், அதை அவ ளுடைய 'ரிக்கார்டு ஷீட்டில்' குறித்துக்கொள்வார்கள். ஒரு பையனுக்கு யந்திரங்களை ரிபேர் செய்வதில் ஆர்வமிருந்தால் அவனுடைய 'ரிகார்டு ஷீட்டில்' அதை எழுதிக்கொள்வார் கள். இந்த ஆசை நீடித்து இருக்குமா என்பது வேறு விஷயம். இந்த முறையினால் பல வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் சுகமான சூழ்நிலை கொடுக்கமுடிந்தது. மேலும், பல நாடு களிலுள்ள குடும்பங்களில் இவர்களைச் சேர்த்துக்கொள்ள சிபாரிசு செய்யவும், திறமையுள்ள தொழிலாளர்களை, விரும்பும் நாடு களுக்கு அனுப்புவதும் சுலபமாயிற்று.

சுமார் நாலாயிரம் குழந்தைகளும் சிறுவர்களும் அனாதை களாக இருந்தார்கள். இவர்களுக்கு உறவினர்கள் கூட இல்லை. இவர்களுக்காகத் தனி முகாம்கள் திறக்கப்பட்டன. யுத்த காலத்தில் கொடுமையையும் கஷ்டத்தையும் அனுபவித்த குழந்தைகளுக்கு அன்பான வார்த்தைகளும் ஆதரவும் புதுமை யாக இருந்தது. பல குழந்தைகள் சங்கோஜத்துடன் ஒதுங் கின. பல குழந்தைகள் ஊழியர்களுடன் பழகாமல் சந் தேகப்பார்வைப் பார்த்தனர். அகதி முகாமில் உள்ள ஊழி யர்களை நண்பர்கள் என்று ஏற்றுக்கொள்ள அவர்களால் முடியவில்லை. நாஜி சிறைகளில் பட்டபாடும் கஷ்டமும் அவர் களைச் சோகமே உருவாக்கிவிட்டன. சிறைகளில் அவர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதில்லை. ஒவ்வொருவருக்கும்

நம்பர் கொடுத்து, இதைக் கையிலும் பச்சை குத்திவிட்டார்கள்; நம்பரைச் சொல்லியே கூப்பிட்டார்கள். முகாமில் பச்சை குத்திய கைகளுடன் வந்த சிறுவர்களையும் சிறுமிகளையும் சுலப மாகக் கண்டுபிடித்துவிடலாம். அவர்கள் எப்போதுமே கவலை தோய்ந்த முகத்துடனிருந்தார்கள்.

ஒரு முகாமில் இந்த மாதிரி அவஸ்தைப்பட்ட குழந்தைகள் வந்து சேர்ந்தார்கள். எவருடனும் பழகாமல் ஒதுங்கியிருந் தார்கள் அவர்கள். முகாம் அதிகாரி ஒரு பெண்மணி. அவள் அந்தக் குழந்தைகளிடம் "இது சிறையல்ல. ஓடியாடி விளையாடுங்கள், சந்தோஷமாக இருங்கள்" என்றாள். குழந் தைகள் நம்பவில்லை. "நீங்கள் சொல்வது நிஜம்தானே?" என்று கேட்டார்கள். அந்தப் பெண் மணி ஆம் என்று தலையசைக்கவே அவர்களுடைய முகங்கள் மலர்ந்தன. அன்று முழுவதும், மறுநாளும் கூட அவர்கள் குதித்துக் கொம்மாளம் போட்டார்கள். புது இடமாக இருந்தாலும் நண்பர்களுடன் பழகுகிறோம் என்ற நம்பிக்கை ஏற்பட்டதும் துக்கமும் சோர்வும் விலகிவிட்டன.

ஜெர்மனியிலுள்ள பிரிட்டிஷ் நிர்வாகப் பகுதியில் ஒரு அகதி முகாம் இருந்தது. அதிலுள்ள அறுபது அனுதை களும் ஒரே வயது யுவர்கள். தங்களுக்குள்ளேயே ஒரு தலைவனைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு, முகாம் வேலைகளையும் பங்கு பிரித்துக்கொண்டார்கள். விளையாட்டு, நாடகம், பொழுது போக்குச் சங்கம் என்றெல்லாம் ஏற்படுத்திக் கொண்டார்கள். யுவதிகள் பக்கத்து ஊரான வெர்டனில் சென்று படித்தார்கள். அந்த ஊரிலிருந்த கைத்தொழில் பள்ளிக்கூடத்துக்கு வாலி பர்கள் சென்றார்கள். முகாமை மேற்பார்வை செய்யும் பொறுப்பு மட்டுமே ஸ்தாபன ஊழியர்களுக்கு இருந்தது. ஒவ்வொரு முகாமிலும் வாலியர்களும் யுவதிகளும், அங் குள்ள குழந்தைகளைப் பராமரிக்க உதவி செய்தார்கள். சமை யல், சுகாதார வசதிகள், ஆஸ்பத்திரி, என்று எல்லா வேலை களிலும் உதவி செய்வதிலும் விசேஷ ஆர்வம் காட்டினார்கள்.

ஒய்.எம்.ஹி.ஏ. சர்வதேச சாரணர் படை, ஒய்.டபிள்யூ. சி.ஏ. போன்ற சர்வதேச வாலிபர் சங்கங்கள் ஊழியர்களை முகாம் களுக்கு அனுப்பி உதவி செய்தன. அனைதைச் சிறுவர்களில் பலர் சாரணர் படையில் சேர்ந்து பயிற்சி பெற்றனர். சர்வதேச சாரணர் படையைச் சேர்ந்த ஜே. ஆர். மானெட் (J. R. Monnet) இவர்களை ஐக்கியப்படுத்துவதிலும், பயிற்சி அளிப்பதிலும் பெரி தும் முயற்சி எடுத்துக்கொண்டார். முகாம் முகாமாக விஜயம் செய்து சாரணர் அணிவகுப்பு, உல்லாச யாத்திரை இவற்றை நடத்தி உத்சாக மூட்டினர்.

முகாம்களிலிருக்கும் வாலிபர்களும் யுவதிகளும் விசேஷ உத்சாகத்துடன் வேலை செய்தார்கள். எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்தாலும், துக்கத்தை மறந்து, உத்சாகத்துடன் ஒரே குடும்பமாக வாழத் துணிந்தது அத்யாச்சர்யமான சம்பவ மாகும். முகாம் நிர்வாகத்தில் பங்கு எடுத்துக்கொண்ட துடன் சிதறிப்போன குடும்பங்களைக் கண்டுபிடித்து ஐக்யப்படுத்து வதிலும் இவர்கள் ஊக்கம் காட்டினர்கள். எஸ்லிங்கன் கோஷ்டியைப் போல பல இடங்களில் வேலை செய்த படைகளுக்கு வாலிபர்கள் உதவி செய்தார்கள். ஹீடல்பர்க் (Heidelberg) முகாமில் பதின்மூன்று வயது நிரம்பிய போலிஷ் சிறுமி ஒருத்தி யிருந்தாள். அவள் யாருடனும் கலகலப்பாகப் பழகமாட்டாள். ஆனால் சதா உழைத்துக்கொண்டே யிருப்பாள். அவள் செய்த ராகூஸ வேலையைக்கண்டு மற்றவர்கள் பிரமித்தார்கள். ஒரு நாள் அவள் முகாமிலிருந்து வெளியே சென்றாள். திரும்பி வரும்போது ஒரு கிழவியை அழைத்துவந்தாள். அவளுடைய பெரிய பாட்டிதான் அந்தக் கிழவி. அவளை எங்கே கண்டு பிடித்தாள், எப்படிக் கண்டுபிடித்தாள் என்பதைப்பற்றி அவள் சொல்லவேயில்லை. கிழவியும் வாயைத் திறக்கவில்லை. அந்தப் பெண்ணை சுற்றிச் சுற்றி யலைந்து தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்த எழு பேர்களை அழைத்து வந்துவிட்டாள்.

காணுமற்போனவர்களையும் குடும்பத்திலிருந்து பிரிந்தவர் களையும் கண்டுபிடிக்கப்பட்டவர்களையும் கண்டுபிடிப்பதற்காக

ஸ்தாபிக்கப்பட்ட சர்வதேச சேவா சமாஜத்தின் தலைமைக் காரியாலயம் ஜர்மனியிலுள்ள ஆரல்ஸன் (Arolsen) என்ற ஊரிலிருந்தது. அதன் பிரிவுதான் குழந்தைகள் தேடும் ஸ்தாபனம்; இது எஸ்லிங்கனில் இருந்தது. வாலிபர்களையும் யுவதிகளையும் குழந்தைகளையும் தேடிக் கண்டுபிடித்து, பெற்றோர்களிடம் சேர்ப்பதும், அனுதைக் குழந்தைகளுக்கு எதிர்கால வாழ்வு அளிக்க வகை செய்வதும்தான் இந்த ஸ்தாபனத்தின் முக்கிய வேலை.

துப்பறியும் கதைகளில் வரும் பிரமிப்பூட்டும் சம்பவங்களும், ஆச்சர்யப்படும்படி துப்புத்துலக்குவதும் படிப்பதற்கு ஸ்வாரஸ்யமாக இருக்கும். அதைவிட ஆச்சர்யமான வழிகளைக் கையாண்டு, துப்புத் துலக்கி, குழந்தைகளைக் கண்டுபிடித்துப் பெற்றோர்களிடம் சேர்த்தார்கள் குழந்தைகளைத் தேடும் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள்.

ஒருநாள் தெருவில் சிறுமி ஒருத்தி அலைந்து கொண்டிருந்தாள். அவளை முகாமுக்குக் கூட்டிக்கொண்டுவந்தார்கள். அந்தச் சிறுமியோ என்ன கேட்டாலும் பதில் சொல்லவில்லை. தன்னுடைய பெயரைக் கேட்டால் கூட சொல்லமுடியவில்லை. வீட்டையும் காட்டமுடியவில்லை. அவளுடைய போட்டோவை, சுற்று வட்டாரத்திலுள்ள பத்திரிகைகளில் பிரசுரித்தால், உறவினர் வந்து குழந்தையை அழைத்துச் செல்வார்கள் என்று முகாம் நிர்வாகிகள் எண்ணினர்கள். பத்திரிகைகளிலும் போட்டோவைப் பிரசுரித்தார்கள். "படத்தைப் பார்த்தால், என்னுடைய குழந்தை ட்ரூலியைப் போலிருக்கிறது," என்று ஒருவர் சில தினங்களுக்கெல்லாம் கடிதம் எழுதினர். தான் கயிறு திரித்து ஜீவனம் நடத்துவதாகவும் அவர் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவருடைய குழந்தையின் சாயலாக இருக்கிறது என்பதற்காக சிறுமியை அழைத்துச் சென்றுவிடமுடியுமா? சிறுமியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முகாம் ஊழியர்கள் விரும்பினர்கள். அவளோ உம்மணாமூஞ்சியாக இருக்கிறாளே ! ஊழி

யர்களில் ஒரு பெண்மணி ஒரு யுக்தி செய்தாள். மற்றக் குழந்தைகளுடன் அந்தச் சிறுமி விளையாடிக்கொண்டிருக்கும் போது கயிறுதிரிப்பதற்காக நார் முதலியவற்றை எடுத்துக் கொண்டுவந்து உட்கார்ந்தாள். அதைப் பார்த்ததும் அந்தச் சிறுமி உடனே "என் அப்பா கூட கயிறு செய்வாரே" என்று சிரித்துக்கொண்டே சொன்னாள். பிடிகிடைத்ததும், சிறுமியின் வாயைக் கிளறிக் கிளறித் தகவல் சேகரித்தார்கள். அவளுடைய பெயர் ட்ரூவிதான். பிறகு அவளைப் பெற்றோரிடம் சேர்ப்பிப்பது சுலபமாயிற்று.

ஸ்விட்ஜர்லந்திலுள்ள ஒரு முகாமில் சில பிரஞ்சுக் குழந்தைகள் இருந்தார்கள். யுத்த காலத்தில் பிரான்ஸிலிருந்து அவர்கள் ஓடிவந்தவர்கள். அவர்களில் அடால்ப் ரஷீத் என்று ஒரு பையன். அவனுடைய பிறந்த நாளைத் தவிர வேறு எந்தத் தகவலுமே தெரியவில்லை. ஆனாலும் பெற்றோர்களைக் கண்டுபிடித்து அவனை ஒப்பிக்கவேண்டும் என்று ஊழியர்கள் நிச்சயித்தார்கள். அவன் எந்த கிராமத்தைச் சேர்ந்தவன் என்றும் தெரியவில்லை. உடனிருந்த சிறுவர்களாலும் சொல்லமுடியவில்லை. ஆபத்து நேர்ந்தபோது எல்லோரும் கூடினார்கள். எங்கெங்கோ அலைந்தார்கள். வீதியில் எத்தனையோ சிறுவர்களும் சிறுமிகளும் சேர்ந்து கொண்டார்கள். எல்லாருமாக ஸ்விட்ஜர்லந்துக்கு வந்து சேர்ந்தார்கள். ஐரோப்பியக் குழந்தைகளுக்கு ரஷீத் என்று பெயர் வைப்பது சம்பிரதாயமில்லை. இவனுக்கு இந்தப் பெயர் வைக்கக் காரணம் ஏதாவது இருக்கவேண்டும் என்று முகாம் ஊழியர்கள் எண்ணினார்கள். அதை எப்படிக் கண்டு பிடிப்பது?

ஒருநாள் குழந்தைகள் கப்பலைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது ரஷீத் பெருமையுடன் சொன்னான்: "நான் கப்பலில் பிரயாணம் செய்திருக்கிறேன். என்னுடைய அப்பாவும் அம்மாவும் கப்பலில் என்னுடன் இருந்தார்கள்," என்று. இதை ஒரு ஊழியர் கேட்டுக்கொண்டிருந்தார்.

அவருடைய முகம் மலர்ந்தது. ரஷீத்தின் பெற்றோர்களைக் கண்டுபிடித்துவிடலாம் அல்லது அவர்களைப்பற்றி தகவலாவது தெரிந்துகொள்ள முடியும் என்று நம்பிக்கை வந்துவிட்டது.

சாதாரணமாக, கப்பலில் ஸ்திரீகள் பிரசவித்தால், பிறக்கும் குழந்தைக்குக் கப்பலின் பெயரையே வைத்துவிடுவது ஐரோப்பிய சம்பிரதாயம். "ரஷீத்" என்பது ஒரு கப்பலின் பெயராக இருந்தால், அதன்மூலம் ரஷீத்தின் பெற்றோர்களைப் பற்றி விசாரிக்கப் புலன் கிடைத்துவிடும் என்பதே அந்த ஊழியரின் நம்பிக்கைக்குக் காரணம். உடனே அவர் பல கப்பல் கம்பெனிகளுக்கு எழுதிக் கேட்டார். யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பு மத்திய தரைக்கடல் துறைமுகங்களுக்கு 'ரஷீத்' என்ற பெயருடன் ஒரு பிரிட்டிஷ் கப்பல் ஓடிக்கொண்டிருந்தது. ஸ்விட்ஜர்லந்திலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானீகரின் உதவியினால் ரஷீத் கப்பலின் பழைய தஸ்தாவேஜுகளைப் புரட்டிப் பார்த்ததில், அடால்ப் ரஷீத் பிறந்த தேதிக்குச் சரியாக கப்பலில் அதே தேதியில் ஒரு குழந்தை பிறந்ததாகக் குறிப்பு இருந்தது. அதை வைத்துக்கொண்டு ரஷீத்தின் பெற்றோர்கள் எங்கேயிருக்கக்கூடும் என்று தேடிப் பார்த்தார்கள். எவ்வளவோ முயன்றும் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. பிரிட்டிஷ் கப்பலில் ஒரு குழந்தை பிறந்தால் அது எந்தத் தேசத்துப் பெற்றோர்களின் குழந்தையாகுலும் பிரிட்டிஷ் பிரஜையாகக் கருதவேண்டும் என்பது ஆங்கிலச் சட்டம். அதன்படி ரஷீத் பிரிட்டிஷ் பிரஜையாக மதிக்கப்பட்டான். அவனுடைய பராமரிப்பை பிரிட்டிஷ் ஸ்தானீகர் ஏற்றுக்கொண்டு அவனை இங்கிலாந்துக்கு அனுப்பினர்.

பிரிந்தவர்களைச் சேர்க்க ஒரு கோஷ்டி வேலை செய்துகொண்டிருக்கும்போதே, வீடுவாசலற்று அனுதைகளாக இருப்பவர்களுக்குப் புகலிடம் தேடுவதில் அகதிகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த வேறு சிலர் முயன்றார்கள். ஒவ்வொரு அகதிக்கும் 'ரிகார்டு ஷீட்' தயாரித்ததுபோல, ஒவ்வொரு தொழிலிலும் பயிற்சி பெற்றவர்களின் ஜாட்தா தயாரித்து, பலநாட்டு சர்க்கார்

களுக்கு அனுப்பினர்கள். தம் தம் தேவைக்கு ஏற்றபடி சிற் சில தொழிலாளர்களை அனுப்பிவைல் பிரஜைகளாக ஏற்றுக் கொண்டு பராமரிப்பதாக சில சர்க்கார்கள் சொன்னர்கள். சில நாட்டினர் தொழிலாளர்களை மட்டுமே அனுப்பும்படிச் சொன்னர்கள். வேறு சில சர்க்கார் குடும்பங்களை அனுப்பும் படிக் கேட்டுக்கொண்டார்கள். ஆஸ்டிரேலியா, கனடா, இங்கி லாந்து போன்ற தேசங்கள் தொழிலாளர்களுடைய யோக்ய தாம்சங்களைப்பற்றி விசேஷமாகக் கவனிக்காமல் பல குடும் பங்களை ஏற்றுக்கொள்ள முன்வந்தன. இருபதாயிரம் சுரங் கத்தொழிலாளர்களை அனுப்பும்படி பெல்ஜியம் கேட்டது. தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்ட சில மாதங் களுக்கெல்லாம் அவர்களுடைய குடும்பங்களையும் அழைத்துக் கொண்டார்கள். பிரேஜில் இருநூறு விவசாயிகளை அழைத்து கோயஸ் (Goias) என்னுமிடத்தில் குடியேற்றி வீடும் நிலமும் கொடுத்துக்காப்பாற்றிற்று. மாடு கன்றுகளை வளர்த்துக்கொண்டு, விவசாயம் செய்து ஒரே குடும்பம்போல அவர்கள் வாழ்கிறார்கள்.

குழந்தைகளையும் யுவதிகளையும் வாலிபர்களையும் என்ன செய்வது? இது ஒரு பிரச்னையாகத்தானிருந்தது. தொழில் தெரிந்தவர்களுக்கு பிற நாடுகளில் உழைத்துச் சாப்பிட வசதி கிடைத்தது. அதனல் அந்தத் தேச சர்க்காருக்குச் செல விலலை. குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டால் வரிப்பணத்திலிருந்து செலவைச் சமாளிக்கவேண் டும். ஆகவே சர்க்கார்கள் தயங்கின. ஆனல் பொது மக்களில் பலர் உதவி செய்ய முன்வந்தார்கள். தம் தம் அந்தஸ்து, தொழில், பழக்க வழக்கங்கள் இவற்றுக்கு ஏற்ற படி இருக்கும் குழந்தைகளை வளர்ப்பாக ஏற்றுக்கொள்ள பல பிரமுகர்கள் முன்வந்தார்கள்.

சிறுவர்களையும் சிறுமிகளையும் என்ன செய்வது? அவர்களோ விவரம் தெரிந்தவர்கள். சொந்த வீடு, வாசல், உற்றார் உறவினர் முதலிய ஞாபகம் இருப்பதுடன் யுத்தத்தின் கொடுமையை அறிந்தவர்கள். அந்நியக் குடும்பங்களில் நெருங்கிப் பழக

முடியாத கூச்சம் பலருக்கு இருந்தது. இந்தச் சமயத்தில் டொனல்ட் கிங்ஸ்லி, (Donald Kingsley) அகதிகள் ஸ்தாபனத்தின் டைரெக்டர்-ஜனரலாகப் பதவி ஏற்றார். சிறுமிகளையும் வாலிபர்களையும் அவர் நெருங்கிப் பழகிக் கவனித்தார். சுறுசுறுப்பாகவும் பொறுப்புடனும் அவர்கள் முகாமில் வேலை செய்தது அவருக்கு ஆனந்தமாக இருந்தது. அதுவே, வேறு நாடுகளுக்கு அவர்களை அனுப்பவும் வழிகாட்டிற்று. அவர்களுடைய ஆர்வத்தையும், பொறுப்பையும், சாரணர் படை போன்ற பொது ஸ்தாபனங்களில் சேர்ந்து அவர்கள் பணியாற்றும் அழகையும் மிகவும் நன்றாக வர்ணித்து, எதிர் காலத்தில் சிறந்த பிரஜைகளாக விளங்கக்கூடிய சகல அம்சங்களும் இவர்களுக்கு உண்டு என்று பொருள்படும்படி ஓர் அறிக்கை தயாரித்துப் பல நாடுகளுக்கு அனுப்பினார். அவருடைய முயற்சிக்கு உடனே பதில் கிடைத்தது.

ஐந்நூறு வாலிபர்களையும் யுவதிகளையும் அனுப்பும்படி ஆஸ்டிரேலியா கேட்டுக்கொண்டது. ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஸ்வீடன், நியூஜீலந்து போன்ற நாடுகளும் கடிதங்கள் எழுதின.

பல நாடுகளிலிருந்து அழைப்புகள் வந்தாலும் வாலிபர்களையும் யுவதிகளையும் அனுப்புவதில் மிகவும் ஜாக்கிரதையான ஏற்பாட்டைச் செய்தார்கள் அகதிகள் ஸ்தாபன நிர்வாகிகள் புது இடங்களில் அவர்களுக்கு எல்லாமே புதிதாக இருக்கும். மேலும் அனுதாபத்துடன் இவர்களுக்கு ஆதரவு காட்டவே மற்றத் தேசத்தார் முன்வருகிறார்கள். ஆகவே பரஸ்பரம் பழகவும், புது சூழ்நிலைக்குத் தக்கவாறு வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்ளவும் யுவர்களைப் பொறுக்கிறார்கள். யுவர்களின் ஆர்வத்துக்கும், குடிப்பிறப்புக்கும் அனுசரணையாக, வெளி நாடுகளிலுள்ள குடும்பத்தைப் பொறுக்கி சிபாரிசு செய்தார்கள். இதனால் சிறிது காலதாமதம் ஏற்பட்டாலும், நீடித்த சௌஜன்யமும், குழந்தைகளுக்கு சந்தோஷமான எதிர்கால வாழ்க்கையும் ஏற்படவேண்டும் என்பதே அவர்

களுடைய நோக்கம். விவசாயத்தில் ஊக்கம் காட்டும் சிறுவனை விவசாயியின் குடும்பத்துக்குச் சிபாரிசு செய்தார்கள். படிப்பில் ஊக்கம் காட்டும் மாணவனுக்கு உத்தியோகஸ்தர் வீட்டில் இடம் தேடினர்கள். பிரயாணத்துக்கு முன்பு ஒவ்வொரு வரையும் வைத்தியப் பரிசோதனை செய்து துறைமுகப் பட்டணத்திலிருக்கும் முகாமுக்கு அனுப்பினர்கள். அங்கு இரண்டொரு வாரகாலம் ஒவ்வொருவரும் நிறுத்திவைக்கப்பட்டார்கள். புதுத் தேசத்தைப்பற்றியும், அங்குள்ள பாஷை, கலாசாரம், வசிக்கவேண்டிய குடும்பம், சூழ்நிலை, வசதி, நடந்து கொள்ளவேண்டிய முறை இவை எல்லாம்பற்றி ஒவ்வொருவருக்கும் விவரமாகச் சொல்லி, பிறந்த தேசத்துக்கும் பிரஜைகளாகப்போகிற தேசத்துக்கும் கௌரவமேற்படும் வண்ணம் நடந்து கொள்ளுங்கள் என்று முகாம் ஊழியர்கள் உபதேசம் செய்தார்கள். பிறகு சட்ட சம்பந்தமான தஸ்தவேஜுகளும் பாஸ்போர்ட்டும் வாங்கிக் கப்பலில் ஏற்றிவிடுவார்கள்.

அமெரிக்க நாடுகளுக்குப் புறப்பட்ட சில வாலிபர்கள் கப்பலேறுமுன்பு தங்களுடன் நெருங்கிப் பழகிய முகாம் ஊழியருக்கு பின் வருமாறு கடிதம் எழுதினர்கள். எல்லாரும் கையெழுத்திட்டு எழுதிய அந்தக் கடிதம், வெளி நாடுகளுக்குச் சென்ற வாலிபர்களின் மனத்தையும் முகாம் ஊழியர்களின் சேவையையும் எடுத்துக்காட்டும் ஒரு சான்றுகும். கடிதம் வருமாறு: "கப்பல் ஏற வேண்டும் என்று நாங்கள் துடித்துக் கொண்டிருந்தோமே! நாளை நாங்கள் புறப்பட்டுவிடுவோம். நீங்கள் சிரத்தை எடுத்துக்கொள்ளாமலிருந்தால் எங்களுக்கு இந்தப் பாக்கியம் கிடைத்திருக்குமா? உங்களுக்கு எப்படிக் கைம்மாறு செய்வோம்? புது தேசத்திலே விசுவாசத்துடனும் கண்ணியத்துடனும் உழைத்து வாழ்வோம். அமெரிக்காவின் சிறந்த பிரஜைகள், தேச பக்தர்கள் என்று பெயர் எடுக்கப் பாடுபடுவோம். இந்த உறுதிமொழிதான் உங்களுக்கு நாங்கள் செய்யும் கைம்மாறு. நன்றி மொழி."

ஐரோப்பிய அகதிக் குழந்தைகளுக்கும் யுவர்களுக்கும் வாழ்க்கை வசதியளிக்கும் பொறுப்பை அமெரிக்காவில் ஐரோப்பிய குழந்தைகள் சம்ரக்ஷணை சங்கம் (Committee for the Care of European Children) ஏற்றுக்கொண்டது. இதில், கத்தோலிக்கர், பிராடெஸ்டெண்டு, யூதர் என்று பல பல மத ஸ்தாபனங்கள் கலந்துகொண்டன. நியூயார்க் நகரத்தைச் சேர்ந்த பிராங்க்ஸ் (Bronx) என்னுமிடத்தில் ஒரு வரவேற்பு விடுதி ஏற்படுத்திக்கொண்டு இந்தச் சங்கம் வேலைசெய்தது. விமானமூலமும் கப்பல் மூலமும் ஐரோப்பாவிலிருந்து வரும் குழந்தைகளையும் யுவ யுவதிகளையும் இந்த விடுதிக்கு அழைத்து வருவார்கள். அங்கு இரண்டு மூன்று வாரகாலம் தங்கியிருந்த பிறகு வெவ்வேறு இடங்களுக்கு அனுப்புவார்கள். அமெரிக்காவின் செல்வநிலைக்கு ஏற்றபடி இந்த விடுதி அமைக்கப்பட்டிருந்தது. குழந்தைகள் சந்தோஷமாக இருக்க விளையாட்டு வசதிகளும் நடனமும் நாடகமும் ஏற்பாடு செய்தார்கள். கூச்சமும் பயமும் தெளிந்து எல்லாருடனும் சகஜமாகப் பழக வசதிகளும் ஊக்கமும் அளித்தார்கள். இரண்டொரு வாரங்களில் அவர்களுக்கு அமெரிக்க நாட்டின் பழக்க வழக்கங்கள் பிடிபட்டுவிடும்.

அங்குள்ள ஊழியர்களும் குழந்தைகளின் மனம் கோணாமல் நளினமாகப் பழகினார்கள். ப்ரெட்டி (Freddie) என்று ஒரு சிறுவன், சூட்டிகையானவன். பிறரை அதிசீக்கிரம் வசீகரித்துவிடும் சுபாவம் உள்ளவன். அவனுடைய பேச்சிலும் விளையாட்டிலும் மயங்காதவர்களே கிடையாது. அவனுக்கு சோப் என்றால் அலாதி மோஹம். தன்னிடம் அபூர்வப் பொருள்கள் இருப்பதாக மற்றச் சிறுவர்களிடம் சொல்லிப் பெருமைப்பட்டுக்கொள்வான். ஒரு நாள் அவனைக் குழந்தைகள் சூழ்ந்துகொண்டார்கள். "உன்னிடம் இருப்பதைக் காட்டு" என்றார்கள். ப்ரெட்டி குஷியுடன் ஜோபியில் கைவிட்டான். ஒரு சோப்புத் துண்டை வெளியே எடுத்தான். குழந்தைகள் சந்தோஷத்தால் கைதட்டின. ப்ரெட்டி மறுபடியும் ஜோபி

யில் கைவிட்டான். இப்போது என்ன எடுக்கப்போகிறான் என்று ஆவலுடன் பார்த்தார்கள் மற்றவர்கள். ஒரு சோப்புத் துண்டுதான். குழந்தைகளுக்குச் சப்பிட்டுவிட்டன. ப்ரெட்டியோ மனங் கலங்கவில்லை. "இதோ இன்னுமொன்று" என்று வேறு ஒரு பையிலிருந்து எடுத்தான். அதுவும் சோப்புத் தான். குழந்தைகள் ஓடிவிட்டன. ஆனால் ப்ரெட்டியோ சோப்பு மோஹத்தைவிடவேயில்லை. முகாமிலிருந்த ஊழியர்கள் அவனைத் திருத்துவது எப்படி என்று யோசிக்கலானார்கள். அவனைப்போலவே வேறு சில குழந்தைகளும் இருந்தார்கள்.

ஐரோப்பாவில் அவன் இருந்த அகதிகள் முகாமில் சோப் புக்குப் பஞ்சமில்லை. அப்படியிருந்தும் சோப்புக்காகப் பிராண னைக்கூட விடத்தயாராக இருக்கும் பைத்தியம் அவனுக்கும் மற்றக் குழந்தைகளுக்கும் எப்படி ஏற்பட்டது என்பதே சில ருக்கு ஆச்சர்யமூட்டிற்று. குழந்தை உள்ளம் நளினமானது. சிறு வயதில் ஏற்படும் அதிர்ச்சி மிகவும் நன்றுகப் பதிந்து விடும். நல்லதோ கெட்டதோ வயதுடன் அந்த ஞாபகமும் வளர்ந்துவிடும். யுத்த காலத்தில் ஐரோப்பாவில் சோப்பு கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது. ஒரு துண்டுச் சோப்பு கிடைத்துவிட்டால் அதைக் காப்பாற்றிவைப்பார்கள். அந்த நினைப்பு ப்ரெட்டி போன்ற குழந்தைகளின் உள்ளத்தில் நன்றுகப் பதிந்துவிட்டது. ஏராளமாக சோப்புக் கிடைத்த போதுகூட சேமித்து வைக்கும் மனப்பான்மை ஏற்பட்டுவிட்டது.

சங்கீதவித்வான் ஒருவர் ப்ரெட்டியை வளர்ப்புப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டார். வீட்டுக்குள் நுழைந்ததும் கூடத்தி லிருந்த பியானோவை அவன் பார்த்தான். அவனைப் பிடித் திருந்த சோப்புப் பைத்தியம் மாறிவிட்டது. அவன் லாட்வியா தேசத்துச் சிறுவன். யுத்தத்துக்கு முன்பு அவனுடைய வீட்டில் பியானோ வாத்தியமிருந்தது. பெற்றோர்களுடன் சேர்ந்து அவன் பாடுவதுண்டு. பியானோவைப் பார்த்ததும் அவனுக்கு வீட்டு நினைப்பு வந்துவிட்டது. பியானோ வாத்தியம் வாசிப்பதைக் கேட்டுக்கொண்டேயிருப்பான். சில சமயம்

அவன் ஞாபகத்திலிருக்கும் லாட்வியா தேசத்துப் பாட்டுக் களைப் பாடுவான். வளர்ப்புத் தந்தையான சங்கீத வித்வான் அவனுடன் பியானோ வாசிப்பார்.

துன்பமும் துயரமும் மனிதனுடைய மனசை முறிப்பதும் உண்டு; தன்னம்பிக்கையுடன் அவற்றை எதிர்த்து நிற்கும் தீரர்களாக்குவதுமுண்டு. அமெரிக்காவுக்கு வந்த வாலிபர் களில் பலர் தீரர்கள். அவர்களுடைய உத்சாகத்தையும் சுறு சுறுப்பையும் கண்டு அமெரிக்க உத்யோகஸ்தர்கள் ஆச்சர்யப் பட்டார்கள்; வாலிபர்களைப் பாராட்டினார்கள். சென்றுபோனதை மறந்து எதிர்காலத்தைப்பற்றி எண்ணும் அந்த யுவர் களுக்கு வாழ்க்கை வசதிசெய்து தருவதில் உத்சாகமாக இருந் தார்கள். ரெஜினு பதினைந்து வயதுச் சிறுமி. அகதிகள் முகாமுக்கு வந்த பிறகுதான் அவள் ஆங்கிலமே பேசக் கற்றுக் கொண்டாள். அவள் அமெரிக்கா வந்து சேர்ந்தாள். சிறு வயதிலிருந்தே டாக்டராகவேண்டும் என்பது அவளுக்கு ஆசை. வெள்ளை வெளேர் என்று ஆடை யுடுத்திக்கொண்டு, சுறு சுறுப்பாக இங்குமங்கும் அலையும் டாக்டர்களையும் நர்ஸுகளையும் பார்த்து அவள் வியப்பதுண்டு. அகதிகள் முகாமில் சதா புன்சிரிப்புடன் சலிக்காமல் உழைத்துக்கொண்டிருந்த டாக் டரைப் பார்த்தபிறகு அவளுடைய ஆசை பெருகிற்று. "தீனர் களுக்கு உதவி செய்வதில் ஆனந்தம் இருக்கிறது. அவர் களைச் சந்தோஷப்படுத்தவும் டாக்டர்களுக்குத்தான் தெரியும்" என்று அகதிகள் முகாமில் பிரசுரமாகிக் கொண்டிருந்த 'நியூ லைப்' (New Life) பத்திரிகையில் ரெஜினு எழுதினாள்.

அவளை ஓர் அமெரிக்க தம்பதிகள் வளர்ப்புப் பெண்ணாக ஏற்றுக்கொண்டார்கள். பள்ளிக்கூடத்தில் சேரும்போதே ரெஜினு தன்னுடைய ஆசையை அமெரிக்கப் பெற்றோர்களிடம் கூறிவிட்டாள். "குழந்தாய், உன்னுடைய படிப்பு முடியட்டும். நீ டாக்டராக ஆசைப்பட்டால் வைத்தியக் கல்லூரியில் சேரலாம்" என்றார் அமெரிக்கர். ரெஜினுவுக்குச் சந்தோஷம் தாள வில்லை.

ஜியார்ஜ் ஒரு பெல்ஜிய சிறுவன். அவனும் அமெரிக்கா வந்து சேர்ந்தான். காலேஜில் சேர்ந்து பல்மொழி வல்லுனராக ஆகவேண்டும் என்பது அவனுடைய ஆசை. புது இடமாக இருந்தாலும் தன்னை ஏற்றுக்கொண்ட அமெரிக்கரிடம் கூச்சமின்றி ஆசையைச் சொன்னான். உடனே அவனைக் கலாசாலையில் சேர்த்தார் அவர்.

இம்ரே ஹங்கேரியச் சிறுவன். அவனுக்கு விவசாயத்திலே அலாதி மோஹம். அயோவாவிலுள்ள ஒரு விவசாயக் குடும்பத்துடன் வாழ ஏற்பாடாயிற்று. புது இடத்தில், மனத்துக்குப் பிடித்தமான வேலை கிடைத்துவிட்டதால், குடும்பத்தாருடன் ஒற்றுமையாக இருக்கிறான். இதேபோல எத்தனையோ பெண்களும் வாலிபர்களும் மனத்துக்குப் பிடித்த சூழ்நிலையில் வாழ வசதி கிடைத்ததால் சந்தோஷமாக இருக்கிறார்கள்.

சில யுவர்களுக்கு குடும்பங்களில் கலந்து பழகுவதற்குக் கூச்சமாக இருந்தது. அனுதைகளாக அலைந்தபோது அவர்கள் பட்டகஷ்டம் சொல்லிமாளாது. முகாம் வாழ்க்கையில் பொறுப்புணர்ந்து பிறருக்குச் சேவை செய்து பண்பட்டவர்கள் அவர்கள். பொது ஸ்தாபனங்களில் வசித்துப் பிறருக்குச் சேவை செய்வதில் அவர்களுக்குப் பிரியமாக இருந்தது. இந்த மாதிரி யுவர்களுக்கும் தக்க ஏற்பாடுகளைச் செய்தார்கள். அன்னிகா என்ற பெண்ணுக்கு பியானோ வாத்தியம் வாசிக்கத் தெரியும். அவளை ஒரு கிருஸ்துவ மாணவர் இல்லத்துக்கு அனுப்பினர்கள். அங்கு குழந்தைகளுக்குச் சங்கீதம் கற்றுக் கொடுத்துக்கொண்டு அவள் சந்தோஷமாக வசிக்கிறாள்.

சில வாலிபர்களுக்கு படிப்பிலே நாட்டம் இருப்பதில்லை. பிறருக்குப் பாரமாக இருக்கக்கூடாது என்ற எண்ணம் வேறு. குடும்பங்களில் வசித்தாலும் உழைத்துச் சாப்பிடவேண்டும் என்று தீர்மானித்த வாலிபர்களுக்கு வேலை தேடித்தரவும் கமிட்டி உதவி செய்தது. ஜாக் என்ற சிறுவனுக்கு ஹோட்டல் சமையல்காரனாக வேலை செய்யவேண்டும் என்று ஆசை. நியூ

இங்கிலாந்திலுள்ள ஒரு அமெரிக்கக் குடும்பத்தில் அவன் வசிக்க ஏற்பாடாயிற்று. குடும்பத்தலைவருடைய சிபாரிசினால் பாஸ்டனிலுள்ள ஒரு ஹோட்டலில் சித்தாளாகச் சேர்ந்தான், உழைப்பினாலும் ஊக்கத்தினாலும் சம்பள உயர்வும் பெற்று உதவி சமையல்காரனாக பதவி உயர்வும் பெற்றான்.

புது தேசத்தில் பழக்கமில்லாத மனிதர்களுடன் யுவதி களும் வாலிபர்களும் கலந்து பழகி நல்ல பெயர் வாங்குவது சுலபமான காரியமல்ல. அவர்களுக்கு ஆதரவுகாட்டும் குடும் பத்தினருக்கும் சௌஜன்யமாகவும் சந்தோஷமாகவும் இருக்க முடியும் என்று சொல்லமுடியாது. பரஸ்பர அன்பும் அனு தாபமும் ஆதரவும் இல்லாவிட்டால் இருபாலரும் சந்தோஷமாக இருக்கமுடியாது. அன்னை என்ற அனுதாபத்தில் குழந்தை களை ஆதரிக்க முன்வந்தாலும் அவர்கள் பழகும் விதத்தில் பாசமும் பந்தமும் ஏற்பட்டுவிடுகிறது.

நாளாவட்டத்தில் ஐரோப்பாவிலுள்ள அகதிகளின் எண் ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. ஒவ்வொன்றாகப் பல முகாம்கள் மூடப்பட்டன. ஆனாலும் எங்குமே அனுப்ப முடி யாமல் ஒரு சிலர் இருந்தார்கள். இவர்களைக் காப்பாற்றவேண் டிய பொறுப்பு ஸ்தாபனத்துக்கு இருந்தது. இவர்களில் நன் றாகப் படித்துப் பட்டம் பெற்றவர்களும் தொழில் துறை நிபுணர்களும் பலர் இருந்தார்கள். வேறு சிலர் வயோதிகர் கள். சிலர் நொண்டி முடமானவர்கள். தரும சிந்தை யுடன் இவர்களை ஏற்றுக்கொண்டு வரிப்பணத்தைச் செலவிட்டு தண்டச் சோறுபோட சில நாடுகள் விரும்பவில்லை.

ஸ்ரீ கிங்ஸ்லி மனம் தளரவில்லை. இவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பை எடுத்துக்காட்டி பல நாடுகளுக்கு வேண்டு கோள் விடுத்தார். மக்கள் மனம் நெகிழ்ந்தார்கள். முதலில் நிபுணர்களுக்கு இடம் கிடைத்தது. ஒவ்வொருவராகக் கிளம் பினர்கள். நொண்டிகளும் அங்கஹீனர்களும் கூட பிற நாடுகளில் வரவேற்கப்பட்டார்கள். நார்வே தேசத்தில் குருடர்

களுக்காக ஒரு விடுதியை சர்க்கார் நடத்தி வருகிறார்கள். அந்த விடுதியை விஸ்தரிக்கும் செலவை அகதிகள் ஸ்தாபனம் ஏற்றுக்கொண்டால் முகாமிலிருக்கும் எல்லாக் குருடர்களையும் தங்களுடைய தேசத்துக்கு அழைத்துக்கொள்வதாக நார்வே சர்க்கார் சொன்னார்கள். இதேபோல சில வயோதிகர்களை ஏற் றுக்கொண்டு பராமரிக்கும் பொறுப்பை பெல்ஜியம் சர்க்கார் ஒப்புக்கொண்டார்கள். அமெரிக்காவிலுள்ள நியூ ஜெர்ஸியில் அசக்த போஷக ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. அவர்கள் போலந்தைச் சேர்ந்த ஒற்றைக்கால் ஹீனமான பிராங்கி (Frankie) யையும் அவனுடைய சகோதர சகோதரிகளையும் ஆதரிக்க ஒப்புக்கொண்டார்கள். நியூ ஜெர்ஸிக்கு வந்ததும் பிராங்கியைப் பரிசோதித்து மரக்கால் பொறுத்தினார்கள். மற்ற வர்களைப்போல அவனால் நடக்கமுடிந்தது. நாளாவட்டத்தில் பந்து விளையாடவும் சகடை உருட்டி ஓடவும் அவன் கற்றுக் கொண்டான். எப்போதுமே அவன் சிரிக்கச் சிரிக்கப் பேசுவான். அவனைப் பார்த்த ஒரு டாக்டர் தம்முடைய ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றார். அந்த ஆஸ்பத்திரியில் திருடர்களுடன் சண்டையிட்டு கையிழந்து காலிழந்து தவித்த பல போலீஸ் வீரர்கள் இருந்தார்கள். அங்கஹீனமானதற்காக அவர்கள் மனம் சோர்ந்து கிடந்தார்கள். பிராங்கியைப் பார்த்த பிறகு அவர்களுக்கு தன்னம்பிக்கை ஏற்பட்டது. பாமரனை பிராங்கி யினால் உற்சாகத்துடன் வாழமுடியுமானால், திறமையும் வசதியு முள்ள தங்களால் வாழமுடியாதா என்று எண்ணிப் பார்க்கும் போதே சோர்வு நீங்கி எழுந்துவிட்டார்கள்.

ஐ.நா. திட்டப்படி 1950-ஆம் ஆண்டில் சர்வதேச அகதிகள் ஸ்தாபனம் கலைக்கப்படவேண்டும் என்பது ஏற்பாடு. ஸ்தாப னத்தை மூடவேண்டிய காலம் நெருங்க நெருங்க கிங்ஸ்லியும் அவருடைய ஊழியர்களும் பன்மடங்கு வேலைசெய்து அகதி களுக்கு வசதி செய்தார்கள். ஆனால் சுமார் இருபத்தையாயிரம் பேர்களுக்கு எவ்வித வசதியும் அளிக்க முடியவில்லை. சிலரைக் குடும்பத்தாருடன் சேர்க்க வேண்டியதாயிருந்தது. சிலருக்கு

ஸ்வதேசத்தில் சௌகர்யம் செய்துதர வேண்டியதாயிருந்தது. சிலரை வெளி நாடுகளுக்கு அனுப்ப திட்டமிருந்தாலும் அந்த நாடுகளிலிருந்து பதில் கிடைக்காததால் காத்திருக்கவேண்டிய தாயிற்று. ஆகவே குழந்தைகள் தேடும் ஸ்தாபனத்திலுள்ள தஸ்தாவேஜுகளையும் அகதிகள் ஸ்தாபனத்திலுள்ள தஸ்தா வேஜுகளையும் ஜர்மனியிலுள்ள ஹை கமிஷனர் கார்யாலயத்துக்கு மாற்றினர்கள். தகவல் கிடைக்கக் கிடைக்க அந்தக் கார்யாலயம் உதவி செய்யக்கூடும் என்றுதான் மாற்றினர்கள். புலன் கிடைக்காது என்று கைவிடப்பட்டவர்களைப்பற்றிக்கூட பல மாதங் கள் கழித்து ஏதாவது தகவல் கிடைத்துக் கொண்டேயிருந்தது. அட்லாண்டிக் சமுத்திரத்தில் மிதந்து கொண்டிருந்த ஒரு பாய்மரக் கப்பலிலிருந்து சில ஸ்பானியக் குழந்தைகளை அமெரிக்க வீரர்கள் காப்பாற்றினர்கள். அவர்களில் மரூஜா என்று ஒரு பெண். அமெரிக்க மண்ணில் கால் வைக்கும்போது அவளுக்குப் பதினேரு வயசிருக்கும். மிஸோரியிலுள்ள ஒரு குடும்பத்தாருடன் அவள் வசித்தாள். புது இடமாக இருந்தா லும் அவள் எல்லாருடனும் பிரியமாகப் பழகினாள். ஆனாலும் என்றாவது ஒருநாள் தன்னுடைய தாய் தந்தையரைப் பார்க்க முடியும் என்று அவள் கனவு கண்டுகொண்டிருந்தாள். சிற்சில சமயங்களில் வாய்விட்டுச் சொல்லவும் சொல்வாள். ஆறு வருஷங்கள் வரையில் அவளுடைய பெற்றோர்களைப்பற்றி ஏதுமே தெரியவில்லை. கடைசியில் அவளுடைய நம்பிக்கை பலித்தது. சர்வதேச சேவா சமாஜத்தின் மூலம் அவளுக்கு ஒரு நாள் கடிதம் வந்தது. அவளுடைய பெற்றோர்கள் இங்கிலாந்தில் வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களிடம் மரூஜாவை அனுப்ப ஊழியர்கள் ஏற்பாடு செய்தார்கள். மரூ ஜாவின் சந்தோஷத்தை எப்படி விவரிப்பது?

கதைபோலச் சொன்னாலும், ஹன்னா, இம்ரே, அன்னிகா, ஜாக், பிராங்கி, மரூஜா இவர்களுக்காகவும், இவர்களைப்போல லக்ஷக்கணக்கான சிறுவர் சிறுமிகளுக்காகவும் சர்வதேச அகதி கள் ஸ்தாபனம் மூன்று வருஷகாலம் செய்துள்ள அற்புத

மான சேவை பிரமிப்பூட்டுவதாகவும், அப்போதிருந்த கால நிலை, சிந்தனை, வேலை, இவற்றை எண்ணிப்பார்த்தால்தான் ஸ்தாபனம் செய்த அஸுர வேலையைப் பாராட்டமுடியும். 1950-ஆம் வருஷத்துக்குள் சர்வதேச அகதிகள் ஸ்தாபனம் கிட்டத்தட்ட பதினைந்து லக்ஷம் அகதிகளுக்கு உதவியளித்திருக்கிறது. 790,398 மக்களுக்கு வெவ்வேறு தேசங்களில் புகலிடம் தேடித் தந்திருக்கிறது. காணுமற்போனவர்களைத் தேடிப் பிடிக்க ஸ்தாபிக்கப்பட்ட கோஷ்டியினர் 70,253 பேர்களைக் கண்டுபிடித்தார்கள். இவர்களில் எஸ்லிங்கன் கோஷ்டியைப்போன்ற குழந்தைகள் சேவா சமாஜத்தார் 2,975 குழந்தைகளைத் தேடிக்கண்டு பிடித்து அவர்களைப் பெற்றோர்களிடம் ஒப்புவித்தார்கள்.

2. குழந்தைகள் சகாய நிதி

பிரான்ஸ் தேசத்தில் ஒரு பகுதி. எங்கே பார்த்தாலும் குப்பை கூளம், இடிந்தவீடுகளின் கல்லும் மண்ணும், பாழடைந்தவீட்டின் இருளடைந்த ஒரு பகுதியில் ஈரத்தால் பிசுபிசுத்துக் கிடந்த தரையில் படுத்துக்கிடந்த ஒரு சிறுமியை அகதிகள் முகாம் ஊழியர்கள் பார்த்தார்கள். அவளுடைய உடம்பிலே கந்தல் கந்தலான ஆடை; எலும்பும் தோலுமான உருவம்; பரட்டைத்தலை. பார்க்கவே முடியாத சோக உருவம் அவள். முகாமுக்கு அழைத்துவந்து, நல்ல ஆடைகளைக் கொடுத்தார்கள். உணவு கொடுத்தார்கள். தலையைச் சீவி ஒழுங்குபடுத்தினார்கள். அவள் நல்ல சாப்பாடு சாப்பிட்டு எத்தனையோ நாட்களாகியிருந்தன. முகாமில் அவளுக்கு வேளாவேளை உணவு கிடைத்தும், பசிக்கொடுமையினால் எழுந்த பேராசை அவளைச் சிடுமூஞ்சியாக்கிவிட்டது. ஆகாரம் கிட்டாததால் திருடித்தின்று விடுவாள். சிறு குழந்தைகளிடமிருந்து ஆகாரத்தைத் தட்டிப் பிடுங்கித் தின்பாள். கொடுக்காமல் எதிர்த்து நிற்கும் குழந்தைகளுடன் சண்டைபோடுவாள். தன்னுடைய பெயரே அவளுக்கு மறந்துபோய்விட்டது. கேட்ட கேள்விக்குக் கூடச் சரியாகப் பதில் சொல்லமாட்டாள். முகாமில் அவளை (Jeanine) ஜின்னி என்று அழைத்தார்கள். பார்த்தால் பத்து வயதுச் சிறுமிபோலிருந்தாலும் அவளுக்குப் பதினைந்து பிராயமாகியிருந்தது. பட்ட கஷ்டத்தினால் மனம் வெதும்பி சிடுமூஞ்சியாகிவிட்டாள் என்றார்கள் சிலர். சரியான போஷாக்கு இல்லாததால்தான் சிடுமூஞ்சித்தனம் வந்தது என்றார்கள் சிலர். அது மட்டுமல்ல; அவளுக்கு இளம்பிராயத்து நினைவே யில்லாமல் ஞாபக மறதியுமிருந்தது. முகாம் டாக்டர் அவளுக்கு ஆகாரத்துடன் காட்லிவர் எண்ணெயும் கொடுத்து வந்தார். போஷாக்கு ஏற்பட்டதும் அவளுக்கு ஞாபக சக்தி

ஏற்பட்டுவிடுவதுடன் சாதுவாகவும் மாறிவிடுவாள் என்று அவர் எண்ணினார்.

ஒரு நாள் முகாமுக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் இதர தேவைகளையும் ஏற்றிக்கொண்டு ஒரு லாரி வந்தது. அவற்றைக் கொண்டுவந்த அதிகாரி ஒரு பெண்மணி. முகாமி லுள்ளவர்களைப்பற்றியும், வேலை முறைகளைப்பற்றியும் கேட்டுத் தெரிந்துகொண்டபிறகு, எல்லோரும் சிறிது நேரம் விச்ராந்தி யாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு சிலர் பாடி மகிழ்ந் தார்கள். அவர்கள் பாடிய பாட்டுக்களில் ஒன்று நாடோடிப் பாடல். அந்த வட்டாரத்தில் எல்லாரும் விரும்பிப் பாடும் பாட்டு. ஆரம்பத்தில் ஜின்னி தூர விலகியிருந்தாள். பாட் டின் இனிமை அவளை இழுத்தது. இரண்டாவது அடி பாடும் போது ஜின்னி பரவசமடைந்தாள். ஓடோடியும் வந்து அந்தப் பெண்மணியின் கழுத்தைக் கட்டிக்கொண்டு விம்மி விம்மி அழுதாள். அந்தப் பாட்டு அவளுடைய கிராமத்து நினைவைத் தூண்டிவிட்டது. தன்னுடைய கிராமத்தின் பெயரும், தன் னுடைய அண்ணன் பியரேயின் (Pierre) ஞாபகமும் அவளுக்கு வந்தது. உடனே சொல்லிவிட்டாள். அந்தப் பெண்மணி ஜின்னியை சமாதானப்படுத்தினாள். மெள்ள மெள்ள அவளை விசாரித்தாள்.

ஜின்னியின் பெயர் திரேஸா. முகாமிலிருந்து சுமார் ஐம்பது மைல்களுக்கு அப்பாலிருந்த கிராமத்தில் பெற்றோர் களுடனும் அண்ணனுடனும் திரேஸா வசித்து வந்தாள். ஒருநாள் எதிரிகள் விமானம் மேலே பறந்தது. ஊருக்குள் நாஜிகள் புகுந்தார்கள். ஊரே சுடுகாடாயிற்று. உயிரைக் காப்பாற்றிக்கொள்ள திரேஸா ஓடினாள், ஓடினாள்!

இதற்குமேல் அவளால் எதும் சொல்லமுடியவில்லை. கிரா மத்தின் பெயர் தெரிந்ததும் அவளையும் அழைத்துக்கொண்டு ஊழியர்கள் கிளம்பினார்கள். ஊர் நெருங்கியதும் திரேஸா வுக்கு இருப்புக்கொள்ளவில்லை. ஊருக்குள் நுழைந்து ஒரு

சிறு கடைவாசலில் போய் மோட்டார் நின்றது. மோட்டார் சப்தம் கேட்டதும் கடையிலிருந்து ஒரு நொண்டி வெளியே வந்தான். அவனைப் பார்த்ததும் திரேஸா 'சித்தப்பா' என்று கத்திக் கொண்டேபோய் கட்டிக்கொண்டாள்.

திரேஸாவின் சித்தப்பா சொன்ன கதை சோகம் நிரம்பியது. திரேஸாவின் தந்தை போர்முனைக்குச் சென்றவன் திரும்பவே யில்லை. ஊருக்குள் நுழைந்த நாஜிகள் வீட்டிலிருந்த பசு மாட்டை ஓட்டிக்கொண்டு கிளம்பினர்கள். அதைத் தடுத்த தற்காக திரேஸாவின் தாயைச் சுட்டுக்கொன்றுர்கள். திரேஸா வின் அண்ணன் பியரேயைக் கைதி செய்து கொண்டுபோனர் கள். திரேஸா வீட்டைவிட்டு ஓடிப்போனுள். யுத்தத்தி லிருந்து ஜேக்ஸ்—அதுதான் திரேஸாவின் சிற்றப்பனின் பெயர்—நொண்டியாகி உயிருடன் திரும்பினன். வீட்டில் அவனுடைய மனைவி ஜியார்ஜட்டி மாத்திரமே இருந்தாள். யுத்தம் முடிந்த தும் நாஜி சிறையில் அடிமையாக வேலைசெய்துகொண்டு கிடந்த பியரே விடுதலே பெற்றுன். கால்நடையாகவே அவன் கிராமம் வந்து சேர்ந்தான். இப்போது திரேஸாவும் வந்துவிட்டாள்.

அவர்களுக்குச் சொந்தவீடு இருந்தது. பயிரிட்டுச் சாப்பிட நிலமுமுண்டு. ஆனலும் ஜேக்ஸ் குடும்பத்தாரால் பசியாறச் சாப்பிட முடியவில்லே. மாடு கன்றுகள் செத்துவிட்டன. வீட்டிலிருந்த சாமான்களே நாஜிகள் சூறையாடிச் சென்றுர்கள். கையிலிருந்த விதைத் தான்யத்தை நிலத்தில் போட்டும், சரியான பராமரிப்பு இல்லாததால் விளேச்சலே இல்லாமல் போயிற்று.

பிரிந்தவர் கூடின சந்தோஷம் அடங்கியதும் திரேஸாவை அழைத்துவந்த முகாமைச் சேர்ந்த பெண்மணி மெள்ள மெள்ள ஊர் நிலவரத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டாள். ஊரில் எத்தனை குடும்பங்கள் வாழ்கிறுர்கள்; அவர்களில் குழந்தைகள் எத்தனை பேர்? எல்லோருக்கும் சாப்பிட உணவு கிடைக்கிறதா? இப்படிக் கேட்கும்போது ஜேக்ஸும் ஜியார்

ஜெட்டியும் அழுதேவிட்டார்கள். "இப்போதே போதுமான ஆகாரம் கையில் கிடையாது. பனிகாலம் வரப்போகிறது. என்ன செய்யப்போகிறோம் என்றுதான் தெரியவில்லை" என்றார்கள்.

அவர்களுடைய வருத்தத்தைக் கண்டு அந்தப் பெண்மணி மனம் சோரவில்லை. "வீணாகக் கவலைப்படாதீர்கள். நான் அதிசீக்கிரம் திரும்பிவருகிறேன். வரும்போது உங்களுக்கு உணவும் இதரப்பொருள்களும் கொண்டுவரமுடியும் என்று எண்ணுகிறேன்" என்று சொல்லி விடைபெற்றுக் கொண்டாள்.

சில தினங்களுக்கெல்லாம் அந்தப் பெண்மணி திரும்பி வந்தாள். அவளுடன் பிரஞ்சு தேசிய சர்க்கார் உத்தியோகஸ்தர் ஒருவரும் வந்திருந்தார். ஜேக்ஸுக்கு மட்டும் உதவி செய்ய அவர்கள் வரவில்லை. கிராமத்திலுள்ள எல்லாருக்குமே கஷ்டநிவாரணம் அளிக்கும் நோக்கத்துடன்தான் வந்தார்கள். கிராமத்தலைவனைச் சந்தித்துப் பேசிய பிறகு அந்தப் பெண்மணி ஜேக்வின் வீட்டுக்கு வந்தாள். பியரே, திரேஸா, ஜியார்ஜட்டி, ஜேக்ஸ், எல்லோருமே சந்தோஷத்துடன் அவளை வரவேற்றார்கள்.

அந்தப் பெண்மணி சொன்னாள்: "உங்களுடைய கஷ்டம் விடிந்துவிட்டது. பால், ரொட்டி, மாமிசம், வெண்ணெய், காய்கறி எல்லாம் உங்களுக்குக் கிடைக்கும். குழந்தைகளுக்கு வேண்டிய ஆகாரம் கிடைப்பதற்கான வழிகளைச் செய்திருக்கிறோம். நீங்கள் கவலைப்படவேண்டாம். பசிப்பிணியினால் உங்கள் குழந்தைகள் இனிமேல் துடிக்கமாட்டார்கள். ஆனால் சில தினங்கள் காத்திருக்கவேண்டும்" என்று.

இந்த வார்த்தைகளைக்கேட்டு ஜேக்ஸ் குடும்பத்தார் சந்தோஷமடைந்தார்கள்; அந்தக் கிராமவாசிகள் குதூகலமடைந்தார்கள். யுத்தத்திலடிபட்டு வீடுவாசலை இழந்த பல்லாயிரக்கணக்கான அகதிகள் மன நிம்மதியடைந்தார்கள். ஐரோப்பாவிலுள்ள குழந்தைகளைப் பராமரிக்க ஐ.நா. சபை ஒரு

ஸ்தாபனத்தை ஏற்படுத்திற்று. அதற்கு சர்வதேச குழந்தைகள் சகாய நிதி என்று பெயர். சுருக்கமாக அதை 'யுனிசெப்' (UNICEF) என்று ஆங்கிலத்தில் குறிப்பிட்டார்கள்.

ஐ. நா. சபையின் ஜனரல் அசெம்பிளிக் கூட்டம் 1946-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 11-ஆம் தேதி நடந்தபோது, நியூ யார்க் நகர சபைத்தலைவர் லா கார்டியா (Fiorello LaGuardio) யுத்தத்தினால் அவஸ்தைப்பட்ட நாடுகளிலுள்ள குழந்தைகளைக் காப்பாற்ற ஒரு தனி நிதியும் ஸ்தாபனமும் அவசியம் என்று பேசினார். அப்போது அவர், ஐ.நா. சபையின் விசேஷ எஜன்ஸியான சமூக, பொருளாதார, கௌன்ஸிலின் டைரெக்டர்—ஜனரலாகவுமிருந்தார். இந்த நிதிக்கு உலகிலுள்ள எல்லா நாடுகளும் பொருளுதவி செய்யவேண்டும் என்று கேட்கலாம் என்பது லா கார்டியாவின் அபிப்பிராயம்.

இதை ஐ.நா. ஜனரல் அசெம்பிளி ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. பதினெட்டு வயதுக்கு உள்பட்ட சிறுவர் சிறுமிகளுக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் நிதி திரட்டப்பட்டது. இனம், நிறம், மதம், தேசம், கொள்கை, அரசியல் பற்று, இவை எதையும் கவனிக்காமல் தேவையுள்ள எல்லா நாட்டுக் குழந்தைகளுக்கும் உதவியளிக்கத் தீர்மானித்தார்கள்.

'அன்ரா' போன்ற ஸ்தாபனங்கள் ஐரோப்பாவில் அற்புதமாக வேலைசெய்து அகதிகளுக்கு கஷ்ட நிவாரணம் அளித்ததை எல்லாரும் பாராட்டினார்கள். அந்த நாடுகளிலுள்ள குழந்தைகளுக்கு உதவவேண்டும் என்று லா கார்டியா சொன்னதும் அதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதுடன், ஐ. நா. சபையின் பிரதிநிதிகள் தம் தம் நாட்டுச் சர்க்காருக்குத் தெரிவித்தார்கள். எல்லா நாட்டினரும் சந்தோஷத்துடன் பண உதவி செய்வதாக வாக்களித்தார்கள். பல லக்ஷம் டாலர்கள் நிதி சேர்ந்துவிட்டது. ஆனாலும், தோராயமாகக் கணக்குப்போட்டுப் பார்த்ததில் லக்ஷக்கணக்கான குழந்தைகளுக்கு உதவி செய்ய இந்த நிதி போதாது என்றே தோன்றிற்று.

ஆகவே, நார்வேயைச் சேர்ந்த ஆக் ஆர்டிங் (Aake Ording) என்பவருடைய யோசனையின்பேரில் உலகிலுள்ள தர்மசிந்தை யுள்ள மக்களிடம் உதவி கோரி ஒரு வேண்டுகோள் விடுத்தார்கள். உலகின் நாற்புறங்களிலிருந்தும் பணம் வந்து குவிந்தது. ஐந்தும் பத்துமாகக் கூட உதவி கிடைத்தது. பஸிபிக் சமுத்திரத்தி லுள்ள தென் கடல் தீவிலிருந்து சில ஷில்லிங்குகள் உதவி கிடைத்தன. இந்த நிதிக்கு மூன்று வருஷகாலம் தொடர்ந்து உதவி செய்வதாக பல நாடுகளின் சர்க்கார்கள் ஒப்புக்கொண் டார்கள். ஆஸ்டிரேலியா, ஆஸ்டிரியா, பெல்ஜியம், பல் கேரியா, கனடா, சிலோன், சிலி, காஸ்டரிகோ, க்யூபா, செக்கோஸ்லாவாகியா, டென்மார்க், ஈக்வடார், டொமினிகன் ரிபப்ளிக், பின்லந்து, பிரான்ஸ், கிரீஸ், காடேமாலா, ஹண்டு ராஸ், ஹங்கேரி, ஐஸ்லந்து, இந்தியா, இஸ்ரேல், இத்தாலி, லபீரியா, லிச்சென்ஸ்டீன், லக்ஸெம்பர்க், மொனகோ, மொஸாம்பி, நெதர்லந்து, நியுபவுண்டுலந்து, நியூஜீலந்து, நிகா ராகா, நார்வே, பாகிஸ்தான், பனுமா, பெரு, பிலிப்பைன்ஸ், போலந்து, ஸான்மரீனே, ஸ்வீடன், ஸ்விட்ஜர்லந்து, தாய் லந்து, தென் ஆபிரிகா யூனியன், இங்கிலாந்து, பிரிட்டிஷ் காலனிகள், ஐக்கிய அமெரிக்கா, இந்தோனேஷியா, உருகுவே, வெனிஜூலா, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகள்தான் முதல் முதலாக இந்த நிதிக்கு உதவியளித்தன. இவற்றில் பல நாடுகள் யுத்தத்தால் நாசமடைந்தவை. அங்குள்ள குழந் தைகளுக்கே உதவி அவசியமாக இருந்தது. ஆனலும் சர்வ தேச ஐக்கியத்தையும் குழந்தைகளின் எதிர்கால க்ஷேமத்தை யும் உத்தேசித்து அந்த நாடுகளும் பண உதவி செய்ய முன் வந்தன.

பணம் மட்டும் கிடைத்துவிட்டால் போதுமா? அதை நிர் வகிக்க ஆட்கள் வேண்டும். உணவு, உடை, மருந்துகள், இதர தேவைகள் இவைகளைச் சேகரிக்கவேண்டும்; தேவை யுள்ளவர்களுக்கு விநியோகிக்க வேண்டும். லக்ஷக்கணக்கான மக்களுக்கு உடனே உதவி செய்ய வேண்டியிருந்தது. ஐ.நா.

சபைக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. சர்வதேச சமாதானத்தையும் உலக அரசியலையும் கவனித்துக்கொள்ளவேண்டியதாயிற்று. மேலும், சர்வதேச ரீதியில் சில திட்டங்களை வகுத்துக்கொண்டு வேலை செய்தது. ஆயிரக்கணக்கான ஊழியர்கள் அவற்றை நிறைவேற்றுவதில் பங்கெடுத்துக்கொண்டார்கள். ஐ.நா. சபை மிகவும் ஜாக்கிரதையாகவும் நிர்வாகத் திறமையுடனும் திட்டங்கள் வகுத்ததால், அதன் கூட்டுறவில் இந்த நிதியும் வேலை செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது.

ஐ.நா. சபையின் சமூக, பொருளாதாரக் கௌன்ஸில், மனித சமூகத்தின் க்ஷேமத்துக்காக சர்வதேச ரீதியில் வேலை செய்ய, உணவு, விவசாய ஸ்தாபனம், (FAO) சர்வதேச சகாதார ஸ்தாபனம் (WHO) சர்வதேச கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனம் (UNESCO) என்று சில விசேஷப் பிரிவுகள் துவக்கப்பட்டன. இவற்றுடன் குழந்தைகள் சகாய நிதியும் (UNICEF) சேர்ந்துகொண்டது. இவற்றை மேற் பார்வை செய்பவர் ஐ.நா. சபையின் பொதுக் காரியதரிசிதான். மாணவர் செஞ்சிலுவை சங்கம், சாரணர் படை, நாவன்மைப் பயிற்சிக்கழகம், இலக்கிய சங்கம் என்று பள்ளிக்கூடத்தில் பல சங்கங்கள் இருப்பதுபோல ஐ.நா. சபையின் சமூக பொருளாதாரக் கௌன்ஸிலின் உட்பிரிவுகள்தான் மேலே குறித்த சர்வதேச ஸ்தாபனங்கள். மாணவர்கள் எல்லா சங்கங்களிலும் பங்கெடுத்துக்கொள்வதில்லை. தத்தமக்கு எந்தத் துறையில் ஊக்கமிருக்கிறதோ அந்தச் சங்கங்களில் மட்டுமே கலந்து கொள்வார்கள். அதேபோல ஐ.நா. சபையின் அங்கத்தினர் நாடுகள், தங்களுடைய தேவைக்கு ஏற்றபடி சர்வதேச ஸ்தாபனங்களுக்குச் சந்தா செலுத்திக் கலந்துகொள்கின்றன.

சில சமயங்களில் பள்ளிக்கூடங்களில் கட்டடம் கட்டவோ, விளையாட்டு மைதானம் அமைக்கவோ விசேஷ நிதி திரட்டுவார்கள் அல்லவா? அதை எப்படிச் செய்கிறார்கள்? முதலில் செயல் குழுவினர் அதைப்பற்றி ஆலோசிப்பார்கள். பிறகு தங்க

ளுடைய முடிவை பொதுக் கூட்டத்தில் தெரிவித்து வோட் எடுப்பார்கள். பொதுக்கூட்டம் அங்கீகரித்துவிட்டால், நிதி திரட்டவும், செலவு செய்யவும் பல்வேறு கமிட்டிகளை நியமித்து பணியாற்றுவார்கள். இதேபோலத்தான் 'யுனிசெப்' ஆரம்பிக் கப்பட்டது. ஐ. நா. சபையின் சமூக, பொருளாதாரக் கௌன் ஸில் ஐரோப்பியக் குழந்தைகளுக்கு உதவி செய்ய ஓர் ஏஜன்ஸி ஸ்தாபனத்தை அமைக்க விரும்பி ஜனரல் அசெம்பிளிக்கு விண்ணப்பித்துக்கொண்டது. அசெம்பிளி ஏற்றுக்கொண்டதும், கௌன்ஸில் திட்டம் வகுத்து நிர்வாக ஏற்பாடுகளைச் செய்தது. சர்வதேச அகதிகள் ஸ்தாபனம் (IRO) செய்துவந்த வேலைத் திட்டத்துக்கும், குழந்தைகள் சகாயநிதி (UNICEF) யின் வேலைத் திட்டத்துக்கும் வித்யாசமுண்டு. யுத்தத்தினால் நாசமடைந்த தேசங்களின் சர்க்காருக்கு உதவியாக—சர்க்காரின் வேண்டு கோளின்பேரில்—அந்த அந்த நாட்டுக்குழந்தைகளுக்கு உதவி செய்வதே 'யுனிசெப்' பின் பிரதான வேலை. ஆனால் அகதிகள் ஸ்தாபனம், குழந்தைகள் மட்டுமின்றி எல்லா அகதி களிடமும் சிரத்தைகாட்டிற்று. ஸ்வதேசத்தில் வீடுவாசல்களை இழந்தவர்களுக்கு உதவியளித்தது. வீட்டையும் நாட்டையும் விட்டுத்துரத்தப்பட்டவர்களுக்கும், பயந்து ஓடிப்போனவர்களுக் கும், எதிரிகளால் சிறைப்பட்டுக் கிடந்தவர்களுக்கும் உதவி யளித்தது. தாய் நாட்டில் வசிக்க விரும்பியவர்களுக்கு உதவி செய்ததைப் போலவே வேறு நாடுகளில் குடியேற விரும்பிய வர்களுக்கும் உதவி செய்தது. திரேஸாவைக் கண்டுபிடித்து கிராமத்துக்கு அழைத்துச் சென்றவர்கள் குழந்தைகள் சகாய நிதி ஊழியர்கள். சிறைமுகாமிலிருந்து வெளியேறி, ஜர் மனியில் சுற்றியலைந்து கொண்டிருந்த பியரேயைக் கவனித்து கிராமத்துக்கு அனுப்பியவர்கள் அகதிகள் ஸ்தாபனத்தைச் சேர்ந்த ஊழியர்கள்.

குழந்தைகள் சகாய நிதியைக் கவனிக்க இருபத்தாறு தேசங்களின் பிரதிநிதிகளடங்கிய ஒரு நிர்வாக சபை அமைக்கப் பட்டது. முதல் உலக யுத்தத்தின்போது ஹெர்பர்ட் ஹூவ

ருடன் (Herbert Hoover) சக ஊழியராக இருந்து அமெரிக்கா வில் அற்புதமாகச் சமூக சேவை செய்தவரும், இரண்டாவது யுத்தத்தின்போது சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆதரவில் எற்பட்ட யுத்தக் கைதிகள் பரிவர்த்தனைத் திட்டத்தைச் சிறப்பாக நடத்தியவருமான மாரிஸ் பேட் (Maurice Pate) என்பவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தார்கள். ஐ. நா. சபையின் கார்யால யத்திலிருந்து, இந்த நிதியைக் நிர்வகிக்க ஒரு ஊழியர் குழாத்தை மாரிஸ் பேட் பொறுக்கிக்கொண்டார்.

ஐ.நா. சபையைச் சேர்ந்த சர்வதேச ஸ்தாபனங்களை மேற் பார்வை செய்யும் பொறுப்பு ஐ.நா. சபையின் பொதுக் காரிய தரிசிக்குத்தான் உண்டு என்று ஏற்கனவேயே குறிப்பிட்டோம். ஐ.நா. சபையின் முதல் பொதுக் காரியதரிசி டர்கீவ் லை (Trygve Lie) என்ற நார்வே தேசத்துக்காரர். ஐ. நா. சபை யின் சட்டப்படி அவருக்குப் பல நிர்வாகப் பொறுப்புகள் உண்டு. ஜனரல் அசெம்பிளி, தர்மகர்த்தா சபை, சமூக பொருளாதாரக் கௌன்சில், செக்யூரிடி கௌன்சில் போன்ற பல விபாகங்களின் நடவடிக்கைகளைக் கவனிப்பதும், கூட்டங்களைக் கூட்டுவதும், ஒன்றுக்கு ஒன்று தொடர்பு ஏற்படுத்தி வேலை செய்வதும் அவ ருடைய பொறுப்பாகும். 1946-ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் பதவி ஏற்றுக்கொண்டது முதல் அவர் அற்புதமாகவும் திறமை யுடனும் பணியாற்றிவருகிறார். குழந்தைகள் சகாய நிதியின் நிர்வாகத்தில் டர்கீவ் லை விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார். வாலிபர்களுக்கும் குழந்தைகளுக்கும் அந்த ஸ்தாபனம் செய்து வரும் சேவையைப்பற்றி ரேடியோ மூலம் உலக மக்களுக்குப் பலதடவைகளில் எடுத்துச்சொன்னார். நிதி உதவவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். அவருடைய உழைப்பிலும் உறுதியிலும் யோக்யதாம்சத்திலும் நம்பிக்கைகொண்ட மக்கள் அவர் கேட்கும்போதெல்லாம் பண உதவி செய்தார்கள்.

ஆஸ்லோ நகரத்தில் 16-7-1896-இல் டர்கீவ் லை பிறந்தார். அவருடைய தந்தை ஒரு தச்சன். டர்கீவ் குழந்தையாக இருக் கும்போதே அவர் இறந்துவிட்டார். குடும்பத்தை நடத்து

வதற்காக அவருடைய தாயார் ஒரு சாப்பாட்டு விடுதியை நடத்திவந்தாள். டர்கீவ் பள்ளியில் படிக்கும்போதே தம்மாலியன்ற வேலைகளை ஓய்வு நேரத்தில் செய்வார். அதனால் குடும்பத்துக்கு உபரியாக வருமானம் கிடைத்தது. ஆனாலும் குஸ்தி, டென்னிஸ், பனியில் சருக்கி விளையாடுதல் போன்ற விளையாட்டுகளில் அவர் தவறுமல் கலந்து கொள்வதுண்டு. கலகலப்பாக எல்லோருடனும் பழகும் சுபாவமும், கட்டுமஸ்தான தேகமும் உடைய வாலிபர் அவர். அமெரிக்காவுக்கு வந்தது, அந்த நாட்டின் தேசிய விளையாட்டான 'பேஸ்பால்' விளையாடவும் அவர் கற்றுக்கொண்டார்.

எடுத்த வேலையை நன்முகவும் திறமையாகவும் செய்யும் டர்கீவ், எங்கு வேலை செய்தாலும் எஜமானர் விசுவாசத்துடன் நடந்துகொள்வார். அதனால் எஜமானர்களின் அன்பும் மதிப்பும் கிடைத்தன. மக்களுடன் ஒன்றிப் பழகுவதிலும் அவர் நிபுணர். பதினைந்தாவது வயதிலேயே உள்ளூரிலுள்ள தொழிற்சங்கத்தின் தலைவராக அவரைத் தேர்ந்தெடுத்தார்கள். மனித சமூகத்துக்குச் சேவை செய்வதில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. கஷ்டப்படும் தொழிலாளர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று அவர் நிச்சயித்துக்கொண்டார். வழக்குகளில் சிக்கிக்கொண்டால் வக்கீல்களை அமர்த்திக்கொண்டு நியாயஸ்தலங்களில் வாதாட முடியாமல் பல ஏழைகள் கஷ்டப்படுவதை அவர் காண நேர்ந்தது. சட்டப்படிப்புப் படித்து, ஏழைத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தாருக்கும் உதவி செய்யவேண்டும் என்று அவர் சங்கற்பம் செய்துகொண்டார். நார்வேஜிய தொழிற் கட்சியில் சம்பள ஊழியராக இருந்துகொண்டு ஆஸ்லோ சர்வ கலாசாலையில் சட்டப் படிப்புப் படித்தார். படிப்பு முடிந்ததும் தொழிற் கட்சியின் பொதுக் காரியதரிசியாகப் பதவி பெற்றார்.

டர்கீவ், குழந்தைப் பிராயமுதல் பழகிய பெண்ணையே காதலித்து மணந்துகொண்டார். அவர்களுக்கு மூன்று பெண்கள் பிறந்தார்கள். நார்வேயில் தொழிற்கட்சி சர்க்கார்

ஏற்பட்டதும் டர்கீவ் சர்க்காரின் பிரதம வக்கீலாக நியமனம் செய்யப்பட்டார். பிறகு அவர் சட்ட மந்திரியானார். இரண்டாவது யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்பு நார்வே தேசத்தில் வேலை நிறுத்தம் என்ற பேச்சே கிடையாதாம். அதற்கு டர்கீவ்தான் காரணம் என்று அந்த நாட்டு அறிஞர்கள் சொல்வார்கள். தொழிலாளர்களின் துயரங்களை முதலாளிகளிடம் எடுத்துக்கூறி மத்யஸ்தம் செய்வதில் அவர் நிபுணர். பாரபட்சமில்லாமல் தொழிலாளர்களும் முதலாளிகளும் திருப்தி யடையும்படி அவர் தீர்ப்புக் கூறுவார். அவருடைய நேர்மையிலும் நீதியிலும் எல்லோருக்கும் நம்பிக்கையுண்டு.

சென்ற மகாயுத்தம் ஆரம்பமான காலத்தில் டர்கீவ் வர்த்தக மந்திரியாக இருந்தார். நார்வே தேசத்தின்மீது நாஜிகள் படையெடுத்தார்கள். மக்கள் எதிர்த்து நின்றார்கள். நார்வே கப்பல்களைச் சரணடையும்படி நாஜிகள் உத்தரவிட்டபோது டர்கீவ் அதை எதிர்த்து விடுத்த செய்தி சரித்திரப் பிரசித்திவாய்ந்தது. "சரணடையாதீர்கள். நேச நாட்டுத் துறைமுகங்களுக்குக் கப்பல்களை ஓட்டிச் செல்லுங்கள்" என்று ரேடியோ மூலம் அவர் ஆணையிட்டார். கப்பல் தலைவர்கள் அதை ஏற்றுக்கொண்டார்கள். நாஜிகளின் ஆக்ரமிப்பு ஏற்பட்டு, சர்க்காரின் கை சளைக்கும் வரையில் டர்கீவ் நாட்டிலிருந்து தேசபக்தர்களை உத்சாகமூட்டிக்கொண்டிருந்தார். எல்லா மந்திரிகளும் தேசத்தைவிட்டுக் கிளம்பியபிறகும் அவர் கடைசி வரையிலிருந்துவிட்டு லண்டனுக்குக் கிளம்பினார். லண்டனில் இருந்த மந்திரிகள்கூடி நார்வேஜிய அவசரகால சர்க்கார் கார்யாலயத்தை ஏற்படுத்தினார்கள்.

யுத்தம் முடிந்து ஸான்பிரான்ஸிஸ்கோவில் ஐக்ய நாடுகள் மகாநாடு நடந்தபோது நார்வே தேசத்தின் வெளிநாட்டிலாகா மந்திரி என்ற ஹோதாவில் டர்கீவ், ஒரு பிரதிநிதி கோஷ்டியை அழைத்துச் சென்று மகாநாட்டில் கலந்துகொண்டார். அவருடைய மகள் ஒருத்தியே அவருக்குக் காரியதரிசியாகச் சென்றாள். டர்கீவ்வுடன் நெருங்கிப் பழகியவர்கள், அவரை ஐ.நா.

சபையின் நிர்வாகத் தலைவரான பொதுக்காரியதரிசியாகத் தேர்ந் தெடுக்கப்பட்ட செய்தியைக் கேட்டதும் ஆச்சரியப்படவில்லை. சரி யான நபரையே சர்வதேச அரசியல்வாதிகள் தேர்ந்தெடுத்துப் பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள் என்று மகிழ்ந்தார்கள். பதவி ஏற்றுக்கொண்டதும் அவர் சொன்னார்: "நான் உங்க ளுடைய ஊழியன். உங்களுடைய அன்பிலும் ஆதரவிலும் எனக்கு நம்பிக்கையுண்டு. நம்முடைய வேலையோ புதிது. மகத்தான கஷ்டங்களைச் சமாளிக்கவேண்டியிருக்கும். கஷ்டப் பட்டால் கிடைக்கும் வெற்றி போற்றத்தக்கது. நம்முடைய வேலையின் போக்கை அனுசரித்தே எதிர்காலத்தில் நாகரீகமும் உலக சரித்திரமும் உருவாகப் போகிறது."

ஐ.நா. சபை தஸ்தாவேஜுகளில் கோஷ்டி என்ற வார்த் தையே அடிக்கடி உபயோகிக்கப்படுகிறது. அவற்றில் ஒன்றுதான் 'யுனிசெப்' (UNICEF). ஐ.நா. சபையில் அதற்கு முக்கிய ஸ்தானம் கிடைத்துவிட்டது. திறமையான நிர்வாகிகளும் சர்வதேச மனப்பான்மையுள்ள மேற்பார்வையாளரும் கிடைத்து விட்டார்கள். வேலைத் திட்டத்தை நிறைவேற்றப் போதுமான பணமும் கிடைத்தது. அதை விநியோகிக்கச் சிறந்த ஊழியர் களும் கிடைத்தார்கள். அந்தப் பணத்தை எப்படிச் செல விடுவது? முதலில் எப்படி வேலை தொடங்குவது? இந்தப் பிரச்னைக்கு விடை தேடிக்கொண்டிருக்கவில்லை. வேலையைத் தொடங்கினார்கள். உலக மக்கள் ஒன்றுக நின்று உதவி செய்தார்கள். எப்படிச் செய்தார்கள் என்பதும், அந்த நிதியினால் என்ன என்ன செய்தார்கள் என்பதும் பின் அத்தியாயங்களில் கவனிப்போம்.

3. மனம் ஒன்று: பாஷையும் ஒன்று.

ஆர்தர் விம்மி விம்மி அழுதான். பள்ளிக்கூடம் செல்ல வேண்டுமே என்ற எக்கம் அவனைப் பிடித்து உலுக்கிற்று. அவன் கெட்டிக்காரப் பையன். படிப்பில் கருத்துள்ளவன். நேற்றுவரையில் அவன் உத்சாகத்துடன் பள்ளிக்கூடம் போய் வந்தான். இன்று, அவனுக்கு எவரையும் பார்க்கப்பிடிக்க வில்லை, அவனுடைய பிஞ்சுமனம் வெதும்பிப்போகும்படியான சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. அவனுடைய பாட்டியை, முட்டாள், கர்நாடகம் என்று அவன் காதில் விழும்படிப் பையன்கள் எசிறுர்கள், கேலி செய்தார்கள். அவனுக்கு அழுகை அழுகையாக வந்தது.

ஒருநாள் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்குப் பால் கொடுத் தார்கள். வெளியூரிலிருந்து வந்த ஒரு பெண்மணி அன்புடன் குழந்தைகளைக் கூப்பிட்டுக் கொடுத்தாள். ஆசிரியரும் சந் தோஷமாக இருந்தார். ஆர்தரும் அந்தப் பாலைக் குடித் தான். வாய்க்கு ருசியாக இருந்தது. வீட்டுக்குச் சென்றதும் பாட்டியிடம் பால் குடித்ததாகச் சொன்னான். அவள் சந் தோஷப்பட்டாள். உடனே அவளுக்குச் சந்தேகம் வந்து விட்டது. "பள்ளிக்கூடத்தில் மாடு கிடையாதே, யுத்தத்தி னால் தேசமே சுடுகாடாகி, ஒன்றுக்குப் பத்தாக விலைவாசி இருக்கும்போது மாடு வாங்க முடியுமா? குழந்தைகளுக்குத் தான் பால் விநியோகிக்க முடியுமா?—இப்படித் தான் யோசித் தாள் கிழவி. உடனே பேரனைக் கூப்பிட்டாள். "தம்பீ, பள்ளிக் கூடத்தில் மாடு வாங்கியிருக்கிறார்களா?" என்று கேட்டாள்.

ஆர்தருக்குக் குஷி கிளம்பிவிட்டது. புதிதாக வந்த பெண்மணி எப்படிப் பாலைக் கலந்தாள் என்று சொல்ல வேண்டும் என்று அவனே துடித்துக் கொண்டிருந்தான்.

கிழவியே கேட்டதும் அவன் சொன்னான்: "மாடு எது பாட்டி? வெள்ளை வெளேரென்று ஒரு மாவு இருக்கிறது. அதில் தண்ணீரைக் கலந்து சுடவைத்தால் பாலாகிவிடுகிறது. நல்ல பால்போல இருக்கிறது. உடம்புக்கு நல்லது என்று வாத்தியாரே சொன்னார்."

கிழவிக்குக் கோபம் வந்துவிட்டது. பல்லைக் கடித்துக் கொண்டாள். அவளுடைய சந்ததிகளில் மிஞ்சினவன் ஆர்தர் ஒருத்தன்தான். யுத்தம் நடந்துகொண்டிருக்கும்போது கூட உணவு கொடுத்து அவனைக் காப்பாற்றிவிட்டாள். இப்போது யாரோ கொடுக்கும் பவுடரைத் தின்று வயிறுவளர்க்க விட்டுவிடுவாளா? "குழந்தாய், அந்தப் பாலை நீ குடிக்காதே, கையால்கூடத் தொடாதே. நம்மைக் கொல்ல ஏதோ சூழ்ச்சி செய்கிறார்கள் போல இருக்கிறது. அது விஷப்பொடியாக இருக்கலாம். சொல்லு, நீ தொடமாட்டாயே நீ" என்று அதட்டிக் கேட்டாள்.

"இல்லை பாட்டி, குழந்தைகளுக்காக பிஸ்கோத்து, வெண்ணெய், மீன் எண்ணெய்—எல்லாம் வரப்போகிறது என்று பல நாட்களுக்கு முன்னேமே என் வாத்தியார் சொன்னாரே. அந்த உணவுதான் வந்திருக்கிறது. அதில் பால் இருக்கிறது. வாத்தியார் உடம்புக்கு நல்லது என்றார்" என்றான் ஆர்தர்.

கிழவிக்கு ஆத்திரம் தாளவில்லை. "யாரோ, எவரோ? அவர்களுக்கு உங்கள்மீது பாசம் வந்துவிட்டதோ? அந்தப் பால் வேண்டாம். அதைக் கையால்கூடத் தொடமாட்டேன் என்று சத்தியம் செய்" என்று இரைந்தாள்.

ஆர்தர் பள்ளிக்கூடம் சென்றான். அவனுடைய பாட்டியோ, பால் பவுடரைப்பற்றி வம்பளக்க ஆரம்பித்துவிட்டாள். குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் நேரத்தில் ஆர்தர் மெதுவாக நழுவினான். இடைவேளையில் பெரிய பையன்கள் ஆர்தரைக் கேலி செய்தார்கள். அவனுடைய பாட்டியின் வம்பைத் தெரிந்துகொண்ட பையன்கள் அவளை முட்டாள், கர்நாடகம் என்றெல்லாம் எசினர்கள்.

ஆர்தர் பொறுத்துக்கொண்டான். வாத்தியார் பால் உடம்புக்கு நல்லது என்றார். பாட்டி வேண்டாம் என்றாள். பையன்கள் நையாண்டி செய்தார்கள். நல்ல வேளை வாத்தியாரின் காதுக்கு இவை எல்லாம் எட்டவில்லை. ஒரு சமயம் பையன்கள் ஆர்தரைக் கிண்டல் செய்துகொண்டிருப்பதை அவர் நேரில் பார்த்துவிட்டார். பள்ளிக்கூடம் கலைந்ததும் அவர் ஆர்தரைக் கூப்பிட்டார். "ஆர்தர், என் உன்னுடைய முகம் வாடி இருக்கிறது? இரண்டு நாட்களாகவே நீ அழுதுகொண்டிருக்கிறாயே?" என்று கேட்டார்.

ஆர்தர் சரியாகப் பதில் சொல்லவில்லை. வாத்தியார் வற்புறுத்தவே அழுதுகொண்டே அவன் சொன்னான்: "அந்தப் பவுடர் பால்தான். அதைக் குடிக்காதே என்று பாட்டி சொன்னாள்".

"உனக்குப் பிடிக்கவில்லை என்றல்லவா சொன்னாய்?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் அவர்.

"பால் ருசியாகத்தானிருந்தது. ஆனால் அதைச் சாப்பிடாதே என்று பாட்டி சொன்னாள். விஷப் பொடியாக இருக்கும், குடித்தால் நோய்வந்து செத்துப்போவாய் என்றாள். கையால்கூடத் தொடக்கூடாது என்று சத்தியம் வாங்கினாள். ஊராரிடமும் இதைப் பற்றி சொல்ல ஆரம்பித்துவிட்டாள். அவளைப்பற்றிக் குறைவாகப் பேச நான் விரும்பவில்லை" என்றான் ஆர்தர்.

"அப்படியா, ஊரிலுள்ளவர்கள் எவரும் எனனிடம் சொல்லவில்லையே. நீகூட என்னிடம் சொல்லவில்லையே?" என்றார் வியப்புடன்.

"நீங்கள் நல்ல பால், உடம்புக்கு ஆரோக்கியமானது என்று சொல்லும்போது பாட்டியின் அபிப்பிராயத்தை நான் சொன்னால் மனம் வருந்துவீர்கள்."

வாத்தியார் ஆர்தரைத் தட்டிக்கொடுத்தார். "நீ புத்திசாலி; இங்கிதம் தெரிந்தவன்" என்று பாராட்டினார். அவனையும் அழைத்துக்கொண்டு பாட்டியிடம் போனார். அவரைப் பார்த்ததும் கிழவி விசுக்கென்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள். அவர் மனம் தளரவில்லை. மெள்ளப் பேச்சுக் கொடுத்தார். குழந்தைகளின் வளர்ச்சியிலும் எதிர்காலத்தில் அவர்கள் சுகமாக வாழ வேண்டும் என்றும் சர்வதேச அறிஞர்கள் சிரத்தை கொண்டிருப்பதை எடுத்துச் சொன்னார். "பாட்டி, நம்முடைய குழந்தைகள் மட்டுமல்ல. உலகத்திலுள்ள அத்தனை குழந்தைகளும் ஆரோக்கியமாகவும் ஐக்கியமாகவும் வாழவேண்டும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள். நோஞ்சான் குழந்தைகளுக்கு புஷ்டியான ஆகாரம், படிக்க வசதியில்லாத குழந்தைகளுக்கு பென்சில், நோட் புத்தகம், கட்டத் துணியற்றவர்களுக்கு ஆடைகள், இப்படி தேவைக்குத் தக்கபடி கொடுக்க ஒரு ஸ்தாபனத்தையே ஆரம்பித்திருக்கிறார்கள். அதில் நம்முடைய சர்க்காரும் உதவி செய்கிறார்கள். நம்முடைய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்தானே இவற்றை விநியோகிக்கிறார்கள்? யாரோ, எவரோ என்று சொல்லலாமா? வெவ்வேறு தேசங்களில் இருந்தாலும் அவர்கள் நம்முடைய நண்பர்கள்; உறவினர்கள். உன்னுடைய பேரன் திடகாத்திரமாக வளரவேண்டும் என்று அவர்கள் அக்கறையுடன் பாலும், பழமும், ரொட்டியும், வெண்ணெயும் அனுப்புகிறார்கள். கறந்த பாலை தேசம் விட்டுத் தேசம் அனுப்பமுடியுமா? அதனால் பவுடராகச் செய்து அனுப்புகிறார்கள். நான் எப்போதாவது கெடுதலைச் சொல்லியிருக்கிறேனா?" என்றார் அவர்.

"இல்லை. ஆனால் என்னுடைய ஆர்தருக்கு அந்தப் பால் வேண்டாம். அவனுக்கு இருக்கிற ஆரோக்கியம் போதும்" என்றாள் கிழவி.

"என்னிடம்கூடவா உனக்கு அவநம்பிக்கை! இரண்டு மூன்று நாட்களாக பாலைக் கலந்து கொடுக்கிறேனே? ஒருவர்

கூட நோய்வாய்ப் படவில்லை. குழந்தைகளுடைய முகங்களில் பிரகாசம் வந்திருக்கிறது. எத்தனையோ பேர் இப்போது பவுடர் பாலை உபயோகிக்கிறார்கள். இது குடித்துச் செத்துப் போனார்கள் என்ற செய்தியே என் காதில் விழவில்லை" என்றார் வாத்தியார்.

கிழவி முந்தானையை விரலில் சுருட்டிக்கொண்டு யோசிக்க லானாள். வாத்தியார் மேலும் பேசலானார். "பாலைப் பவுடர் செய்து விடுகிறார்கள். எப்படிச் செய்கிறார்கள் என்பது எனக்குத் தெரியாது. அது விஞ்ஞானத்தின் விந்தை. ஆனால் உடம்புக்கு நல்லது என்று நான் எண்ணுகிறேன். நீயும் அதை நம்பவேண்டும்."

"மனதார நீங்கள் நல்லது என்று எண்ணினால் கொடுங்கள்" என்றாள் கிழவி.

வாத்தியாருக்குச் சந்தோஷம் தாளவில்லை. "பாட்டி, நம்முடைய கிராமத்தில் ருசியான ரொட்டி சுடுவதில் உனக்கு இணை எவருமே கிடையாது. குழந்தைகளுக்காக வெளிநாட்டு நண்பர்கள் மாவும் அனுப்புகிறார்கள். கிராமத்திலுள்ள மற்ற வர்கள் உதவி செய்வார்கள். நீதான் சுடவேண்டும். உன் கையினால் செய்த ரொட்டி ருசிமட்டுமல்ல, ஊட்டமும் கொடுக் கும்" என்று புகழ்ந்தார்.

கிழவி முடியாது என்று தலையசைத்தாள். மேலும் மேலும் வற்புறுத்தவே கடைசியில் இணங்கினாள். கர்நாடகம், மூட்டாள், கூறுகெட்டவள் என்று மற்றவர்கள் அவளை ஏசினார் களே, அவளே முன்னால் வந்து நின்று ரொட்டி சுடுவதைக் கண்டு மற்றவர்கள் வாயடைத்துப்போனார்கள். கிழவி சுறு சுறுப்பாக இங்குமங்கும் ஓடி வேலை செய்தாள். ஆர்தருக்குச் சந்தோஷமும் பெருமையும் பிடிபடவில்லை.

இத்தாலி தேசத்திலுள்ள ஒரு கிராமத்தில் நடந்த சம்பவம் இது. சர்வதேச குழந்தைகள் சகாய நிதியின் ஏற்பாட்டில்

இத்தாலிய சர்க்காரின் மூலம் கிராம மக்களுக்கு பால் பவுடரும் உணவுப்பொருள்களும் அனுப்பினர்கள். பால் பவுடரைப் பற்றி எதுமே தெரியாததால் கிராம வாசிகளுக்குச் சந்தேகம் வந்தது.

சர்வதேச குழந்தைகள் சகாய நிதிக்குப் பணம் சேர்ந்ததும் அதை எப்படிச் செலவிடுவது என்ற பிரச்னைதான் முதலில் வந்தது. லக்ஷக்கணக்கான குழந்தைகளுக்கு உணவு வேண்டும்; உடை வேண்டும். ஆயிரக்கணக்கான சிறுவர்களுக்கு வைத்திய உதவிவேண்டும். ஆயிரமாயிரம் குழந்தைகளுக்கு தங்க இடம் வேண்டும். இவர்கள் எல்லோருக்கும் உதவி செய்ய வேண்டியது அவசியம். அதுவும் உடனே செய்ய வேண்டும். பணம் இருக்கிறது. ஆர்வமுள்ள ஊழியர் படையுமிருக்கிறது. ஆனால் தேவையான சாமான்களுக்கு எங்கே போவது? முதலில் உணவு அனுப்புவோம், பிறகு மற்றவை என்று நிச்சயித்தார்கள் நிதியின் நிர்வாகிகள். எந்த நாட்டுக்கு முதலில் அனுப்புவது என்ற பிரச்னையும் ஊடேயே எழுந்தது.

யுத்தத்திலடிபட்டு சர்வநாசமடைந்த தேசங்களிலுள்ள குழந்தைகளுக்கு முதலில் உணவு அனுப்ப நிச்சயித்தார்கள். ஐரோப்பிய நாடுகள், ஆசியாவில் ஜப்பானிய ஆக்ரமிப்பால் சீரழிந்த நாடுகள், பசிபிக் சமுத்திரத்திலுள்ள சில தீவுகள் ஆக எல்லா நாடுகளுக்கும் உடனடியாக உதவி அவசியமாக இருந்தது. முதலில் ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவது, பிறகு மற்ற நாடுகளுக்கு அனுப்புவது என்று நிர்வாகிகள் தீர்மானித்தார்கள்.

மீண்டும் ஒரு பிரச்னை! என்ன உணவு அனுப்புவது? புஷ்டியான ஆகாரம், சுலபமாகக் கப்பலில் அனுப்பக்கூடியது, கெட்டுப்போகாமல் நீண்ட நாள் வைத்திருக்கக்கூடியது, மலிவாகக் கிடைக்கக்கூடியது—இப்படியான தொரு உணவை அனுப்ப வேண்டும் என்று நிர்வாகிகள் நினைத்தார்கள். உடனே

ஆகார நிபுணர்களையும், விஞ்ஞானிகளையும், சுகாதார நிபுணர்களையும் கலந்து ஆலோசித்தார்கள். சர்வதேச உணவு—விவசாய சபை, சர்வதேச சுகாதார ஸ்தாபனம், இவற்றிலுள்ள நிபுணர்களின் உதவியை நாடினர்கள். பல நாடுகளிலிருந்து, இந்த ஸ்தாபனங்களில் நிபுணர்கள் பணியாற்றுவதால், அந்த அந்த நாட்டின் தேவைகளையும், பொதுவானதொரு ஆகாரத்தையும் கண்டுபிடித்துவிடக்கூடும் என்று நினைத்தார்கள். ஆகார நிபுணர்களும் உடனே வழி சொன்னர்கள். "பால், பாலேடு, மீன் எண்ணெய், மாமிசம், கோகோ, பட்டாணி போன்ற பயிறு வகைகள், சர்க்கரை, பழத்திரட்டு இவைகளை அனுப்புங்கள் என்றார்கள் அவர்கள்.

இவைகளை உடனே சப்ளை செய்ய எந்த நாடு காத்துக்கொண்டிருக்கிறது? எந்த நாட்டில் எவ்வளவு கிடைக்கும்? மீண்டும் பிரச்னைதான். உலகிலுள்ள பலநாடுகளுக்கு தந்தி மூலமும் விமானத் தபால் மூலமும் மேலே குறிப்பிட்ட பொருள்களை அனுப்பமுடியுமா? விலை என்ன? எவ்வளவு அனுப்பமுடியும்?" என்ற கேள்விகள் அனுப்பப்பட்டன. அமெரிக்காவிலிருந்து மட்டும் மூன்று வருஷங்களில் சுமார் இருபத்தைந்து கோடி பவுண்டு பவுடர் பாலை 'யுனிசெப்' ஸ்தாபனம் கொள்முதல் செய்திருக்கிறது.

ஒவ்வொரு தேசத்தின் தேவைகளையும் நேரில் தெரிந்து கொண்டுவர ஸ்ரீமதி டாக்டர் மார்த்தா எலியட் (Dr. Martha Eliot) சுற்றுப்பிரயாணம் செய்தார். இவர் அமெரிக்கா தேசத்திலுள்ள சிசுசம்ரக்ஷண சபையின் உதவி டைரெக்டராயிருந்தவர். சர்வதேச சுகாதார ஸ்தாபனம் ஏற்பட்டதும் அதன் உதவி டைரெக்டர் ஜனரலாகப் பதவி ஏற்றார்.

ஒவ்வொரு தேசத்திலும், அவர் சர்க்கார் அதிகாரிகளிடம் அந்த நாட்டிலுள்ள குழந்தைகளும் யுவர்களும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? எல்லாருக்கும் வயிறு நிரம்பச் சாப்பாடு கிடைக்கிறதா? சர்க்கார் அவர்களுக்கு உதவி செய்ய என்ன

நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது? பொது ஜன ஸ்தாபனங்கள் என்ன செய்கின்றன? வெளியிலிருந்து உதவி கிடைத்தால் அதை எப்படி விநியோகிப்பார்கள்? நாட்டின் தேவை என்ன?—இப்படிப் பல கேள்விகளைக் கேட்டார்.

ஒவ்வொரு நாட்டாரும் கொடுத்த பதில் இதுதான்: எங்களால் முடிந்த அளவுக்கு உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொள்கிறோம். நீங்கள் அனுப்பும் உணவைப் பக்குவப்படுத்தி விநியோகிக்கவும் ஏற்பாடு செய்கிறோம்.

நிதி—சர்க்கார் கூட்டுறவில் வேலை துவக்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டிலுள்ள குழந்தைகளுக்கும் உணவுப் பார்சல்கள் சென்றன. ஐரோப்பிய நாடுகளில் நிதியிலிருந்து அனுப்பும் உணவுக்குச் சமமாக உள்நாட்டு உற்பத்தி இருந்தது. சில நாடுகளில் உற்பத்தி அதிகமாக இருந்தது. பல நாடுகளில் சமூக சேவா சங்கங்கள் சாப்பாட்டு விடுதிகள் நடத்தி அனுதைகளைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

குழந்தைகளைப்பற்றியும் வாலிபர்களைப்பற்றியும் உத்தேசமாகக் கணக்கு எடுப்பதுகூட பல ஐரோப்பிய நாடுகளில் சிரமமாக இருந்தது. வீடு வாசலையும், பெற்றோர்களையும் உற்றார் உறவினர்களையும் இழந்து, தெருத்தெருவாய் அலையும் ஆயிரக் கணக்கான குழந்தைகளும், வாலிபர்களும், யுவதிகளும் ஒவ்வொரு நாட்டிலும் இருந்தார்கள். இவர்களைப்பற்றி எப்படித் தகவல் சேகரிப்பது? பல பொது ஸ்தாபனங்கள் இவர்களுக்கு இடமும் உணவும் உடையும் கொடுத்துக் காப்பாற்றின. எப்படியோ ஒரு தோராயமாகக் கணக்கெடுத்து ஒவ்வொரு சர்க்காரும் அனுப்பினார்கள். குழந்தைகள் சகாயநிதி தலைமைக் கார்யாலயத்தில் கிடைத்த கணக்குப்படி ஐரோப்பாவில் மட்டுமே லக்ஷக்கணக்கான குழந்தைகள் இருப்பதாகத் தெரிந்தது.

ஐரோப்பியக் கிராமங்களில் பல பொசுங்கித் தரைமட்டமாகிக்கிடந்தன. அங்குள்ள ஒவ்வொருவரும் அனுதைதான்.

பாடுபட்டுச் சாப்பிட உடல் வலிமை இருந்தாலும், உழைக்க இடமிருந்தாலும், போதுமான வசதியில்லாததால் ஆயிரக்கணக்கான மக்கள் வறுமையிலுல் கஷ்டப்பட்டார்கள். சேவையில் ஆர்வமுள்ள தொண்டர்களும், பிரமுகர்களும், ஒய்.எம்.வி.ஏ., செஞ்சிலுவை சங்கம், சர்வதேச சாரணர்படை, அமெரிக்காவிலுள்ள சிநேகிதர் சேவா சங்கம், ரோடரி கிளப், ஐரோப்பிய மக்களுக்கு உதவுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு சங்கம், கிருஸ்துவ மத சங்கங்கள், ஸ்விட்ஜர்லந்திலுள்ள டான் ஸுஸே என்ற பொதுநலச் சங்கம், இவை எல்லாம் ஐரோப்பாவில் அவதியுறும் மக்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தனர். சர்வதேச குழந்தைகள் சகாயநிதியும் உதவி செய்ய முன்வந்தது.

எல்லா நாடுகளுக்கும் உணவுப் பார்சல் அனுப்ப குழந்தை சகாய நிதியார் விரும்பவில்லை. ஒவ்வொரு நாட்டின் சர்க்காரின் கூட்டுறவிலுலும் சம பங்குச் செலவிலுமே இந்த உதவி நடப்பதால் எந்த எந்த நாட்டினர் உதவி கோருகிறார்களோ அவர்களுக்குமட்டும் முதலில் அனுப்பத் தீர்மானித்தார்கள். 'யுனிசெப்' போன்ற ஏஜன்ஸிகளை ஆரம்பித்த புதிதில் "உங்களுடைய நாட்டுக்கு உதவி அவசியமா, எங்களுடைய முயற்சியில் நீங்கள் கலந்துகொண்டால் உங்களுடைய சந்தாவும், சலுகையும் எவ்வளவு இருக்கும்?" என்று ஐ.நா. சபையில் அங்கம் வகிக்கும் பல நாடுகளை 'யுனிசெப்' நிர்வாகிகள் கேட்டார்கள். அல்பேனியா, ஆஸ்டிரியா, ருமேனியா, பல்கேரியா, செக்கோஸ்லாவாகியா, பின்லந்து, கிரீஸ், ஹங்கேரி, இத்தாலி, போலந்து, யுகோஸ்லாவியா, பிரான்ஸ், ஆகிய நாடுகள் "உடனே வாருங்கள், உதவி அனுப்புங்கள், எங்களால் முடிந்த அளவு இங்கும் சமாளிக்கிறோம்" என்று பதில் விடுத்தன. அதன் பிறகுதான் ஒவ்வொரு நாட்டின் தேவையையும் தெரிந்துகொள்ள டாக்டர் மார்த்தா சுற்றுப் பிரயாணம் செய்தார்.

ஒவ்வொரு நாட்டுக்கும் உணவு அனுப்புவதிலும் விநியோகிப்பதிலும் எவ்வளவோ கஷ்டங்கள் இருந்தன. ஐரோப்

பிய நாடுகளில் குண்டு வீச்சின் காரணமாக கிராமங்கள் பல அழிந்ததுடன், பாலங்கள் பல உடைந்தன; ரோடுகளில் வண்டிகள் போகமுடியாதபடி பள்ளங்களும் படுகுழிகளுமிருந்தன. ரெயில் நிலயங்களும் வண்டிகளும் நொறுங்கியதால், பாதை செப்பனிட்டபோதிலும் போதுமான வண்டிகள் கிடைப்பது அரிதாக இருந்தது. ஊருக்கு ஊர் செல்வது மிகவும் கடினமாக இருந்தது. ஆகவே ஒவ்வொரு நாட்டின் தலைநகருக்கும் உணவுப் பொருள்களை 'யுனிசெப்' அனுப்பிவிடும். அங்கிருந்து உள்ளூர்ப் பகுதிகளுக்கு சாத்தியமான வாகனங்களில் எல்லாம் ஏற்றி அனுப்பினர்கள். மோட்டார், ரெயில், கட்டை வண்டி, தலைச்சுமை, கழுதை, குதிரை என்று கிடைத்த சாதனங்களை உபயோகித்தார்கள். ஓரிடத்தில் நாய்களை வண்டியில் பூட்டிச் சாமான்களை ஏற்றிச்சென்றார்கள். தீனர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற உறுதி வெற்றிபெற்றது.

பள்ளிக்கூடம், மாதாகோவில், ஆஸ்பத்திரி, அனுதை விடுதி, போன்ற பல இடங்களில் குழந்தைகளுக்கு பால் காய்ச்சிக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். சில நகரங்களில் வீட்டுத் திண்ணைகளிலும், சில கிராமங்களில் மரத்தடியிலும் குழந்தைகளை வரிசையாக உட்காரவைத்துப் பால் கொடுத்தார்கள். பல கிராமங்களில் பாலைக் கலக்கப் பெரிய பாத்திரங்கள் இரா; சில இடங்களில் பாலைக் காய்ச்ச அடுப்போ விறகோ கிடைக்காது; பாலை ஊற்றிக் கொடுக்கக் கோப்பைகள் இல்லாமல் சில இடங்களில் கஷ்டப்பட்டார்கள். இவற்றை எல்லாம் கஷ்டமாகக் கருதாது ஊழியர்கள் வேலை செய்தார்கள்.

சில இடங்களில் குழந்தைகளை அழைத்துக்கொண்டு பெரியவர்கள் வந்து விடுவார்கள். கர்ப்பிணிகள் சவலைக்குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு வருவார்கள். இவர்களுக்கு உணவு கொடுக்கவேண்டியது அவசியம் தான். குழந்தைகளுக்காக ஒதுக்கப்பட்ட உணவை பெரியவர்களுக்குக் கொடுக்கமுடியுமா? ஊழியர்களின் பொறுப்பைப் பெற்றோர்களும் தெரிந்துகொண்டார்கள். பல இடங்களில் ஊழியர்களுக்கு உதவியாக பெற்

றேர்கள் வந்து வேலை செய்தார்கள். பாலைக் கலக்கவும் காய்ச்சவும், பால் பாத்திரங்களைக் கழுவவும் செய்வார்கள்.

ஐரோப்பா முழுவதுமுள்ள குழந்தைகளுக்கு பால் விநியோகிக்க ஏற்பாடு செய்ததும் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் உணவு தர 'யுனிசெப்' ஊழியர்கள் ஏற்பாடு செய்தார்கள். மிகவும் குறுகிய காலத்தில் நூற்றுக்கணக்கான ஊர்களில் சாப்பாட்டு விடுதிகள் ஸ்தாபிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான சிறுவர்களும் சிறுமிகளும் உணவு விடுதிகளில் கூடினர்கள். உணவு விடுதிச் செலவில் பாதியை உள்ளூர் சர்க்காரும் மற்றப் பாதியை 'யுனிசெப்'பும் ஏற்றுக்கொண்டார்கள். பால், ரொட்டி, குழம்பு—இவைதான் சிறுவர்களின் உணவு. சிறுவர்கள் ஆசையுடனும் சந்தோஷத்துடனும் சாப்பிட்டார்கள். விநியோகம் ஆரம்பித்த சில தினங்களுக்குள்ளேயே ஐரோப்பிய நாடுகளில்மட்டும் முப்பதாயிரம் உணவு விடுதிகள் ஏற்பட்டன. இவற்றில் வேளைக்கு முப்பத்தைந்து லக்ஷம் சிறுவர்களும் சிறுமிகளும் சாப்பிட்டார்கள். இது எவ்வளவு பெரிய வேலை என்பதைச் சிந்தித்துப் பார்த்தால்தான் தெரியும்.

நான்கு ஐந்து பேருள்ள குடும்பத்துக்கு வேண்டிய மாதாந்தரச் சாமான் வாங்கக்கூட திட்டம் போடவேண்டியிருக்கிறது; கடை கடையாக ஏறி இறங்க வேண்டியிருக்கிறது. தினம் ஒன்றுக்கு முப்பத்தைந்து லக்ஷம் பேர்களுக்குச் சாப்பாடு போட வேண்டும் என்றால் எங்கு எங்கிருந்து சாமான்களை வரவழைக்க வேண்டும்? இவற்றை ஏற்றிக்கொண்டுவர எத்தனை கப்பல்கள் வேண்டும்? எத்தனை ஆயிரம் மோட்டார் லாரிகள் வேண்டும்? சமைத்துப் பரிமாற எத்தனை ஆயிரம் ஊழியர்கள் வேண்டும்? கற்பனை செய்து பாருங்கள்! 'யுனிசெப்' ஏற்றுக்கொண்ட மகத்தான பொறுப்பு விளங்கும்.

சர்வதேச ரீதியில் உணவு விடுதிகள் நடத்தப்பட்டாலும், அங்கு சாப்பிடும் வாலிபர்களும் சிறுமிகளும் 'தண்டச்சோறு' சாப்பிடவில்லை. குடும்பத்தின் போஜன விடுதியில் குடும்

பத்திலுள்ளவர்கள் கலந்து கொள்வதுபோல கிராம மக்கள் எல்லோரும், உணவு விடுதிகளை நடத்த உதவி செய்தார்கள். வாலிபர்கள், தரிசு நிலங்களில் காய்கறிகளைப் பயிரிட்டு விடுதிக்கு அனுப்பினர்கள். வீட்டுத் தோட்டங்களில் பழுக்கும் பழங்களை அனுப்பி உதவினர்கள் சிலர். சமையல் வேலையில் உதவி செய்யவும் பாத்திரங்களைக் கழுவிவைக்கவும் யுவதிகள் முன் வந்தார்கள். சிலர் உணவு பரிமாறும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள். ஒவ்வொருவரும் தம்மாலியன்ற உதவியைச் செய்தார்கள். ஒவ்வொரு விடுதியும் ஒரு பெரிய குடும்பம் போலவே தோன்றிற்று.

'யுனிசெப்' நிர்வாகிகளுக்கு இந்தச் செய்திகள் களிப் பூட்டின. ஒவ்வொரு நாட்டுக்கும் மேலும் மேலும் உணவு அனுப்ப ஏற்பாடுகள் செய்ததுடன் புதுப் புது உணவுகளையும் கண்டுபிடித்து அனுப்பிக்கொண்டே யிருந்தார்கள். குழந்தை களும் சிறுவர், சிறுமியரும் அதிசீக்கிரம் ஆரோக்கியம் பெற்று விடவேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம். புஷ்டியான ஆகாரவகைகளை, அதிசீக்கிரமாக ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். காட்லிவர் எண்ணெயைவிட சுறுமீன் எண்ணெய் முப்பது மடங்கு வீரியமுடையது என்று ஆகார நிபுணர்கள் சொன்னார்கள். உடனே நியூ ஜீலந்திலிருந்து பிப்பாய் பிப்பாயாக சுறுமீன் எண்ணெயை வரவழைத்தார்கள். அப்படியே ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்பப் போதுமான கப்பல் வசதியும் சிறு சிறு பாட்டில்களும் கிடைக்கவில்லை. ஆகவே கனடாவிலுள்ள ஒரு தொழிற்சாலையில் அந்த எண் ணெயை மாத்திரைகளாகச் செய்து, ஊர் ஊராக அனுப்பி னர்கள். தேங்காய் எண்ணெயில் போஷாக்குச் சத்து அதிக மிருக்கிறது என்று சில நிபுணர்கள் சொன்னார்கள். செக் கோஸ்லாவாகியா மக்கள் தேங்காய் எண்ணெயை ஆகாரத் துடன் உட்கொள்வது வழக்கம். ஆகவே பிலிப்பைன் தீவு களிலிருந்து ஏராளமாகத் தேங்காய் எண்ணெயைக் கொள் முதல் செய்து செக் நாட்டிற்கு அனுப்பினர்கள். அங்குள்ள

ஒரு தொழிற்சாலையில் தேங்காய் எண்ணெய்க்கு இனிப்பூட்டி, எல்லாத் தேசங்களுக்கும் அனுப்பினர்கள். வேர்க்கடலையி லிருந்து வெண்ணெய் தயாரித்தார்கள். ரொட்டியுடன் அந்த வெண்ணெயைக் குழந்தைகளுக்குக் கொடுத்தார்கள். புதுப் புது ஆகாரமாக இருந்தாலும் குழந்தைகள் ருசித்துச் சாப்பிட்டார்கள்.

மாதா மாதம் ஐரோப்பியத் துறைமுகங்களில் சாரி சாரியாக உணவுக் கப்பல்கள் வந்து இறங்கின. ஒவ்வொரு நாட்டிலும் உணவு விடுதிகள் அதிகமாயின. மூன்று வருஷங்களுக்குள் தினசரி அறுபது லக்ஷம் சிறுவர்களுக்குச் சாப்பாடு போடும் அளவுக்குத் திட்டம் விரிந்தது. சர்வதேச சமரஸத்தைக் குழந்தைகளும் சிறுவர்களும் ஓரளவு புரிந்துகொண்டார்கள் என்றே சொல்லவேண்டும். சர்வதேச குழந்தைகள் சகாய நிதியைப்பற்றி விரிவாகப் பிரசாரம் செய்தார்கள். ஒவ்வொரு நாட்டிலும் குழந்தைகள் பல வர்ணங்களில் சுவரொட்டி விளம் பரங்களைத் தயாரித்தார்கள். 'எல்லோரும் ஓர் குலம்' என்ற எண்ணத்துடன் நிற, இன பேதமின்றி எல்லா நாட்டுக் குழந்தைகளும் நல்ல உணவும், வாழ்க்கை வசதியும் பெற்றும் எதிர் காலத்தில் சிறந்த பிரஜைகளாகவும் பரஸ்பரம் நல்லுற வுடனும் வாழ வேண்டும் என்ற பிரதான நோக்கத்துடன் தான் இந்த மாபெரும் பணி நடக்கிறது. ஆகவே உதவி செய்யும் ஸ்தாபனத்தின் பெயரையும் அதன் நோக்கத்தையும் எடுத்துச் சொல்லவும் எல்லா நாட்டார்களுடைய நல்லுணர்ச்சி யையும் கூட்டுறவையும் பெறவும் ஓரளவு பிரசாரம் தேவை யாக இருந்தது. ஆரம்பத்தில் பிரதேச பாஷைகளில் விளம் பரங்களைத் தயாரித்தார்கள். சர்வதேச குழந்தைகள் சகாயநிதி என்ற பெயருக்கும் பிரதேச பாஷையில் மொழி பெயர்ப்புச் செய்தார்கள். இதனால் குழப்பமும் சிரமமும் ஏற்பட்டது. ஆகவே பெயரைமட்டும் ஆங்கிலத்தில் சுருக்கமாக 'யுனிசெப்' என்று வைத்துக்கொண்டு எல்லா பாஷைகளிலும் அந்த வார்த்தையை உபயோகித்தார்கள்.

ஆஸ்திரியா தேசத்துச் சிறுவர்கள் அழகழகான சுவரொட்டி களை எழுதினர்கள். அவற்றைச் சேகரித்து வியன்னு நகரில் ஒரு கண்காட்சி நடத்தினர்கள். செக்கோஸ்லாவாகியாவில், சிறுவர்களுக்கு உத்சாகமூட்ட பள்ளிக்கூடங்களில் ஒரு போட்டி ஏற்படுத்தி, நல்ல படத்துக்குப் பரிசும் அளித்தார்கள். சிறந்த படங்களை அச்சடித்து, ஒவ்வோர் உணவு விடுதியிலும் தொங்க விட்டார்கள். பரிசுபெற்ற படத்தை 'யுனிசெப்' தலைமைக் கார்யாலயத்துக்கும் அனுப்பினர்கள். கலைஞர்கள் அதைப் பாராட்டினர்கள். 1949-ஆம் வருஷம் கிருஸ்துமஸ் கார்டில் அதைப் பிரசுரித்து உலகம் முழுவதும் அனுப்பினர்கள். ஆயிரக்கணக்கான படங்களை அமெரிக்கர்களே வாங்கி மகிழ்ந் தார்கள். இந்தப் படத்தை எழுதிய ஜிட்கா ஸெம்கோவா (Jitka Semkova) பொஹீமியாவிலுள்ள ருஸல்பா கிராமத்தைச் சேர்ந்தவள். அற்புதமான வர்ணச் சேர்க்கையுடன் அமைந்த அந்தப் படத்தை எழுதியவள் எட்டே வயதுள்ள ஒரு சிறுமி என்பது பஞ்சாயத்துதாரர்களுக்கே தெரியாது. அவள் உலக மக்களின் பாராட்டைப் பெற்றுவிட்டாள்.

ஆடைகள், பாதரட்சை, மருந்துகள், உணவு இவைகளை 'யுனிசெப்' ஊழியர்களிடமிருந்து குழந்தைகள் சந்தோஷத் துடன் பெற்றுக்கொள்வதைப்போல பல படங்களை எழுதினர் கள். 'யுனிசெப்' திட்டத்தின் இரண்டாவது பகுதியின் ஆரம் பம்தான் இது. உணவுக்கு அடுத்தபடியாக குழந்தைகளின் தேவைகளைக் கவனிக்க 'யுனிசெப்' திட்டமிட்டது. அதையும் ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டியிருந்தது. ஐரோப்பா வில் சோப்புப் பஞ்சம் அதிகமாக இருந்தது. குழந்தைகளுக்கு புஷ்டியான ஆகாரமும் வைடமின் சத்துக்களும் அனுப்பினாலும் கூட வைத்திய உதவியும் அவசியமாக இருந்தது. ஆகவே மருந்துகளும் சோப்பும் அனுப்பும் பொறுப்பையும் 'யுனிசெப்' எடுத்துக்கொண்டது.

அமெரிக்காவிலும் வேறு சில நாடுகளிலும் யுத்தத்தினால் பாழடைந்த நாடுகளுக்கு உதவி செய்ய சில பொது ஸ்தாபனங்

கள் திட்டம் போட்டு வேலைசெய்தன. சர்வதேச ஸ்தாபனங்களின் மூலம் நன்கொடையும் சாமான்களும் அனுப்பின. இந்த உதவி 'யுனிசெப்' போன்ற ஸ்தாபனங்களுக்கு உபயோகமாக இருந்தது. இந்த ஸ்தாபனங்கள் சில குறிப்பிட்ட சாமான்களையே சேகரித்ததால் மற்றத் தேவைகளைக் கவனிப்பதில் 'யுனிசெப்' ஈடுபட்டது. ஐரோப்பிய மக்களுக்கு உதவி செய்வதற்காக, அமெரிக்காவில் ஒரு கூட்டுறவு சங்கம் (Co-operation for American Remittances to Europe) ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஸ்தாபனத்தின் வார்த்தைகளின் முதல் எழுத்துக்களைச் சேர்த்து கேர் (CARE) என்று சொல்வதுண்டு. இந்த ஸ்தாபனம் பாதரட்சைகளும் ஆடைகளும் அனுப்பின. இவற்றுடன் கம்பளி நூலும், பருத்தி நூலும், தோலும் அனுப்ப 'யுனிசெப்' ஏற்பாடு செய்தது. இதனால் ஐரோப்பாவிலுள்ள பல தொழிலாளர்களுக்கு வேலையும் கிடைத்தது. செருப்புத் தைப்பவர்களுக்கும், தையல்காரர்களுக்கும் கூலி கிடைத்தது. கூலிக்காரர்கள் வேலை செய்தும் தேவையைச் சமாளிக்க முடியாததால் இச்சாபூர்வமாக பல தொண்டர்கள் வேலை செய்தார்கள்.

ஹங்கேரி, பின்லந்து, செக்கோஸ்லாவாகியா முதலிய நாடுகளில் குழந்தைகளின் தேவைகளுக்குத் தக்கபடி துணி மணிகளைத் தைத்துக்கொண்டார்கள். இந்த நாடுகளில் வாலிபர்களும் யுவதிகளுமே பெரும் பகுதி வேலையைச் செய்தார்கள். 'யுனிசெப்' ஸ்தாபனம் தோன்றி நான்கு வருஷங்களுக்குள் பத்து லக்ஷம் குழந்தைகளுக்கு பாதரக்ஷை தைக்கத் தோலும், பத்து லக்ஷம் கம்பளிப் போர்வை நெய்வதற்குப் போதுமான நூலும், பத்து லக்ஷம் குழந்தைகளுக்கு வேண்டிய ஆடைகளும் அனுப்பியிருக்கிறது. இவற்றின் மொத்த மதிப்பு ஐம்பது லக்ஷம் டாலர்களாகும்.

'யுனிசெப்' பிரதிநிதிகள் சென்ற இடங்களில் எல்லாம், உள்ளூர் ஊழியர்கள் உத்சாகத்துடனும் பொறுப்புடனும் வேலை செய்வதைக் கண்டு திருப்தியடைந்தார்கள். சில இடங்களில்

அஜாக்கிரதையோ, வேறு குறைபாடுகளோ இருந்திருக்கலாம். மிகப் பெரிய ஸ்தாபனத்தில் ஆயிரத்தில் ஒருவர் தவறு இழைத்தால் பாராட்ட முடியாது. ஆனால் 'யுனிசெப்' சம்பந்தப்பட்ட மட்டில் அந்த மாதிரித் தவறுகூட நேரவில்லை. ஊழியர்களின் உத்சாகத்துடன் நேர்மையும் பாராட்டத்தக்கவண்ணமிருந்தது. பின்லந்தில் நூர்கான் என்று ஒரு கிராமம். அங்கு நூற்றிருபது மக்கள்தான் ஜனத்தொகை. வட துருவப் பிரதேசத்திலுள்ள பனிமண்டலத்துக் கிராமம் அது. அந்தக் கிராமத்துக்கு நேரான வழி கிடையாது. வருஷத்தில் பாதி நாட்கள் கப்பல்கூடச் செல்லமுடியாது. அவசரமாகச் செல்ல வேண்டுமென்றால் விமானம், கப்பல், மோட்டார் என்று விதம் விதமான வாகனங்களில் பிரயாணம் செய்யவேண்டும். அந்தக் கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கும் 'யுனிசெப்' ஸ்தாபனம் உணவுப் பொருள்களையும் மற்றச் சாமான்களையும் அனுப்பி வைத்தது. அங்குள்ள பள்ளிக்கூட ஆசிரியர் அவற்றை குழந்தைகளுக்கு விநியோகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். மிகவும் ஜாக்கிரதையாகவும் நேர்மையாகவும் அவர் கணக்கு வைத்திருந்தார். பொது ஸ்தாபனங்களில் ஊழியர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைக்கு அந்த ஆசிரியர் ஓர் எடுத்துக்காட்டாகும்.

தேவை என்ற குரல் கேட்டதும் உதவி செய்ய ஓடுவதே 'யுனிசெப்' ஸ்தாபனத்தின் பிரதான நோக்கம். சாமான்களையோ ஊழியர்களோ குறிப்பிட்ட இடத்துக்கு அனுப்புவதில் பணச் செலவோ கஷ்டமோ பாராட்டுவதில்லை. எவ்வளவு சீக்கிரம் அனுப்பமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் உதவி அனுப்புவதே சகஜமாகிவிட்டது. அவசரகால உதவி செய்வதற்காகவே, நிர்வாக ஏற்பாடுகளை அமைத்து வெற்றியும் பெற்றுவிட்டார்கள் ஸ்தாபனத்தின் நிர்வாகிகள்.

பாலஸ்தீனத்தில் ஆயிரக்கணக்கான அராபியர்கள், உண்ண உணவின்றி, தங்க நிழலின்றித் தவிக்கிறார்கள் என்று 1948-ஆம் வருஷம் கோடை காலத்தில் 'யுனிசெப்' தலைமைக்

காரியாலயத்துக்குத் தகவல் கிடைத்தது. வீடுவாசலைவிட்டு ஓடின அகதிகள் பாலைவனங்களில் தவிக்கிறார்கள் என்றும், பலர் நோய்வாய்ப்பட்டிருக்கிறார்கள் என்றும் தெரிந்தது. உடனே உதவி அனுப்ப 'யுனிசெப்' ஸ்தாபனத்தார் ஏற் பாடுகளைச் செய்தார்கள். ஒரு மாத காலத்துக்குள் தேவையான பொருள்கள் பீருட் (Beirut) நகரத்துக்கு போய்ச் சேர்ந்தன. அங்கிருந்து இரண்டு வாரத்துக்குள்ளாக லெபனான், டிரான்ஸ் ஜோர்டான், வட பாலஸ்தீனம், ஸிரியா, இஸ்ரேல் முதலிய இடங்களிலிருந்த அகதிகள் முகாம்களிலுள்ள குழந்தைகளுக் கும் சிறுவர்களுக்கும் உணவும் இதரப் பொருள்களும் விநி யோகிக்கப்பட்டன.

பாலஸ்தீன அகதிகளுக்கு உதவி செய்ய ஐ.நா. சபை ஓர் அகதி கமிட்டியை நியமித்தது. அந்தக் கமிட்டியுடன் 'யுனிசெப்' சேர்ந்துகொண்டு பாதிச் செலவை ஏற்றுக்கொண்டு உதவியளித்தது. பாழடைந்த கட்டிடங்களிலும், இடிந்த வீடு களிலும் வசித்த அகதிகளுக்குச் சௌகரியம் செய்துகொடுத்து, குழந்தைகளுக்கும் ஆகாரம் முதலியன தந்தது. ஹெப்ரான் என்னுமிடத்தில் 'யுனிசெப்' ஸ்தாபனம் செய்த காரியம் உள்ளூர்வாசிகளைப் பெரிதும் வசீகரித்தது, அங்கு ஸாலமன் விடுதி என்று ஒரு தர்ம சத்திரம் இருந்தது. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பு நேர்மையும் நீதியுமுள்ள ஸாலமன் மன்னன் அரசாண்ட காலத்திலிருந்து ஏழைகளுக்கு அங்கு சாப்பாடு போடப்பட்டுவருகிறது. ஒரு சமயம் ஸாலமன் அரசன் ஹெப்ரானுக்கு வந்தானும். அங்குள்ள ஏழை மக்களுடைய நிலைமையைக் கண்டு அவன் மனம் பதறிப்போனதும். வறுமை யினால் வாடினதும், மக்கள் ராஜவிசுவாசத்துடனிருந்தார்கள். அவர்களுடைய பக்தியும் பண்பும் அரசனை வசீகரித்தது. உடனே அவன் அங்குள்ள ஏழைகளுக்குச் சாப்பாடு போட ஒரு சத்திரம் கட்டினானும். உலகம் அழியுமட்டும் இந்தத் தருமம் நீடிக்கட்டும் என்று கூறி அதற்கு வேண்டிய சொத்துக்களும் எழுதி வைத்தானும். பாலஸ்தீனத்தில் யுத்தம் ஆரம்ப

மாகும்வரையில் சத்திரத்தின் தர்மகர்த்தர்கள் ஏழைகளுக்கு உணவு அளித்துக்கொண்டு தானிருந்தார்கள். அதிசீக்கிரம் அதை மூடிவிடவேண்டும் என்ற நெருக்கடி ஏற்பட்டது. தர்ம கர்த்தர்கள் கவலையிலாழ்ந்தார்கள். அந்தச் சமயத்தில் 'யுனிசெப்' ஸ்தாபனம் கைகொடுத்து உதவிற்று. ஜனங்களின் உணர்ச்சியையும் தர்மகர்த்தர்களின் கவலையையும் அவர்கள் மதித்து சத்திரத்தின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார்கள். சாலமன் அரசன் ஆரம்பித்த தருமம் ஒருநாள் கூட நின்றுவிடாமல் தீனர்களுக்கு உணவு அளித்துவருகிறது. உலகம் உள்ளமட்டும் அது நீடிக்கட்டும்.

மத்திய கிழக்கு நாடுகளில் சுமார் ஐந்து லக்ஷம் குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் யுவதிகளுக்கும் தாய்மார்களுக்கும் உணவு அளித்துக் கொண்டிருந்தார்கள். தங்குவதற்கு டேரா, வைத்திய உதவி, ஆடைகள், கம்பளிப் போர்வை இவை எல்லாம் ஏற்பாடு செய்து ஜனங்களைச் சௌகர்யமாக வாழச் செய்தார்கள். அகதிகள் ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பு ஒருபுறமிருக்க, அகதிகளும் பொறுப்புணர்ந்து, ஸ்தாபன ஊழியர்களுக்கு உதவி செய்ததால், கொள்ளை நோய் முதலியவை பரவாமல் தடுப்பதும் சாத்தியமாயிற்று.

'யுனிசெப்' ஸ்தாபனத்தின் உதவியையும் சேவையையும் பாராட்டி பல நாடுகளிலிருந்து கடிதங்கள் வந்து குவிந்தன. மூலைமுடுக்குகளிலிருக்கும் கிராமவாசிகள் கூட உதவி பெற்று சந்தோஷமடைந்தார்கள். 'எங்கள் ஊர் குழந்தைகள் பலாட்டியர்களாகிவிட்டார்கள்' என்றும், 'உங்களுடைய முயற்சியினால் சர்வதேச சமரஸம் ஏற்பட்டுவிட்டது' என்றும், 'உலக சமாதானத்துக்கு நீங்கள் செய்யும் வேலை அஸ்திவாரம்போன்றது. நாங்களும் எங்களாலானதைச் செய்கிறோம்' என்றும் பல இடங்களிலிருந்து பாராட்டும் நன்றியும் வந்தன.

"மனித சமூகத்தின் அமைதியைக் குலைக்கும் யுத்தங்கள் நேராமல் பரஸ்பரம் சமாதானத்துடனும் சௌஜன்யத்துடனும்

எல்லா நாட்டினரும் பழகி வாழ எங்களாலியன்றதைச் செய்ய உறுதி கொண்டுள்ளோம். எங்களுடைய பள்ளிக் கூடத்தின் சார்பாக நன்றி தெரிவிக்கிறேம்." என்று ஹ்ரா பாவ்ஸ்கி, குபின், கிளானிகோவா ஆகிய மூன்று செக்நாட்டு ஆசிரியர்கள் கடிதம் எழுதினர்கள். அத்துடன் பெயர் விரும் பாத ஒரு மலைநாட்டு கவிஞன் பெற்றோர்களின் சார்பாக செக் பாஷையில் எழுதிய ஒரு கவிதையையும் அனுப்பியிருந்தார் கள். அதன் சாராம்சம் வருமாறு : "மலை நாட்டுக் கிராமமாகிய வெலாங்கோ சிறுவர்களும் சிறுமிகளும் நீங்கள் அனுப்பிய ரொட்டியையும், கோகோவையும் ருசித்துச் சாப்பிடுகிறார்கள். காடு மேடுகளைத்தாண்டி எல்லோரும் பள்ளிக்கூடத்தில் ஒன்று கூடுகிறார்கள். அவர்களுடைய சந்தோஷத்தைப்பார்த்து பர வசமடைகிறேன். ஆயிரமாயிரம் தடவை உங்களுக்கு நன்றி கூறுகிறேன். உங்களுடைய உதவியினால் நாங்கள் உத்சாக மடைந்தோம். உடல் உறுதி பெற்றோம். உங்களை நாங்கள் வரவேற்கிறோம். மலைச்சாரலிலுள்ள மரங்களினூடே காற்று வீசிக் கீதமெழுப்புவது உங்களுக்குக் களிப்பூட்டும், காட்டுப் புஷ்பங்கள் சுகந்தமூட்டி உங்களுடைய அயர்வைப் போக்கும். மரங்களிலமர்ந்து இன்னிசை பாடி உங்களை வானம்பாடிகள் வரவேற்கும். எங்களுடைய நாடு அழகானது. அதன் அழகை மெருகு கொடுத்து உதவிய உங்களுக்கு எங்கள் மன மார்ந்த வந்தனம் உரித்தாகுக. வானத்து நக்ஷத்திரம் பூமி யில் வந்து இறங்கியதுபோல துள்ளி விளையாடும் எங்கள் குழந்தைகளைப் பார்த்து மகிழுங்கள். அவர்கள் தெரிவிக்கும் நன்றியறிதலைக் கேட்டு மகிழுங்கள்."

4. சேவையே செல்வம்.

நாள்முழுவதும் உழைத்ததனால் உடம்பிலே சோர்வு ; பேனாவைப் பிடிக்கமுடியாமல் குளிரினால் விரல்கள் விரைத்துப் போயின. ஆனாலும் பிடிவாதத்துடன் மங்கிய விளக்கு வெளிச்சத்தில் உட்கார்ந்துகொண்டு எல்ஸி ஆந்திரேஸன் (Else Andreassen) கடிதம் எழுதிக்கொண்டிருந்தாள். அன்றைய தபாலுக்குச் சேரவேண்டிய கடிதம் அது. நேரமாகிவிட்டதே என்று கவலையுடன் அவள் கடிதம் எழுதினாள். கடிதத்தில் ஒரு பகுதி வருமாறு :— ஸ்டிரிபோவுக்குச் சமீபத்தில் நானும் டாக்டர் லண்டும் (Dr. Lund) ஸ்ரீமதி ஹம்பர்ஸ்காவும் (Miss Humburska) வேலை செய்துவருகிறோம். செக் தேசத்திலுள்ள பிரபல சமூக ஊழியர்களில் டாக்டர் லண்டும் ஒருவர். நாங்கள் பக்கத்தூரிலிருந்த ஒரு பள்ளிக்கூடத்துக்குச் செல்ல வேண்டியிருந்தது. டாக்டர் லண்ட் மோட்டாரை ஓட்டினார். பனி கொட்டிக்கொண்டேயிருந்தது. பாதைகூடத் தெரியாத படி ஒரே பனிமூட்டம். திடீரென்று எங்களுடைய மோட்டார் பாதையைவிட்டு விலகி பக்கத்திலுள்ள ஓர் பள்ளத்தில் போய் விழுந்தது. நல்லவேளையாக எங்களுக்கு காயம்படவில்லை. சமாளித்துக்கொண்டு எழுந்தோம். ஆனால் காரை நிமிர்த்தி ரோடுக்குக் கொண்டுவர முடியவில்லை. டாக்டர் லண்டு எங்கோ சென்று சில கிராமவாசிகளை அழைத்துவந்தார். அவர்கள் காரைத் தூக்கி நிறுத்தினார்கள். ரோடு மிகவும் மோசமாக இருந்ததால் அவர்களில் ஒருவன் மோட்டாரை ஓட்டி வழிகாட்ட வந்தான். பனி அதிகப்பட்டுவிடவே சிறிதுதூரம் சென்றதும் நாங்கள் இறங்கி நடக்கவேண்டியதாயிற்று. ஒரு மணிநேரம் நடந்த பின்பு பள்ளிக்கூடம் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து ஆசிரியர் எங்களை அன்புடன் உபசரித்தார். எங்களுடைய ஆடைகளை அடுப்புச்சூட்டில் காயவைத்துக் கொடுத்தார். சுட சுடத் தேயிலைப்பானம் கொடுத்தார். குளிரின் கொடுமையைச்

சமாளித்துக்கொண்டு குழந்தைகளைப் பரிசோதிக்கலாமேனும். அப்போது சில மைல்களுக்கு அப்பாலிருக்கும் ஒரு கிராமத்தில் சில குழந்தைகள் குளிரால் வாடித் தவிப்பதாகவும் உடனே உதவி அவசியம் என்றும் ஒருவன் வந்து சொன்னான்.

"வெளியே பனி கடுமையாக இருந்தது. ஜிவ் ஜிவ்வென்று காற்று வீசிற்று. அந்தக் குளிரில் நடந்து செல்வது சாத்திய மில்லை. பத்து அடி நடக்கு முன்னேயே உடல் விரைத்துப் போகும். வந்த மனிதனே எங்களைக் கெஞ்சினான். ஆசிரியர் வெளியே சென்று இரண்டு குதிரைகள் பூட்டிய ஒரு வண்டியைக் கொண்டு வந்தார். வழியோ மிகவும் மோசமாக இருந்தது. பல இடங்களில் குறுகலாகவும் சில இடங்களில் செங்குத்தலாகவும் இருந்தது. சிறிது அடி பிசகினாலும் ஆபத்துத்தான். மேலே போர்த்திக்கொள்ளக்கூட எங்களிடம் கம்பளிப் போர்வைகள் கிடையாது. குளிரால் உடம்பு நடுங்கிற்று. விரல்கள் விரைத்துப்போயின. எப்படியோ சமாளித்துக் கொண்டு போய்ச் சேர்ந்தோம். அங்கு சென்று எங்களாலியன்ற உதவியைச் செய்தோம் . . ."

எல்ஸீ கடிதத்தைத் தபாலில் சேர்த்தாள். கோபன்ஹாகனிலுள்ள தலைமைக் கார்யாலயத்துக்கு அவள் எழுதிய வேலைக் குறிப்பு அது. அவளும், ஸ்ரீமதி ஹம்பர்ஸ்காவும் டாக்டர் லண்டும் செக் நாட்டில் கூஷய ஜ்வரத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டிருந்த வைத்திய கோஷ்டியைச் சேர்ந்தவர்கள். இவர்களைப்போல நூற்றுக்கணக்கான கோஷ்டி யுத்தத்தினால் நாசமடைந்த ஐரோப்பிய நாடுகளில் சேவை செய்துகொண்டிருந்தார்கள். எல்ஸியின் ஸ்வதேசம் டென்மார்க். சேவையில் ஆர்வம் கொண்டு அவள் செக் நாட்டுக்கு வந்தாள். ஸ்கான்டினேவிய நாடுகளிலுள்ள செஞ்சிலுவை சங்கம், 'யுனிசெப்,' சர்வதேச சுகாதார ஸ்தாபனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியில் ஐரோப்பா முழுவதும் கூஷயஜ்வர தடுப்பு வேலை நடந்துகொண்டிருந்தது.

கூயஜ்வர கிருமிநாசினிக்கு பாஸிலெஸ் கால்மெட்டிக்யூரின் (Bacillus Calmette Guerin) என்று பெயர். அதையே சுருக்கமாக பி.ஸி.ஜி. என்று சொல்கிறார்கள். கூயஜ்வர கிருமிகளை மிருகங்களுக்குக் குத்தி, சீம்பால் தயாரிக்கிறார்கள். கால்மெட்டி, (Calmette) க்யூரின் (Guerin) என்ற இரண்டு பிரஞ்சு டாக்டர்கள் இதைக் கண்டுபிடித்ததால் அவர்களுடைய பெயரையே மருந்துக்கு வைத்துவிட்டார்கள். முதல் உலக யுத்தத்துக்கு முன்னேயே இந்த மருந்து கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது. ஆனாலும் சமீபகாலம் வரையில் மருந்து பிரபலமடையவில்லை. இரண்டாவது மகாயுத்தம் நடந்துகொண்டிருக்கும் போது டென்மார்க்கு தேசமும் நார்வே நாடும் நாஜி ஆதிக்கத்தில் வந்தன. அப்போது அந்த நாடுகளில் கூயஜ்வரம் பரவிற்று. அதைத் தடுக்க நாட்டிலுள்ள டாக்டர்கள் பி.ஸி.ஜி. மருந்தை உபயோகித்து வெற்றி பெற்றார்கள். ஐ.நா. சபை ஏற்பட்டதும் மற்ற நாட்டிலுள்ளவர்களைக் காப்பாற்ற அந்த டாக்டர்கள் தங்களுடைய அனுபவத்தையும், கூயஜ்வரம் பரவாமல் தடுக்க ஓர் திட்டமும் சமர்ப்பித்தார்கள்.

டென்மார்க்கிலும் நார்வேயிலும் டாக்டர்கள் கோஷ்டி கோஷ்டியாகச் சென்று மக்களைப் பரிசோதனை செய்தார்கள். கூயஜ்வரம் ஆரம்ப காலத்தில் வெளி வீசி அடிக்காது. ஜ்வரம் இருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிக்க டியூபர்குலின் என்ற மருந்தை ஊசிமூலம் கொடுப்பார்கள். இந்த மருந்தைக்கண்டு பிடித்தவர் டாக்டர் ராபர்ட் கோச் (Dr. Robert Koch) என்ற ஜெர்மானியர். ஜ்வரம் இல்லாமலிருந்தால் தடுப்பு மருந்தான பிஸிஜியைக் குத்துவார்கள். ஜ்வரம் வெளி வீசி அடிக்க ஆரம்பித்துவிட்டால் ஆஸ்பத்திரிக்கோ ஆரோக்கிய வாசஸ்தலங்களுக்கோ அனுப்பி சிகித்சை செய்வார்கள். ஸ்காண்டினேவியா தேசங்களில் இந்த மருந்தை குழந்தை முதல் பெரியவர்கள்வரை எல்லோருக்கும் கொடுத்து கூயஜ்வரத்தை அடியோடு ஒழித்துவிட்டார்கள். கோபன்ஹாகனிலும் ஆஸ்லோவிலும் உள்ள ஆராய்ச்சி நிலயங்களில் ஏராளமான மருந்து

தயாரிக்கப்பட்டது. டாக்டர்களும் நர்ஸுகளும் சேவையுணர்ச்சி மேலோங்க இரவு பகல் என்று பாராமல் உழைத்தார்கள். சென்ற மகாயுத்தம் முடிந்த சமயத்தில் பல ஐரோப்பிய நாடுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் க்ஷயஜ்வரத்தால் அவதிப் படுகிறார்கள் என்று தெரியவந்தது. சிகித்சை செய்வது ஒரு புறமிருக்க, நோய்பரவி மற்றவர்களைக் கொல்லாமல் தடுக்க வேண்டியது ஒரு முக்ய வேலையாகிவிட்டது. ஒவ்வொரு நாட்டிலுமுள்ள குழந்தைகளையும் வாலிபர்களையும் பெண்களையும் காப்பாற்ற வேண்டும் என்று அறிஞர்கள் தீர்மானித்தார்கள். செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் மற்ற நாடுகளுக்குச் சென்று வேலைசெய்ய ஸ்காண்டினேவியா தேசங்களிலுள்ள டாக்டர்களும் நர்ஸுகளும் முன்வந்தார்கள். 1946-ஆம் ஸ செப்டம்பர் மாதத்தில் யுகோஸ்லாவியாவுக்கு முதல் வைத்திய கோஷ்டி சென்றது. 1947-ஆம் ஸ இறுதிக்குள் ஆஸ்டிரியா, செக் கோஸ்லாவாகியா, ஜர்மனி, ஹங்கேரி, இத்தாலி, கிரீஸ், போலந்து ஆகிய நாடுகளில் பல கோஷ்டிகள் வேலைசெய்தன, நாளுக்குநாள் வேலை விரிந்துகொண்டேயிருந்தது. அதற்குத் தகுந்தாற்போல வைத்திய உதவியோ மருந்துகளோ கிடைக்க வில்லை. அந்தச் சமயத்தில்தான் செஞ்சிலுவை சங்கத்தார் சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் உதவியை நாடினார்கள். சர்வதேச சுகாதார ஸ்தாபனம் எற்கனவேயே இந்தத் துறையில் வேலைசெய்ய ஆரம்பித்திருந்தது. செஞ்சிலுவை சங்கம் உதவி கோரினதும், அவர்களுடைய கோஷ்டிகள் மூலமே சேவை செய்வதுடன் தொடர்ந்து ஆராய்ச்சி நடத்த ஒரு வாய்ப்புக் கிடைத்தது என்று மகிழ்ந்து உதவிசெய்தது. சிறுவர்களுக்கும் வாலிபர்களுக்கும் உதவ வேண்டும் என்ற நோக்கத்துடன் 'யுனிசெப்' ஸ்தாபனமும் அக்கறை காட்டிற்று.

சர்வதேச சுகாதார ஸ்தாபனமும் 'யுனிசெப்'பும் உதவ முன்வரவே திட்டம் விரிவடைந்தது. புதுப்புது நாடுகளிலுள்ள மக்களுக்கு உதவிசெய்ய வைத்திய கோஷ்டிகள் சென்றன. செஞ்சிலுவை சங்கத்தார் ஊழியர்களைக் கொடுத்தார்கள்;

'யுனிசெப்' ஸ்தாபனம் மருந்துச் செலவை ஏற்றுக்கொண்டது : விஞ்ஞானிகளையும் நிபுணர்களையும் உதவி மேலும் மேலும் ஆராய்ச்சி நடத்தவும் மருந்து தயாரிக்க உதவியும் அளித்தது. வைத்தியக் கருவிகள், எக்ஸ்ரே யூனிட்டுகள், மோட்டார்கள் இவைகளை வாங்கினர்கள். பி. ஸி. ஜி. மருந்து அதிசீக்கிரம் கெட்டுவிடும் தன்மைவாய்ந்தது. உற்பத்தியான சில தினங் களுக்குள் அதை உபயோகித்துவிடவேண்டும். கோபன்ஹாகனி லும் ஆஸ்லோவிலும் உள்ள ஆராய்ச்சி நிலயங்களிலிருந்து பல நாடுகளுக்கு மருந்து சீசாக்களை அதிசீக்கிரமாக எடுத்துச் செல்ல விமானங்களை உபயோகிக்கவேண்டியதாயிற்று. பிறகு பொதுவாகவே மருந்துகளையும் வைத்திய உபகரணங்களையும் ஒவ்வோரிடத்துக்கும் விமானமூலம் அனுப்புவது சகஜமாகி விட்டது.

பள்ளிக்கூடம், அலுதை விடுதி, ஆஸ்பத்திரி போன்ற பல இடங்களில் டாக்டர்களும் நர்ஸுகளும் குழந்தைகளுக்கும் சிறு வர்களும் ஊசிமருந்து போட்டார்கள். ஒரு சில குழந்தைகள் தான் பயந்தனவே தவிர பெரும்பான்மையானவர்கள் சந் தோஷமாக இருந்தார்கள். சில குழந்தைகளுக்கு ஊசி மருந்து போட்டுக்கொள்வது வேடிக்கையாகக் கூட இருந்தது. ஒரு கிராமத்தில் ஒரே பையன் இரண்டு தடவை டியூபர்குலின் இஞ்செக்ஷன் செய்துகொண்டான். மருந்தைக் குத்திக்கொள் வதில் என்ன ஆனந்தமேற்பட்டதோ என்னவோ ? மூன்றுவது தடவையும் அவன் டாக்டருக்கு எதிரேபோய் நின்றதும், அவனை அடையாளங் கண்டுபிடித்து விரட்டினர்கள். யுகோஸ்லாவியா விலுள்ள ஒரு கிராமத்தில் குழந்தைகள் தாங்களாகவே வரிசை யாக நின்று டாக்டரிடம் மருந்து குத்திக்கொண்டார்கள்.

ஐரோப்பாவிலுள்ள ஒன்பது நாடுகளில் இரண்டே வருஷங் களில் சுமார் ஒன்றரைக்கோடி மக்களுக்கு க்ஷயஜ்வர எதிர்ப்பு மருந்து குத்தப்பட்டது. இதன்பலனாக ஐரோப்பாவிலிருந்தே க்ஷயஜ்வரம் ஒழிந்துவிட்டது என்று கூறிவிடலாம். பொதுஜன சேவையிலார்வமுள்ள டாக்டர்களும் நர்ஸுகளும் சலியாமல்

உழைத்ததிலுலும், அவர்களுக்குத் தேவையான வைத்திய வசதிகளை உடனுக்குடன் கவனித்ததாலுமே மிகவும் குறுகிய காலத்துக்குள் ஆச்சர்யப்படும்படி நிவாரணமளிப்பது சாத்தியமாயிற்று. 'யுனிசெப்' ஸ்தாபனம் நூற்றுக்கணக்கான எக்ஸ்ரே யூனிட்டுகளையும் ஆயிரமாயிரம் பவுண்டு மருந்தும் கப்பல்களில் ஏற்றி அனுப்பிக்கொண்டேயிருந்தது. தடுப்பு மருந்தைத் தவிர ஜ்வரநிவாரணிகளையும் புதிது புதிதாகக் கண்டுபிடித்த பல மருந்துகளையும் அமெரிக்காவிலிருந்தும் மற்ற நாடுகளிலிருந்தும் ஐரோப்பாவுக்கு அனுப்பிக்கொண்டே இருந்தார்கள். ஒவ்வொரு ஊரிலுமுள்ள ஆஸ்பத்திரிக்கும் எக்ஸ்ரே வசதியும் இதர நவீன சாதனங்களும் அனுப்பினர்கள். போலந்துக்கு மட்டுமே சுமார் நூற்றைம்பது ஆஸ்பத்திரிகளுக்கு வேண்டிய நவீன சாதனங்களை அனுப்பினர்கள்.

குழந்தைகளும் சிறுவர்களும் பி. வி. ஜி. பிரசாரத்தில் கலந்துகொண்டதுபோல பெரியவர்களும் சந்தோஷத்துடன் உழைத்தார்கள். பல இடங்களில் கிராமவாசிகள் நன்றி செலுத்திய காட்சிகளைக் கண்டு டாக்டர்களும் ஊழியர்களும் மனம் நெகிழ்ந்து விட்டார்கள். படிப்பு வாசனையே தெரியாத கிராமங்களில் தண்டோரா மூலமும் கிராமத்தலைவர்கள் மூலமும் கூய ஜ்வரத்தின் கொடுமையையும் அதைத் தடுக்கவேண்டிய அவசியத்தையும் ஊழியர்கள் எடுத்துச் சொன்னார்கள். மைல் கணக்கான தூரங்களுக்கு அப்பாலிருந்தும் நடந்துவந்து சிகிச்சை பெற்றுக்கொண்ட கிராமவாசிகள் அநேகர். சில இடங்களில், சோற்று மூட்டையும், குளிருக்குக்காய விறகும் தலையில் சுமந்து கொண்டு வந்து காத்திருந்து ஊசி போட்டுக்கொண்டு போனார்கள். ஐரோப்பிய நாடுகளில் யுகோஸ்லாவியாவில்தான் கூயஜ்வரத்தின் வேகம் அதிகமாக இருந்தது. யுத்தத்துக்குப் பிறகு அதன் கடுமை அதிகமாயிற்று. ஆயிரத்துக்கு முன்னூறு பேர்கள் இந்த நோயினால் செத்தார்கள். பி. வி. ஜி. பிரசாரம் ஆரம்பித்த சில மாதங்களுக்குள்ளேயே நோய் கட்டுக்கு அடங்கிவிட்டது. தங்களுக்கு நன்மை செய்யவே நாடுவிட்டு நாடு வந்திருக்கிறார்

கள் என்று கிராமவாசிகள் தெரிந்துகொண்டதும் டாக்டர்களி டமும் ஊழியர்களிடமும் அவர்களுக்கு அத்யந்த விசுவாசம் ஏற் பட்டது. ஒருநாள் காலையில் டாக்டர் குழந்தைகளுக்கு பி.ஸி.ஜி. இஞ்செக்ஷன் கொடுத்து கொண்டிருந்தார் ருமேனியாவிலுள்ள முகாம் ஒன்றில். தன்னுடைய பேரக்குழந்தைகளுக்கு இஞ் சக்ஷன் போட்டதும் ஒரு கிழவி ஒரு மூட்டையைப் பிரிக்க ஆரம் பித்தாள். இரண்டு மூன்று கந்தல் துணிகளைப் பிரித்து ஒரு கோழி முட்டையை எடுத்து பவ்யத்துடன் நர்ஸிடம் கொடுத் தாள். குழந்தைகளோ, விளையாட்டுச் சாமான்கள், புஷ்பக் கொத்துக்கள் என்று பல பல பொருள்களை கொண்டுவந்து டாக்டர்களுக்கும் நர்ஸுகளுக்கும் கொடுத்தார்கள். பெற்றோர் கள் வெள்ளிச்சாமான்களும் வேறு பல பொருள்களும் பரிசாகக் கொடுத்தார்கள். போலந்திலுள்ள ஒரு டாக்டருக்கு ஒன்பது வயதுச் சிறுவன் அளித்த பரிசே எல்லாருடைய கவனத்தையும் இழுத்தது. டென்மார்க்கிலிருந்து பி.ஸி.ஜி. மருந்துகள் வருவ தாக ஊழியர்கள் சொன்னார்கள் அல்லவா? அவன் போலந்துத் துறைமுகத்தில் டென்மார்க் தேசத்துக் கப்பல் நிற்பதுபோல ஒரு படம் வரைந்தான். இரண்டு நாட்டுக் கொடிகளையும் வரைந்து மேலே இஞ்சக்ஷன் கொடுக்கும் சிரிஞ்சையும் எழுதினான். அர்த்தபுஷ்டியுடனும் அழகாகவும் இருந்த அந்தப் படத்தை எல்லாரும் பாராட்டினார்கள்.

ஐரோப்பிய நாடுகளில் நோய் கட்டுக்கு அடங்கியதும் மற்ற நாடுகளுக்கு இந்தச் சேவை செய்யவேண்டும் என்று சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தாரும் யுனிசெப் ஸ்தாபனத்தாரும் தீர் மானித்தார்கள். ஐரோப்பாவுக்கு அடுத்தபடியாக வட ஆபிரிகா நாடுகளில்தான் இந்த நோய் அதிகமாக இருந்தது. ஆகவே அந்த நாடுகளில் வேலைசெய்ய அல்ஜீரியா, மொராக்கோ, டுனீஷியா, எகிப்து, டான்ஜியர்ஸ், இஸ்ரேல், லெபனன், சிரியா ஆகிய நாடுகளிலிருந்து டாக்டர்களை ஐரோப்பாவுக்கு அனுப்பி, பயிற்சியளித்தார்கள். ஐரோப்பாவில் நடக்கும் வேலையில் அவர்களுக்கு ஏற்பட்ட பயிற்சியும் அனுபவமும் அற்புதமான பலனைக் கொடுத்தன.

வட ஆபிரிகா நாடுகளில் பாலைவனப் பகுதிகளும் குன்றுப் பிரதேசங்களும் அதிகம். ஜனங்களுக்கு கல்வி அறிவு கிடையாது. போக்குவரத்து வசதிகளோ கிடையாது. சீதோஷ்ண நிலைமையும் விபரீதமாக இருக்கும். இவற்றை எல்லாம் பொருட் படுத்தாமல் ஊழியர்கள் வேலை செய்தார்கள். பிஹிஜி மருந் தின் உபயோகத்தையும் அவசியத்தையும் சுல்தான் ஜில்லா அதிகாரிகளுக்கும் சமூக நாட்டாண்மைக்காரர்களுக்கும் தெரி வித்தார். மொராக்கோவிலுள்ள கிராமங்களுக்கு அதிசீக்கிரம் செய்தி பரவிவிட்டது. நாட்டாண்மைக்காரர்கள், மக்களை அழைத்துக்கொண்டு முகாம்களுக்கு வந்தார்கள். ஆபிரிகாவின் சீதோஷ்ணஸ்திதி சரியாக இல்லாததால் பி. ஹி. ஜி. மருந்து கெட்டுப்போகாமல் தெர்மாஸ்பிளாஸ்குகளிலும், சௌகர்ய மிருக்குமிடங்களில் ரிப்ரிஜரேட்டர்களிலும், எடுத்துச் சென்றார்கள். "மழையும் வெயிலும் இங்கு அசாத்யமாக இருக்கிறது. திடீ ரென்று மழை பெய்து ரோடுகளைக்கூட அறுத்தெறிந்துவிடு கிறது. ரோடுகளை செப்பனிட்டுக் கொண்டிருப்பது சாத்திய மான கார்யமல்ல. படுமோசமான ரோடுகளில் நூற்றுக் கணக்கான மைல்கள் பிரயாணம் செய்கிறோம். ஜனங்களுக்கு மூடநம்பிக்கை அதிகமிருக்கிறது. அவர்களுக்கு மருந்தின் குணத்தை எடுத்துச் சொல்வது சுலபமாகத் தோன்றவில்லை. பிற நாட்டார்களிடம் அவர்கள் நெருங்கிப்பழகவே சம்சயப்படு கிறார்கள். எப்படியோ நாங்கள் சமாளித்துவிடுகிறோம். மக்க ளின் அன்பைப் பெற்றுவிடுகிறோம். எங்களுடைய முகாம் மாறுவதற்கு முன்பு ஒவ்வோரிடத்திலும் விருந்தும் கூத்தும் நடத்தி கிராமமக்கள் வழியனுப்புகிறார்கள்"—இப்படி டாக்டர் ஜீன் மைகேல் மில்லட் (Dr. Jean Michal Millet) தலைமைக் கார்யாலயத்துக்குக் கடிதம் எழுதினர். இதேபோல பலர் தம் தம் அனுபவங்களை எழுதினர்கள்.

ஆபிரிகா நாடுகளுக்கு அடுத்தபடியாக ஆசியா நாடு களிலுள்ள குழந்தைகளையும் வாலிபர்களையும் பற்றி 'யுனிசெப்' சிரத்தை எடுத்துக்கொண்டது. உலகத்துக்குக் குழந்தைகளில்

பாதிக்கு மேற்பட்டவர்கள் ஆசியா நாடுகளில்தான் வசிக்கிறார்கள். ஆசியா நாடுகளின் நிலைமையையும் தேவையையும் கவனித்து வர முதலில் 'யுனிசெப்' ஒரு வைத்திய கோஷ்டியை அனுப்பினார்கள். டாக்டர் தாமஸ் பாரன் (Dr. Thoman Parren) தலைமையில் அந்த கோஷ்டி பர்மா, இந்தோ சைனா, இந்தோனேஷியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் தீவுகள், ஹாங்காங், சிங்கப்பூர், போர்னியோ, ஸராவக் முதலிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தார்கள். இந்தக் கோஷ்டியில் அகில இந்தியா சுகாதார இன்ஸ்டிட்யூட்டின் (All India Institute of Hygiene and Public Health) தலைவராக இருந்த டாக்டர் லகூமணனும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்க விஷயம்.

ஒவ்வொரு நாட்டிலும் அவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கலந்து ஆலோசித்ததுடன் மக்களுடைய நிலைமையையும் தேவைகளையும் தெரிந்துகொள்ள சமூக ஊழியர்களையும் ஆசிரியர்களையும் சந்தித்தார்கள். குழந்தைகளின் வாழ்க்கையை நேரில் தெரிந்துகொள்ள பள்ளிக்கூடங்களுக்கும், அனுதை விடுதிகளுக்கும், மாணவர் இல்லங்களுக்கும் சென்றார்கள். முடிவாக 'யுனிசெப்' ஸ்தாபனத்துக்கு அவர்கள் சமர்ப்பித்த அறிக்கையில் பின்வருமாறு எழுதினார்கள்: "ஆசியா நாடுகளில் மலேரியா ஜுரமும் சருமநோய்களும்தான் மக்களை வாட்டுகின்றன. இதைவிடப் பெரியதொரு நோய் அங்கு இருக்கிறது. அதுதான் பசி. பட்டினியாலும் நோயினாலும் தான் மக்கள் சாகிறார்கள். ஆசியாவிலுள்ள குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் அரை வயிற்றுச் சாப்பாடுதான் கிடைக்கிறது. அவர்கள் ஆரோக்கியமாக வாழவேண்டுமானால் முதல் தேவை உணவுதான். பட்டினியிலுல்தான் உடல்நலம் கெட்டு நோய் பரவுகிறது. மருந்து அனுப்புவது பிறகு முதலில் உணவு அனுப்புங்கள் . . . . . "

பாரிலில் யுனிசெப் ஸ்தாபனத்தின் நிர்வாக சபைகூடி டாக்டர் பாரனின் அறிக்கையைப்பற்றி விவாதித்தார்கள்.

யுனிசெப் ஸ்தாபனத்துடன் செலவைப் பகிர்ந்துகொண்டு சேவை செய்ய எல்லா நாட்டுச் சர்க்கார்களும் தயாராக இருக்கிறார்கள் என்பதும் டாக்டர் பாரன் சொன்னார். ஆசியா நாடுகளுக்கு உதவவேண்டும் என்று தீர்மானித்தாலும் அதற்குத் தேவையான பணமும், உணவும், மருந்து வசதிகளும் எப்படித் திரட்டுவது என்ற பிரமைதான் அவர்களைப் பிடித்துக்கொண்டது. ஐரோப்பிய நாடுகளுக்கு அடுத்தபடியாக தென் அமெரிக்கா நாடுகளுக்கும் பிற தேசங்களுக்கும் உதவி செய்யவேண்டும் என்று திட்டமிட்டிருந்தார்கள். ஒவ்வொரு நாடாகப் பார்த்து உதவி செய்தால், உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் உதவி செய்யப் பல வருஷங்களாகும் என்றே தோன்றிற்று. ஆசியா நாடுகளுக்கு உடனடியாக உதவி தேவை என்று தெரிந்ததும், மற்றத் திட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டு கப்பல் கப்பலாக உணவுப்பொருள்களை ஆசியா நாட்டுத் துறைமுகங்களுக்கு அனுப்பினர்கள். தூர நாடுகளுக்கு உதவி எடுத்துக் கொண்டு விமானங்கள் பறந்தன. தேசப்பிரிவினையினால் அகதிகளாகி முகாம்களில் வசிக்கும் இந்தியர்களுக்கும் பாகிஸ்தானிகளுக்கும் உதவி செய்தார்கள். ஜப்பான், சைனா, கிழக்கு இந்திய தீவுகள், பாகிஸ்தான், சிலோன், இந்தியா முதலிய நாடுகளிலுள்ள லக்ஷக்கணக்கான சிறுவர்களுக்கு பரவலான முறையில் உணவு விநியோகிக்க ஏற்பாடு செய்தார்கள். ஜப்பானில் மாத்திரம் சுமார் ஒன்றரை லக்ஷம் குழந்தைகளுக்கு கொடுக்க முப்பது லக்ஷம் பவுண்டு எடு எடுத்த பால் பவுடர் அனுப்பினர்கள். சுமார் ஐந்து லக்ஷம் சிறுவர்களுக்கு ஆடைகள் தைத்து அனுப்பினர்கள்.

குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் உணவும் உடையும் கிடைத்தாலும், ஆரோக்கியமாக வாழவும் எதிர்காலம் சிறப்பாக இருக்கவும் நீண்டகாலத் திட்டங்களை வகுக்க பலநாட்டு அரசாங்கங்கள் 'யுனிசெப்' ஸ்தாபனத்தாருடன் கலந்து ஆலோசித்தார்கள். இந்தத் துறையில் ஏற்கனவே சில நாடுகள் திட்டம் வகுத்திருந்தன. சுகாதார அதிகாரிகளும் டாக்டர்களும் பயிற்சி

பெற்ற ஊழியர்களாக இருந்தார்கள். அந்த நாடுகளிலும் புதுப்புது ஆஸ்பத்திரிகளும், சுகாதார நிலையங்களும் கட்ட வேண்டியது அவசியமாக இருந்தது. பிற்போக்கான நாடுகளில், ஊழியர்களுக்குப் பயிற்சியளித்து உதவி செய்யவேண்டியிருந்தது. ஆசியா நாடுகளைப் போல தென் அமெரிக்கா நாடுகளும் 'யுனிசெப்' ஸ்தாபனத்தின் உதவியைக் கோரின. இந்த இரண்டு கண்டங்களிலும் அரைவயிற்றுச் சாப்பாட்டுடன் மிகவும் பிற்போக்கான நிலைமையில் லக்ஷக்கணக்கான் வாலிபர்களும் குழந்தைகளுமிருந்தார்கள். ஆசியாவில் மட்டும் பதினைந்து வயதுக்குள்பட்ட சிறுவர்கள் சுமார் நாற்பது கோடிப்பேர் இருந்தார்கள். தென் அமெரிக்காவிலோ பதினைந்து வயதுக்குள் பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை சுமார் ஐந்து கோடியாகும். இவ்வளவு பெரிய ஜனத்தொகைக்கு நீண்ட காலத்திட்டத்தில் உதவி செய்வதற்கு எவ்வளவு பணம் வேண்டும்? எத்தனை வருஷங்களாகும்? சர்வதேச ரீதியில் வேலை செய்தாலும் 'யுனிசெப்' போன்ற ஸ்தாபனம் பிரமித்தது. ஆனாலும் முடிந்த அளவுக்கு ஒவ்வொரு நாட்டுக்கும் உதவி செய்ய முன்வந்தது. சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனம், சர்வதேச சுகாதார ஸ்தாபனம் இவற்றுடன் கூடி ஆலோசித்து ஒவ்வொரு நாட்டின் தேவைகளைக் கவனித்தது. கடைசியில் எந்த நாட்டுக்கு எந்த மாதிரி உதவி முதலில் அவசியமோ அதைச் செய்வது, பிறகு மற்றத் திட்டங்களை அமலுக்குக் கொண்டுவருவது என்று 'யுனிசெப்' நிர்வாகிகள் முடிவுக்கு வந்தார்கள். இதனால் எறக்குறைய எல்லா நாடுகளுக்கும் ஒரே சமயத்தில் உதவி செய்வது சாத்தியமாயிற்று.

கொள்ளை நோய்கள், தொத்து நோய்கள் பரவாமல் மக்களைக் காப்பாற்றவும், ஆரோக்கியமாகக் குழந்தைகளை வளர்க்கவும் பிரியப்படுகிறோம் என்றார்கள் ஒரு நாட்டுச் சர்க்கார். ஆரோக்கியமான உணவைப்பற்றிப் பிரசாரம் செய்ய விரும்புகிறோம் என்றார்கள் வேறு ஒரு அரசாங்கத்தார். கிராமவாசிகளுக்கு கல்வி அறிவு ஏற்பட்டால் மூடப்பழக்கங்கள் ஒழிந்து

விடும். அதற்கான உதவி செய்யுங்கள் என்று கோரினர்கள் ஒரு தேசத்தார். வைத்திய உதவியும் ஆஸ்பத்திரிகளும்தான் எங்களுடைய உடனடித்தேவை என்று கேட்டார்கள் வேறு ஒரு நாட்டினர். தம்மால் முடிந்ததைச் செய்து கொண்டு மேலும் உதவி கோரித் தான் சர்வதேச ஸ்தாபனங்களை ஒவ் வொரு நாட்டாரும் அணுகினர்கள்.

வியாதிகள் பரவாமல் தடுக்கவும் குறிப்பாக சருமநோய்களை யும் இதரத் தொத்து நோய்களை ஒழிக்கவும் இந்தோனேஷி யாவுக்கும், மேற்கிந்தியத் தீவுகளைச் சேர்ந்த ஹைட்டிக்கும் வைத்திய கோஷ்டிகளையும் மருந்துகளையும் அனுப்பி 'யுனி செப்' ஸ்தாபனம் உதவிற்று.

ஹண்டுராஸில் ஆரோக்கியமான உணவுத் திட்டம் வகுத்து, புஷ்டியுள்ள ஆகார வகைகளையுள்ள சமையல் திட்டமும் கொடுத் ததுடன் 24 சர்க்கார் பள்ளிக்கூடங்களில் ஆரோக்கிய உணவு தயாரித்து குழந்தைகளுக்கு விநியோகித்தார்கள். உணவி லில் ஏற்படும் மாறுதலைக் கவனிக்கவும், உணவின் போஷாக்கு சக்தி, அதைத் தயாரிக்கும் முறை இவற்றைத் தெரிந்து கொள்ளவும், சமூக ஊழியர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எல்லோரையும் உணவு விடுதிகளுக்கு அழைத்து வந்தார்கள்.

'யுனிசெப்' ஸ்தாபனம், சர்வதேச உணவு விவசாய ஸ்தா பனம், உள்ளூர் சர்க்கார் இவர்களுடைய கூட்டு முயற்சியில், ஐரோப்பாவில் ஏழு இடங்களில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற் சாலைகள் கட்டப்பட்டன. பால் அதிகமாகக் கிடைக் கும் மாதங்களில் பவுடராகச் செய்து, வருஷம் முழுவதும் ஒரேசீராக தேவையைச் சமாளிக்க இது பெரிதும் உபகாரமாக இருந்தது.

இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் கிராம வாசிகளின் முன் னேற்றத்தில் 'யுனிசெப்' ஸ்தாபனம் சிரத்தை எடுத்துக் கொண்டது. கிராம வைத்திய சாலைகளுக்குத் தேவையான தெர்மாமீட்டர், மருந்துகள், சோப்பு, இஞ்சக்ஷன் ஊசிகள்,

கருமிநாசினிகள் இவற்றைக் கொடுத்ததுடன், சுகாதாரப் பிரசாரம் செய்ய படங்கள், சினிமா படங்கள், சினிமா புரொஜக்டர்களும் ரேடியோவும் பொறுத்தப்பட்ட மோட்டார்கள், ஒலி பெருக்கிகள், பயாஸ்கோப் யந்திரங்கள் இவையெல்லாம் அனுப்பினர்கள். இதேபோல சிலி தேசத்துக்கும் பல பொருள்களை அனுப்பி உதவினர்கள்.

குழந்தை வளர்ப்புக் கலையைப் போதிக்கவும் ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கவும், மருத்துவம் பார்க்கவும், சுகாதார வசதிகளைப் போதிக்கவும், ஓர் ஆரோக்கிய விடுதியை பிலிப்பைன் சர்க்காரின் கூட்டுறவில் 'யுனிசெப்' ஸ்தாபனம் ஆரம்பித்தது. அந்த ஸ்தாபனத்தில், பிலிப்பினோ மக்களுக்கு ஒரு வருஷம் பயிற்சி யளித்து கிராமங்களுக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள்.

பொலிவியாவில் குழந்தைகளுக்காக ஓர் ஆஸ்பத்திரி கட்டிக்கொடுக்க 'யுனிசெப்' ஸ்தாபனம் முன்வந்தது. இங்கு சுமார் இருநூறு படுக்கைகள் அமைக்கப்பட்டதுடன், பல ஊழியர்களுக்குப் பயிற்சி யளிக்கவும் செய்தார்கள்.

இவை தவிர பல நாடுகளிலுள்ள சுகாதார ஊழியர்களுக்கும் டாக்டர்களுக்கும் புது முறைப் பயிற்சியளித்து, பல நாடுகளில் கிடைத்த அனுபவங்களையும், புது ஆராய்ச்சிகளையும் எடுத்துச் சொன்னர்கள். இதனல் மிகவும் விரிவாகவும் சீக்கிரம் பலனளிக்கக்கூடியதாகவுமுள்ள பல திட்டங்களை உருவாக்க முடிந்தது.

சுகாதாரத் துறையிலும் வைத்திய சாஸ்திரத்திலும் மேல் நாடுகளுக்குச் சென்று படிக்க விரும்பும் மாணவர்களுக்கு உதவி செய்யவும் 'யுனிசெப்' ஸ்தாபனத்தார் ஏற்பாடுகளைச் செய்தார்கள். உலகிலுள்ள பல நாட்டு வாலிபர்களும் ஊழியர்களும் இந்தத் திட்டத்தினல் பலனடைந்தார்கள்.

சுகாதார ஊழியர்களும் ஆராய்ச்சியாளர்களும் பயிற்சி பெறும் மிகப் பெரிய ஸ்தாபனங்களில் கல்கத்தாவிலுள்ள

அகில இந்திய சுகாதார இன்ஸ்டிட்யூட்டும் ஒன்றுகும். குழந்தைகள் வைத்தியம், மருத்துவம், ஆரோக்கியம், சுகாதார போதனை இவற்றில் மேல் படிப்புக்காக ஆசியா நாடுகளிலுள்ள டாக்டர்களும் நர்ஸுகளும் வந்து சேர்கிறார்கள். பயிற்சி முகாம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு இன்ஸ்டிட்யூட்டை விரிவாக்க 'யுனிசெப்' ஸ்தாபனம் உதவிற்று.

'யுனிசெப்' ஸ்தாபனத்தின் உதவியினால் பாரிஸிலுள்ள சர்வதேச சிசுசம்ரக்ஷண நிலையம் பல நாடுகளிலிருந்து வரும் ஊழியர்களுக்குப் பயிற்சி யளிக்கிறார்கள். அங்கு இந்தத் துறையில் ஆராய்ச்சி நடத்தவும் ஓர் விஞ்ஞானக்கூடம் நிறுவப் பட்டது.

பல்வேறு வழிகளில் உலகம் முழுவதும் வேலை செய்யும் 'யுனிசெப்' ஸ்தாபனம் சாதித்துள்ள வேலைகளை எண்ணிப் பார்த்தாலே பிரமிப்பூட்டும். ஸ்தாபனம் தோன்றி மூன்றரை வருஷங்களுக்குள், ஆசியாவில் பதினேழு நாடுகளிலும் தென் அமெரிக்காவில் பதினேழு நாடுகளிலும், மத்ய கிழக்கில் எட்டு நாடுகளிலும், ஆபிரிக்காவில் ஐந்து நாடுகளிலும், ஐரோப்பாவில் பதிணன்கு நாடுகளிலும், அந்த அந்த நாட்டுச் சர்க்காரின் கூட்டுறவினால் லக்ஷக்கணக்கான சிறுவர்களுக்கும் வாலிபர்களுக்கும் சேவை செய்திருக்கிறது என்று ஐ. நா. சபை ஜனரல் அசெம்பிளிக்கு அறிக்கை சமர்ப்பித்தார்கள்.

5. அகண்ட ஜோதி.

வாஷிங்டன் நகரிலுள்ள ஆஸ்டெக் தோட்டத்தில் 1950-ஆம் ஆண்டு ஜூன் மாதம் பலநாட்டு வாலிபர்கள் ஒன்றுகக் கூடினார்கள். அன்றுமாலை அவர்கள் அகண்ட ஜோதி ஏற்றி வைத்து சர்வதேச உறவும் நட்பும் வளருவதற்காக சேவை செய்யப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள். அகண்ட ஜோதி விழாவை மிகவும் ஆடம்பரமாகக் கொண்டாடினார்கள். சுருங்கச் சொன்னால் உலக மக்களின் பிரதிநிதிகள், சாதி-சமய, இன, நிற பிரிவுகள் உட்பட—எல்லோரும் அங்கு கூடியிருந்தார்கள். எதிர்கால உலகத்தில் சர்வதேச சமரஸமும் சௌஜன்யமும் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதே அங்கு கூடிய இளைஞர்களின் ஆசை. அகண்ட ஜோதி விழாவுக்கு ஏற்பாடு செய்து அத்துடன் சர்வதேச விவசாய வாலிபர் மகாநாடும் நடத்த அமெரிக்காவிலுள்ள இளம் விவசாயிகள் ஏற்பாடு செய்தார்கள். உள்ளம், உடல், உழைப்பு, இவற்றால் ஆரோக்கியமாக வாழவும் மனித சமூகத்துக்குச் சேவை செய்யவும் அமெரிக்க கிராம வாலிபர்கள் 4-H. இளப் என்றதொரு வாலிபர் ஸ்தாபனத்தை ஆரம்பித்தார்கள்; சர்வதேச சுபிட்சத்துக்காக அதிக உணவு உற்பத்தியும், நல்லுறவும் சௌஜன்யமும் பெருக, பிறநாட்டு விவசாய வாலிபர்களுடன் நட்பும்தான் அவர்களுடைய பிரதான நோக்கம். அறிவு, ஹிருதயம், பலம், ஆரோக்கியம் ஆகிய வார்த்தைகளின் ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்துக்களைக் குறிப்பிட்டு 4-H. சங்கம் என்று சங்கத்தின் பெயரை வைத்துக்கொண்டார்கள்.

அவர்களுடைய முயற்சியைப் பாராட்டி அமெரிக்க சர்க்கார் விவசாய இலாகா உதவி செய்ய முன்வந்தது. சீரழிந்து கிடந்த ஐரோப்பிய நாடுகளுக்கு சங்கத்தின் அங்கத்தினர்களை அனுப்பி விவசாயிகளுக்கு உதவவும், நவீன விவசாய முறை

களைக் கற்றுக்கொள்ளவும், விவசாய யந்திரங்களைக் கையாளப் பயிற்சி பெறவும் ஐரோப்பிய வாலிபர்கள் அமெரிக்கா வந்து செல்ல உதவி செய்யவும் சர்க்கார் திட்டம் வகுத்தார்கள். ஐரோப்பிய அமெரிக்க இளைஞர்களுக்குள் நட்பும் நல்லுறவும் ஏற்படுத்தியது அமெரிக்காவிலுள்ள 4-எச். கிளப் அங்கத்தினர் கள்தான். அவர்கள்தான் 1950-ஆம் ஆண்டு மத்தியில் சர்வ தேச விவசாயி வாலிபர் மகாநாட்டை நடத்தினர்கள். மகாநாட் டுக்கு வந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளில் பலர் அமெரிக்காவி லுள்ள விவசாயிகளின் விருந்தாளிகளாகத் தங்கினர்கள்; பண்ணைகளில் விவசாயிகளுடன் கூட நின்றுவேலை செய்தார் கள். அமெரிக்காவிலுள்ள பல மாகாணங்களிலிருந்தும் இளை ஞர்கள் மகா நாட்டுக்கு வந்திருந்தார்கள். போர்ட்டோ ரீகோ, பின்லந்து, இங்கிலாந்து, அயர்லாந்து, ஸ்காட்லந்து, வேல்ஸ், டென்மார்க், பிரான்ஸ், ஜெர்மனி, நார்வே, ஸ்வீடன், முதலிய நாடுகளுள்பட பதினைந்து நாடுகளிலிருந்து சுமார் எண்பது இளைஞர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். இவர்கள் எல்லோருமே உணவு உற்பத்திப் பெருக்கத்திலும் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டார்கள் என்பதுடன் சர்வதேச சுபிக்ஷத்தில் கருத்துள்ளவர்கள்.

சுபிட்சம் என்ற ஜோதியை ஏற்றி, உலகிலிருந்த வறுமை இருளைப் போக்கவும், தங்களுடைய பிரதிக்ஞைக்குச் சாட்சியாக வும், கொள்கைகளை குறிக்கவும் நான்கு எச். என்பதற்கு நான்கு மெழுகுவர்த்திகளும், மனித சமுதாயத்துக்குச் சேவை செய்வோம் என்பதைக் காட்ட ஒரு மெழுகுவர்த்தியும் ஆக ஐந்து மெழுகு வர்த்திகளை ஏற்றிவைத்து ஜோதியின் முன்பு ஒவ்வொரு நாட்டுப் பிரதிநிதியும் வந்து நின்று, சர்வதேச நல்லுறவுக்காகவும், சுபிட்சத்துக்காகவும், நிரந்தர உலக சமா தானத்துக்காகவும் என்னுலியன்றதைச் செய்வேன் என்று பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள்.

வாஷிங்டனில் பிரதிநிதிகள் கூடியபோது இதே நோக்கத் துடன் உலகிலுள்ள பல நாடுகளில் விவசாயச்சங்கங்களும் வாலி

பர் கழகங்களும் வேலை செய்கின்றன என்பதைக் கேள்விப்பட்டு ஆச்சர்யமும் சந்தோஷமும் அடைந்தார்கள். இந்தியாவிலும் இதே நோக்கமுள்ள ஒரு விவசாய வாலிபர் சங்கம் இருக்கிறது என்று அவர்கள் கேள்விப்பட்டார்கள். 4-H. என்பதை இந்திய பாஷையில் சொல்லும்போது 5-H. இளப் என்றுயிற்று 4 இலை யுள்ள லவங்கக் கிளைக்குப் பதில் தாமரைப் பூவை அவர்கள் சின்னமாக வைத்துக்கொண்டிருந்தார்கள். அர்ஜைன்டைனு, பெரு, உருகுவே, வெனிஜூலா முதலிய நாடுகளிலும் இம்மா திரி பல சங்கங்கள் இருக்கின்றன. உள்ளூர் பிரச்னைகளில் வெவ்வேறுக இருந்தாலும், எல்லாச் சங்கங்களும் சர்வதேச நல்லுறவும், சமாதானமும் ஏற்படப் பாடுபடவேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் பிரமிக்கத்தக்க முறையில் ஒற்றுமைக்காட் டின. ஆஸ்டிரேலியா, கொரியா, ரொடீஷியா, நியூஜீலந்து போன்ற நாடுகளிலும் இளம் விவசாயிகள் சங்கங்கள் தோன் றின. அவர்களுடைய முயற்சிக்கு சர்க்கார் ஆதரவும் கிடைத் தது. அமெரிக்காவில் நடந்த சர்வதேச விவசாய வாலிபர் மகாநாட்டில் இவர்கள் விசேஷ அக்கறை காட்டினர்கள்.

நாட்டுக்கு நாடு பண்ணை முறை மாறியிருந்தாலும், பொது வான பல பிரச்னைகளைப்பற்றி மகாநாட்டில் வாதித்தார்கள். மண்வளம், விதைரகம், நோய்கள், வெட்டுக்கிளி படை எடுப்பு இவற்றிலிருந்து பயிரைக் காப்பாற்றுவது, ஆடு மாடுகளின் பொலி அபிவிருத்தி, கோழி, பன்றி வளர்த்தல், இவைகளைப் பற்றி பரஸ்பரம் உதவி செய்துகொள்ளவும் பிரதேச வாரியாக கூட்டுமுயற்சியில் அபிவிருத்தி செய்யவும் ஆலோசித்தார்கள்.

சர்வதேச விவசாய வாலிபர் மகாநாடு தனிப்பட்டவர்களின் கூட்டு முயற்சியினால் நடந்த வெற்றி. அதனால் ஓரளவு பலனும் கிடைத்தது. இந்தத் துறையில் ஒவ்வொரு நாட்டுச் சர்க்காரும் இளம் விவசாயிகளுக்கு ஒரு வழியிலில்லாவிட்டால் ஒரு வழியில் உதவி செய்வது குறிப்பிடத்தக்கது. அமெரிக்கா சம்பந்தப்பட்டமட்டில் 4-எச் இளப் அங்கத்தினர்களே விவசாயி களின் பிரதிநிதிகள் என்பதுடன், சர்க்காருக்கும் விவசாயி

களுக்கும் தொடர்பு ஏற்படுத்தும் ஏஜன்ஸி என்றுகூடச் சொல்லலாம். நாட்டுக்கு பிரதிநிதித்வம் வகிக்க தங்களால் எப்படி முடிகிறதோ அதேபோல சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனமும் வேலைசெய்வதால் அதை உலக மக்களின் ஏஜன்ஸி என்றே குறிப்பிட்டார்கள். சர்வதேச ரீதியில் ஒரு விவசாய ஸ்தாபனம் ஏற்பட்டதை பல இளைஞர்கள் வரவேற்றார்கள். ஆனால் அவர்கள் எப்போதும் இளைஞர்களாக இருக்கமுடியாது. ஆனால் FAO அவர்களுக்கு எப்போதும் உதவக்கூடும். சர்வதேச ரீதியில் எல்லா நாடுகளுக்கும் உதவி செய்ய, ஐ.நா. சபையின் பொருளாதாரக் கௌன்சிலின் உள்பிரிவாக சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. 4-H. கிளப் போன்ற சங்கங்களின் உதவியைக் கொண்டு விவசாயிகளுக்கு உதவி செய்கிறது அந்த ஸ்தாபனம்.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பேயே ஜனாதிபதி ரூஸ்வெல்ட் ஒரு சர்வதேச விவசாய ஸ்தாபனத்தின் அவசியத்தை உணர்ந்தார். அவருடைய முயற்சியினால் 1943-ஆம் வருஷம் மே மாதத்தில் 44 தேசங்களின் பிரதிநிதிகள் வெர்ஜினியாவிலுள்ள ஹாட்ஸ்பிரிங்ஸ் (Hot Springs) என்னுமிடத்தில் கூடினர்கள். யுத்த நெருக்கடியினால் பல நாடுகளில் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்டது. யுத்தத்தில் சிக்கிக்கொண்ட நாடுகளோ விவசாயத்தில் கவனம் செலுத்த முடியாமல் தவித்தன. "உலகிலிருந்து பசிப்பிணியை விரட்டுவோம். தேசம் வளம்பெற்று சுபிட்சவாழ்வு பெற வகை தேடுவோம்" என்ற லக்ஷியத்தில் அந்தப் பிரதிநிதிகள் கூடினர்கள். அந்த மகாநாட்டை, பிற்பாடு ஏற்பட்ட சர்வ தேச உணவு, விவசாய ஸ்தாபனத்தின் முன்னேட்டம் என்றே சொல்லவேண்டும். யுத்தம் முடிந்ததும் உலகம் முழுவதும் உணவு நெருக்கடி ஏற்பட்டுவிடும் என்றும் அதைச் சமாளிக்க முன் ஏற்பாடும் அதிக உற்பத்தியில் கவனமும் வேண்டும் என்றும் மகாநாட்டுப் பிரதிநிதிகள் தீர்மானித்தார்கள். எந்த நாட்டிலும் ஏழை பணக்காரர் என்று இரு பிரிவுகள் உண்டு. போதுமான அளவு சாப்பாட்டு

வசதியுள்ளவர்களும், வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் வேண்டிய உணவுகூடக் கிடைக்காது திண்டாடுகிறவர்களுமாக இருவகை மக்கள் உண்டு. பெரும்பான்மை மக்களுக்கு பசிக் கொடுமை நன்றுகத் தெரியும். உலகிலுள்ள மக்களில் மூன்றில் இரண்டு பங்கு மக்கள் உழைப்பாளிகள், அவர்கள் அன்றுடம்காய்ச்சிகள் தான். லக்ஷக்காணக்கான மக்களுக்குச் சாப்பாட்டு வசதி யுண்டு. அதற்கும் குறைவானவர்களிடம்தான் தேவைக்கும் அதிகமான தான்யம் இருந்தது. உணவு உற்பத்தியைப் பெருக்கினால்தான் பட்டினியினின்றும் மக்களைக் காப்பாற்ற முடியும் என்று ஹாட்ஸ்பிரிங்ஸ் மகாநாட்டில் தீர்மானமா யிற்று. நாடு திரும்பியதும் அந்த அந்த நாட்டுப் பிரதிநிதி, சர்க்கார் மூலம் உற்பத்திப் பெருக்கத்துக்காக பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்தார்.

கியூபெக்கில், 1945-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ஆம் தேதி 34 தேசங்களின் பிரதிநிதிகள் கூடிக் கையெழுத்திட்டு சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபனத்தைத் தோற்றுவித்தார் கள். ஐந்தே வருஷங்களில் 63 நாடுகள் அந்த ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களாகச் சேர்ந்தன. மற்ற நாடுகளும் அதில் கலந்து கொள்ள முன்வந்தன. சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபனத் தின் பிரதான நோக்கங்கள் வருமாறு:—(1) ஒவ்வொரு நாட்டி லும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த உதவி செய்தல். (2) எல்லாருக்கும் ஆரோக்கியமான ஆகாரம் கிடைக்க வழி செய்தல். (3) விவசாயம், வன இலாகா, மீன் பிடித்தல், ஆகிய தொழில்களை லாபகரமானதாகவும், திறமையுள்ளன வாகவும் செய்தல். (4) எல்லா மக்களுக்கும் வேலையும் கூலியும் கிடைத்து சுபிட்சமாக வாழ உதவி செய்தல்.

சர்வ தேச உணவு, விவசாய ஸ்தாபனம்தான் மக்களுடைய சுபிட்சத்துக்காகவும் பொருளாதாரத்துறையில் அபிவிருத்திக் காகவும் அதிகாரபூர்வமாக ஏற்பட்ட முதல் ஸ்தாபனம். அதற்குப் பிறகுதான், சர்வ தேச சுகாதார ஸ்தாபனமும், சர்வ தேச சமூக கல்வி, கலாசார ஸ்தாபனமும் தோன்றின. உணவு விவசாய

ஸ்தாபனத்தின் மூலம் கிடைத்த சர்வ தேச அனுபவம் பிற் காலத்தில் ஏற்பட்ட பல சர்வ தேச ஸ்தாபனங்களை நிர்வகிக்க உதவியாக இருந்தது. சர்வ தேச உணவு, விவசாய ஸ்தாபனத் தின் பொதுச்சபை வருஷத்துக்கு ஒரு முறை கூடுகிறது. ஒவ் வொரு தேசத்துக்கும் ஓரே ஓட்டுள்ள பிரதிநிதிதான் இந்த ஸ்தாபனத்தில் இருக்கிறார். இந்த ஸ்தாபனத்தின் நிர்வாக சபையை சில சமயங்களில் உலக உணவு கௌன்சில் என்றும் குறிப்பிடுவதுண்டு. அதில் 18 நாடுகளின் பிரதிநிதிகள் பதவி வகித்திருக்கிறார்கள். இதன் தலைவருக்கு டைரெக்டர் ஜனரல் என்று பெயர். பிரபல உணவு நிபுணரான ஸர் ஜான் பாயிட் ஆர் (Sir John Boyd Orr) என்பவர்தான் முதல் டைரெக்டர் ஜனர லாகப் பதவி ஏற்றார். பதவி ஏற்றதும் அவர் சொன்னார்: "சோற் றுச் சண்டைதான் உலக யுத்தமாக மாறுகிறது. எல்லோருக்கும் வயிறு நிரம்பச் சாப்பாடு கிடைக்காத வரையில், ஒப்பந்தங் களும், சமாதான சாசனங்களும் பயனற்றவை தான்" என்று. அவருடைய வார்த்தைகள் அர்த்த புஷ்டியுள்ளவை. "உணவே உலக சமாதானம்" என்று ஸ்தாபன ஊழியர்கள் செல்லுமிடங்களில் எல்லாம் சொன்னார்கள். தீவிரமாக வேலை செய்து மக்களின் அன்பைப் பெற்றார்கள்.

நல்ல உணவு, அதிக உணவு என்பதையே குறிக்கோளாகக் கொண்டு விவசாயிகளுக்கு உதவி செய்ய விவசாய ஸ்தாபன ஊழியர்கள் நீண்டகாலத் திட்டம் போட்டார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அவர்கள் நேரடியாக விவசாயிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ளாமல் சர்க்கார் விவசாய இலாகாவின் மூல மும், விவசாயச் சங்கங்களின்மூலமும் உதவி செய்ய முன்வந்தார் கள். இதனல் பிரதேசவாரியாக விவசாயிகளின் தேவை களைத் தெரிந்துகொண்டு உதவி செய்வது சாத்தியமாயிற்று. யுத்தம் முடிந்ததும் பலநாடுகளில் பற்றுக்குறை ஏற்பட்டு விடவே, பசியினல் மக்கள் மடிந்துபோகாமல் காப்பாற்ற அவசரத் திட்டங்களை வகுக்க வேண்டியதாயிற்று. அங்கத் தினர் நாடுகள் ஒன்றுகூடி ஆலோசித்தன. சர்வதேச அவ

சரகால உணவுச் சபை ஒன்றை தற்காலிகமாக அமைத்துக் கொண்டன. பரஸ்பரம் உணவுத் தான்யங்களைப் பரிவர்த்தனை செய்துகொள்ளவும், ஒவ்வொரு தேசத்தின் தேவைக்கு ஏற்ற படி, விவசாயக்கருவிகளும், செயற்கை எருவும் கிடைக்கும்படி திட்டம் வகுத்துக்கொள்ளவும், பொருள் பஞ்சத்திலும் விலைவாசி உயர்வு ஏற்படாமல் தடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளவும் தீர்மானித்தன. மேலும், வீடுகட்ட மரங்கள், கால் நடைத் தீவனம், இவற்றைப் பற்றியும் தேவைக்கு ஏற்றபடி பரிவர்த்தனை செய்துகொள்ளத் தீர்மானித்தன. விவசாய அபிவிருத்திக்கு ஆலோசனைகளைக் கூற ஸ்தாபன ஊழியர்களும் நிபுணர்களும், பலநாடுகளுக்கு விஜயம் செய்தார்கள்.

வாஷிங்டனிலுள்ள சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபனத்தின் தலைமைக் கார்யாலயத்தில், பல நாடுகளிலிருந்து வந்த நிபுணர்களும், விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் வேலை செய்தார்கள். தினந்தோறும் விவசாயப் பிரச்னைகளைப்பற்றி ஆயிரக்கணக்கான கடிதங்கள் வரலாயின. இவற்றுக்கு உடனுக்குடன் பதில் அனுப்புவதுடன், தேவையான தகவல்களையும் சேகரித்து அனுப்புவதில் ஊழியர்கள் விசேஷ கவனம் செலுத்திஞர்கள்.

துரிதமாக உதவி செய்யவும் நிர்வாகத்தைச் சுலபமாக்கவும் பிரதேசவாரியாகக் கார்யாலயங்களை நியமித்தார்கள். ஐரோப்பாவுக்கு இத்தாலியிலுள்ள ரோம் நகரிலும், மத்திய கிழக்கு நாடுகளின் தேவைகளைக் கவனிக்க எகிப்திலுள்ள கெய்ரோவிலும், ஆசியா நாடுகளுக்கும் தூர கிழக்கு நாடுகளுக்கும் உதவி செய்ய தாய்லந்திலுள்ள பாங்காங்கிலும் கார்யாலயங்கள் இருக்கின்றன.

பெரும்பாலும், நோய் அணுகாத விதைகளைப் பற்றியும் அதிசீக்கிரம் விளையக்கூடிய தான்யங்களைப்பற்றியும்தான் எல்லா நாட்டிலுள்ள விவசாயிகளும் கேட்கிறார்கள். சோளம் பயிரிடும் ஒவ்வொரு 4-H. கிளப் அங்கத்தினருக்கும் எந்தப்பருவத்தி

லும் பயிராகக்கூடியதும், பூச்சி பொட்டுகளால் நாசமடையாதது மான சோளவகைகளைப்பற்றியும் ஒட்டுத் தான்யங்களைப்பற்றி யும் தெரியும். அதேபோல நோய்களை எதிர்த்து நிற்கும் கோதுமை ரகங்கள், பயறுவகைகள் இவைகளைப்பற்றித் தெரியும் எல்லா பூராசிகளிலும் நன்முக வளரக்கூடிய ஒட்டுரகத் தான் யங்களைத் தயாரிக்க பல வருஷ ஆராய்ச்சி வேண்டும். இந்தத் துறையில் பல நாடுகளிலும் விவசாய நிபுணர்கள் பல வருஷங் களாக ஆராய்ச்சி நடத்திக்கொண்டேயிருந்ததால், ஓரளவுக்கு விவசாயிகளைத் திருப்தி செய்ய முடிந்தது. பொதுவாக நாட்டுக்கு நாடு விதைத் தான்யங்களை அனுப்ப உலக உணவு கௌன்சில் விசேஷ உதவி செய்துவருகிறது.

தலைமுறை தலைமுறையாக நாடுவிட்டு நாடுகளுக்கு, தான் யங்களும், இதர விளைபொருள்களும் எடுத்துச் செல்வது சம்பிர தாயம்தான். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சீனாவுக்கு வந்த அராபிய யாத்திரீகர்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆரஞ்சுப்பழங்களை எடுத்துச் சென்றார்கள். பிரேஸிலிலிருந்து ரப்பர் செடிகளை இலங்கைக்கும் மலேயாவுக்கும் எடுத்துச் சென் றார்கள். உருளைக்கிழங்கு, புகையிலை, சீமைத் தக்காளி இவை எல்லாம் அமெரிக்காவிலிருந்து பல நாடுகளுக்குச்சென்ற பயிர்வகைகள். பழங்காலத்தைப் போல யாத்திரீகர்கள் மூல மாகவோ மாதக்கணக்காய் பிரயாணம் செய்தோ இப்போது விதைத் தான்யங்கள் நாடுவிட்டு நாடு செல்லவில்லை. இப்போது ஒவ்வொரு நாட்டிலும் தாவர ஆராய்ச்சி நிலயம் இருக்கிறது. உணவுத்தான்யங்களையும், செடி வகைகளையும் விமான மூலம் FAO ஸ்தாபனம் அனுப்புகிறது. ஆராய்ச்சி நிலையங்களில் அவைகளை சீதோஷ்ண ஸ்திதிக்கும், மண்வளத்துக்கும் எற்றவை தானு என்று பரிசோதித்து வெற்றி பெற்றால் விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். இல்லாவிட்டால் நிலயத்திலுள்ள தோட்டத் தில் அவற்றை நட்டுப் பயிரிட்டுச் சோதனை நடத்துகிறார்கள்.

சர்வதேச கூட்டுறவு எற்பட்டபிறகு மிகவும் பெரியதொரு வேலையில் விவசாய நிபுணர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். பல்

வேறு நாடுகளில் விளையும் தான்யங்களைப்பற்றியும் இதர உணவுப் பொருள்களைப்பற்றியும் விரிவானதொரு பட்டியல் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தப் பட்டியல் அற்புத மானதொரு தஸ்தாவேஜாகும். ஒவ்வொரு செடி அல்லது தான்யத்தின் உற்பத்தி ஸ்தானம், அது வளரும் தேசங்கள், சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றபடி நேரும் மாறுதல்கள், சாகு படிகாலம், ரகம், தரம், நோய் நொடிகள், குணகுணங்கள், ராசி இவை எல்லாம் அந்தப் பட்டியலில் காணப்படும். உலக மக்களின் ஜீவாதாரமான உணவுகளான அரிசியும், கோதுமை யும் பற்றி, மிக விரிவான பட்டியலே இப்போது தயாரித்துக் கொண்டிருந்தார்கள். மிகவும் முக்யமான குறிப்புகளை பல நாடுகளிலிருந்து சேகரித்து தொகுத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

அமெரிக்க விவசாய இலாகாவும், பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளிலுள்ள பல ஆராய்ச்சி நிலையங்களும் இந்தத் துறையில் பல வருஷங்களாக ஈடுபட்டிருக்கின்றன. சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு, விதைத்தான்ய பரிவர்த்தனையின்மூலம் பல நாடுகள் லாபமடைந்திருக்கின்றன. பல நாடுகளுக்கு விவசாய நிபுணர்களின் ஆலோசனையும் சேவை யும் கிடைத்திருக்கின்றன. சைனாவிலிருந்து நோயணுகாத குண்டு மிளகாய்ச் செடியும், அதிசீக்கிரம் பலன்தரக்கூடிய முலாம்பழச் செடியும் அமெரிக்காவுக்குக் கொண்டு வரப்பட்டது. ஜப்பானிலிருந்து அதிக ராசியும் ருசியுமுள்ள சர்க்கரைவள்ளிக் கிழங்கு அமெரிக்கா விவசாயிகளுக்குக் கிடைத்தது. இதே போல பலவகைத் தான்யங்களும் செடிகளும் அமெரிக்கா நாடுகளிலிருந்தும் பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

கடிதம் எழுதித் தகவல் கொடுப்பதுடனே, தான்யங்களை அனுப்புவதுடனே ஸ்தாபனத்தின் கார்யாலயத்தார் நின்று விடவில்லை. தினேதினே அவர்களுடைய வேலை பெருகிக் கொண்டேயிருக்கிறது. விஞ்ஞானிகளும், விவசாய நிபுணர் களும் தாங்கள் கண்டு பிடிக்கும் விந்தைகளையும், விளை பொருள்களின் விசேஷங்களையும் விவசாயிகளிடம் எடுத்துச்

சொல்ல நாடுநாடாகச் செல்கிறார்கள். விவசாயப் பிரச்னைகளைத் தீர்க்க பல நாடுகளுக்கு கோஷ்டியாக விஞ்ஞானிகளை அனுப்பி உதவி செய்கிறார்கள். 'யுனிசெப்' ஸ்தாபனத்தைப் போலவே இந்த ஸ்தாபனமும் அந்த அந்த நாட்டு சர்க்காரின் கூட்டுறவில் சம பங்குச் செலவில் வேலைசெய்கிறது. விவசாய ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், மேல் படிப்புக்காகவும் ஆராய்ச்சிக்காகவும் வேறு நாடுகளுக்குச் செல்ல விரும்புகிறவர்களுக்கு உதவிச் சம்பளமும் கொடுத்து உதவி செய்கிறது. பயிற்சி பெற்ற ஊழியர்கள் நாடு திரும்பியதும் மக்களுக்கு சேவை செய்து, விவசாய வளர்ச்சிக்கு உதவுகிறார்கள்.

வெளி நாடுகளுக்குச் செல்லும் விவசாய ஸ்தாபன நிபுணர்கள் அங்கு வெகுகாலம் தங்குவதில்லை. உள்ளூரிலுள்ள ஊழியர்களுக்குப் பயிற்சியளித்துவிட்டுத் திரும்பி விடுகிறார்கள். இத்தாலியில் பழத்தோட்டங்கள் அதிகம். வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முக்கியப் பண்டங்களில் பழங்களும் ஒன்று. சமீபத்தில், பனியிலை செஸ்நட் என்றதொரு வகை பழச் செடிகள் துளிர்கருகி சேதமடைந்தன. விவசாயிகள் கவலையிலாழ்ந்தார்கள். சர்க்கார் சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபன நிபுணர்களை உதவிக்கு அழைத்தார்கள். நிபுணர்கள், பனியிலை எற்படக்கூடியவியாதியைக் கண்டுபிடித்துக் கட்டுப்படுத்தினர்கள். அதேசமயத்தில் இந்த நோயை எதிர்த்துநின்று நன்றாக வளரக்கூடியதொரு ரகத்தை சீனாவிலிருந்து வர வழைத்து இத்தாலியில் பயிரிட ஏற்பாடு செய்தார்கள்.

போலந்தில் மாடுகளுக்கு க்ஷயஜ்வரம் வந்திருப்பதாகச் செய்தி கிடைத்தது. மாடுகள் சாவதுடன் மனிதர்களுக்கும் வியாதி தொத்திக்கொள்ளும் போலிருந்தது. ஸ்தாபன நிபுணர்கள் ஆயிரக்கணக்கான பவுண்டு மருந்துகளை எடுத்துக் கொண்டு ஓடினர்கள். மாடுகள் காப்பாற்றப்பட்டன.

ஒவ்வொரு நாட்டிலும் என்ன உதவி கேட்கிறார்களோ, அதைச் செய்ய விவசாய ஸ்தாபன நிபுணர்கள் முன் வருகிறார்

கள். "எலியினாலும், இதரப் பூச்சிகளாலும் தான்யக் கிடங்குகள் நாசமடைகின்றன. உதவி வேண்டும்" என்று எகிப்து கேட்டது. உடனே அங்கு சென்று நிலைமையைப் பரிசீலனை செய்து பரிகாரம் தேடினார்கள். அங்கு கிடைத்த அனுபவம் பிற நாடுகளுக்கும் பயன்பட்டது. ஆஸ்டிரியாவில், நவீன விவசாயக் கருவிகளை உபயோகித்துக் காட்டிப் பிரசாரம் செய்ய நிபுணர்கள் சென்றார்கள். தாய்லாந்தில் மீன் பிடித்தல் தொழிலை அபிவிருத்தி செய்ய யோசனை கூறினார்கள். நிகாராகுவா நாட்டில் காட்டுவளம் பெருகவும், கால்நடை அபிவிருத்திக்கும் யோசனை கூறினார்கள். பொலிவியாவில் மண் வளத்துக்கும், தான்யப் பெருக்கத்துக்கும் திட்டம் வகுத்துக் கொடுத்தார்கள். இதுவரையில் விவசாய ஸ்தாபன நிபுணர்கள் செய்த சேவைகளில் அதிசீக்கிரமாகவும் மிகப் பெரிதாகவும் திட்டம் வகுத்தது கிரீஸ் நாட்டில்தான். இருபத்தைந்து வருஷ அபிவிருத்தி திட்டம் ஒன்றை வகுத்தார்கள் அங்கு. பூர்வாங்க வேலைகள் முடியுமுன்னேயே அதியற்புதமாக பலன் கிடைக்க ஆரம்பித்துவிட்டது.

கிரீஸில் விவசாய ஸ்தாபன நிபுணர்கள் செய்த வேலையைப் பற்றி ஓர் அறிக்கை வெளியிட்டார்கள். அது ஒரு சிறந்த தஸ்தவேஜு என்று சொன்னால் மிகையாகாது. பொதுவாக சர்வ தேச உணவு, விவசாய ஸ்தாபனத்தில், எல்லா நாட்டைச் சேர்ந்த நிபுணர்கள் இருக்கிறார்கள். உணவு, விவசாயம், காடுவளம், மீன்பிடித்தல் ஆகிய துறைகளிலுள்ள பிரச்னைகளுக்குப் பரிகாரம் தேடுவதுடன் அபிவிருத்தி காணவும் திட்டம் போட்டு வேலை செய்கிறார்கள். இதர சர்வ தேச ஸ்தாபனங்களின் கூட்டுறவு தேவையாக இருக்குமிடங்களில் சிபாரிசு செய்கிறார்கள்.

விவசாயிகளுக்கு பாஷையோ, பிரதேசமோ எல்லையாகக் குறுக்கிடுவதில்லை. எந்த நாட்டிலிருந்தாலும், எம்மாதிரி சீதோஷ்ண நிலையிலிருந்தாலும், பயிர் செய்வதில் அவர்கள் எல்லோரும் ஓர்குலம்தான். அவர்களுடைய பிரச்னைகளும்

ஏறக்குறைய ஒன்றேதான். நோய் அணுகாத பயிரினங்களைப் பயிர் செய்வதிலும், அதிக உற்பத்தி செய்து வயிறு நிரம்பச் சாப்பிட வகை தேடுவதிலும் எல்லா நாட்டு விவசாயிகளும் ஒரே நோக்கமுள்ளவர்கள்தான். ஆகவே பிரதேசவாரியாக வுள்ள பிரச்னைகளைப் பரிசீலனை செய்து பரிகாரம் தேடவும், குறிப்பிட்ட பிரச்னையைப்பற்றி விவாதிக்கவும் அடிக்கடி பிரதேச மகாநாடுகள் நடக்கின்றன. வெட்டுக்கிளி உபத்திரவத்தைத் தடுக்க மத்திய அமெரிக்க நாடுகள் மெக்ஸிகோவிலுள்ள தபகூலா (Tapachula) என்னுமிடத்தில் கூடி ஆலோசித்தன. வெட்டுக் கிளியை மட்டுமின்றி பயிர்களை நாசம் செய்யும் பூச்சிகளைக் கொல்லவும் கட்டுப்படுத்தவும் எல்லா நாடுகளும் சேர்ந்து ஒரு திட்டம் வகுத்து வேலை செய்தன.

இத்தாலி தேசத்தில் மண் அரிப்பினால் விவசாயம் அடிக்கடி பாதிக்கப்பட்டது. ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும்கூட இந்தப் பிரச்னை இருந்தது. ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலுமுள்ள ஏழு நாட்டு நிபுணர்கள் இத்தாலியில் கூடி ஆலோசித்து இதற்குப் பரிகாரம் தேடினர்கள்.

மீன் பிடித்தலை ஒரு பெரிய தொழிலாகவும் சாத்திரமாகவுமே விவசாய ஸ்தாபன நிபுணர்கள் கருதுகிறார்கள். உலகப் பரப்பில் ஐந்தில் மூன்று பங்கு இடத்தில் சமுத்திரம் பரவியிருக்கிறது. மீனிலிருந்து கிடைக்கும் ஆகாரச்சத்துகள் குழந்தைகளின் வளர்ச்சிக்கு முக்கியமானவை. மீன் பிடித்தலை ஜல விவசாயம் என்றே குறிப்பிடுகிறார்கள், அட்லாண்டிக் சமுத்திரத்தில் இந்தத் தொழில் பிரபலமாகியிருக்கிறது. சமுத்திரத்தில் ஆராய்ச்சி நடத்தவும் வேட்டை ஸ்தலங்களை நிர்ணயிக்கவும் மீன்களின் வாழ்க்கை ரகசியங்களைத் தெரிந்துகொள்ளவும் 1902-ஆம் வருஷத்தில் சர்வதேச சமுத்திர ஆராய்ச்சிக் கழகம் (International Council for the Exploration of the Sea) ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. 1948-ஆம் வருஷம் சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனம், இந்த ஸ்தாபனத்தின்

கூட்டுறவுடன் விரிவான வேலைத்திட்டம் வகுத்துக்கொண்டு செயலாற்ற ஆரம்பித்தது. இதன் பலனாக இந்து மகாசமுத்திரத்தையும் பசிபிக் மகா சமுத்திரத்தையும் ஆராய்ந்து வேலை செய்ய இந்தோ பஸிபிக் மீன் பிடிப்பு கௌன்சில் (Indo-Pacific Fisheries Council) ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதல் மகாநாடு 1949-ஆம் வருஷம் சிங்கப்பூரில் நடந்தது. மீன்பிடிக்க நவீன சாதனங்களை செம்படவர்களுக்குக் கிடைக்கும் படிச் செய்யவும், எந்த எந்த மாதிரி மீன்களைப் பிடித்தால் லாபகரமாகத் தொழில் நடத்தலாம் என்று ஆலோசனை கூறவும், மீன்களின் குடியேற்றங்களையும் பருவங்களுக்குத் தக்கபடி அவை ஓடிக்கூடும் இடங்களையும் கண்டுபிடித்து செம்படவர்களுக்குத் தகவல் கொடுக்கவும், அவர்கள் திட்டமிட்டார்கள். இந்த இலாகாவுக்கு டாக்டர் டொனவன் பின் (Dr. Donovan. J. Finn) என்பவரைத் தலைவராக நியமனம் செய்தார்கள். இந்தியா, பாகிஸ்தான், தாய்லந்து, இலங்கை, எகிப்து, லெபனன், பிலிப்பைன்ஸ் முதலிய நாடுகளுக்கு டாக்டர் பின் விஜயம் செய்து அங்குள்ள செம்படவர்களுக்கு ஆலோசனை கூறியதுடன் வியாபார ரீதியில் தொழில் அபிவிருத்தி ஏற்படவும் வகை செய்தார்கள்.

உணவு உற்பத்திக்கு கால்நடைகளின் சுபிட்சமும் முக்கியமானது. கால்நடைகள் வியாதியினால் ஆபிரிகாவில் ஆயிரக் கணக்கான மாடுகள் செத்துப்போகின்றன என்று தகவல் கிடைத்தது. கெனியாவிலுள்ள நைரோபிநகரில் ஆசியாவிலும் ஆபிரிகாவிலும் உள்ள பல்வேறு நாட்டு கால்நடை நிபுணர்கள் கூடி ஆலோசித்தார்கள். அந்த வியாதியைத் தடுக்க புது வகை சீம்பால் மருந்து இருப்பதைக் கண்டு பிடித்த FAO ஸ்தாபன நிபுணர்கள் பிரத்யட்சப் பரீட்சை செய்து காட்டியதுடன் அதை ஏராளமாக உற்பத்தி செய்து ஆபிரிகா நாடுகளுக்கு அனுப்பி கால்நடைகளைக் காப்பாற்றினர்கள்.

காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்களில் பல உணவுச் சத்துக்கள் இருப்பதாக உணவு நிபுணர்கள் கண்டுபிடித்திருக்

கிறார்கள். தேக்கு, ஈட்டி போன்ற காட்டு மரங்கள் வீடுகள் கட்டவும், கப்பல்கள் கட்டவும் பிரயோசனப்படுகின்றன. ஆகவே காடுவளத்திலும் சர்வதேச உணவு-விவசாய ஸ்தாபன ஊழியர்கள் கவனம் செலுத்திஞர்கள். காடுகளிலிருந்து கிடைக்கும் பொருள்களை உபயோகிப்பது பற்றியும் காடுகள் அபிவிருத்தியைப்பற்றியும் ஆலோசிக்க மைசூரில் ஒரு சர்வ தேச மகாநாடு நடந்தது.

உலகிலேயே அரிசிதான் பெரும்பான்மை மக்களுடைய ஆகாரமாக இருக்கிறது. ஆசியா நாடுகளில் முக்கிய உணவு அரிசிதான். அரிசி உற்பத்தியை அதிகரிக்கவும், நெல்லுக்குவரும் நோய்களைத் தடுக்கவும் சர்வதேச அரிசி கமிஷன் (International Rice Commission) பாங்காங் நகரில் கூடிற்று. நெல் சாகுபடி, ரகம், ராசி, நீர்ப்பாசனம், சேமித்தல், வியாபாரம் போன்ற பல பிரச்னைகளை அந்த மகாநாட்டில் விவாதித்தார்கள். நவீன முறையில் நெல் சாகுபடி செய்ய பல நாடுகளிலுள்ள விவசாய இலாகா ஊழியர்களுக்கு பயிற்சியளிக்க 1950-ஆம் வருஷம் லாகூரில் மூன்று மாத பயிற்சி முகாம் ஒன்றை நடத்திஞர்கள். இந்த பயிற்சி முகாம் நடத்த ஏற்பட்ட செலவை சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனத்துடன், ஆசியா தூரக் கிழக்கு நாடுகளின் பொருளாதாரக் கமிஷனும் தூரக்கிழக்கு நாடுகள் அபிவிருத்திக்காக ஏற்பட்ட சர்வதேச நிதியும் பகிர்ந்து கொண்டன.

விவசாய நிபுணர்கள் உலக மக்களுடைய தேவைகளையும், உற்பத்திப் பெருக்கத்திலும் கவனம் செலுத்திக்கொண்டிருக்கும்போதே உணவு நிபுணர்களும் பல பல தேசமக்களுக்கு உதவி செய்து கொண்டிருந்தார்கள். சர்வதேச ஸ்தாபனங்கள் பற்ருக்குறை நாடுகளுக்கும் அகதிகளுக்கும் உணவு அனுப்பும் போது இந்த நிபுணர்களின் ஆலோசனை கேட்டுக்கொண்டு அதற்குத் தக்கவாறு உணவு அனுப்பினர்கள். இதைத் தவிர பல நாடுகளின் வேண்டுகோளுக்கு இணங்கி உணவு நிபுணர்கள், ஆராய்ச்சி கூடங்களை நிறுவி அங்கங்கே ஊழி

யர்களுக்குப் பயிற்சியளித்தார்கள். 'யுனிசெப்' ஸ்தாபனத்தைப்போலவே, சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபனமும், உதவி என்று கேட்கும் நாடுகளுக்குத்தான் உதவி செய்வதுடன் பாதிச் செலவை அந்த அந்த நாட்டுச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறிற்று. பொதுவாக எல்லா நாடுகளும் இந்த முறையை வரவேற்றன.

பிலிப்பைன் தீவுகளில் பல குழந்தைகள் மாலைக்கண் வியாதியினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். உணவு நிபுணர்களின் உதவியினால் அந்நாட்டு சர்க்கார் அந்த வியாதியைப் போக்கடித்தார்கள். 'யுனிசெப்' ஸ்தாபன ஊழியர்கள் பிலிப்பினே குழந்தைகளுக்கு ஆகாரம் அனுப்பு முன்பு, ஆரோக்கியப் பரீட்சை செய்தார்கள். பொதுவாகவே அந்த நாட்டு மக்களின் உணவில் சில விடமின் சத்துக்கள் இல்லை என்று தெரிந்தது. மேலும் சில குழந்தைகளுக்கு பார்வை மங்கியும், மாலைக்கண் வியாதியினாலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததும் தெரிந்தது. உடனே 'யுனிசெப்' ஊழியர்கள் உணவு, விவசாய ஸ்தாபன நிபுணர்களைக் கலந்து ஆலோசித்தார்கள். விடமின் சத்துக்களை காய்கறிகள் மூலம் கொடுத்துவிடலாமாதலால், கிராமப்பள்ளிக்கூடங்களில் காய்கறித் தோட்டம் போட எற்பாடு செய்தார்கள். அதற்கும் விவசாய நிபுணர்களின் ஆலோசனை தேவையாக இருந்தது. என்ன என்ன காய்கறிகள் போட வேண்டும், என்ன உரம்போடவேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். ஒவ்வொரு கிராமத்திலும் 'யுனிசெப்' ஸ்தாபனம் குழந்தைகளுக்காக உணவு விடுதி எற்படுத்தி ஆரோக்கியமான உணவைப்பற்றி பிரசாரம் செய்தார்கள்.

பரீட்சார்த்த உணவு விடுதிகள் நடக்குமிடங்களுக்கெல்லாம், சுகாதார நிபுணர்களையும், சமூக ஊழியர்களையும், பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் அழைத்து புது உணவு முறையினால் குழந்தைகளின் ஆரோக்கியம் தேறியிருப்பதை எடுத்துக்காட்டினார்கள். பள்ளி மாணவர்களும் மாணவர்கள் விடுதிகளிலும் பள்ளிக்கூடங்களிலும் காய்கறித் தோட்டங்களைப் போட முன்

வந்தார்கள். மணிலா நகரில்மட்டும் இம்மாதிரித் தோட்டங் கள் ஆயிரத்துக்கும் அதிகம் ஏற்பட்டன.

மணிலாவிலுள்ள ஸ்ரீமதி டல்ஸ் பொகோபோ (Dulce L. Bocobo) உணவு, விவசாய ஸ்தாபனத்திலுல் பிலிப்பைன்ஸுக்கு உணவு நிபுணராக நியமனம் செய்யப்பட்டார். அவர் மணிலாவி லுள்ள ஆராய்ச்சி நிலையத்தில் ஆகார வகைகளைப்பற்றி ஆராய்ச்சி நடத்தி, பிலிப்பினே மக்களின் ஆகாரமான சில கீரைவகைகளையும், கிழங்குகளையும் சிறந்த உணவாகக் கருதி, சிபாரிசு செய்தார்.

கிரீஸ் தேசத்தில் விவசாய ஸ்தாபனமும் கிரீஸ் சர்க்காரும் கூட்டு முயற்சியில் நடத்திய பரீட்சார்த்த வேலையில் ஸ்ரீமதி ஸொங்காஸ் (Miss Tsongos) ஈடுபட்டார். ஸ்தாபனத்தின் உதவிபெற்று அவர் அமெரிக்காவிலுள்ள பாஸ்டனுக்குச் சென்று உணவு ஆராய்ச்சியில் பயிற்சிபெற்றுத் திரும்பினர். பொதுவாக கிரீஸ் மக்கள் காலையாகாரம் சாப்பிடுவதே கிடையாது. அவர்க ளுடைய உணவில் உருளைக்கிழங்குதான் பிரதானப் பொருளாகவு மிருந்தது. 'யுனிசெப்' ஸ்தாபனம் கிரீஸ் குழந்தைகளுக்கு உணவு விடுதிகள் நடத்த முன்வந்தபோது ஸ்ரீமதி ஸொங்காஸின் சிபாரிசுப்படி ரொட்டியும், வெண்ணெயும், காய்ந்த திராக்ஷையும் பாலும் கொடுக்க நிச்சயித்தார்கள். பாலும் வெண்ணெயும் 'யுனிசெப்' ஸ்தாபனம் அனுப்பிற்று. சர்க்கார் ரொட்டி செய்ய போஜன விடுதிகளில் ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீமதி ஸொங் காஸ் பாஸ்டனில் பயிற்சி பெறுவதற்கு முன்பாக கிரீஸ் சர்க் காரில் உணவு ஆராய்ச்சி இலாகாவே கிடையாது. சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபனத்தின் பிரதிநிதியாக அவர் கிரீஸில் உத்தியோகமேற்ற பிறகு, அந்த நாட்டில் உணவு ஆராய்ச்சி இலாகா ஏற்பட்டதுடன், உணவு வகைகளைப்பற்றி ஆராய சட்டமும் ஏற்பட்டிருக்கிறது.

ஸர் ஜான் பாயிட் 1949-ஆம் வருஷம் விலகிக்கொள்ளவே நாரிஸ் டாட் (Norris. E. Dodd) என்ற விவசாயி, டைரெக்டர்-

ஜனரல் பதவியை ஏற்றுக்கொண்டார். பல வருஷங்களுக்கு முன்பு சில ஏகரா நிலத்தில் உழுது பயிரிட்டு வாழ்க்கையைத் துவக்கிய அவர் சொந்த முயற்சியினால் இரண்டாயிரம் ஏகரா விஸ்தீர்ணமுள்ள பண்ணைக்குச் சொந்தக்காரராகிவிட்டார். அவருடைய பண்ணையில் நவீன விவசாயக் கருவிகள் உபயோகிப்பதுடன் சிறந்த கால்நடைப்பண்ணை ஒன்றும் இருக்கிறது. 1949-ஆம் வருஷம் ஐக்யநாடுகள் புல்லட்டினில் அவர் எழுதிய ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார்: இரண்டாவது உலக யுத்தத்துக்குப் பிறகு சுபிட்சமாக உள்ள நாடுகள் யுத்த காலத்துக்கு முன்பு இருந்ததைவிட பல மடங்கு உணவைப் பெருக்கிக்கொண்டன. ஆகவே மக்களுக்கும் சிறந்த உணவு கிடைக்கிறது. பிற்போக்கான நாடுகளோ, யுத்தத்துக்குப்பிறகு முன்பிருந்ததைவிட மிகவும் மோசமான நிலைக்கு வந்து விட்டன. "பிற்போக்கான நாடுகளில் உள்ள குழந்தைகளை நாம் கவனிக்கவேண்டியது முக்கியமான வேலை. அங்கு ஜனத்தொகை பெருகுவதற்கு ஏற்றபடி விவசாயம் வளரவில்லை. உணவு உற்பத்தியும் அதிகமாக வில்லை. அரை வயிற்றுக்குச் சோறும், ஆரோக்கியமற்ற ஆகாரமும் அங்கு நிலைத்திருக்கும் வரையில் முன்னேற்றம் காணமுடியாது. வெளியிலிருந்து உதவி கிடைத்தால்தான் மக்கள் ஆரோக்கியமாக வாழமுடியும்" என்றார் நாரிஸ் டாட்.

இதைப் பற்றி அமெரிக்கா ஜனாதிபதி ட்ரூமனும் ஆலோசித்துக்கொண்டுதானிருந்தார். அவர் அமெரிக்கக் காங்கிரஸ் மகாசபையில் பேசும்போது பின்வருமாறு சொன்னார்: "உணவு உற்பத்திப் பெருக்கத்தினால்தான் சுபிட்சமும் சர்வதேச சமாதானமும் ஏற்படும். நவீன விஞ்ஞான, யந்திர சாதனங்களைக் கையாண்டால்தான் விவசாயம் பெருகும்" என்று.

பிற்போக்கு நாடுகளைக் கைதூக்கிவிட 1950-ஆம் வருஷம் ஐ.நா. சபையிலும், அதன் ஏஜன்ஸிகளிலும் அங்கம் வகித்த நாடுகள் இரண்டு கோடி டாலர்களை ஒதுக்கிக்கொடுத்தார்கள். அந்தப் பணத்தை எந்த எந்த நாடுகளுக்கு எப்படிச் செலவிடு

வது என்றும், எவ்வளவு செலவிடுவது என்றும் திட்டம் வகுத்தார்கள். நிபுணர்களுடைய உதவிக்காக ஒதுக்கப்பட்ட பணத்தை சர்வதேச உணவு விவசாய ஸ்தாபனத்திடம் ஒப் பித்தார்கள். மொத்த நிதியில் 29 சதமானம் இந்த ஸ்தாபனத்துக்குக் கிடைத்தது. சர்வதேச சுகாதார ஸ்தா பனம், சர்வதேச கல்வி, சமூக, கலாசாரஸ்தாபனம் போன்ற ஸ்தாபனங்களுக்கும் இந்த நிதியிலிருந்து உதவி கிடைத்தது.

நாரிஸ் டாட், உலக விவசாயிகளின் வாழ்க்கையை நேரில் அறிந்து வர சுற்றுப்பிரயாணம் செய்தார். ஆசியா நாடுகளில் விவசாயிகள் யந்திர உதவியே இல்லாதபடி, சரீர உழைப்பா லேயே நெல் சாகுபடி செய்வது அவருக்கு ஆச்சர்யமாக இருந்தது.

நவீன வசதிகளையும், புது விவசாயக்கருவிகளையும் விவ சாயிகளுக்குக் கொடுத்தாலும் அதை அவர்கள் ஏற்றுக்கொள் கிறார்களா என்று கவனிக்கவும் வேண்டியிருந்தது. மூடப் பழக்கங்களையும், பிடிவாதத்தையும் போக்கவேண்டியதாயிற்று. பல நாடுகளில் குழந்தைகளும் விவசாயிகளுக்கு உதவி செய்ய வேண்டியிருந்தது. உணவு உற்பத்தியைப் பெருக்கி, குழந் தைகளுக்குப் போதுமான உணவைக் கொடுத்தால்தான், அவர் களை வேலை செய்யாமல் தடுக்கமுடியும் என்று நிபுணர்கள் கருதினர்கள்.

F.A.O. டைரெக்டர் ஜனரலின் ஆலோசகரான கோவ் ஹாம் பிரிட்ஜ் (Gove Hambridge) நியூயார்க் நகரில் ஒரு சமயம் பேசும்போது பின்வருமாறு கூறினர் : "சமீபத்தில் நான் தென் அமெரிக்காவிலுள்ள சில இந்திய விவசாயிகளுடன் பேசவேண்டி நேரிட்டது. அங்கு கோடைக்காலத்தில் கோதுமை பயிரிடுவதே கிடையாது. நான் அவர்களைச் சந்தித்த பிறகு அங்கு கோடை சாகுபடி செய்வதுடன் நோய் நொடி யணுகாத புது ரக கோதுமை ரகங்களையும் விவசாயிகள் பயிரிடுகிறார்கள். அவர்களுக்கு மட்டுமல்ல, பொதுவாகவே விவசாயிகளுக்கு

உதவியும் உத்சாகமும் அவசியமாகிறது. பேசிப்பழகினால் அவர்களைத் திருத்திவிடமுடியும். உதவி செய்து உணவைப் பெருக்க முடியும்."

"பல இடங்களில் மக்களுக்கு யந்திர வசதிகளைப்பற்றியே தெரியவில்லை. அவர்களுக்கு வாழ வழிகாட்ட வேண்டும். யந்திரங்களையும் எருவையும் மக்களுக்குக் கொடுப்போம். விவசாயம் பெருகிவிட்டால், சுபிட்சம் ஏற்பட்டுவிடும், குரோதம் மறைந்துவிடும். சர்வதேச சமாதானத்துக்கு வழி ஏற்பட்டுவிடும். உணவுதான் உலக சமாதானத்துக்கு வழி. எல்லோருக்கும் சோறு கொடுங்கள். அதற்கான வழிகளைச் செய்யுங்கள்" என்கிறார் நாரிஸ் டாட். அவருடைய யோசனையைக் கேட்டு பல நாடுகளுக்கு உதவி யனுப்பிற்று சர்வதேச உணவு, விவசாய ஸ்தாபனமும்.

6. சுகாதார ஸ்தாபனம்.

அபித்தும் நாஜிரும் எகிப்தியச் சிறுவர்கள். பள்ளிக் கூடம் விட்டதும் அவர்கள் கடைத்தெரு வழியாகத்தான் வீடு திரும்புவார்கள். கடைத் தெருவில் வரிசையாக நிற்கும் வாடகை மோட்டார்களையும், வெளிநாடுகளிலிருந்து வரும் யாத்திரிகர்களையும் பார்ப்பதற்காகவே அவர்கள் வருவார்கள். எகிப்தின் கலைப்பொக்கிஷமான பிரமிட் (Pyramid) கோபுரங் களைப் பார்க்க அந்த ஊரிலிருந்துதான் மோட்டாரில் செல்ல வேண்டும். ஆகவே சதா யாத்திரிகர்கள் அங்கு வந்துகொண்டே யிருப்பார்கள். அபித்தும் நாஜிரும் மோட்டார் ஓட்டிகளுடன் பேசிக்கொண்டிருப்பார்கள். மோட்டார் ஓட்டிகள் அவர்களுக்கு தாங்கள் யாத்திரிகர்களை எங்கு அழைத்துச் சென்றார்கள், என்ன செய்தார்கள், என்ன என்ன காட்சிகளைப் படம் பிடித்தார்கள் என்று எல்லாம் கதைகதையாகச் சொல்வார்கள்.

அபித்தும் நாஜிரும் 1947-ஆம் வருஷம் அக்டோபர் மாதத் தில் ஒரு நாள் வழக்கம்போல கடைத்தெருவில் மோட்டார் ஓட்டி காசிமைச் சந்தித்தார்கள். அன்று கடைத்தெரு கலகலப் பற்றுக்கிடந்தது. காசிம் குழந்தைகளை உத்சாகத்துடன் வர வேற்கவில்லை. "என்ன விசேஷம்! கவலையாக இருக்கிறுயே! யாராவது கோபுரத்திலிருந்து விழுந்துவிட்டார்களா?" என்று கேட்டான் அபித். நாஜிர் கலகலவென்று சிரித்தான்.

"சிரிப்பாகத்தானிருக்கும். சொன்னல் உனக்குப் புரியுமா? பெரிய ஆபத்து வந்துவிட்டது. நீயும் நானும் மற்றவர்களுங் கூடச் செத்துப்போய்விடப் போகிறோம்" என்றான் காசிம் பெரு மூச்சுவிட்டுக்கொண்டே.

"என்ன?" என்று திகைப்புடன் கேட்டார்கள் சிறுவர்கள்.

"ஊரில் காலரா வந்திருக்கிறது. நாற்பது வருஷங்களுக்கு முன்பு ஒரு தடவை வந்தபோது ஒருவர்கூட இல்லாமல் எல்லோரும் செத்துப்போனார்கள் என்று என் தாத்தா சொன்னார். இப்போது அது வந்துவிட்டது" இப்படிச் சொல்லிவிட்டு "ஓடுங்கள், குழந்தைகளே, தெருவில் நிற்காதீர்கள். வீட்டுக்குப்போங்கள்" என்று கத்தினான் அவன்.

சிறுவர்கள் பயந்துவிட்டார்கள்; ஓடினார்கள். வழியிலே அவர்களுடைய சகோதரர் ஒராவைச் சந்தித்தார்கள். அவன் கெய்ரோ அமெரிக்க சர்வகலாசாலை கல்லூரியில் படிக்கும் மாணவன். "அண்ணு, நாம் எல்லோரும் செத்துப்போய்விடப் போகிறோமாம்" என்று பயத்துடன் அபித் அவனைக் கட்டிக் கொண்டான்.

"என்னடா உளறுகிறாய்?" என்று கடிந்துகொண்டான் ஓரா.

"உளரவில்லை அண்ணு, நிஜமாகத்தான் சொல்லுகிறேன். ஊரில் காலரா வந்திருக்கிறதாம். காஸிம் சொன்னான். நாம் எல்லோரும் . . . .

"சரி, வீட்டுக்குப் போகலாம் வாருங்கள். ஆலிக்கு டெலிபோன் செய்து கேட்கலாம். ஆபத்து வந்தால் அவனுக்குத் தெரியும். யாரோ சொன்னார்கள் என்று பயப்படுகிறாயே?" என்றான் அவன் நிதானமாக.

ஆலி அவர்களுடைய உறவினன். ஜனரல் ஆஸ்பத்திரியில் பயிற்சி பெறும் வைத்தியக் கல்லூரி மாணவன். ஊரில் காலரா பரவியிருந்தால் அவனுக்கு நிச்சயமாகத் தெரியுமல்லவா?

"காஸிம் சொன்னான் அண்ணு, அவனுடைய தாத்தா காலராவைப் பார்த்தாராம், ஊரிலுள்ள அத்தனைபேரும் செத்துப் போனார்களாம்" என்றான் அபித் கவலையுடன்.

ஓரா கடகடவென்று சிரித்தான். "ஊரிலுள்ள அத்தனை பேரும் செத்துப்போனார்களா? அவர் மட்டும் எப்படிப் பிழைத்தார்" என்று கேட்டான்.

சிறுவனுக்குப் பதில் சொல்லத் தெரியவில்லை. ஆஸ் பத்திரிக்கு டெலிபோன் செய்து கேட்டார்கள். ஊரில் கர்லரா பரவியிருப்பது உண்மைதான் என்று தெரிந்தது. அதிகாரிகளைத் தவிர எவரும் உத்தரவில்லாமல் தெருவில் நடமாடக் கூடாது என்று அன்று மாலையில் சர்க்கார் ஆணை பிறப்பித்தார்கள். சந்தை, கடைத்தெரு, பள்ளிக்கூடம், கோவில் போன்ற பொதுஸ்தலங்களை எல்லாம் மூடிவிட்டார்கள். காலரா பரவியிருந்த இடங்களுக்கு டாக்டர்களும், நர்ஸுகளும், செஞ்சிலுவை சங்க ஊழியர்களும் ஓடிச்சென்று சிகித்சை செய்தார்கள். ஒவ்வொருவரும் காலராத்தடுப்பு மருந்தைக் குத்திக் கொள்ளவேண்டும் என்று ரேடியோ மூலம் சர்க்கார் உத்தரவிட்டது.

காலரா மிகவும் கொடிய வியாதிதான். ஊர் ஊராய்க் கொள்ளை கொண்டுபோகும் நோய்தான். காஸிம் பயந்தது ஆச்சர்யமல்ல. சென்ற நூற்றுண்டில் ஐரோப்பா கண்டத்தில் ஐந்து தடவைகளில் தேசம் தேசமாகப் பரவி ஆயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்டது. கடல் கடந்து அமெரிக்காவுக்கும் மூன்று முறை சென்றுவிட்டது. அமெரிக்காவிலும் பலத்த சேதம் ஏற்பட்டது. மக்களை எச்சரிக்கை செய்ய எகிப்திய சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமுன்னமே கெய்ரோவிலும் சுற்றுப்புரங்களிலும் காலரா பரவியிருப்பதாக ஜினிவாவிலுள்ள சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் (World Health Organisation) தலைமைக் கார்யாலயத்துக்குத் தகவல் கிடைத்துவிட்டது. உடனே அங்குள்ள கொள்ளை நோய் தடுப்பு நிலையம் (Epidemic Control Station of the United Nation's World Health Organisation) நடவடிக்கை எடுத்துக் கொண்டது. ஜினிவாவிலிருந்து ரேடியோ மூலம் பல ஐரோப்பிய நாடுகளுக்குச் செய்தியனுப்பிற்று. சிங்கப்பூரிலுள்ள கார்

யாலயத்தின்மூலம் ஆசியா நாடுகளுக்குத் தகவல் கொடுத்தது. அலெக்ஸாண்டிரியாவிலுள்ள சுகாதார நிலயத்தின்மூலம் மத்திய தரைக்கடல் நாடுகளுக்கும் ஆபிரிகா நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் எச்சரிக்கை செய்தது. வாஷிங்டனிலுள்ள அமெரிக்கா சுகாதார பீரோவின்மூலமாக உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் செய்தியை அனுப்பிற்று. எகிப்து அதிகாரிகள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பூர்த்தி செய்யு முன்பாக உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் செய்திபரவி, ஒவ்வொரு நாட்டினரும் எகிப்திலிருந்து வரும் பிரயாணிகளை வைத்திய பரிசோதனை செய்யவும், அவர்கள்மூலம் உள்நாட்டில் காலரா தொத்திக்கொள்ளாமலிருக்க தடுப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் தயாராஞர்கள். விமானகூடங்களிலும், துறைமுகங்களிலும் பிரயாணிகளை பரிசோதிக்க சுகாதார அதிகாரிகள் தயாராக இருந்தார்கள்.

சர்வதேச சுகாதார ஸ்தாபன நிர்வாகிகள் கெய்ரோவுக்கு உதவி செய்ய ஓடினர்கள். எகிப்தின் ஜனத்தொகை கிட்டத்தட்ட இரண்டு கோடி. அத்தனை பேருக்கும் காலராதடுப்பு மருந்துபோடுவது சாத்தியமா? மருந்து கிடைக்குமா? ஊழியர்களிருக்கிறார்களா? எவ்வளவு நாட்களாகும் இந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள—இப்படி எல்லாம் சுகாதார ஸ்தாபனத்தார் யோசித்துக்கொண்டிருக்கவில்லை. எகிப்தியர்களைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே உறுதியுடன் தீர்மானித்தார்கள். இரண்டே நாட்களில், உலகின் பல பாகங்களிலிருந்து மருந்துகளுடன் டாக்டர்களும், ஊழியர்களும், விமானமூலம் வந்து இறங்கினர்கள். ஆப்கனிஸ்தானம், ஆஸ்டிரேலியா, பெல்ஜியம், பிரேஸில், சைனு, இத்தாலி, நெதர்லந்து, ஸ்பெயின், துருக்கி, ரஷ்யா, இந்தியா, ஜப்பான், ஆகிய நாடுகளிலிருந்து மருந்துகளை எடுத்துக்கொண்டு விமானங்கள் கெய்ரோவுக்குப் பறந்தன. அமெரிக்காவிலுள்ள மருந்து உற்பத்தியாளர்கள், மற்ற எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு காலரா எதிர்ப்புச்சீம்பால் (anti-cholera serum) தயாரிப்பதில்

ஈடுபட்டார்கள். மிகவும் குறுகிய காலத்தில் முப்பத்திரண்டு டன்கள் நிறையுள்ள மருந்துகளும், இதரத் தேவைகளும் எகிப்தில் வந்து குவிந்தன. நாலு வாரங்களுக்குள் எகிப்து முழுவதும் காலரா பரவிவிட்டது. உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொண்டதால் டிசம்பர் மாதம் முதல் வாரத்தில் ஒரு சாவுகூட இல்லாமல் மக்களைக் காப்பாற்றிவிட்டார்கள். சர்வதேச சரித்திரத்திலேயே, இவ் வளவு குறுகிய காலத்தில் காலரா போன்ற கொள்ளை நோய் களைக் கட்டுப்படுத்தி மனித சமூகத்தைக் காப்பாற்றியது கிடை யாது. மேலும், காஹிமின் தாத்தாவின் காலத்தில், அதா வது நாற்பது வருஷங்களுக்கு முன்பு, காலராக் கண்டவர்கள் பிழைப்பதே அரிது. இப்போதோ பாதிக்கு மேற்பட்டவர்களைக் காப்பாற்றுவது சாத்தியமாயிற்று. சர்வதேச சுகாதார ஸ்தா பனத்தின் துரித நடவடிக்கையும் உலக மக்களின் கூட்டுறவும் தான் இந்தச் சாகஸமான வெற்றிக்குக் காரணம்.

சர்வதேச ஸ்தாபனம் 1946-ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப் பட்டது. கொள்ளை நோய்கள் பரவாமல் தடுப்பதற்கான நட வடிக்கைகளை எடுப்பதே முதன் வேலையாக அந்த ஸ்தாபனம் கருதிற்று. முன்பு இருந்த சர்வதேச சங்கம் இந்தத் துறை யில் ஓரளவு வேலைசெய்து ஜினிவாவிலும் ஓர் ஆராய்ச்சி நிலையம் நடத்திவந்தது. அந்த நிலையத்தின் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டு, உலகின் பல பாகங்களிலும் பிரதேசவாரியாக நிலை யங்களை ஏற்படுத்திற்று. நிலையத்துக்கு நிலையம் தொடர்பு ஏற்படவும், எல்லா நாடுகளுக்கும் அதிசீக்கிரம் செய்தி அனுப்ப வும் ரேடியோவும் தந்தியும் உபயோகப்படுத்தினர்கள். ஜினிவா விலுள்ள கார்யாலயத்தில் அன்றுடம் சர்வதேச நிலைமை களைப்பற்றி செய்தி கிடைக்கிறது. நோய்களைப்பற்றியும், தடுப்பு நடவடிக்கைகளைப்பற்றியும், ஜினிவா நிலையத்திலுள்ள ரேடியோ தினசரி இரண்டு தடவை உலகம் முழுவதற்கும் செய்தி அனுப்பு கிறது. காலரா, அம்மை, பிளேக், டைபஸ் ஜுரம், மஞ்சள் ஜுரம் போன்ற அதிசீக்கிரம் பரவக்கூடிய நோய்களுக்கும்

தொத்து நோய்களுக்கும் தடுப்பு மருந்துகளைத் தயாரித்து வைத்திருப்பதுடன் தேவையுள்ள இடங்களுக்கு உடனே அனுப்பி உதவி செய்யவும் ஒவ்வொரு நிலையத்திலும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள்.

'ஆப்கானிஸ்தானில் டைபஸ் ஜ்வரம் பரவுகிறது' என்று செய்தி கிடைத்தால் உடனே மருந்துகளை எடுத்துக்கொண்டு டாக்டர்கள் விமானமூலம் செல்கிறார்கள். தென் ஆபிரிகாவில் அம்மை கண்டிருக்கிறது என்றால் துரிதமாகச் சென்று நோய் பரவாமல் தடுக்கிறார்கள். சில மணி நேரத்தில்—சில நாட்களில், வியாதியை அடக்கி ஆயிரக்கணக்கான மக்களை மரணத்திலிருந்து காப்பாற்றிவிடுகிறார்கள்.

உலகிலுள்ள எல்லா மக்களும் ஆரோக்கியமாக வாழவேண்டும்; நோய் நொடியில்லாமல் சந்தோஷமாக வாழவேண்டும் என்பதே சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) நோக்கம். சான்பிரான்ஸிஸ்கோ மகாநாட்டுக்குப் பிறகுதான் சர்வதேச ரீதியில் இந்த ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. 1950-ஆம் வருஷ மத்தியில் இந்த ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களின் எண்ணிக்கை எழுபத்துநான்கு.

மனிதனுடைய ஜீவாதார உரிமை ஆரோக்கிய வாழ்க்கைதான். உடலுறுதி, மன சந்துஷ்டி, நோய் நொடியற்ற வாழ்க்கை, சுகமான சூழ்நிலை இவைதான் ஆரோக்கிய வாழ்க்கை என்று சுகாதார நிபுணர்கள் கூறுகிறார்கள். மனிதனுக்கு ஆரோக்கியமும் சந்தோஷமும் இல்லாவிட்டால், சர்வதேச சுபிட்சம், உலக சமாதானம், சமரஸம் என்று பேசுவது எல்லாம் வாய்ப்பேச்சுத்தான். இதை எல்லா நாட்டுப் பிரதிநிதிகளும் ஒப்புக்கொண்டு சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் அமைப்பு விதிகளை ஏற்றுக்கொண்டு கையெழுத்திட்டார்கள்.

மற்ற சர்வதேச ஸ்தாபனங்களைப்போல சுகாதார ஸ்தாபனத்துக்கும் ஒரு பொதுச் சபையும் நிர்வாக சபையும் உண்டு. நிர்வாக சபையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பதினெட்டு அங்கத்

தினர்கள் இருக்கிறார்கள். பிரச்னைகளைக் கவனிக்கவும் திட்டங்களைப் பரிசீலனை செய்யவும், மேற்பார்வை வேலைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளவும், வருஷத்தில் பலதடவைகளில் நிர்வாக சபை கூடுகிறது. இந்த ஸ்தாபனத்தின் முதல் டைரெக்டர் ஜனரலாக டாக்டர் பிராக் சிஷாம் (Dr. Brock Chisholm) பதவி ஏற்றார். இவர் கனடாவைச் சேர்ந்த பிரபல டாக்டர். சர்க்காரிலும் ராணுவத்திலும் பல வருஷகாலம் சேவை செய்து அனுபவம் பெற்றவர். உள்நாட்டு சுகாதார இலாகா மக்களுடைய ஆரோக்கிய வாழ்க்கையிலும் சுகாதார வசதிகளிலும் கவனம் செலுத்துவதுபோல சர்வதேச சுகாதார ஸ்தாபனம் உலக மக்களின் ஆரோக்கியத்திலும் சுகவாழ்விலும் அக்கறை காட்டுகிறது. வைத்தியத்துறையில் பல்வேறு பகுதிகளில் அனுபவம் பெற்ற நிபுணர்களும், விசேஷ அனுபவமுள்ள டாக்டர்களும் இந்த ஸ்தாபனத்தின் தலைமைக் கார்யாலயத்தில் பதவி வகிக்கிறார்கள். பல்வேறு நாட்டுப் பிரச்னைகளைப் பரிசீலனை செய்து அந்த அந்த நாட்டு சர்க்காருக்கு உதவி செய்கிறார்கள். ஸ்தாபனத்தின் தலைமைக் கார்யாலயம் ஜினிவாவிலிருக்கிறது. பிரதேசவாரிக் கார்யாலயங்கள் புது டெல்லி, அலெக்ஸாண்டிரியா, வாஷிங்டன் ஆகிய நகரங்களிலும் வேறு சில இடங்களிலுமுண்டு.

ஐ. நா. சபையின் ஸ்பெஷல் ஏஜன்ஸிகளான சர்வ தேச ஸ்தாபனங்கள் எல்லாவற்றுடனும் சுகாதார ஸ்தாபனம் தொடர்பு வைத்துக்கொண்டு வேலை செய்து வருகிறது. குறிப்பாக சர்வ தேச குழந்தைகள் சகாய நிதி ஸ்தாபனத்துடன் அது எல்லா நாடுகளிலும் பங்கெடுத்துக்கொண்டு வேலைசெய்கிறது. உலகிலுள்ள எல்லா நாட்டுக் குழந்தைகளும், வாலிபர்களும் ஆரோக்கியமாகவும் சந்தோஷமாகவும் வாழவேண்டும் என்று தானே 'யுனிசெப்' ஸ்தாபனம் வேலை செய்கிறது? ஆகவே சத்துக் குறைவுள்ள ஆகாரம் சாப்பிடும் குழந்தைகளுக்கு போஷாக்கான ஆகாரம் கொடுப்பதுபற்றியும் ஆரோக்கிய சம்பந்தமான ஆலோசனை கூறவும், சுகாதார வசதிகளைச் செய்து

தரவும், 'யுனிசெப்' ஸ்தாபனத்துக்கு உதவி செய்கிறது. இதற்கு ஏற்படும் செலவுகளை உள்ளூர் சர்க்காருடன் இந்த ஸ்தாபனங்கள் சமபங்காக ஏற்றுக்கொள்கின்றன.

சர்வ தேச சுகாதார ஸ்தாபனத்துடன் மிகவும் நெருங்கி வேலை செய்யும் மற்றொரு ஏஜன்ஸி சர்வ தேச உணவு, விவசாய ஸ்தாபனமாகும். உற்பத்திப் பெருக்கத்திலும், மலேரியா ஒழிப்பு வேலைகளிலும், சர்வ தேச ரீதியில் வேலை செய்கிறது. உணவும் ஆரோக்கியமும் இணைந்து செல்லும் பிரச்னைகள் அல்லவா? ஆகவே சுகாதார ஸ்தாபனமும், உணவு விவசாய ஸ்தாபனமும் பல நாடுகளில் கூட்டுத்திட்டம் தயாரித்து வேலை செய்கின்றன.

மக்களின் சுபிட்ச வாழ்வுக்கும், பொருளாதார முன்னேற்றத்துக்கும் வேலை செய்யும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனமும் சுகாதார ஸ்தாபனத்துடன் நெருங்கிய தொடர்புடையது. ஐ.நா. சபையின் ஏஜன்ஸிகளில் 'யுனெஸ்கோவும்' ஒன்று. கல்வி, விஞ்ஞானம், சமூக முன்னேற்றம், பொருளாதாரம், கலாசாரம், என்று பல துறைகளில் இந்த ஸ்தாபனம் கவனம் செலுத்துகிறது. விஞ்ஞானத் துறைகளில் புது முயற்சியும் ஆராய்ச்சியும் செய்துவரும் டாக்டர்களுக்கும் நோய்களை ஆராய்ந்து புது மருந்துகளைக் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகளுக்கும் இந்த ஸ்தாபனம் உதவி செய்கிறது. இந்த ஆராய்ச்சியில் சுகாதார ஸ்தாபனத்துக்கும் அக்கறையுண்டு. ஒரே துறையில் பல விஞ்ஞானிகள் ஈடுபட்டு காலத்தை வீணாக்கிக் கொண்டிராமல், தம் தம் ஆராய்ச்சிகளைப்பற்றிக் கலந்து பேசிக் கொள்ளவும், மனித சமுதாயத்தின் கஷ்டங்களையும், தேவைகளையும் ஆராய்ந்து பார்த்து பரிகாரம் கண்டு பிடிக்கவும், விஞ்ஞானிகளும் டாக்டர்களும் பரஸ்பரம் கலந்து பழகவும் நட்பு வளரவும், பிரஸல்ஸ் நகரத்தில் யுனெஸ்கோ சுகாதார ஸ்தாபன கூட்டு முயற்சியில் ஒரு வைத்திய விஞ்ஞானிகள் மகாநாட்டைக் கூட்டினார்கள். 'யுனெஸ்கோ' ஸ்தாபனமும்,

சுகாதார ஸ்தாபனமும் சேர்ந்தே செய்த முயற்சி இது. இதில் நாற்பது நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

ஜினிவாவிலுள்ள சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் விளம் பரப்பகுதி மிகவும் விஸ்தாரமானது. மெம்பர் நாடுகளுக்குத் தகவல் கொடுக்க ஒரு பத்திரிகையை நடத்தி வருவதுடன், அவ்வப்போது, ஆரோக்கியக் குறிப்புகள், வைத்திய சாஸ்திரத் தைப்பற்றியும் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகளைப்பற்றி யும் தகவல்கள், நோய்களும், அவற்றைத் தடுக்கும் வகை களும் பற்றி அறிக்கைகள், ஆகியவற்றை எல்லா நாடுகளுக்கும் அனுப்புகிறார்கள்.

உதவி வேண்டும் என்று கேட்கும் நாடுகளுக்கு மருந்து களும் நிபுணர்களும் அனுப்புவது ஒருபுறமிருக்க வைத்திய சாஸ்திரத்தில் அவ்வப்போது கண்டுபிடிக்கும் மருந்துகளையும் அவற்றின் குணகுணங்களையும் ஆராய்ந்து பார்க்கவும், சர்வ தேச ஊழியர்களுக்குப் பயிற்சியளிக்கவும் அவ்வப்போது ஊழியர் மகா நாடுகளும் நடத்தப்படுகின்றன. உலகின் பல பாகங்களிலுள்ள விஞ்ஞானிகளும், வைத்திய நிபுணர்களும் மகாநாட்டில் கலந்து கொள்கிறார்கள். சின்ன அம்மை, மணல்வாரி, அம்மைக் கட்டு, கொப்பளிப்பான், மாந்தம், கண்ண போன்ற வியாதிகள் குழந்தைகளையே தாக்குவதால், அவற்றைத் தடுக்கவும், நோய் பரவாமல் தடுப்பு நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும் சமீபத்தில் ஒரு மகாநாடு நடந்தது. இந்தத் துறையில் ஆராய்ச்சி நடத்தும் பலர் மகாநாட்டில் கலந்துகொண்டு தம்தம் அனு பவங்களை எடுத்துக்கூறினர்கள். மகா நாட்டின் தீர்மானங் களையும் நிபுணர்களின் அனுபவங்களையும் அறிக்கையாகத் தயா ரித்து அங்கத்தினர் நாடுகளுக்கு அனுப்பினர்கள். அறிக்கை யைப் படித்து பல டாக்டர்கள் பலனடைந்தார்கள். பல்வேறு நாட்டுக்குழந்தைகளும் காப்பாற்றப்பட்டார்கள்.

இதேபோல, மருத்துவம் பார்க்கும் தாதிகளுக்கும், நோயா ளிகளுக்குச் சிசுருஷை செய்யும் நர்ஸுகளுக்கும், நவீன சாத

னப்பயிற்சி யளிக்கவும், பிரசவம் பார்க்கும் தொழிலை கண்ய மாகவும் லாபகரமானதாகவும் செய்து பல பெண்களுக்கு வேலை கொடுக்கவும் ஜினிவாவில் பல்வேறு நாட்டு நிபுணர் கள் கூடி ஆலோசித்தார்கள். பிறகு ஸ்தாபனம் பல நாடு களில் பயிற்சி முகாம் நடத்த பாடத்திட்டமும் இதர வசதி களும் அளித்து உதவிற்று.

மருந்துகளின் தரத்தையும் வீர்யத்தையும் நிர்ணயிப்பதில் சர்வதேச சுகாதார ஸ்தாபன நிபுணர்கள் அடிக்கடி கலந்து ஆலோசித்துவருகிறார்கள். மருந்து உற்பத்தியாளர்களின் கூட்டுறவினால் இனிமேல் எங்கே தயாரானாலும் ஒரே வீர்யமும் சக்தியுமுள்ள மருந்து உலகம் முழுவதும் கிடைக்கும். ஒரே மருந்து அமெரிக்காவிலும் தயாராகிறது, ஐரோப்பாவிலும் தயாராகிறது, உள்ளூரிலும் தயாராகிறது என்று வைத்துக் கொள்வோம். வீர்யத்திலும் தன்மையிலும் ரகத்திலும் இவை சமமானவை என்று எப்படித் தெரியும்? உடற் கூறுக்கும் ஆரோக்கியத்துக்கும் ஒவ்வொரு மருந்தின் சக்தியை யும் அவற்றின் உபயோகப்பிரமாணத்தையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஒரே மருந்தானாலும் உற்பத்தி முறையில் அவற்றின் தரமும் வீர்யசக்தியும் நாட்டுக்கு நாடு மாறியிருந்தால் மருந்தின் உபயோகம் தெரிந்தாலுங்கூட அதை உபயோகிப்பதில் சிரமம் ஏற்படுகிறது. சோடா பைகார்பனேட் வேண்டும் என்று கடையில் போய்க் கேட்கிறோம். மருந்துக் கடைக்காரன் ஒரு மாத்திரை சீசாவைக் கொடுக்கிறான். அதில் 'ஐந்து கிரெயின்' என்று குறித்திருக்கிறது. இது என்ன ஐந்து கிரெயின்? இதில் எவ்வளவு சோடா பைகார்பனேட் இருக்கிறது? வேறு ஏதாவது சேர்மானம் இருக்கிறதா? இப்படி எல்லாம் நாம் சிந்தித்துப்பார்க்கிறோம்.

பல வருஷங்களுக்கு முன்பு இருந்த சர்வ தேச சங்கமே, மருந்துகளின் தரத்தை (Standardisation) நிர்ணயிக்க முயன்றது. இப்போதுதான் திட்டமான ஏற்பாடுகள் செய்யும் காலம் வந்திருக்கிறது. விமான யாத்திரையும், பரஸ்பரம்

நாட்டுக்கு நாடு ஜனங்கள் பிரயாணம் செய்வதும் அதிகமாகி விட்ட இந்த நாளில் சர்வதேச நிர்ணயம் செய்யப்பட்ட மருந்து களுக்குத் தேவை அதிகமாகிவிட்டது. இந்தத் திட்டம் அம லுக்கு வருவதற்கு முன்பாக பல தேசங்களுக்குள் ஒப்பந்தங் களும், சிகித்சை முறையில் ஒரே ரீதியும் ஏற்பட்டாகவேண்டும். இதற்குச் சில வருஷங்களாகலாம். தேவையை உணர்ந்த பிறகு பூர்த்தி செய்வது சுலபம்தான்.

ஆரோக்கியம், சுகாதாரம் இவைபற்றி புள்ளி விவரம் சேகரிக்கவும், குறிப்பிட்ட பகுதிகளில் சோதனைகள் நடத்தி மக்களின் சுகாதார வாழ்க்கைக்கு வழி செய்யவும், சுகாதார ஸ்தாபனம் பல நாடுகளுக்கு உதவி செய்கிறது. நிபுணர் களையும், ஆராய்ச்சியாளர்களையும் வைத்திய கோஷ்டியையும் உதவி கோரும் நாடுகளுக்கு அனுப்புகிறது. இந்தத் துறை களில் செலவாகும் பணத்தில் ஒரு பங்கை அமெரிக்காவி லுள்ள ராக்பெல்லர் தரும ஸ்தாபனம் கொடுக்கிறது என்பதைக் குறிப்பிட வேண்டும். ஆரம்ப காலத்தில் மிகவும் பெரிய தொரு ஆரோக்கிய புள்ளிவிவரச் சேகரிப்பு வேலையை இத்தாலி யில்தான் சுகாதார ஸ்தாபனம் செய்தது. மக்களின் சுகாதார வாழ்வுக்காக அங்கு நடத்திய பரிசீலனை மிகவும் விரிவான துடன் நீண்டகால சேவைக்கான திட்டமும் வகுத்தது. இதற்குச் செலவான பணத்தை இத்தாலிய சர்க்காரும், சுகாதார ஸ்தா பனமும் ராக்பெல்லர் ஸ்தபானமும் பகிர்ந்துகொண்டனர். நீண்ட காலத்திட்ட வேலைகளை அங்கு நடத்த ஆரம்பித்ததுடன் உணவு ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

ரோமில் நடந்த சர்வதேச சுகாதார நிர்வாக கௌன்சில் கூட்டத்துக்கு அமெரிக்கா சுகாதார பகுதி இலாகாவின் தலைவ ரான டாக்டர் லீனர்டு ஷீல் (Dr. Leonard A. Scheele) சென் ருர். அங்கு அவருக்கு பிரிட்டிஷ் சுகாதார இஞ்சினீயரான (J. C. Dawes) ஜே. ஸி. டாவ்ஸின் பரிச்சயம் ஏற்பட்டது. சுகாதார வசதியுள்ள கட்டிடங்களைக் கட்டுவதிலும், இதர சுகாதார வசதி களைக் கவனிப்பதிலும் டாஸ் நிபுணர். அமெரிக்காவிலுள்ள

நகரங்களின் சுகாதார நிலைமையைப் பரிசீலனை செய்து அபிவிருத்திக்கான யோசனைகளைக்கூற அவரை அமெரிக்காவுக்கு வருமாறு டாக்டர் ஷீல் கேட்டுக்கொண்டார். டாஸ் அமெரிக்காவிலுள்ள முக்கியமான இருபத்தோரு நகரங்களைப் பார்த்தபிறகு கழிவு, குப்பைகளை அப்புறப்படுத்துவதுபற்றியும், அதைச் சிறந்த எருவாகவும், சமூகத்துக்குப் பயன்படும் வேறு பொருள்களாகவும் மாற்றுவதுபற்றியும் ஓர் அறிக்கை தயாரித்தார். அமெரிக்காவுக்கு மட்டுமின்றி உலகிலுள்ள எல்லா சுகாதார நிபுணர்களும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய சிறந்த அறிக்கை அது என்று டாக்டர் ஷீல் புகழ்ந்தார்.

எதியோபியாவில் ஆஸ்பத்திரிச் சிப்பந்திகளுக்கும் சுகாதார அதிகாரிகளுக்கும் பயிற்சிதர ஒரு வைத்திய கோஷ்டியை அனுப்பிற்று. சீனாவில் ஜனங்கள் அடிக்கடி நோய்வாய்ப்பட்டு மடிந்துகொண்டே யிருந்தார்கள். வீட்டுக்கு வீடு நோயாளிகள்தான். அவர்களைக் கவனிக்க போதுமான டாக்டர்களோ, இதர வைத்திய வசதியோ கிடையாது. சீனாவின் வேண்டுகோளுக்கிணங்கி டாக்டர் லியோ எலிஸர் (Dr. Leo Eloesser) என்பவருடைய தலைமையில் ஒரு வைத்திய கோஷ்டி சீனாவுக்குச் சென்றது. டாக்டர் லியோ ஹிருதய நோய்களைப்பற்றி ஆராய்ச்சி செய்தவர். ஸ்டான்போர்டு சர்வகலாசாலை வைத்தியப் பள்ளிக்கூடத்தில் பல வருஷகாலம் சேவை செய்தவர். பிற்காலத்தில் அவர் 'யுனிசெப்' ஸ்தாபனத்தில் சேர்ந்து சீனாவிலும் வேறு நாடுகளிலும் சேவை செய்தார்.

வட சீனாவிலுள்ள ஒரு நகரத்துக்கு டாக்டர் லியோ சென்றார். மக்களுடன் நெருங்கிப் பழகும்போதுதான் அவர்களுடைய அவலநிலை தெரிந்தது. வைத்திய உதவிக்காக, கல்லூரிப்படிப்புப் படித்த டாக்டர்களை சீனாவுக்கு அனுப்புவது என்றாலே ஆயிரமாயிரம் டாக்டர்கள் வேண்டும்போலிருந்தது. பெரும்பாலான மக்களுக்கு சுகாதார வழிகள் தெரியாததால்தான் வியாதியினால் கஷ்டப்பட்டார்கள். வேறு சிலருக்கு உணவு வசதியில்லாமையினால் வியாதிகள் அணுகின. வறுமையும்

மூட நம்பிக்கையும், கல்வியறிவின்மையும் தான் சீன மக்களின் கஷ்டத்துக்குக் காரணம் என்று அவர் தெரிந்துகொண்டார். ஆரோக்கியமாக வாழ சில சுகாதார வழக்கங்களைக் கற்றுக் கொடுப்பதுடன் சாதாரண வியாதிகளுக்குச் சிகித்சை முறையும் கற்றுக் கொடுத்தாலே பாதிக்கு மேற்பட்ட ஜனங்கள் சுகமாக வாழமுடியும் என்று அவருக்குத் தொன்றிற்று. உடனே ஓர் ஊழியர் முகாம் நடத்த அவர் ஏற்பாடு செய்தார். வியாதிகளைப் பரப்பும் பேனைக் கண்டுபிடித்துப் போக்கவும், கிருமிகளைக் கொல்ல தண்ணீரைக் காய்ச்சவேண்டும் என்பதற்கும் கொக்கிப் புழு பரவாமலிருக்க சுகாதார முறையில் கக்கூஸ் கட்டவும், ஆறு வருஷகாலம் வைத்தியக் கல்லூரிப்படிப்பு அவசிய மில்லை என்று அவர் கூறியதுடன் முகாம் ஊழியர்களுக்கு பயிற்சியளித்தார்.

நீர்நிலைகளைச் சுகாதார முறையில் மருந்துகள் மூலம் சுத்தப்படுத்தவும், கொசுக்களைக் கொல்லவும், வியாதிகளைப் பரப்பும் ஈ, பேன் போன்ற பூச்சிக்களைக் கொல்லவும், சாதாரண நோய்களைத் தெரிந்துகொண்டு சிகித்சை செய்யவும், டைபாய்டு, அம்மை, போன்ற வியாதிகள் வராமலிருக்க தடுப்பு மருந்துகளைக் கொடுக்கவும் அவர் ஊழியர்களுக்குப் பயிற்சியளித்தார். பிரசவம் பார்க்கவும் குழந்தை வளர்க்கவும் அவர் பெண்களுக்கு பயிற்சியளித்தார். இவை எல்லாவற்றையும் விட சமூக ஊழியர்கள், ஜனங்களிடம் எப்படிப் பழகி அவர்களுடைய அன்புக்குப் பாத்திரமாக முடியும் என்பதைப் பற்றி அவர் நடத்திய வகுப்புகள்தான் எல்லோரையும் வசீகரித்தது.

கோ தா நியாங் (Kuo Ta Niang) என்ற கிராமத்தைச் சேர்ந்த ஒரு மாது டாக்டர் லியோவின் பயிற்சி முகாமில் சேர்ந்தாள். ஐம்பது பிராயத்துக்கு அதிகமுள்ள அந்த மாதை கோவூர் அத்தை என்றே மற்றவர்கள் அழைத்தார்கள். கோ கிராமத்தைச் சேர்ந்தவள் என்றதால் அவளுக்கும் ஊர்ப் பெயரே ஏற்பட்டுவிட்டது. சென்ற பத்துப் பதினைந்து வருஷங்களாக அவள்தான் உள்ளூர் மருத்துவச்சி. கோவூரிலும் சுற்றுப்

புறங்களிலும் அவளைத்தான் பிரசவம் பார்க்க அழைத்துச் செல்வார்கள். அவளுக்கு எழுதப்படிக்கவே தெரியாது. இருந்தாலும் அவள் முகாமில் சேர்ந்தாள். டாக்டர் லியோ சொல்லும் ஒவ்வொரு வார்த்தையையும் அவள் கவனமாகக் கேட்பாள். பயிற்சி முடிந்து ஊர் திரும்பினதும் தான் கற்றுக்கொண்டதை ஒரு நண்பரின் உதவியினால் எழுதிவைத்துக்கொண்டாள். "இப்போது எல்லாம் ஞாபகமிருக்கிறது. ஒருவேளை மறந்து போய்விட்டால் சரிபார்த்துக் கொள்ள வேண்டாமா? சந்தேகம் வந்தால் யாரையாவது படித்துக் காட்டச்சொல்கிறேன்" என்று சிரித்த முகத்துடன் அவள் சொன்னாள்.

பிரசவம் பார்க்கச் செல்லுமுன்பு கைகளைச் சுத்தமாக அலம்பிக்கொள்ள வேண்டும், நகங்களில் அழுக்குப் படாமலிருக்க, அவற்றை ஒட்ட வெட்டிக்கொள்ள வேண்டும், பிறந்த குழந்தையை குளிப்பாட்ட வேண்டும் என்று எல்லாம் முகாமில் கற்றுக் கொடுத்தார்கள். கோவூர் அத்தை ஆச்சர்யத்துடன் கேட்டுக்கொண்டிருந்தாள். பிறந்த குழந்தையை மண்ணில் புரட்டி எடுப்பதுதான் ஆரோக்கியம் என்று சீனர்கள் எண்ணி வந்தார்கள். கோவூர் அத்தையும் எத்தனையோ குழந்தையை மண்ணில் 'குளிப்பாட்டி' யிருக்கிறாள். பயிற்சி பெற்ற பிறகு அவளுடைய போக்கே மாறிவிட்டது. தன்னம்பிக்கையுடனும் உத்சாகத்துடனும் அவள் வேலை செய்ய ஆரம்பித்தாள். இப்போதெல்லாம் அவள் பிரசவம் பார்க்கச் செல்லுமிடங்களில் அவள் பேச்சைக் கேட்காமலோ, கிராம சம்பிரதாயம் என்றோ யாராவது சொன்னால், 'சரி, வேறு ஆளைப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்று கிளம்பிவிடுவாள். கிராம மக்கள் பணிந்துவிடுவார்கள். அவள் கைராசிக்காரி என்பதுடன் அனுபவம் பெற்ற மருத்துவச்சி. முன்பு அவள் பிரசவம் பார்த்த குழந்தைகளில் பாதிக்குமேல் செத்துவிட்டன. டாக்டர் லியோவிடம் பயிற்சி பெற்ற பிறகு அவள் எல்லாவற்றையும் சுத்தமாக வைக்கக் கற்றுக்கொண்டாள். பிரசவம் பார்த்த குழந்தைகளில் ஒன்றுகூடச் சாகவில்லை. இது அவளுக்குப்

பெருமையாக மட்டும் இல்லை; புகழும் சம்பாதித்துக் கொடுத்தது.

உலகத்தில் மிகவும் கடுமையான வியாதிகள் மலேரியாவும் கூயஜ்வரமும்தான். இவை இல்லாத நாடே கிடையாது. சர்வதேச ஸ்தாபனங்கள் ஏற்பட்டபிறகு இந்த நோய்களை ஒழிக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டன. மலேரியா ஜுரத்தி னால் பல நாடுகளில் விவசாயிகள் கஷ்டப்பட்டதால் தான்ய உற்பத்தி தடைபட்டது. உடனே சர்வதேச உணவு, விவசாய சங்கம் நடவடிக்கை எடுத்துக்கொண்டது. குழந்தைகள் கூய ஜ்வரத்தால் கஷ்டப்படுகிறார்கள்; பள்ளிக்கூடத்திற்குச் செல்ல முடியாதபடி கிரீஸ் தேசத்தில் சிறுவர்கள் மலேரியாவினால் வருந்துகிறார்கள். உடனே அவர்களுடைய ஆரோக்யத்தைக் கவனிக்க 'யுனிசெப்' ஸ்தாபனம் நடவடிக்கை எடுத்துக்கொண் டது. பொதுவாகவே இந்த ஸ்தாபனங்கள் சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தின் கூட்டுறவு பெற்றுத்தான் வேலை செய்கின்றன. சர்வதேச ரீதியில் மலேரியா ஒழிப்புத்திட்டம் போட்டுக்கொண்டு சுகாதார ஸ்தாபனம் வேலை செய்ய ஆரம்பித்தது. அதன் முதல் வேலைத் திட்டம் கிரீஸில் ஆரம்பமாயிற்று.

கிரீஸில் வேலை செய்ய சுகாதார ஸ்தாபனம் நிச்சயித்த தற்கு இரண்டு காரணங்கள் உண்டு. உலகத்திலேயே மலேரியா உபத்திரவம் அதிகமாக உள்ள நாடு கிரீஸ்தான். அங்குள்ள சதுப்பு நிலங்களில் மலேரியாவைப் பரப்பும் 'அனோபிலேஸ்' (Anopheles) என்ற கொசு இருந்துகொண்டே இருக்கிறது. இரண்டாவது மலேரியாவினால் விவசாயிகள் கஷ்டப்படுவதால் விவசாயம் பாதிக்கப்பட்டுவிட்டது. ஆகவே மலேரியாவைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று உணவு, விவசாய ஸ்தாபன ஊழியர்கள் வற்புறுத்தினார்கள்.

கிரீஸ் நாட்டில் மலேரியா ஒழிப்பு வேலைக்காக டாக்டர் ஜேம்ஸ் வைன் (Dr. James Vine) என்ற ஆஸ்டிரேலியரைத் தலைவராக நியமித்தார்கள். அவருக்கு உதவியாக அமெரிக்காவிலிருந்து

டாக்டர் டேனியல் ரைட் (Dr. Daniel E. Wright) என்பவர் சென்றார். தொத்து நோய்களைக் கட்டுப்படுத்துவதில் இரண்டு டாக்டர்களும் பல வருஷங்கள் ஆராய்ச்சி நடத்தி அனுபவம் பெற்ற நிபுணர்கள். அவர்களுக்கு உதவியாக அறுபது டாக்டர்களும், மருந்து தெளிக்கவும் இதர வேலைகளைச் செய்யும் சுமார் இருநூற்றைம்பது சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டார்கள். சதுப்பு நிலங்களில் டிடிட் (D.D.T.) மருந்தைத் தெளிக்க பதினெட்டு விமானங்களும், உபகரணங்களும்; நூற்றுக்கணக்கான பிப்பாய்களில் மருந்தும் கிரீஸுக்கு வந்து சேர்ந்தன. வீடுகளிலும், புதர்களிலும், சதுப்பு நிலங்களிலும் டிடிட் மருந்து வீசினார்கள். ஒரு வருஷத்துக்குள் சுமார் லக்ஷம் ஏகரா நிலங்களில் மருந்து வீசி, கொசுவை ஒழித்தார்கள். வீடு வீடாகச் சென்று மருந்து தெளித்ததில் ஒரே வருஷத்தில் முப்பத்தைந்து லக்ஷம் மக்கள் வசிக்கும் வீடுகளைச் சுத்தம் செய்ய முடிந்தது. முதல் வருஷத்திலேயே எதிர்பார்த்ததற்கு மேல் பலன் கிடைத்தது. அடுத்த வருஷம் வேறு ஒரு பகுதியில் மும்முரமாக மருந்து தெளித்தார்கள். இரண்டு வருஷங்களுக்குள் சாவே இல்லாமல் குறைந்ததுடன், விவசாயிகளில் பலர் ஆரோக்கியமாக இருந்ததால் உணவு உற்பத்தி ஒன்றுக்கு ஒன்றரை யாகப் பெருகிற்று.

கிரீஸுக்கு அடுத்தபடியாக மலேரியாவினால் கஷ்டப்படும் தேசம் இந்தியாதான். இந்தியாவிலும் விவசாயிகள் மலேரியாவினால் பாதிக்கப்படுவதால் உணவு உற்பத்தி குறைந்து விட்டது என்று தெரிந்துகொண்ட உணவு, விவசாய ஸ்தாபனத்தார், மலேரியா கமிஷனை இந்தியாவுக்குச் செல்லுமாறு கேட்டுக்கொண்டார்கள். டாக்டர் ஜேம்ஸ் வைனிடம் பயிற்சி பெற்ற கிரேக்க டாக்டர்களில் ஒருவரான டாக்டர் ஜ்யார்ஜ் பேலியாஸ் (Dr. George Belios) இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். இந்தியாவிலுள்ள சிரமத்தையும், தேவையையும் சுகாதார ஸ்தாபனம் உணர்ந்தபோது திடுக்கிட்டுப் போனார்கள். கிட்டத்தட்ட பத்துக் கோடி மக்கள் மலேரியாவினால் வருஷா வருஷம்

அவஸ்தைப்படுகிறார்கள். இவர்களில் பெரும் பகுதி யுவர்களும் குழந்தைகளும்தான். மேலும் மலைப்பிரதேசங்களிலும் காட்டு பிராந்தியங்களிலும் வசிக்கும் கிராமவாசிகள்தான் இந்த ஜுரத் தினால் அதிகமாகக் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்ததும் அவர்கள் திகைத்துப்போனார்கள். மிகவும் பெரிய பகுதிகளில் மலேரியா தடுப்பு வேலை செய்ய வேண்டியிருந்தது. அதற்குப் போதுமான வசதியோ பயிற்சிபெற்ற ஊழியர்களோ கிடையாது. மலேரியாவின் வேகம் அதிகமாக இருந்ததால் சிறுகச்சிறுகச் செய்து கொள்ளலாம் என்று இருக்கவும் முடியாது. இவை எல்லாம்விட மிகவும் கஷ்டமான பிரச்னையும் இருந்தது. மலைக்காடுகளில், புலியும் பாம்பும் யானையும் வசிக்கும் பிரதேசங்களில்தான் மலேரியாவின் வேகம் அதிகமிருந்தது. பள்ளத்தாக்குகளிலுள்ள கிராமங்களில் சதுப்பு நிலம் இருந்ததால் கொசுக்கள் நிரந்தரமாக இருந்தன. மேலும் பிரதேசத்துக்குப்பிரதேசம் பாஷை வேறுபட்டது.

டாக்டர் பேலியாஸ் முதல் முதலில் ஐக்கிய மாகாணத்தில் ஹிமயமலைச் சாரலிலுள்ள தெராய் பள்ளத்தாக்குக்குச் சென்றார். அங்குள்ள கிராமங்களில் வருஷா வருஷம் மலேரியாவினால் ஆயிரக் கணக்கான மக்கள் செத்துப்போனார்கள். பூர்வாங்க வேலைகளைக் கவனித்துவிட்டு டாக்டர் பேலியாஸ் ஜினிவாவுக்குச் சென்றபோது அவரை 'காலியர்ஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிகையின் நிருபர் பேட்டிகண்டார். அவரிடம் டாக்டர் பேலியாஸ் சொன்னார்: "தெராய் பிரதேசத்தைப்போல நான் எங்குமே பார்த்ததில்லை. 350 மைல் சதுரமுள்ள சதுப்பு நில காட்டுப்பிரதேசம். அங்கு புலியும், மலைப்பாம்பும், சர்வ சகஜமாக நடமாடுகின்றன. சரியான போக்கு வரத்துப் பாதையே கிடையாது. கட்டை வண்டிப்பாதைகளிலும் மழை பெய்தால் போகமுடியாது. இந்த வட்டாரத்தில் 256 கிராமங்கள் இருக்கின்றன. வீடுகளோ மண் குச்சுக்கள். தாழ்ந்த கூரைகளுள்ள அவற்றில் பதினேயாயிரம் பேர்கள் வசிக்கிறார்கள். சில சமயம் மலேரியாவின் கொடூரம் அதிகமாகி கிராமம் கிராமமாக அழிந்துபோய்விடுவதுண்டாம்."

கிராமவாசிகள் முதலில் சுகாதார ஊழியர்களுக்கு விரோத மாகவே இருந்தார்கள். பெண்களோ மூடநம்பிக்கையினால் இவர்களுடைய உதவியை ஏற்றுக்கொள்ளவில்லை. பொறு மையாகவும் நிதானமாகவும் ஊழியர்கள் வேலை செய்தார்கள். முதலில் சதுப்பு நிலங்களில் மருந்து தெளித்தார்கள். பிறகு சௌஜன்யமாக இருக்கும் கிராமங்களில் மருந்து தெளித்தார் கள்; கிராமவாசிகளுக்கு மருந்துகளும் இதர வசதிகளும் அளித்தார்கள். அந்தக் கிராமவாசிகளுடைய கஷ்டம் குறைய லாயிற்று. மருந்து தெளிக்கப்பட்ட கிராமங்களில் ஜனங் களுக்கு ஜுரம் வரவில்லை. இரவு நேரத்தில் நன்றாக தூங்கு கிறார்கள் என்பதை அதிசீக்கிரம் மற்றக் கிராமவாசிகள் தெரிந்து கொண்டார்கள். மேலும் ஈ, உண்ணி முதலிய பூச்சி பொட் டுக்களையும் டிடிட் என்னும் மருந்து கொன்று விடுவதால் பசுக்கள் ஆரோக்கியமாக இருந்ததுடன் அதிகமாகவும் பால் கொடுத்தன.

மலேரியா ஒழிப்பு கமிட்டி ஸ்தாபனமாகி மூன்று வருஷங் களுக்குள், ஐரோப்பாவிலுள்ள பல நாடுகளிலும், ஆசிய நாடுகளிலும் தென் அமெரிக்கா நாடுகளிலும் அற்புதமாக வேலைசெய்து கட்டுப்படுத்திவிட்டார்கள். மலேரியா கமிட்டி யுடன் 'யுனிசெப்' ஸ்தாபனமும் சில நாடுகளில் வேலை செய்தது. சில நாடுகளில் கொசுக்களைப் போல வேறுசில பூச்சி பொட்டுக் களால் சேதம் பரவிற்று; வியாதிகள் வந்தன. குழந்தை களும் வாலிபர்களும் நோயுற்றனர். ஆகவே 'யுனிசெப்' ஸ்தாபனத்தின் கூட்டு முயற்சியில் பூச்சி பொட்டுக்களைக் கொல்ல சுகாதார ஸ்தாபன ஊழியர்கள் தீவிரமான வேலை செய்தார்கள். மெக்ஸிகோவிலும், வேறு சில மத்ய அமெரிக்க நாடுகளிலும், சுகாதார ஸ்தாபனம் 'யுனிசெப்' ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் பூச்சி பொட்டுக்களால் அவதியுற்ற இருபது லக்ஷம் மக்கள் காப்பாற்றப்பட்டார்கள்.

தேசத்துக்குத் தேசம் செல்லும் ரெயில், விமானம், கப்பல், இவைகளின்மூலம் பல பூச்சிகள் தொத்திக்கொண்டு

நோய்களைப் பரப்புவதை சுகாதார ஸ்தாபன ஊழியர்கள் கவனிக்காமல் இல்லை. இன்ன இன்ன மருந்தை உபயோகியுங்கள் என்று அவர்கள் விமான, ரெயில்வே, கப்பல்கள் அதிகாரிகளுக்கு யோசனை கூறுவதுடன், சர்க்கார்-சுகாதார ஸ்தாபன கூட்டுறவில் ஊழியர்கள் மூலம் மருந்தும் தெளிக்கிறார்கள்.

க்ஷயஜ்வரத்தைக் கட்டுப்படுத்தவும் சர்வதேச திட்டம்போட்டே சுகாதார ஸ்தாபனம் வேலை செய்கிறது. புள்ளி விவரங்களைச் சேகரிக்கவும், நோய்த் தடுப்பு மருந்துகளைத் தரவும், ஆரோக்கிய நிலையங்களைக் கட்டவும் பலநாடுகள் சுகாதார ஸ்தாபனத்தின் உதவியை நாடுகிறார்கள். மூன்று வருஷங்களுக்குள் சுகாதார ஸ்தாபன கோஷ்டிகள், வட ஆபிரிகா நாடுகள், ஆசியா, ஐரோப்பா, தென் அமெரிக்கா, மத்திய கிழக்கு நாடுகள், ஆகிய நாடுகளுக்குச் சென்று வேலை செய்தார்கள். ஐரோப்பிய நாடுகளில் குழந்தைகளுக்கு க்ஷயஜ்வரம் பரவாமலிருக்க பி.ஸி.ஜி. இஞ்சக்ஷன் கொடுக்கவும் 'யுனிசெப்' ஸ்தாபனத்துக்கு பரவலான முறையில் உதவி செய்தது.

க்ஷயஜ்வரத்தைக் கட்டுப்படுத்தவும் புதிதாகக் கண்டுபிடித்த 'ஸ்ட்ரெப்டோமைஸின்' (Streptomycin) என்ற மருந்தை உபயோகிப்பதுபற்றியும் ஆலோசிக்க 'யுனிசெப்' ஸ்தாபனமும் சுகாதார ஸ்தாபனமும் பாரிஸில் ஒரு சர்வதேச மகாநாடு நடத்தினர்கள். பல நாடுகளிலிருந்து வந்த நாற்பது டாக்டர்கள் மகாநாட்டில் கலந்து கொண்டார்கள். க்ஷயஜ்வரம் சம்பந்தமாக தீவிரமாக ஆராய்ச்சி நடத்திவரும் நிபுணர்கள் இவர்கள். 'ஸ்ட்ரெப்டோமைசின்' சிறந்த மருந்து என்றும், பல மக்களைச் சாவிலிருந்து மீட்கும் சக்தி அதற்கு இருக்கிறது என்றும் எல்லா டாக்டர்களும் கூறினர்கள். சிலர் தங்களுடைய அனுபவங்களை எடுத்துச் சொன்னர்கள். அமெரிக்காவின் பிரதிநிதியாக இந்த மகாநாட்டில் கலந்துகொண்டவர் ஸ்ரீமதி எடித் மாஸ் லிங்கன். (Dr. Edith Mass Lincoln) நியுயார்க்கிலுள்ள குழந்தைகள் ஆஸ்பத்திரியில் ஹிருதய நோய் பகுதியின் தலைவி இவர். பாரிஸ் மகாநாட்டிலிருந்து திரும்பியதும், தாம் கண்டவைகளை

யும் கேட்டவைகளையும் பற்றி வைத்திய சஞ்சிகைகளில் பல கட்டுரைகளை இவர் எழுதினர். அதனால் பல அமெரிக்கா டாக்டர்கள் பலனடைந்தார்கள்.

வைத்திய சாஸ்திரம், சுகாதாரம், இவைகளைக் கவனிக்க பல சர்வதேச ஸ்தாபனங்கள் உண்டு. அவை தொழிலிலீடு பட்டவர்களுக்கு உதவும் ஸ்தாபனங்கள். மிகவும் பரவலான முறையில் எல்லா நாட்டு மக்களுக்கும் சேவை செய்ய சர்வதேச சுகாதார ஸ்தாபனம் ஒன்றுதானிருக்கிறது. ஜாதி, மதம், இனம், தேசம், பாஷை என்ற பேதமின்றி உதவி என்றதும் உடனே முன்வரும் ஸ்தாபனம் இது. சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எடித் லிங்கனை ஒரு நிருபர் கேட்டபோது அவர் சொன்னர்: "இது அதிவேகமாக வேலை செய்கிறது. உலகம் முழுவதும் பரவி வேலை செய்கிறது. புது மருந்து ஒன்று கண்டுபிடிக்கப் பட்டால் அதன் குணகுணங்களை பரீசீலனை செய்துகொண் டிருக்கும்போதே எந்தப் பிரதேசங்களுக்கு அதை உபயோகிக்க லாம் என்று நிச்சயித்துவிடும்படி ஜரூராக வேலை செய்கிறது" என்று.

பல நாடுகளில் ஜனத்தொகைக்கு ஏற்றபடி வைத்திய உதவி செய்ய டாக்டர்களே கிடையாது. பன்னீராயிரம் மக்க ளுக்கு ஒரு டாக்டர் வீதம் தான் சில நாடுகளில் இருக்கிறார்கள். இந்த நாடுகள் எல்லாம், வைத்திய கோஷ்டிகளையும், சுகாதார ஊழியர்களையும் அனுப்பும்படி அடிக்கடி சர்வதேச சுகாதார ஸ்தாபனத்தைக் கேட்கின்றன. பல நாடுகளில், பிரதேச ஊழி யர்களுக்குப் பயிற்சியளிக்க சுகாதார ஸ்தாபனத்தின் உதவி யைக் கோருகிறார்கள். இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்று வதுடன் ஆராய்ச்சி செய்யவும், பிறநாடுகளுக்குச் சென்று உயர்தரப் படிப்புக் கற்கவும், வருஷா வருஷம் நானூறு மாணவர்களுக்கு மான்யம் அளிக்கிறது. நாட்டின் தேவைக் குத்தக்கபடி மாணவர்களைப் பொறுக்குகிறார்கள். உள்நாட்டி லுள்ள நிபுணர்களையும் புத்திசாலிகளான மாணவர்களையும்

மிகவும் ஜாக்கிரதையாக சர்க்கார் அதிகாரிகளும் சுகாதார ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளும் கூடித் தேர்ந்தெடுக்கிறார்கள். தொத்து வியாதி நிவாரணம், சஸ்திர சாஸ்திரம், சுகாதார நிர்வாகம், பிரசவம், சிசு சம்ரக்ஷணை, என்று பல துறைகளில் அந்த அந்த நாட்டின் தேவைக்குத்தக்கபடி மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கிறார்கள். உலகிலுள்ள கோடிக்கணக்கான மக்களுக்குச் சேவை செய்ய வருஷத்தில் நானூறு மாணவர்கள் பயிற்சி பெறுவது பெருமைப்படக்கூடிய விஷயமல்ல. ஆனால் இந்த ஊழியர்கள் பத்து வருஷங்களுக்குள் நாலாயிரமாகி விடுவார்கள். அவர்களிடம் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான வாலிபர்களும் சமூகத்துக்குச் சேவை செய்வார்கள். ஒன்றுமே இல்லாததற்கு ஓரளவு சேவை என்று திருப்திப் படலாமல்லவா ?

உலகமக்கள் அனைவரும் ஒரே குடும்பம் என்று பாவித்து உதவி செய்யும்போது உத்சாகம் தோன்றுகிறது ; சலியாமல் உழைக்கத் தோன்றுகிறது. நாட்டுக்கு நாடு பழக்க வழக்கங்கள் மாறலாம் ; மத சம்பிரதாயங்களும் மாறலாம் ; சமூகக் கட்டுத்திட்டங்களும் வேவ்வேறுக இருக்கலாம். ஆனால் ஆரோக்கியமான சுகவாழ்வு எல்லோருக்கும் பொது. அதன் கீழ் எல்லா மக்களும் வந்துவிடுகிறார்கள். அத்தனை பேரும் ஒற்றுமையாக வாழமுடியும். இதுதான் டாக்டர் சிஷாமின் (Dr. Chisholm) சித்தாந்தம்.

மேலே குறிப்பிட்ட பெருஞ் சாதனைகளைத் தவிர பல காரியங்களில் சுகாதார சங்கம் ஒவ்வொரு நாட்டுக்கும் உதவி செய்து கொண்டேயிருக்கிறது. ஈக்வடாரில் பூகம்பம் ஏற்பட்டது. யுனிசெப் ஸ்தாபனம், உணவு-விவசாய ஸ்தாபனம், செஞ்சிலுகை சங்கம், ஆகிய பல ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஊழியர்கள் சென்றார்கள். கூடாரங்களை அடித்து ஜனங்களைத் தங்கச் செய்தார்கள். உணவும் துணிமணியும் கொடுத்தார்கள். அந்த மக்களுக்கு வைத்திய உதவியளிக்கவும், தொத்து வியாதிகள் வராமல் முன்னேற்பாடுகளைச் செய்யவும் சுகாதார ஸ்தாபன ஊழியர்

கள் சென்றார்கள். ஜீப், மோட்டார், விமானம் என்று கிடைத்த வாகனங்களை எடுத்துக்கொண்டு உதவி செய்ய ஓடினார்கள்.

பிரிட்டனில் கக்குவான் இருமல் வந்து ஊர் ஊராய்க் குழந்தைகள் கஷ்டப்பட்டார்கள். உடனே மருந்துகளை எடுத்துக் கொண்டு சுகாதார ஸ்தாபன ஊழியர்கள் சென்றார்கள். சில வாரங்களுக்குள் நிவாரணமளிக்கப்பட்டது.

தாய்லந்தில் கொசு உபத்திரவம் அதிகமாக இருந்தது. சுகாதார நிபுணர்கள் அங்கு சென்று ஒரு ஆராய்ச்சி நிலையத்தை ஸ்தாபித்தார்கள். கொசுக்களைப் பிடித்துச் சோதனை நடத்தினார்கள். ஒரு சதுரமைல் விஸ்தீர்ணத்திலுள்ள கொசுக்களை ஒழிக்க எத்தனை காலன் டிடிட் வேண்டும், எவ்வளவு மணிநேரம் வேலைசெய்யவேண்டும் என்று எல்லாம் கணக்கெடுத்தார்கள். மலேரியாவுக்குக் காரணமான கொசுக்களையல்லாமல், மனிதனுக்கு இடைஞ்சல் செய்யும் கொசுக்களையே அந்த நாட்டிலிருந்து ஒழித்துவிட்டார்கள்.

இரானில் ஓநாய்கள் கடிப்பதால் ஜனங்கள் அவதியுறுவதாகச் செய்திவந்தது. உடனே சுகாதார ஸ்தாபன ஊழியர்கள் சென்றார்கள். ஓநாய்க் கடியினால் நோயுற்று மரணமடையும் மக்களுக்கு உதவி யளித்து நூற்றுக்கணக்கான மக்களைக் காப்பாற்றினார்கள்.

இன்புளுவன்ஸா ஜுரம் உலகம் முழுவதும் பரவியுள்ள வியாதி. அதை ஒழிக்க சுகாதார ஸ்தாபனம் திட்டமிட்டிருக்கிறது. லண்டனில் பிரதான ஆராய்ச்சி நிலையமும் இருபத்தேழு நாடுகளில் கிளை ஸ்தாபனங்களும் ஏற்படுத்தி வேலை செய்கிறது.

இரவு பகல் என்றில்லாமல் எந்த நேரத்திலும் உதவி செய்யத் தயாராக இருக்கும் சுகாதார ஸ்தாபன கோஷ்டிகள் உலகம் எங்கும் இருக்கிறார்கள். எல்லா மக்களும் ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழவேண்டும் என்பதற்காகவே தேனீக்களைப்போல அவர்கள் சதா உழைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

7. பாலைவனத்தில் மணியோசை.

கிரீஸ் தேசத்தில் ஒரு கிராமம். எங்கே பார்த்தாலும் இடிந்த வீடுகள். ஒரு பாழடைந்த வீட்டின் முற்றத்தில் சில கற்களை அடுக்கிவைத்துக்கொண்டு குழந்தைகள் விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் கிராமப்பள்ளிக்கூடம். ஊரிலுள்ள அத்தனை குழந்தைகளுக்கும் கல்வி போதிக்க ஒரே ஒரு வாத்தியாரம்மாள்தான் உண்டு. எதிரேயிருந்த புதர் மறைவில் ஒரு பதினைந்து வயதுச்சிறுமி, குழந்தைகள் விளையாடுவதைக் கவனித்துக்கொண்டே யிருந்தாள். அவளும் ஒரு சமயத்தில் பள்ளிக்கூடத்தில் படித்தவள்தான். அவளுடன் படித்த பெண்கள் இன்று மீண்டும் படிக்க ஆசைப்படுகிறார்கள். குழந்தைகளின் விளையாட்டைக் கண்டு கைரியா என்ற அந்தப் பெண்ணுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "முட்டாள் குழந்தைகள், விளையாட்டைப்பார், விளையாட்டை" என்று சொல்லிக்கொண்டே ஓடிவந்து காலால் எட்டிக் கற்களைத் தட்டிவிட்டாள். குழந்தைகள் அழுதுகொண்டே ஓடின. சிறிது நேரத்துக்கெல்லாம் அவை மீண்டும் கூடின. வீடு கட்டி விளையாட மீண்டும் கற்களைப் பொறுக்கின.

கைரியா நல்ல பெண்; உத்சாகம் நிறைந்த பெண். யுத்தம் நடந்துகொண்டிருந்த காலத்தில் ஊரிலிருந்தவர்கள் அவளுடைய தைர்யத்தையும் சாகஸத்தையும் கண்டு மெச்சினர்கள். எதிரிப்படைகள் எங்கே இருக்கின்றன, எங்கே செல்கின்றன என்று வேவு பார்த்துவருவதில் கைரியா கெட்டிக்காரி. எதிரிகள் முகாமில்கூட நுழைந்து ரொட்டியும் இதரப் பொருள்களும் திருடிக்கொண்டுவந்துவிடுவாள். எதிரிகள் கையில் சிக்கிக்கொண்டாலோ செவிட்டு ஊமைபோல நடித்துத் தப்பிவந்துவிடுவாள். அவளுடைய வயசுக் குழந்தைகள் ரகசியம் ரகசியமாகப் பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்தபோது

அவள் தேச சேவையி லீடுபட்டாள். இப்போது அமைதி ஏற் பட்டு பள்ளிக்கூடம் திறந்துவிட்டாள். அவளுடைய தோழிகள் பள்ளிக்கூடம் போக ஆரம்பித்துவிட்டார்கள். கைரியாவைக் கண்டால் கேலிப்பார்வை பார்க்கிறார்கள். பெரியவர்களோ இப்போது அவளை 'உதவாக்கரைக் கழுதை' என்று திட்டு கிறார்கள். அதனால் கைரியாவுக்கு பள்ளிக்கூடத்தைக் கண் டாலே வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. குழந்தைகளைக் கண்டாலும் ஆத்திரம் வந்தது.

பள்ளிக்கூடத்தில் ஒரே ஒரு வாத்தியார். படிக்கப் புத்தகம் கிடையாது, எழுத பலகையோ நோட் புத்தகமோ கிடையாது. தரையைத் துடைத்துக் குச்சியினால் எழுதிப் படித்தார்கள். பெரிய குழந்தைகள், வாத்தியாரம்மாவிடம் இருந்த ஒரே ஒரு பழைய பாடப் புத்தகத்தைப் பார்த்து கையில் கிடைத்த காகிதத் தில் எழுதிக்கொண்டார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தில் போய்ப் படிக்க கைரியாவினால் முடியவில்லை. பெற்றோர்கள் கடிந்து கொண்டார்கள். கைரியாவின் சிறுமூளைச்சித்தனம்தான் அதி கரித்தது.

மறுநாள் பள்ளிக்கூடத்தின் பக்கமாக கைரியா சென்று கொண்டிருந்தாள். அப்போதும் குழந்தைகள் கற்களை அடுக்கி விளையாடிக்கொண்டிருந்தன. சின்னஞ்சிறு வீடு அல்ல; எல்லாக் குழந்தைகளும் உள்ளே உட்கார்ந்துகொள்ளும்படி, அறைபோல கற்களை அடுக்கிக்கொண்டிருந்தார்கள். தங்களுக்கு மாத்திரம் தனியாக வகுப்பும், விளையாட்டு இடமும் வேண்டும் என்று மறைப்புக் கட்டிக்கொண்டிருந்தார்கள். கைரியாவைப் பார்த்ததும் காஸ்டா என்ற சிறுவன் அழ ஆரம்பித்தான்.

கைரியாவின் மனம் இளகிவிட்டது. ஓடிப்போய் அவனை அணைத்துக்கொண்டாள். கைரியாவைப்பற்றி பெரியோர்கள் சொல்லும் கதைகளை அவன் கேட்டிருக்கிறான். அவளுடைய அணைப்பிலே பயம் தெளிந்தது அவனுக்கு. "அக்கா, வீடு கட்டிக்கொடு" என்று கொஞ்சினான்.

கைரியா கற்களைப் பொறுக்கினாள். மற்றக் குழந்தைகளும் பயம் தெளிந்து அவளை நெருங்கினார்கள். "அக்கா, வீடு கட்டவேண்டாம், நாங்கள் தனியாக உட்கார்ந்து விளையாட ஓர் அறை கட்டிக்கொடு. டாக்டர் மாமாவுக்கு ஓர் அறை கட்டிக் கொடு" என்று கேட்டார்கள்.

கைரியா சிரித்தாள். அறை கட்டிக்கொடுப்பதாவது! கதவு, ஜன்னல், கூரை எதும் இல்லாமலா? குழந்தைகளுக்கு மறைப் பாக இருக்க இடம் வேண்டும். அவர்களுடைய ஆசையை அவள் புரிந்துகொண்டாள். குழந்தைகள் கற்கள் பொறுக்கி வர ஒன்றின்மேல் ஒன்றுக கற்களை அடுக்கி, சுவர் எழுப்பினாள். தலை மறையும்படி சுவர் எழும்பிவிடவே குழந்தைகள் சந் தோஷத்தால் கொம்மாளமிட்டன. பக்கத்து ஊரிலுள்ள டாக்டர் அங்கு அடிக்கடி வருவார். அவர் எழுபத்தாறு பிராயமான கிழவர், குழந்தைகளுடன் கதைபேசி விளையாடுவார்; வீரர் களுடைய சரித்திரங்களைச் சொல்வார். அவருக்குத் தனியாக ஓர் அறை வேண்டும் என்றார்கள் குழந்தைகள். அதையும் கட்டி முடித்தாள் கைரியா.

வீடு கட்டி முடிந்ததும் பெயர் எழுதி ஒட்டவேண்டுமென்று குழந்தைகள் விரும்பின. கடிதாசும் பென்சிலும் வேண்டுமே! கைரியா திகைத்தாள். அப்போது வாத்தியார் அம்மாள் அங்கு வந்தாள். "என்னிடம் பேப்பர் இருக்கிறது தரட்டுமா?" என்று கேட்டாள். அவளைப் பார்த்ததும் கைரியாவுக்கு ஓடிவிட வேண்டும்போலத் தோன்றிற்று. மற்றக் குழந்தைகளைப் போலத் தன்னையும் படிக்கக் கூப்பிட்டுவிட்டால் என்ன செய்வது என்ற பயம் அவளுக்கு. வாத்தியாரம்மாள் அப்படி ஒன்றும் சொல்லவில்லை.

கடிதத்தை வாங்கிக்கொண்டாள் கைரியா. எழுதுவதற்கு இங்கி வேண்டுமே! எங்கோ சென்று சுவரில் ஒட்டிக்கொண் டிருந்த புகைக் கரியைச் சுரண்டிக்கொண்டுவந்தாள். தண் ணீரில் குழைத்து எழுத ஆரம்பித்தாள். குழந்தைகள் கேட்ட

படி பெயர்களை எழுதி ஒட்டினாள். பிறகு தினம் இடை வேளையில் அவள் பள்ளிக்கூடத்துக்கு வருவாள். குழந்தை களுடன் சிறிது நேரம் விளையாடிக் கொண்டிருந்துவிட்டுப் போவாள். ஒருநாள் மழைத்தூறல் ஆரம்பித்தது. குழந் தைகள் கட்டிடத்துக்குள் ஓடினர்கள். கைரியாவையும் இழுத் துக்கொண்டுதான் போனர்கள். உள்ளே நுழையவே அவ ளுக்குக் கூச்சம். குழந்தைகள் பிடித்துத் தள்ளிக்கொண்டு போனர்கள். அவளை வாத்தியாரம்மாள் சிரித்த முகத்துடன் வரவேற்றாள். அவளுடைய சம வயதுக் குழந்தைகளும் முறுவலித்தன. கைரியாவின் கூச்சமும் பயமும் தெளிந்தது.

மறுநாள் அவள் பள்ளிக்கூடத்துக்குச் சென்றபோது, குழந் தைகள் அவளைச் சூழ்ந்துகொண்டனர். தங்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுக்க வேண்டும் என்று வற்புறுத்தினர்கள். வாத்தியாரம்மாளும் அதை அங்கீகரித்தாள். கைரியாவும் வாத்தியாரம்மாளாகிவிட்டாள். குழந்தைகள் விளையாடு வதற்காக கூரையில்லாத அறை கட்டினாளே, அங்கேயே தன்னுடைய வகுப்பை வைத்துக்கொண்டாள். குழந்தைகள் அவள் சொல்லிக்கொடுப்பதை விருப்பத்துடன் கேட்டார்கள்.

ஒருநாள் வாத்தியாரம்மாள் சொன்னாள்: "கைரியா, நீ நன்றாகப் பாடம் சொல்லிக் கொடுக்கிறாய், குழந்தைகளுக்கு கணக்கும் சொல்லிக்கொடேன்" என்று.

கைரியா பதில் சொல்ல முடியாமல் தவித்தாள். கணக்குப் பாடம் என்றால் அவளுக்குத் தலைவலிதான். பள்ளிக்கூடத் தில் படிக்கும்போதே அவளுக்குக் கணக்குப்போட வராது. அவளுடைய தயக்கத்தை வாத்தியாரம்மாளும் புரிந்துகொண் டாள். அவள் சொன்னாள்: "பள்ளிக்கூடத்துக்கு கொஞ்சம் சீக்கிரமாக வந்துவிடு. நான் கொஞ்சம் கொஞ்சமாக உனக்குச் சொல்லித்தருகிறேன்" என்று.

கைரியா கணக்குப்போடக் கற்றுக்கொண்டாள். சில மாதங் களுக்குள் நிலைமை அபிவிருத்தியடைந்தது. ஒரு கரும்பலகை,

சாக்கட்டி, இரண்டு மூன்று பென்சில், கொஞ்சம் காகிதம், பத்துப் பாடப்புத்தகங்கள்—இவை எல்லாம் பள்ளிக்கூடத்துக்குக் கிடைத்தன.

ஒருநாள் கைரியா கலங்கிய கண்களுடன் சொன்னாள்: "வாத்தியாரம்மா, என்னைத் திருத்தி நல்வழிப் படுத்தியதற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்" என்று.

"கைம்மாறு? அதைத்தான் செய்து கொண்டிருக்கிறாயே! உன்னைப்போல குழந்தைகளை அன்புடன் பார்த்துக்கொள்ள யாரால் முடியும்?" என்றாள் வாத்தியாரம்மாள்.

கைரியா திகைத்துப்போனாள். அப்போது வாத்தியாரம்மாள் மேஜையிலிருந்து ஒரு புத்தகத்தை எடுத்து "இதோ பார் கைரியா, உன்னைப்போல தேசசேவை செய்த வீரர்களைப் பற்றித்தான் இதில் எழுதியிருக்கிறது" என்றாள். அது ஆங்கிலப்புத்தகம். ஐரோப்பாவிலுள்ள சிறுவர்களையும், பள்ளிக்கூடங்களையும்பற்றி 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் வெளியிட்ட சிறு அறிக்கை. கைரியாவுக்கு ஆங்கிலம் தெரியாது. வாத்தியாரம்மாள் அதைப் படித்து கிரேக்க மொழியில் சொன்னாள்: "உன்னைப்போல எத்தனையோ குழந்தைகள் யுத்த காலத்தில் அற்புதமாக சேவை செய்தார்கள். அப்போது அவர்களை எல்லாரும் கொண்டாடினார்கள். முரட்டுத்தனமாக எதிரிகளை எதிர்த்து நிற்கும் சிறுவர்களைப் பாராட்டினார்கள். அவர்களுக்கு முரட்டுத்தனம் படிந்துவிட்டது. இப்போது அந்தச் சிறுவர்களை எல்லோரும் வெறுக்கிறார்கள்; வருந்துகிறார்கள். இதற்குத் தாங்கள்தான் பொறுப்பு என்பதை பெரியவர்கள் மறந்துவிட்டார்கள்.

"தாய்நாட்டுக்காக எதிரிகளை எதிர்ப்பதும், எதிரி முகாமில் நுழைந்து ஆகாரம் திருடுவதும், வேவுபார்ப்பதும், நாசவேலை செய்வதும் தீரச் செயல்கள் என்று பாராட்டினார்கள். குழந்தைகளை உத்சாக மூட்டினார்கள். குழந்தைகளின் மனத்தில் அவை பதிந்துவிட்டன. செய்வது சரி என்று தோன்றி

பழக்கத்துக்கும் வந்த செயல்களை திடீர் என்று மாற்றிக் கொள்ளமுடியாது. முன்பு பாராட்டியவர்கள் இப்போது ஏன் வெறுக்கிறார்கள் என்று சிந்தித்துப் பார்க்கும் பொறுமை குழந்தைகளுக்கு கிடையாது. சிந்தித்தாலும் புரியாது. அவர்கள் திகைத்துப்போகிறார்கள்; அழுகிறார்கள்; முரட்டுத்தனம் செய்கிறார்கள். அவர்களை நயமாக நல்வழிப்படுத்த பெரியவர்கள் முயலவேண்டும்."

"நானும்தான் பொய் சொல்லியிருக்கிறேன், திருடியிருக்கிறேன்" என்று குறுக்கிட்டாள் கைரியா.

"ஆமாம், ஆனால் எப்போதுமே நீ குழந்தைகளிடம் அன்பாகத்தானே பழகுகிறாய்" என்று சமாதானப்படுத்தினாள் வாத்தியாரம்மாள்.

வாத்தியாரம்மாள் படித்துக்காட்டிய அறிக்கை மிகவும் பொடியான எழுத்துக்களில் பதினாறு பக்கமுள்ள சிறு புத்தகம். அதை 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் வெளியிட்டது. அதைப் படித்த பல கிராமவாசிகளும், ஆசிரியர்களும், சமூக ஊழியர்களும் உத்சாகமடைந்தார்கள். அது அறிக்கை என்றுமட்டும் சொல்லி விடமுடியாது; அப்போது ஐரோப்பிய நாடுகள் இருந்த நிலைமைக்கு, அது மக்களுக்கு புத்தொளி காட்டும் சித்தாந்தப் புத்தகம் என்றுகூடச் சொல்லிவிடலாம்.

ஐரோப்பிய நாடுகளில் யுத்தத்தினால் பல கல்லூரிகளும், சர்வகலாசாலைகளும், விஞ்ஞான கூடங்களும் நாசமாயின. கட்டடங்கள் நாசமானதுடன் பல வருஷ உழைப்பின் பலனைச் சேகரித்திருந்த அருமையான உபகரணங்களும் புத்தகங்களும் எரிந்து சாம்பலாயின. மக்களுடைய சமூக வளர்ச்சிக்காகவும், கலாசார, பொருளாதார முன்னேற்றத்துக்காகவும் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தவேண்டும் என்று ஐ.நா. சபை அங்கத்தினர்கள் தீர்மானித்தார்கள். 1946-ஆம் வருஷம் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான, கலாசார ஸ்தாபனத்தை (United Nations Educational, Scientific and Cultural Organisa-

tion) 59 தேசப்பிரதிநிதிகள் கூடி அமைத்தார்கள். இந்த ஸ்தாபனத்தின் தலைமைக் கார்யாலயம் பாரிஸில் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார்கள். மற்ற சர்வதேச ஸ்தாபனங்களைப்போலவே இந்த ஸ்தாபனமும்—இதை ஆங்கிலப் பெயரிலுள்ள முதல் எழுத்துக்களைச் சேர்த்து 'யுனெஸ்கோ' என்று சுருக்கமாகச் சொல்வார்கள்—ஐ.நா. சபையின் ஏஜன்ஸிதான். பதினெட்டு அங்கத்தினர்கொண்ட ஒரு நிர்வாக சபையும் டைரெக்டர்-ஜனரலும் இந்த ஸ்தாபனத்துக்கு உண்டு. யுனெஸ்கோவின் வேலைத் திட்டத்தை பின்வருமாறு சுருக்கமாகச் சொல்லிவிடலாம். பலதேச மக்கள் பரஸ்பரம் பேசிப் பழகுகிறார்கள். மன ஒற்றுமையும் நட்பும் ஏற்படவே அவர்களுடைய உறவு பலப்படுகிறது. இதைச் செய்வதுதான் யுனெஸ்கோவின் வேலை. இதன் நிர்வாகத் தலைவர் பேராசிரியர் ஜூலியன் ஹக்ஸிலி **(Julian Huxley)** என்ற பிரிட்டிஷ்காரர். ஐ.நா.வின் பொதுக் காரியதரிசிதான் இதற்கும் மேற்பார்வையாளர்.

"எல்லா தேசத்து மக்களிடையே நல்லுறவும் நட்பும் வளரவும், நெறியும் ஒழுக்கமும் கடைப்பிடித்து, சட்டத்துக்கும் தர்மத்துக்கும் நீதிக்கும் கட்டுப்பட்டு, மனித உரிமைகளை மதித்து இன, மத, பாஷை, பால், பிரதேச பேதமின்றி எல்லோரும் ஓர் குலமாக வாழ்ந்து உலக அமைதியும் சமாதானமும் ஏற்படுவதற்கு கல்வி, விஞ்ஞானம், கலாசாரம், தார்மீக மார்க்கம் ஆகிய துறைகளில் பாடுபடுவோம்" என்ற உறுதியுடன் பல நாட்டுப்பிரதிநிதிகள் 'யுனெஸ்கோ' அமைப்பு விதிகளில் கையெழுத்திட்டார்கள்.

மற்ற ஸ்தாபனங்களைப்போல, என்ன வேலை செய்வது? எங்கு ஆரம்பிப்பது? எப்படிச் செய்வது என்ற பிரமிப்பு 'யுனெஸ்கோ' நிர்வாகிகளுக்கும் இருக்கத்தான் இருந்தது. ஐரோப்பாவிலுள்ள குழந்தைகளின் நிலைமையை ஐ.நா. சபையின் பிரதிநிதிகள் அறிந்திருந்தார்கள். ஆகவே அங்குள்ள குழந்தைகளுக்கு முதலில் கல்வி போதிக்க வசதிகளைத் தருவது,

பிறகு மற்ற நாடுகளின் தேவைகளைக் கவனிப்பது என்று நிச்சயித்தார்கள்.

நாஜி ஆக்ரமிப்பு ஏற்பட்ட நாடுகளில் பல வருஷங்களுக்கு முன்னேயே இந்தத் துறையில் பல அறிஞர்கள் கவனம் செலுத்தினர்கள். 1942-ஆம் வருஷம் எதிரிகளின் விமானங்கள் குண்டுகளை வீசிக்கொண்டிருக்கும்போதே, லண்டனில் கார்யாலயங்களை அமைத்துக்கொண்டு வேலை செய்துகொண்டிருந்த பல நாடுகளின் அவசரகால சர்க்கார் நிர்வாகிகள், பிரிட்டிஷ் கல்வி மந்திரியின் தலைமையில் கூடி எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தித்தார்கள். யுத்தம் முடிந்ததும் குழந்தைகளுக்கு கல்வி வசதியளிக்க உபகரணங்களும் இதர வசதிகளும் வேண்டுமே என்று கவலைப்பட்டார்கள்; ஓரளவு ஏற்பாடுகளும் செய்திருந்தார்கள்.

'யுனெஸ்கோவின்' முதல்வேலை ஐரோப்பாவிலுள்ள ஆசிரியர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், எஞ்சினீயர்கள், எழுத்தாளர்கள், சங்கீத வித்வான்கள் ஆகியவர்களை அழைத்து ஒரு மகாநாடு நடத்தியதுதான். ஐரோப்பாவின் உடனடித் தேவையைத் தெரிந்துகொள்ளவும் பரவலான முறையில் ஒரு திட்டம் வகுத்துக்கொண்டு வேலை செய்யவும் அந்த மகாநாடு பயன்பட்டது. அதன்பிறகு அடிக்கடி மகாநாடுகள் நடந்தன.

ஒவ்வொரு நாட்டின் தேவையையும் நேரில் தெரிந்து கொள்ள 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் ஒரு தூதுகோஷ்டியை அனுப்பிற்று. சர்க்கார் கல்வி இலாகா அதிகாரிகளுடனும், சர்வ கலாசாலை, கைத்தொழில் பள்ளிக்கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் போன்ற ஸ்தாபனங்களின் தலைவர்களுடனும் கலந்து பேசி, தூதுகோஷ்டி ஓர் அறிக்கை தயாரித்தது. ஆஸ்டிரியா, பெல்ஜியம், சைனு, பர்மா, செக்கோஸ்லாவாகியா, எதியோபியா, பிரான்ஸ், கிரீஸ், இரான், இத்தாலி, லக்ஸம்பர்க், நெதர்லந்து, பிலிப்பைன்ஸ், போலந்து, யுகோஸ்லாவியா, ஹங்கேரி, இந்தியா, மால்டா, சிங்கப்பூர், போர்னியா, ஸராவக், ஆக

இருபத்தோரு நாடுகளுக்கும் தூதுகோஷ்டி சென்று திரும்பிற்று.

நாடு நாடாகச் சுற்றித் தகவல் சேகரிக்கப் பல மாதங்களாகும். மேலும் யுத்த சேதத்திலுல் பல நாடுகளில் உள்நாட்டுப் போக்குவரத்து பாதிக்கப்பட்டிருந்தது. மிகவும் அவசரமாக திட்டம் வகுத்து உதவியளிக்க வேண்டிய சந்தர்ப்பத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருப்பதும் விரும்பத்தக்கதல்ல. கிரீஸ் கிராமத்திலுள்ள கைரியாவைப் போல, எத்தனையோ கிராமங்களில் உபகரணங்கள் ஏதுமின்றி, மரத்தடிகளிலும், இடிந்த கட்டடங்களிலும் குழந்தைகளைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு ஆசிரியர்கள் கல்வி போதித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அத்யாவசியத் தேவைகளையாவது உடனே கொடுக்க வேண்டும். ஸ்லேட், பென்சில், பேப்பர் என்று எதுமே யில்லாமல் உத்சாகம் ஒன்றிலுலேயே கல்வி போதிக்கும் ஆயிரக் கணக்கான ஆசிரியர்களுடைய ஆர்வம் குறையாது காப்பாற்ற வேண்டிய பொறுப்புத்தான் மிக மிக முக்கியமான பிரச்னையாக இருந்தது. வசதியின்மையிலுல் மனம் சோர்ந்து தன்னம் பிக்கை யிழந்துவிடாமலிருக்கவேண்டுமாலுல் அவர்களுக்குத் தார்மீகத் துறையில் ஆதரவு காட்டுவதே முதல் வேலை என்று அறிஞர்கள் எண்ணினர்கள். இதை எப்படிச் செய்வது? சித்தாந்தங்களைச் சொல்லி உத்சாகமூட்டுவதில் பயனிருக்காது என்று அவர்களுக்குத் தெரியும். பசித்துத் துடிப்பவனிடம் உபவாச மகிமையை எடுத்துச் சொன்லுல் பலனிராது. பல பல ஊர்களில், ஆசிரியர்கள் தம்தம் புத்தி சக்தியை உபயோகித்து, உபகரணங்களைத் தேடி குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கிறார்கள் என்பது வெளி நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்கும் தூதுகோஷ்டிகளின் மூலம் தெரிந்தது. ஒருவருடைய அனுபவத்தை மற்றவருக்கு எடுத்துச் சொல்வ தாலேயே ஆசிரியர்கள் மனச் சோர்வு நீங்கி, உத்சாகத்துடன் வேலை செய்யக்கூடும் என்று கல்வித்துறையில் அனுபவ முள்ள அறிஞர்கள் எண்ணினர்கள்.

சில கிராமங்களில் பாடப் புத்தகங்களே இராது. ஆசிரியரிடம் ஒரே ஒரு புத்தகம்தான் இருக்கும். அதுவும் எதாவது ஒரு வகுப்புப் பாடப்புத்தகமாக இருக்கும். மற்ற வகுப்புகளுக்குப் பாடப்புத்தகமே இராது. அதனால் ஆசிரியர்கள் சோர்வுற்று விடவில்லை. ஞாபகத்திலிருக்கும் பாடத்திட்டப்படி, எழுதிக் காட்டுவார்கள். குழந்தைகள் எழுதிக்கொண்டு மனப்பாடம் செய்துவிடுவார்கள். சில இடங்களில் எழுதுவதற்கு சாக் கட்டியோ, ஸ்லேட்டோ, பென்சிலோ இருக்காது. அங்கு, குச்சியினால் மணலில் எழுதிக் காட்டுவார் ஆசிரியர். குழந்தை களும் மணலில் எழுதிப் பழகுவார்கள். கைரியாவின் பள்ளிக்கூடத்தில், சுவரில் படிந்த கரியைக் குழைத்து எழுதினதுபோல எத்தனையோ பள்ளிக்கூடங்களில் செய் திருக்கிறார்கள். சில ஊர்களில் எல்லா வகுப்புகளுக்கும் ஒரே ஆசிரியர்தான் இருப்பார். குழந்தைகளை நாள் முழுவதும் அடைத்துப்போட்டுக்கொண்டு அவர் கஷ்டப்படுவதில்லை. ஊரி லுள்ள பெரியோர்களைக் கூப்பிட்டு, குழந்தைகளுக்குக் கதை சொல்லச் சொல்வார். நாடோடிப் பாடல்களைக் கற்றுத்தரச் சொல்வார்கள். பழக்க வழக்கங்களைப் பற்றியும் வீரர்களின் சாகஸங்களைப்பற்றியும் சொல்லச் செய்வார்கள். இதனால் அவர்களுக்கு மட்டும் ஓய்வு கிடைக்கவில்லை, குழந்தைகளுக்கும் புதுப்பாட முறை கிடைத்தது. கலாசாரத் துறையிலும் முன்னேற்ற மேற்பட்டது. கைரியாவைப்போல புரட்சிக்காரப் பெண்களையும் வாலிபர்களையும் நல்வழிப்படுத்தி, தங்களுக்கு உதவி ஆசிரியர்களாகச் செய்துகொண்ட பெருமை எத்தனையோ ஆசிரியர்களைச் சேர்ந்ததாகும். தேவைக்குத் தக்கபடி சிந்தனை விரிந்தது; புதுப்புது முறைகளும் உப கரணங்களும் தோன்றின. ஆனால் இந்த மாதிரி எல்லா ஊர்களிலும் எல்லாராலும் சமாளிக்கமுடியவில்லை. அந்த மாதிரியிருந்த ஆயிரக்கணக்கான பேர்களை உத்சாகப்படுத்தவே ஓர் அறிக்கை தயாரித்தார்கள். இடைக்கால நெருக்கடியைச் சமாளித்துவிட்டால் அதிசீக்கிரம் உதவியளிக்கமுடியும் என்ற நம்பிக்கையிருந்தது. இடைக்காலத்திலேற்பட்ட நெருக்கடி

நீடித்திருக்கமுடியாது என்றாலும் அதற்குள் மக்கள் மன மிடிந்துவிட்டால் புனருத்தாரண வேலைகளைச் சுலபமாகச் செய்ய முடியாது போலிருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் கிரீஸ் தேசம்தான் படுநாசமடைந் திருந்தது. எந்தப் பொருளும் கிடைக்காமல் மக்கள் தவித்துக் கொண்டிருந்தார்கள். மேலும் 'யுனெஸ்கோ' ஸ்தா பனம் தயாரிக்க விரும்பிய அறிக்கையை அச்சிட்டு விநியோகிக்க பொருளுதவி செய்ய கிரீஸ் சர்க்கார் முன்வந்தார்கள். கிரீஸ் தேசத்திலுள்ள ஆசிரியர்களின் சாகஸமும் சாமர்த்தியமும் கேட்கக் கேட்கப் பிரமிப்பூட்டின. பேராசிரியர் லியோனர்டு கென்வர்த்தியும் (Leonard S. Kenworthy) ஐ.நா. ஸ்தாப னத்தின் ஒரு பிரிவான சர்வ தேச கல்வி புனருத்தாரணப் பகுதியின் டைரெக்டரான ஹெரால்ட் ஸ்நைடரும் (Harold E. Snyder) கிரீஸ் தேசத்தில் மூன்றுவாரம் சுற்றுப்பிரயாணம் செய்து தகவல் சேகரித்தார்கள். நகரம், ஊர், கிராமம் என்று எங்கு சென்றாலும் கல்விகற்க ஆர்வமுள்ள குழந்தைகளையும், கைரியாவைப்போன்ற வாலிப ஆசிரியர்களையுமே அவர்கள் சந்தித்தார்கள். அவர்களுடைய புத்திசாலித்தனத்தையும் போதனை சக்தியையும் கண்டு வியந்தார்கள்.

சுற்றுப்பிரயாணம் முடிந்ததும் வர்ணனை எதுமின்றி மிகவும் சுருக்கமாக ஓர் அறிக்கையை கென்வர்த்தி தயாரித்தார். கல்வித்துறையிலீடுபட்டுள்ள அனுபவம் மிகுந்த ஆசிரியர்களின் உதவியைக்கொண்டு சில யோசனைக் குறிப்புகளையும் சேர்த்தார். நாள் முழுவதும் குழந்தைகளை அடைத்துப் போட்டுக் கொண்டிருக்க முடியுமா? கதை சொல்லிப் போக்குக் காட்டிக் கொண்டிருக்க முடியுமா? உள்ளூரில் பழக்கமான விளை யாட்டுகளைக் கற்றுக்கொடுங்கள். கந்தைகளைச் சுருட்டி துணிப் பந்து தயாரித்துக் கொடுங்கள். ரப்பர் பந்தைப்போல துணிப் பந்து எழும்பிக் குதிக்காது என்பது உண்மைதான். ஆனால் உருண்டு ஓடும். இதை குழந்தைகள் ரசிப்பார்கள். கரும் பலகை இல்லையே என்று தவித்துக் கொண்டிருக்கவேண்டாம்.

உள்ளூர் தச்சனிடம் ஒரு பலகையைக் கருப்பாக்கித் தரச் சொல்லுங்கள். அல்லது வர்ணம் பூசுகிறவனைக் கேட்டு சுவரில் ஒரு பகுதியைக் கருப்பாக்கிக் கொள்ளுங்கள். இதேபோல, சாக்கட்டி, இங்கி, போன்ற பல உபகரணங்களுக்கு மாற்றுச் சொல்லி அறிக்கையை முடித்தார்.

உதவி கிடைக்கும் என்று தெரிந்ததும் ஆசிரியர்கள் சந்தோஷமடைந்தார்கள். குழந்தைகளை நல்வழிப்படுத்தவும், சிறந்த பிரஜைகளாக்கவுமே அவர்கள் பாடுபட்டார்கள். ஆகவே தங்களுடைய சக்திக்குப் புறம்பான பிரச்னைகளை எடுத்துச் சொல்லி பரிகாரம் தேடினார்கள். சில குழந்தைகள் சதா சிடுமூஞ்சித்தனம் செய்தன. சில குழந்தைகளின் மனத்தில் இன, வர்க்க பேத வெறி மூண்டு கிடந்தது. அதனால் அவர்களுக்கு ஆத்திரமும், துவேஷமுமே அதிகமாக இருந்தது. சில குழந்தைகள் சாவையும் இரத்தக்களறியும் பார்த்திருந்ததால், ஹிருதயம் மரத்துப்போய், எல்லாரிடமும் கொடூரமாக நடந்து கொண்டார்கள். வேறு சில குழந்தைகளுக்கு இரக்கசிந்தனையே மாறிவிட்டது. மிருகத்தனமாக ஒருவரையொருவர் ஹிம்சித்துக் கொண்டதைக் கண்டு ஆசிரியர்கள் மனம் மருகினார்கள். இந்தக் குழந்தைகளை நல்வழிப்படுத்துவது எப்படி என்று ஏங்கினார்கள். யுத்த காலத்தில் ஏற்பட்ட சகிக்கமுடியாத கஷ்டங்களினால் இரண்டுங்கெட்டானாக இருந்த குழந்தைகளின் மனத்தில் விபரீத எண்ணங்கள் தோன்றிவிட்டன. மேலும் சரியான போஷாக்கு இல்லாததால், பல குழந்தைகள் சோர்வுற்று சிடுமூஞ்சிகளாகி விட்டார்கள். உலகின் பல்வேறு பாகங்களிலுள்ள அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள், குழந்தைக் கல்வியில் சிரத்தையுள்ள மனோதத்துவ நிபுணர்கள்—இவர்களுடைய உதவியைக் கொண்டு இந்தப் பிரச்னைகளுக்கெல்லாம் வழிதேட கென்வர்த்தியும் அவருடைய சகாக்களும் முயன்றார்கள்.

வாலிபர்களைப்பற்றி மனோதத்துவ நிபுணர்கள் கூறிய யோசனை இதுதான்: "விவரம் தெரிந்த சிறுவர்களுக்கு

வெறுப்பும் ஏமாற்றமும், சௌகர்யக்குறைவினால் சண்டித் தனமும் ஏற்பட்டுவிட்டது. கைரியா போன்ற யுவதிகளையும் வாலிபர்களையும் நல்வழிப்படுத்த ஒரே ஒரு மார்க்கம்தான் உண்டு. யுத்த காலத்தில் அவர்களுக்கு தேசபக்தி வெறி யூட்டியது போல இப்போதும் செய்ய வேண்டும். அவர் களுடைய உழைப்பினாலும் உத்சாகத்தினாலும்தான் தேசப் புனருத்தாரண வேலைகள் நடந்து மேன்மை யடைய வேண்டும். இதை அவர்களிடம் எடுத்துச் சொல்வதுமட்டும் போதாது. சிந்திக்கவோ, சோம்பி நிற்கவோ அவகாசமில்லாமல் மேலும் மேலும் வேலை கொடுத்துக்கொண்டே யிருக்கவேண்டும். சிந் திப்பதற்குச் சிறிது நேரம் கிடைத்தாலும் அவர்களுடைய புத்தி மருளுகிறது. உடலுழைத்து வேலை செய்ய சந்தர்ப்பம் கொடுங் கள். தேசத்தின்பேரால் ஆணையிட்டு வேலை வாங்குங்கள். ஒரு கட்டடம் கட்டும் வேலையிருந்தால், இடிந்து கிடக்கும் மண் ணையும் கல்லையும் அப்புறப்படுத்தவும், கட்டடம் கட்டும்போது சித்தாள் வேலை செய்யவும் கோஷ்டி கோஷ்டியாகச் சிறுவர் களை அனுப்புங்கள். கிராமத்திலுள்ள பொது உணவுச்சாலை யில், காய்கறி நறுக்கவும், பாத்திரங்களைக் கழுவவும், உணவு பரிமாறவும் குழந்தைகளைக் கூப்பிடுங்கள். காய் கறித் தோட்டம் போடுவதும், சின்னஞ்சிறு குழந்தைகளைக் கவனித்துக் கொள்வதும் தேசீய தர்மம் என்று வாலிபர்களுக்கும் யுவதி களுக்கும் உபதேசம் செய்யுங்கள். எதிர்கால நிர்மாண வேலை ஒவ்வொன்றிலும் உங்களுடைய பங்கும், பொறுப்பும், அதிகம் என்று கூறி வாலிபர்களையும் பெண்களையும் உத்சாகமூட்டுங்கள்.”

யுத்தத்தினால் நாசமடைந்த நாடுகளிலுள்ள குழந்தை களும் ஆசிரியர்களும்—என்ற பெயருடன் ஒரு சிறு புத்தகத்தை ‘யுனெஸ்கோ’ ஸ்தாபனம் வெளியிட்டது. எல்லா நாடு களிலும் ஆங்கில பாஷை தெரிந்தவர்கள் இருந்ததால், அறிக்கையை ஆங்கிலத்தில் பிரசுரித்தார்கள். பிறகு தேவை எற்பட்டபோது, பிரஞ்சு, செக், ஸ்வீடிஷ், டச், ஜெர்மன் பாஷை களில் மொழி பெயர்த்து விநியோகித்தார்கள். ஆசிரியர்

களுக்குமட்டுமின்றி, சிறுவர் முன்னேற்றத்தில் கருத்துள்ள பல சமூக ஊழியர்களுக்கும் கல்வி ஸ்தாபனங்களுக்கும் இதை விநியோகித்தார்கள்.

அறிஞர்கள் எதிர்பார்த்த பலன் அதிசீக்கிரமே கிடைத்தது. அறிக்கையைப் படித்த பல வாலிபர்கள் தன்னம்பிக்கையுடனும் தளராத ஊக்கத்துடனும் வேலை செய்தார்கள். கைரியாவின் வாத்தியாரம்மாள் இதைப் படித்துத்தான் அவளை உத்சாகப் படுத்தினாள்.

ஹாலந்திலுள்ள ஆசிரியர்களின் உத்சாகத்தினால் உலகம் முழுவதும் 'வனமகோத்சவம்' என்ற மரம் நடும் விழா பரவிற்று. ஹாலந்து ஆசிரியர்களின் ஆர்வத்தை 'யுனெஸ்கோ' பிரசாரத்தின்மூலம் தெரிந்துகொண்டவர்கள், தம்தம் நாடுகளில் மரம் நடும் விழாக்களைக் கொண்டாடினார்கள். இன்று ஐரோப்பாவில், பாழடைந்த பிரதேசங்கள் பசுமை குலுங்கி நிற்பதற்கு சிறுவர்களின் உழைப்புத்தான் காரணம்.

ஹாலந்தில் குண்டுவீச்சுக் காரணமாக, பல கட்டடங்கள் தவிடுபொடியாயின. வெளி நாடுகளிலிருந்து நிலக்கரியும், மரமும் வரமுடியாது போயிற்று. நாடெங்கும் விறகுப் பஞ்சம் ஏற்பட்டது. இடிந்து கிடக்கும் வீடுகளிலுள்ள கதவுகளையும் ஜன்னல்களையும், உத்தரங்களையும் அடுப்பெரிக்க ஆரம்பித்து விட்டார்கள். இந்த நாசத்தைத் தடுக்கவும், அதிசீக்கிரத்தில் புது மரங்கள் நட்டு விறகுப் பஞ்சத்தை ஒழிக்கவேண்டும் என்றும் வாலிபர்கள் எண்ணினார்கள். பள்ளிச்சிறுவர்களை உத்சாகப்படுத்தினார்கள். அங்கங்கே விழாக் கொண்டாடி, தெருக்களிலும், பார்க்குகளிலும், வீட்டுத் தோட்டங்களிலும் செடிகளை நட்டார்கள். சிறுவர்களுக்கு இது சிறந்த பொழுது போக்காகவும் உத்சாகமூட்டும் வேலையாகவுமிருந்தது. தேசிய ஆர்வத்துடன் செய்ததால், நட்ட செடிகளை ஆடுமாடுகள் கடித்து விடாமலும், விஷமக்காரக் குழந்தைகள் கிள்ளியெறியாமலும் பாதுகாப்பதில் பள்ளி மாணவர்கள் உத்சாகங் கொண்டார்கள்.

நீண்டகால திட்டமிட்டு ஒவ்வொரு நாட்டுக்கும் உதவி செய்ய வேண்டிய பொறுப்பும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்துக்கு ஏற் பட்டது. சர்வகலாசாலைக் கட்டடங்களும், விஞ்ஞான கூடங்களும் நாசமடைந்துவிட்ட நாடுகள் பல. எழுதப்படிக்க பென்சிலும் புத்தகமும் இல்லாமல்கூடத் திண்டாடும் நாடுகள் பல. பென்சில் முதல் பெரிய ஆராய்ச்சிக் கருவிகள் வரையில் லக்ஷக் கணக்கான ரூபாய்களுக்கு வாங்கி ஒவ்வொரு நாட்டுக்கும் அனுப்ப வேண்டியதாயிற்று.

"உங்களிடமிருந்து நாங்கள் எதிர்பார்க்கும் முதல் உதவி, தார்மீக ஆதரவுதான். தன் கையே தனக்கு உதவி என்னும் பழமொழியில் எங்களுக்கு நம்பிக்கையுண்டு. தன்னுடைய கை சேதத்துப்போகும்போது பிறர் கை கொடுத்து உதவத் தயாராக இருக்கிறார்கள் என்று எண்ணும்போதே தெம்பும் தைர்யமும் ஏற்படுகிறது. எங்கள் நாட்டுக்கு ஒரு மைக்ராஸ் கோப் (பூதக்கண்ணாடி) கிடைத்திருக்கிறது. நல்லுறவைக் காட்டும் பரிசுதான் என்றாலும் இப்போது எங்களுக்கு அது பெரிய பொக்கிஷமாகும். மாண்டலே நகரிலிருந்த பள்ளிக் கூடங்களும் கல்லூரிகளும் தரைமட்டமாகிவிட்டன. இப்போது கிடைத்த பூதக்கண்ணாடி ஒன்றுதான் புதிதாக ஆரம்பித்துள்ள ஆராய்ச்சி கூடத்துக்கு முதல் சாதனம். இதற்கு முன்பு எதுமே கிடையாது. நாளாவட்டத்தில் வசதிகள் ஏற்படக்கூடும். ஒரு பூதக் கண்ணாடியைச் சூழ்ந்து நாற்பது ஐம்பது மாணவர்கள் நிற்கிறார் கள்; அளைகரியமாகத் தானிருக்கிறது. ஒன்றுமே இல்லாம லிருப்பதற்கு இதாவது கிடைத்ததே என்ற ஆறுதல்தான் எதிர் கால வாழ்க்கைக்கு நம்பிக்கையூட்டுகிறது. பர்மாவிலே பாலங்கள் எல்லாம் உடைத்தெறியப்பட்டன. ரோடுகளோ பிரயாணத் துக்கு லாயக்கின்றி குண்டும் குழியுமாகக் கிடக்கின்றன. கிரா மத்துக்கு கிராமம் மக்கள் நோயும் நொடியுமாகக் கிடக்கிறார் கள். தேசப் புனருத்தாரணத்துக்கு ஏராளமான டாக்டர்களும் எஞ்சினீயர்களும்தான் உடனே தேவை. வெளிநாடுகளி லிருந்து இவர்களை வரவழைக்கமுடியுமா என்று நாங்கள்

யோசித்துக்கொண்டிருக்கவில்லை. எங்களுடைய வாலிபர்களுக்குப் பயிற்சியளியுங்கள். இதுதான் நீங்கள் செய்யும் உதவி" இப்படி பர்மாவின் கல்வி மந்திரி 'யுனெஸ்கோவுக்கு' க் கடிதம் எழுதினர்.

பல நாடுகளில் தேசப்புனருத்தாரண வேலைகளில் வாலிபர்களும் யுவதிகளும் ஈடுபட்டார்கள். மகத்தான கஷ்டங்களுக்கு ஆளாகி சலியாமல் உழைத்தார்கள். யுகோஸ்லாவியாவில், எஞ்சினீயர்களுடைய மேற்பார்வையில் பல வாலிபர் சங்கங்கள், வாய்க்கால் வெட்டவும், ரோடுகள் நிர்மாணிக்கவும் முன் வந்தார்கள். துஸ்லா (Tuzla) என்ற நிலக்கரிப் பிரதேசத்துக்கும் பாஸ்னியாவிலுள்ள (Banovic mines in eastern Bosnia) சுரங்கங்களுக்கும் நீண்டதொரு ரெயில்வே லைனைப்போட நிச்சயித்தார்கள். தேசத்தின் பல பாகங்களிலுமிருந்து 62,000 வாலிபர்கள் இந்த வேலையைச் செய்ய முன் வந்தார்கள். காடுகளிலும், வெளிகளிலும், கூடாரங்களை அடித்துக்கொண்டு, தாங்களே சமைத்துச் சாப்பிட்டுக்கொண்டு, ஆறுமாத காலத்துக்குள் அந்த வேலையைச் செய்துமுடித்தார்கள். அந்தப் பாதையிலிருந்த இருபத்திரண்டு பாலங்களையும் அவர்களே கட்டினர்கள். ஹங்கேரியிலுள்ள பொதுஜன வாலிபர் சங்கத்தின் அங்கத்தினர்கள் அனைவரும் மாணவர்கள் தான். காலை நேரத்தில் பள்ளிக்கூடத்தில் படித்துவிட்டு பிற் பகலில் அணிவகுத்துச் சென்று பல இடங்களுக்குப் போவார்கள். பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டவும் இதரப் பொதுக் கட்டடங்கள் கட்டவும் உதவி செய்வார்கள். புடாபெஸ்ட் (Budapest) நகரில் மட்டும் இந்த மாதிரி மாணவர் பட்டாளம் இருபத்து நான்கு இருந்தது. ஹங்கேரி முழுவதும் நானூறுக்கும் அதிகம் படைகள் உண்டு. பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய இங்கி புட்டிகள், ஸ்லேட், நோட் புத்தகங்கள், பைகள் எல்லாம் தயாரிப்பதில் நூற்றுக்கணக்கான பெண்கள் உதவி செய்தார்கள்.

ஒவ்வொரு நாட்டின் தேவைகளை அறிந்து வர தூது கோஷ்டியை 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் அனுப்பியதல்லவா?

தூதுகோஷ்டி அறிக்கையைச் சமர்ப்பித்ததும், இரண்டு பிரிவு களாகப் பிரித்துக்கொண்டு வேலைசெய்ய ஆரம்பித்தார்கள். நீண்டகால திட்டத்தின் பூர்வாங்கப் பகுதிகளே இவை. தேசங் களின் தேவைகளையும், அவற்றுக்கு 'யுனெஸ்கோ' ஸ்தா பனம் எப்படி எப்படி உதவி செய்ய முடியும் என்பதும் பற்றிக் கவனிப்பது முதல்வேலை. பொதுவேலைகளில், குறிப்பாக, கல்வி, விஞ்ஞான கலாசாரத்துறைகளில் ஆக்கவேலையும் அதிகாரப்பற்றற்ற ஸ்தாபனங்களுடனும் தனிப்பட்டவர்களுடனும் தொடர்பு வைத்துக்கொண்டு தொடர்ந்து சர்வதேச ரீதியில் வேலைசெய்வது வேறு ஒரு பகுதி.

தூதுகோஷ்டி விஜயம் செய்த நாடுகளைப்பற்றியும், அந்த நாடுகளில் சிறுவர்களுடைய நிலைமையைப் பற்றியும், வாசகசாலை கள், விஞ்ஞான கூடங்கள், பள்ளிக்கூடங்கள் போன்ற கல்வி ஸ்தாபனங்களின் தேவைகளையும் சேகரித்து ஓர் அறிக்கையும், இந்த நாடுகளின் உதவிக்கு 'யுனெஸ்கோ' என்ன செய்ய முடியும், மற்றவர்கள் என்ன செய்யமுடியும் என்பது பற்றி ஓர் அறிக்கையும் தயாரித்து எல்லா நாடுகளுக்கும் அனுப்பி னர்கள்; இதற்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. செயல் உள்ள நாட்டினர், உதவி செய்ய முன்வந்தார்கள். உதவி கோரியவர்களும், தேவைக்குத் தகுந்தபடி திட்டமான பொருள் களைக் கேட்டார்கள்.

அதிகாரப் பற்றற்ற சர்வதேச ஸ்தாபனங்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு, ஒரு தகவல் பகுதியை ஆரம்பித்தது அற் புதமான பலனை யளித்தது. சர்வதேச செஞ்சிலுவை சங்கம், சர்வதேச சாரணர் படை, மாணவர் இல்ல இயக்கம் போன்ற பல ஸ்தாபனங்கள் கல்விப் புனருத்தாரண வேலைக்கு உதவி யளித்தன. மூன்று வருஷங்களுக்குள் அறுபது நாடுகளி லுள்ள எழுநூறு சங்கங்களும், ஸ்தாபனங்களும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்துக்கு உதவின; சுமார் பத்துக்கோடி டாலர் நிதி சேகரித்துக் கொடுத்தன. பள்ளிக்கூடங்கள், சர்வகலாசாலை கள், விஞ்ஞான கூடங்கள் போன்ற கட்டடங்களைக் கட்டவும்,

ஆராய்ச்சிக்குத் தேவையான உபகரணங்களையும் புத்தகங்களையும் சேகரித்து உதவவும் இந்த நிதி செலவழிக்கப்பட்டது.

சிறு குழந்தைகளுக்கு உதவி அளிப்பதற்கே பிரமிப்பூட்டும் அளவுக்குப் பணம் தேவையாக இருந்தது. கிரீஸிலுள்ள குழந்தைகளுக்கு எழுதப்படிக்க பென்சிலும் காகிதமும், புத்தகங்களும் வேண்டுமே! ஐரோப்பாவிலுள்ள லக்ஷக்கணக்கான குழந்தைகளுக்கு உபகரணங்களைக் கொடுக்கவேண்டுமே! கைரியாவைப்போல மணலில் எழுதிக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவி செய்யவேண்டுமே! ஒவ்வொரு நாட்டின் தேவையையும் மொத்தமாகக் கூட்டிப் பார்த்தார்கள். பதினைந்துகோடி பென்சில்கள்! ஏழரைக்கோடி நோட் புத்தகங்கள்! லக்ஷக்கணக்காகப் பாடப்புத்தகங்கள்!—இப்படி பட்டியல் தயாராயிற்று. கையிருப்பு நிதி போதாது என்று 'யுனெஸ்கோ' நிர்வாகிகள் நினைத்தார்கள். மேலும், பணத்தைச் செலவிட்டாலும் சாமான் கிடைப்பதிலும் சிரமமிருந்தது. சர்வதேச பொதுநல ஸ்தாபனங்களுடன் தொடர்பு இருந்ததால் அவர்கள் திகைத்துப் போகவில்லை. தர்ம சிந்தையுள்ள பொதுமக்களை அணுகினர்கள். பல தேசங்களிலுள்ள பள்ளி மாணவர்களும், பொது ஸ்தாபனங்களும் உதவி செய்ய முன் வந்தார்கள். ஆஸ்டிரேலியா, இந்தியா, அமெரிக்கா, கனடா, ஸ்வீடன், தென் ஆபிரிகா போன்ற தேசங்களில் நன்கொடையாக பண்டங்களும் பணமும் வசூலித்தார்கள். பள்ளிக்கூடங்களில் உதவி நிதிக் கச்சேரிகளும், நாட்டியங்களும் வைத்துப் பணம் திரட்டினர்கள். விழாக் கொண்டாடி உண்டியல் பெட்டி குலுக்கிப் பணம் சேகரித்தார்கள். அதிசீக்கிரம் தேவைக்கு மேற்பட்ட பண்டங்களும் பணமும் சேர்ந்துவிட்டது.

யுத்தத்திலல் பாழடைந்த நாடுகளுக்கும், பிற்போக்கு நாடுகளுக்கும் உதவி செய்வதற்காக சர்வதேச கல்விப் புனருத்தாரண சங்கம் (Commission for International Educational Reconstruction) என்று ஒரு ஸ்தாபனம் அமெரிக்காவில் ஏற்பட்டது. மற்ற ஸ்தாபனங்களின் பெயர்களைச் சுருக்கிச் சொல்வது

போல இந்த ஸ்தாபனத்தின் ஆங்கிலப் பெயரும் சியர் (CIER) என்று வழங்கப்பட்டது. இதன் தலைவரான ஹெரால்ட் ஸ்நைடர் தான் (Harold E. Snyder) பேராசிரியர் கென்வர்த்தியுடன் கிரீஸ் தேசத்தில் சுற்றுப்பிரயாணம் செய்து 'யுனெஸ்கோ' வுக்காக அறிக்கை தயாரித்தவர். 'சியர்' ஸ்தாபனத்துக்கு அமெரிக்காவிலுள்ள முன்னூறு பொதுஜன சங்கங்கள் உதவி செய்தன. அமெரிக்காவில் மட்டும் சுமார் 2,140 லக்ஷம் டாலர்கள் வசூலித்தார்கள்.

அமெரிக்காவில் 'சியர்-யுனெஸ்கோ' கூட்டுறவில் மேலும் பலவகைகளில் பணமும் பண்டமும் வசூலித்தார்கள். 'யுனெஸ்கோ'வின் அறிக்கையைப் படித்த அமெரிக்க வாலிபர்கள், கிரீஸ் நாட்டுக் குழந்தைகளுக்குத் தேவையான பொருள்களைச் சேகரித்துப் பரிசுகள் அனுப்பினர்கள். கண்களையும், காதுகளையும் இழந்து அங்கவீனர்களான குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கவும், பொழுது போக்காக இருக்க விளையாட்டுச் சாமான்களை அனுப்பவும், 'யுனெஸ்கோ' தீர்மானித்து அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய மார்க்கங்களை ஒரு சிறு புத்தகமாக வெளியிட்டது. மேலும், ஐரோப்பிய நாடுகளில் துவக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் வாசகசாலைகளை நிறுவ உதவி வேண்டும் என்றும் ஓர் அறிக்கை தயாரித்தது. இந்த அறிக்கைகளை 'சியர்' ஸ்தாபனம் அமெரிக்க வாலிபர்களுக்கு விநியோகித்தார்கள். அமெரிக்க வாலிபர்களும் பள்ளிச் சிறுவர்களும் மனமுவந்து அளித்த புத்தகங்களையும், பென்சில்களையும், பொருளையும் ஐரோப்பாவுக்கு அனுப்பினர்கள். சுமார் நாற்பது லக்ஷம் புத்தகங்களைச் சேகரித்து அனுப்ப அவர்களால் முடிந்தது.

பள்ளிக்கூடங்களிலுள்ள மாணவர் செஞ்சிலுவை அங்கத்தினர்களும் தங்களாலியன்ற உதவியைச் செய்தார்கள். பென்சில், ரப்பர், நோட் புத்தகம், விலையாட்டுச் சாமான்கள், இவைகளைக் குழந்தைகளுக்காகச் சேகரித்தார்கள். அந்த நாடுகளிலுள்ள ஆசிரியர்களுக்காக சோப், முகந்துடைக்கும் துண்டு,

ரேஸர் பிளேட், போன்ற தினசரித் தேவைகளையும் சேகரித்து, தனித்தனிப்பெட்டிகளில் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினர்கள். அயல்நாட்டுச் சிறுவர்களுடன் நட்பும் நல்லுறவும் ஏற்படுத்திக் கொள்ள கடிதங்கள் எழுதினர்கள். அமெரிக்க வாழ்க்கை களும், இயற்கைக் காட்சிகளும் படம்பிடித்து அவர்களுக்கு அனுப்பினர்கள். அதிசீக்கிரத்தில், அமெரிக்க மாணவ, மாண விகளுக்கும் வெளிநாடுகளிலிருந்து நன்றி தெரிவித்துக் கடி தங்களும், அயல்நாட்டுக்காட்சிகளுள்ள படங்களும் கிடைத்தன. உதவி பெற்ற தேசத்து வாலிபர்கள் எழுதிய கடிதங்களே அவை.

சியர்-யுனெஸ்கோ கூட்டுறவினால் கடிதமூலமே சிறுவர்களின் நட்பும் பாசமும் வளரலாயின. பல தேசக் குழந்தைகள், மனம்விட்டுக் கடிதம் எழுதிக்கொள்ளும் சந்தர்ப்பம் கிடைத் தது. அமெரிக்க வாலிபர்களோ, தங்களுக்குக் கிடைக்கும் படிப்பு வசதிகள் மற்ற நாடுகளிலுள்ள சிறுவர்களுக்கும் வாலி பர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்று எண்ணலாயினர்கள். பணமும், வசதியும் இல்லாத நாடுகளில், கடிதமூலம் சிநேகம் பிடித்த நண்பர்களின் தேவைகளைத் தெரிந்துகொண்டு சாமான் களை வாங்கியனுப்பினர்கள். எதிர்கால சுபீட்சத்துக்காகப் பயிற்சியும் பக்குவமும் பெற வேண்டும் என்ற ஆசையுடன் அனுப்பப்பட்டவை இவை. தையல் மிஷின்கள், குடும்பத் துக்குத் தேவையான இதர சாமான்கள், எம்பிராய்டரி சாமான் கள் போன்றவைகளை அமெரிக்கச் சிறுமிகள், சமவயதுள்ள அயல்நாட்டுச் சிறுமிகளுக்குப் பரிசாக அனுப்பினர்கள். தச்சு வேலை, விவசாயம், எஞ்சினீயரிங் போன்ற கைத்தொழிற் படிப்புப் படிக்கும் மாணவர்கள், உளி, சுத்தி, ரம்பம், மண் வெட்டி, கலப்பை, கோடறி போன்றவைகளை அனுப்பினர்கள். வேறு சில மாணவர்கள் செய்த கார்யத்தை ஐரோப்பிய மக்கள் பெரிதும் பாராட்டினர்கள். அமெரிக்காவில் குடியேறிய வர்கள் எல்லாரும் ஐரோப்பியர்கள்தான்; அமெரிக்காவைத் தாய்நாடாக ஏற்றுக்கொண்டாலும், பல தலைமுறைகளுக்கு

முன்பு தங்களுடைய முன்னோர்கள் வாழ்ந்த நாட்டையும் ஊரையும் நினைத்துப் பார்த்துச் சந்தோஷப்பட்ட சில யுவர்கள், அந்த ஊரிலுள்ள பள்ளிக்கூடங்களின் தேவைகளைத் தெரிந்து கொண்டு சாமான்களை அனுப்பினர்கள். அமெரிக்காவிலுள்ள பூருக்லின் (Brooklyn) என்ற நகரத்தில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகளின் முன்னோர்களும், மாணவர்களின் முன்னோர்களும்கூட ஹாலந்திலிருந்து வந்தவர்கள்தான். தங்கள் முன்னோர் வாழ்ந்த ஊரிலுள்ள ஒரு வர்த்தகக்கல்லூரிக்குச் சில சாமான்கள் தேவை என்று கேட்டதும் உடனே நிதி வசூலித்து சாமான்களை வாங்கி அனுப்பினர்கள்.

மாணவர்களுக்குள் உறவு ஏற்பட்டதுபோல பள்ளிக்கூடத்துக்குப் பள்ளிக்கூடமும் நட்பும் பரிவர்த்தனையும் ஏற்பட்டன. இதுவும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் சாதனைதான். லாஸ் எஞ்சல்ஸிலுள்ள லூயி பாஸ்டர் உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் ஐரோப்பாவிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்துடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொள்ள விரும்பினர்கள். 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் உள்ளூர் பிரதிநிதியான ஸ்ரீமதி காதரைன் ஹால்ஸாப்பிள் (Kathryn C. Holsapple) என்பவரிடம் தங்களுடைய ஆசையைத் தெரிவித்தார்கள். அந்த அம்மையார் உடனே ஆஸ்டிரியா மாதர் சங்கத்தின் பிரதிநிதியான ஸ்ரீமதி ஹில்டா பிளின்டின் (Hilde Flint) மூலம் ஆஸ்டிரியாவிலுள்ள இண்டஸ்ட்ரியல் ஜிம்னாசியம் பள்ளிக்கூட மாணவர்களுக்கு அறிமுகம் செய்துவைத்தார். வியன்னாவிலுள்ள பிரஞ்சு நிர்வாகப் பகுதியிலுள்ள அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைவி டாக்டர் நார்பட் ஜானிட்ஜ் (Dr. Norbert Janitschek). இரண்டு பள்ளிக்கூடச் சிறுவர்களும் சம வயதினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த மாதிரிப் பள்ளிக்கூடத்தைத்தான் அவர்கள் தேர்ந்தெடுத்தார்கள். மாணவர்கள் பரஸ்பரம் கடிதம் எழுதிக் கொண்டார்கள். ஆசைகள், கனவுகள், வாழ்க்கை முறை, சமையல், பழக்க வழக்கங்கள், நாடோடிப் பாட்டுக்கள் என்று

பல பல விஷயங்களைப்பற்றி மாணவர்கள் தங்களுக்குள் கடிதம் எழுதிக்கொண்டார்கள்.

அமெரிக்கச் சிறுவர்கள் அனுப்பும் கடிதங்களை வகுப்பில் படித்துக்காட்டி வியன்ஞ மாணவர்கள் மகிழ்வார்கள். அங்கிருந்து வரும் படங்களையும், பொருள்களையும் பள்ளிக்கூடத்தில் பொருட் காட்சிபோலப் பரப்பிவைத்தார்கள். அமெரிக்க மாணவர்களோ இன்னும் ஒரு படி மேலே சென்ருர்கள். ஆஸ்டிரியா மக்களுடைய பழக்க வழக்கங்கள், சமையல், நாட்டியம், நாடோடிப் பாடல்கள்—இவைகளைக் கேட்டுத் தெரிந்துகொண்டார்கள். பள்ளிக்கூடத்தில் வியன்ஞ பகுதி என்று ஏற்படுத்திக் கொண்டு பழகினர்கள். நாளாக ஆக அவர்களுடைய நட்பும் வளர்ந்தது. வியன்ஞ மாணவர்கள், அட்லாண்டிக் சமுத்திரத்துக்கு அப்பாலிருக்கும் தங்களுடைய நண்பர்களைக் கௌரவிப்பதற்காக, அவர்களுடைய பள்ளிக்கூடப் பெயரையே வைத்து லூயி பாஸ்டர் பொழுதுபோக்குச் சங்கம் என்று ஒரு மாணவர் சங்கத்தை ஆரம்பித்தார்கள். அமெரிக்க நண்பர்கள் அனுப்பும் புத்தகங்களையும் சினிமாப் படங்களையும் சங்கத்தில் வைத்தார்கள். இதைப் பற்றி அமெரிக்காவிலுள்ள ஒரு சிநேகிதிக்கு எழுதும்போது ஒரு மாணவி பின்வருமாறு குறிப்பிட்டாள்: "மிகவும் அழகானதொரு சங்கத்தை நாங்கள் ஆரம்பித்திருக்கிறேம். மாலை நேரங்களில் நாங்கள் அங்குகூடி வெளிநாட்டு அன்பர்களுக்குப் பரீசளிக்க படங்கள் எழுதுகிறேம். வேறு பொருள்களைச் செய்கிறேம். நீங்கள் அனுப்பும் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அங்கு வைத்திருக்கிறேம். வாசகசாலை மிகச் சிறிதுதான். என்ருலும் நாளாவட்டத்தில் அன்பர்களுடைய உதவியினல் பெரிதாகிவிடும். உங்களுடைய அன்பினல் அங்குள்ள அலமாரிகளில் புத்தகங்கள் சேர்ந்து விடும் என்று நம்புகிறேன்".

"சர்வதேச நல்லுறவுச் சங்கம் போன்றதுதான் எங்களுடைய சங்கமும். பல்வேறு நாட்டினுள்ள மாணவர்களின் நட்பும் தொடர்பும் ஏற்பட நாங்கள் முயல்வோம். உங்க

ளுடைய நட்பைப்போல உங்களையும் நேரில் உபசரித்து மகிழ வேண்டும் என்பது எங்களுடைய ஆசை. உங்கள் நாட்டார் வியன்னாவுக்கு வந்தால் எங்களுடைய விருந்தாளிகளாகத் தங்க வேண்டும் என்பதே எங்களுடைய ஆசை."

இந்த அழைப்பை அமெரிக்க மாணவர்கள் ஏற்றுக்கொண் டார்கள். பல மாதங்களுக்குப் பிறகு அவர்கள் சார்பில் ஸ்ரீமதி ஹால்சாப்பிள் வியன்னாவுக்குச் சென்றாள். அங் கிருந்து, ஹாயி பாஸ்டர் பொழுதுபோக்குச் சங்கத்து அங்கத்தினர் களுடன் ஆல்ப்ஸ் மலைப்பிரதேசங்களில் உல்லாசப் பிரயாணம் செய்து நாடு திரும்பினாள்.

மாணவர்களுக்குள் வளர்ந்த நட்புப்போல பெற்றோர்களுக் கும் நட்பு ஏற்பட்டது. பாஸ்டர் ஸ்கூல் பெற்றோர் சங்கத் தலைவி, வியன்னாவிலுள்ள பெற்றோர் சங்கத்துக்குக் கடிதம் எழுதினாள். ஆஸ்டிரியா மாணவர்கள் அனுப்பிய கடிதங்கள், படங்கள், பரிசுகள் எல்லாவற்றையும் சேகரித்து, வேறு சில பொருள்களையும் வைத்து ஒரு கண்காட்சி நடத்தினார்கள் லாஸ் ஏஞ்சல்ஸ்வாசிகள். வியன்னா மக்களுக்கு உதவி செய் வதற்காக வியன்னாவாரம் நடத்தி மகிழ்ந்தார்கள். குழந்தை களும் உத்சாகமாகக் கலந்து கொண்டார்கள். கொடி தினம், பென்சில் தினம், நாட்டிய தினம் என்று விதம் விதமாகக் கொண்டாடி, அந்த வாரத்தில் நிதி திரட்டினார்கள். பலர் ஆஸ்டிரியா குழந்தைகளுக்கு அனுப்புவதற்காக பரிசுகளைக் கொடுத்தார்கள். வேறு சிலர் ஆடைகளைத் தைத்து அனுப்பி னார்கள். 3,000 பென்சில்களை குழந்தைகள் வசூலித்துக் கொடுத்தார்கள். இருநூறு டாலர்களுக்கு அதிகமாக நிதியும், பெரிய பெரிய பெட்டிகளாக இருபத்தெட்டுப் பெட்டிகள் நிறையச் சாமான்களும் சேர்ந்தன. இவற்றை வியன்னாவுக்கு அனுப்பி மகிழ்ந்தார்கள்.

" நீங்கள் அனுப்பிய பரிசுகளைக் கண்டு பிரமித்துவிட்டோம், அழகாகவும் சுத்தமாகவும் அடக்கம் செய்து அனுப்பியிருந்ததைப்

பார்க்கவே மகிழ்ச்சி பொங்கிற்று. உங்களுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் நன்றிகூற வார்த்தைகள் கிடைக்கவில்லை. சந்தோஷத்திலுல் வாயடைத்துவிட்டது. உங்களுடைய அன்புக்கு நாங்கள் கட்டுண்டுவிட்டோம்" என்று இஞ்சே பீடி (Inge Beydi) என்பவர் வியன்னு பள்ளி மாணவர்கள் சார்பாகக் கடிதம் எழுதினுர்.

கிருஸ்துமஸின்போது வியன்னு மாணவர்கள் அமெரிக்க நண்பர்களுக்குச் சில பரிசுகளை அனுப்பினுர்கள். கிராம போன் ரிகார்டுகள், ஆஸ்டிரியா தேசத்து பொம்மைகள், பெல்ட்; இவைகளை அனுப்பினுர்கள். ஆஸ்டிரியா தேசத்து நாடோடிப் பாடல்களை அமெரிக்கச் சிறுவர்கள் பெரிதும் விரும்பினதால், சில பாடல்களை ஸ்வரப்படுத்தி அனுப்பினுர்கள். அத்துடன் சில நடனக் காட்சிகளை சினிமாப் படமாகவும் பிடித்து அனுப்பினுர்கள்.

ஆலியும் பாதிமாவும் பாலஸ்தீன அகதிச் சிறுவர்கள். பாலைவனத்து மணலில் டேரா அடித்துக்கொண்டு பெற்றேர்களுடன் வசித்தார்கள். அவர்களைப்போல வேறு சில குழந்தைகளும் அங்கு இருந்தார்கள். குழந்தைகளுக்குப் பொழுது போகவில்லை. அவர்களுக்குக் கல்வி போதிக்கவேண்டும் என்று பெற்றேர்கள் ஆசைப்பட்டாலும், பள்ளிக்கூடம் துவக்க முடியவில்லை. நண்பர்களுடைய உதவியிலுல் அவர்களுக்கு உணவு கிடைத்தது. பகல் முழுவதும் அடிக்கும் அனல் காற்றும் வெயிலும் குழந்தைகளை வாட்டின. அதிசீக்கிரம் அவர்களிருந்த முகாமில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார்கள். மற்ற நாடுகளைப்போல இங்கு 'யுனிசெப்' ஸ்தாபனம் ஆரம்பிக்கவில்லை. 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் முயற்சி இது. 1949-ம் வருஷம் லெபனனிலுள்ள பீருட்டில் யுனெஸ்கோவின் பொதுச் சபைக் கூடிற்று. அங்கு வந்த பிரதிநிதிகள், ஊருக்கு வெளியே இருந்த பாலஸ்தீன அகதிகள் முகாமைப் பார்க்கச் சென்றுர்கள். ஆலியும் பாதிமாவையும்போல ஆயிரக்கணக்கான குழந்தைகள் படிக்க வசதி

யற்றுத் தவிப்பதை அவர்கள் நேரில் கண்டார்கள். உடனே பொருளாதார நிலைமை இடமளிப்பதற்குத் தக்கபடி சில பள்ளிக் கூடங்களை ஆரம்பிக்க 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் நிச்சயித்தது. அந்தப் பகுதியில் செஞ்சிலுவை சங்கத்தாரும், அமெரிக்க நண்பர்கள் சேவா சமாஜமும் அகதிகள் கஷ்ட நிவாரண வேலை செய்துகொண்டிருந்தார்கள். 'யுனெஸ்கோ' வின் முயற்சியைக் கேள்விப்பட்டதும், அந்தப் பள்ளிக்கூடங்களை மேற்பார்த்து நடத்தும் பொறுப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். பிறகு சில தனிப்பட்ட ஸ்தாபனங்களும் சர்க்கார்களும் உதவியளித்தன.

ஆலியும் பாதிமாவும் வசித்த மார் எலயஸ் (Mar Elias) முகாமில்தான் முதல் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கப்பட்டது. அதிசீக்கிரத்தில் லெபனான், இஸ்ரேல், சிரியா, டிரான்ஸ் ஜோர்டான் முதலிய இடங்களிலுள்ள அகதிகள் முகாம்களில் வசித்த பதினேராயிரம் சிறுவர் சிறுமிகளுக்காக முப்பத்தோரு பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டன. பெரியவர்களில் பலர் ஆசிரியர் களாகச் சேவை செய்ய முன்வந்தார்கள். மாணவர்களின் ஆர்வம் அளவு கடந்திருந்தது. நாஸரேத் முகாமிலிருந்த பள்ளிக்கூடச் சிறுமிகளுக்கு பி.வி.ஜி. மருந்து குத்தினார்கள். மாலையில் அவர்களுக்கு ஓய்வு கொடுக்க விரும்பி தலைமை ஆசிரியர் விடுமுறைவிட்டார். பெண்களோ "எத்தனையோ நாட்கள் பொழுதை வீணுக்கிவிட்டோம், இன்று எங்களுக்கு விடுமுறை வேண்டாம்" என்று கூறி பள்ளிக்கூடத்துக்கு வந்தார்கள்.

கிரீஸ், இத்தாலி போன்ற நாடுகளைப் போலவே பாலஸ் தீனக் குழந்தைகளும் கஷ்டப்பட்டார்கள். மரத்தடியிலும், பாழடைந்த மண்டபங்களிலும், கூடாரங்களிலும், குதிரை லாயங்களிலும் பள்ளிக்கூடம் நடத்தினார்கள். மாணவர்கள் மணலில் குச்சியினால் எழுதி பாடங்களைக் கற்றுக்கொண்டார்கள். அதிசீக்கிரம் இவர்களுக்கு கரும்பலகை, சாக்கட்டி, பென்சில், காகிதம் எல்லாம் கிடைத்துவிட்டன. வசதியிருக்குமிடங்களில்

குழந்தைகளுக்கு விவசாயமும் இதர கைத்தொழில்களும் கற்றுக்கொடுத்தார்கள்.

பூமி சாஸ்திரம் சொல்லிக்கொடுக்க காஜா (Gaza) முகாமி லுள்ள ஆசிரியர்கள் ஒரு யுக்தியைக் கண்டுபிடித்தார்கள். அதை மற்ற ஆசிரியர்களும் பாராட்டினர்கள். இதனல் சர்வதேச நட்பும் வளர்ந்தது. தென் ஆபிரிகாவிலுள்ள சில சிறுவர்கள் பாலஸ்தீன மக்களுக்கு உதவி செய்ய நூறு பவுன்களை பாரிஸிலுள்ள 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்துக்கு அனுப்பினர்கள். பள்ளிக்கூட உபகரணங்களுக்காகச் செலவிட வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டிருந்ததால் லண்டனி லுள்ள ஒரு வியாபாரி மூலம் பாலஸ்தீனத்துக்கு கரும்பலகை, சாக்பீஸ், முதலியவற்றை அனுப்பும்படி ஸ்தாபன நிர்வாகிகள் சொன்னர்கள். லண்டனிலிருந்து கப்பல் மூலம் அவை போர்ட் செட் துறைமுகத்துக்கு வந்தன. அங்கிருந்து மோட்டார் லாரிகளில் காஜாவுக்கு வந்தன. பூகோளப் படத்தைச் சுவரில் மாட்டி, தென் ஆபிரிகாவிலிருந்து எந்த மார்க்கமாக அவர்களுக்கு உதவி கிடைத்தது என்று ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்ததுடன் குண்டூசியினல் இடங்களைக் குத்திக் காட்டும்படியும் பயிற்சி யளித்தார்கள். இதே போல ஒவ் வொரு தடவையும் உதவிவரும்போது வகுப்பு நடத்தினர்கள். பல தேசங்கள் இருக்குமிடங்களைத் தெரிந்துகொள்வதுடன் அந்த நாட்டு மக்களுடைய அன்பையும் மாணவர்கள் புரிந்து கொண்டார்கள்.

குழந்தைகளுக்குப் பென்சிலும் புத்தகமும் கொடுத்தபிறகு பள்ளிக்கூடங்களுக்கு வேண்டிய பலகைகளும், நாற்காலிகளும் அனுப்ப யுனெஸ்கோ நிர்வாகிகள் ஏற்பாடு செய்தார்கள். பல பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் உத்சாகமாக வேலை செய் தார்கள். வெளி நாடுகளிலிருந்து உதவி கிடைத்தாலும் தாங் களும் உழைக்கவேண்டும் என்ற ஆர்வம் அவர்களுக்கு ஏற் பட்டது. ஆகவே வசதிகள் கிடைத்த இடங்களில் அவர்கள் கைத் தொழில் பகுதிகளை ஆரம்பித்தார்கள். கூடை முடைதல், பாய்

முடைதல், நெசவு முதலிய வேலைகளில் மாணவர்களுக்குப் பயிற்சி யளித்தார்கள்.

எல்ஷூன் (El Shune) முகாமிலுள்ள பள்ளிக்கூடத்தில் இரண்டாயிரம் குழந்தைகள் படித்துக்கொண்டிருந்தார்கள். முப்பத்திரண்டு ஆசிரியர்கள் இருந்தார்கள். முக்யமான உபகரணங்கள் எல்லாம் அவர்களுக்குக் கிடைத்தன. ஆனாலும் தலைமை ஆசிரியர் பதே நூனி (Fattah Nounih) திருப்தியடையவில்லை. 'யுனெஸ்கோ' ஸ்தாபன ஊழியர் ஒருவர் அவரைச் சந்தித்தபோது "உங்களுடைய பள்ளிக்கூடத்துக்கு இன்னும் எதாவது தேவையா?" என்று கேட்டார்.

தேவைகளை அவர் குறிப்பிட்டபோது "மணி ஒன்று வேண்டும்" என்றார் அவர்.

"மணியா? அவசியமாக வேண்டுமா?" என்றார் ஊழியர்.

"மிகவும் அவசியம். மணி அடிக்காவிட்டால் பள்ளிக்கூடம் நடப்பதுபோலவே இல்லை. மணிச் சப்தம் கேட்டு மாணவர் கூடுவதும் கலைவதும் பார்க்க ரம்யமாக இருக்கும். மணி இல்லாவிட்டால், பள்ளிக்கூடத்தில் சாமான்கள் இருந்தும் 'நிறைவு' கொடுக்கவில்லை" என்றார்.

இதைக் கேள்வியுற்ற ஒரு நண்பர் உடனே வெண்கல மணியொன்றை அனுப்பினர். பாலஸ்தீனத்தின் தேவைகளைப் பற்றி ஓர் அறிக்கை தயாரிக்கும்போது, இந்தச் சம்பவத்தை மனத்தில் கொண்டே 'பாலை வனத்தில் மணி யோசை' என்ற பெயரில் அதை வெளியிட்டார்கள்.

8. திக்கற்றவர்களுக்கு.

இத்தாலி தேசத்தில் லான்சியானே (Lanciano) என்று ஒரு கிராமம். 1945-ஆம் வருஷம் கிருஸ்துமஸ் வாரத்தில் உபதேசியார் டான் கிடோ விஸன்தாஸ் (Don Guido Visendas) அவசரம் அவசரமாக அந்தக் கிராமத்துக்கு வந்தார். இயேசுநாதரின் அருள்மொழியிலே நம்பிக்கையுள்ள அவர் குத்துக்கொலைக்கு அஞ்சாத சில வாலிபர்களை அன்பு வழியால் வெற்றிகொண்டார். சில அணுதைச் சிறுவர்கள் ஒன்றுகூடிக் கலகம் செய்தார்கள். இரத்தக்களறி ஏற்பட்டது. அதிகாரிகள் அவர்களைப் பிடித்து ஒரு குதிரை லாயத்தில் அடைத்துவைத்தார்கள். சிறையிலும் அவர்கள் அட்டஹாசம் செய்தார்கள். டான் கிடோ இதைக் கேள்விப்பட்டதும் அவர்களை நல்வழிப்படுத்த உறுதிகொண்டார். அதிகாரிகள் சிறைச்சாலைச் சாவியை அவரிடம் கொடுத்தார்கள். கதவைத் திறந்துகொண்டு அவர் உள்ளே சென்றார். அவரைக் கண்டதும் கைதிகளில் சிலர் பூனைபோலக் கத்தினர்கள். வேறு சிலர் பாம்புபோல புஸ் புஸ்ஸென்று சீறினர்கள். அவர் சிரித்துக்கொண்டே உள்ளே சென்றார். அன்று முதல் அவரே சாப்பாடு எடுத்துவந்தார். கந்தலைக் கட்டிக்கொண்டு, குளிரில் நடுங்கும் பையன்களுக்கு நல்ல ஆடைகளைக் கொடுத்தார். பேன் தலையுடன் இருக்கும் பையன்களைத் தலை சீவிக்கொள்ளச் சொன்னார். அப்போது கூட சிலர் அவரைக் கிண்டல் செய்தார்கள்; அவமரியாதையாக நடந்துகொண்டார்கள். அவர் எதற்கும் சிரித்துக்கொள்வார். அவர்களுடன் அங்கேயே வசிக்கலானார். ஒரு நாள் அவர் கட்டடத்தைச் சுத்தம் செய்தார். மறு நாள் சந்து பொந்துகளுக்குக் காரைபூசி வெள்ளையடித்தார். பையன்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்களே தவிர எவருமே உதவி செய்ய முன்வரவில்லை. ஆனால் அவர்களுடைய முரட்டுத்தனமும் பேய்த்தனமும் அடங்கி விட்டது. அதைக் காண டான் கிடோ தமக்குத்தாமே சிரித்துக்கொண்டார். சில

தினங்களுக்கெல்லாம், பையன்களுடைய குணமே அடியோடு மாறிவிட்டது. அவருடைய ஆணைக்கு அடங்கி நடக்க ஆரம்பித்தார்கள். இப்போது எல்லாம் அவர் லாயத்தைப் பூட்டிவைப்பது கூடக்கிடையாது. ஆனால் பையன்கள் வெளியே போவதில்லை. சொந்த வீட்டிலிருப்பதுபோல, பொறுப்புணர்ந்து ஒவ்வொரு வரும் வேலை செய்ய ஆரம்பித்தார்கள்.

டான் கிடோ செய்த அற்புதம் பேச்சுவாக்கில் பரவிற்று. வீடுவாசலற்ற பல அனுதைகள் லான்சியாலே கிராமத்துக்கு வர லானர்கள். அஞ்சு வயது முதல் பதினெட்டு வயது வரையுள்ள எண்பது சிறுவர்கள் அங்கு வந்துவிட்டார்கள். எல்லோரையும் சேர்த்துவைத்து ஒரே குடும்பம்போல நடத்திவந்தார் டான் கிடோ. சில நாட்களுக்கெல்லாம் அனுதைகளைப்பற்றி ஊரார் புகார் சொல்ல ஆரம்பித்தார்கள். சிறுவர்கள் வீட்டுக்குள் நுழைந்து ஆகாரப் பொருள்களைத் திருடிச் செல்வதாக அவருடைய காதில் விழுந்தது. சிறுவர்கள் திருடினர்கள் ; அதை டான் கிடோவிடமும் ஒப்புக்கொண்டார்கள். சில சமயங் களில் விடுதியில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுவிடும். எல்லோ ருக்கும் உணவு வேண்டும் என்ற ஆசையில் சில பையன்கள் ஊருக்குள் சென்று திருடினர்கள். இருந்தாலும் திருட்டுத் திருட்டுத்தானே! டான் கிடோ வருத்தப்பட்டார். உடனே விடுதியி லிருக்கும் எல்லாப் பையன்களும் ஒன்றுகூடினர்கள். கட்டுப் பாடாக வாழ உறுதிகொண்டு தங்களுக்கு ஒரு தலைவனையும் தேர்ந்தெடுத்தார்கள். ஒவ்வொருவருக்கும் தினசரி வேலையைப் பிரித்துக்கொடுத்தார்கள். அப்போது டான் கிடோ சொன்னர் : "உங்களுக்குத் தேவையான உணவும் உடையும் நான் கொண்டு வந்து கொடுக்கிறேன். மற்றவர்கள் குற்றம் சொல்லும்படி நீங்கள் இனிமேல் நடக்கக்கூடாது."

நாளுக்கு நாள் டான் கிடோவின் பொறுப்பு அதிகமாயிற்று. நூற்றுக்கும் அதிகமான பையன்களை வைத்துக்கொண்டு சமா ளிப்பது கஷ்டமாகத்தான் இருந்தது. ஆனாலும் அவர் மனம் தளரவில்லை. விடுதியில் ஒரு பள்ளிக்கூடத்தை ஆரம்பித்தார்.

எல்லோருக்கும் கல்வி போதிக்க ஆரம்பித்தார். அவருடைய சேவையை நண்பர்கள் பாராட்டினர்கள்; தங்களாலியன்ற உதவிகளைச் செய்தார்கள். டான் ஸுஹி (Don Suisse) என்ற பொது நலச் சங்கமும் அவருடைய முயற்சிக்கு உதவிற்று. ஆனலும் தேவை விரிந்துகொண்டேயிருந்தது. டான் கிடோ ஸ்விட்ஜர்லாந்திலுள்ள சில நண்பர்களுடைய உதவியை நாடினர். அனுதை விடுதியின் வேலைகளை நேரில் சொல்ல அவர் மாணவர் தலைவனையும் அழைத்துச் செல்ல விரும்பினர். அவனே மறுத்தான். "நான் ஏதாவது தவறு செய்துவிடக்கூடும் என்று பயமாக இருக்கிறது" என்றான்.

மாணவர்களோ அவனை விடவில்லை. "நீ செய்யும் காரியத்தை ஏற்றுக்கொள்கிறோம்" என்று உத்சாக மூட்டி அவனை அனுப்பினர்கள். நீர்வாகத்துக்காக தங்களுக்குள் ஒரு தற்காலிக தலைவனையும் தேர்ந்தார்கள். டான் கிடோ மாணவர் தலைவனுடன் ஸ்விட்ஜர்லாந்துக்குப் புறப்பட்டார். அங்கிருந்து போதரவு கிடைத்தது. இதன் நடுவே இத்தாலிய சர்க்காரும் ஓரளவு உதவி செய்தார்கள். கிடோவின் அற்புத சேவை கடல்கடந்தும் எட்டிற்று. நெப்ராஸ்காவில் (Nebraska) அனுதைச் சிறுவர்களுக்காக சேவை செய்துவரும் பிளானகன் (Father Flanagan) ஆயிரம் டாலர்களை அனுப்பினர். அன்றுட வாழ்க்கைக்குப் போகச் சிறிது அதிக உதவி கிடைக்கவே, பிளானகன் அனுப்பிய பணத்தைக் கொண்டு சில யந்திரங்களும், தச்சுப்பட்டரைக்கு வேண்டிய சாமான்களும், செருப்புத் தைக்க வேண்டிய சாமான்களும் டான் கிடோ வாங்கினர். சிறுவர் களுக்குத் தொழில் கற்றுக்கொடுப்பதுடன், அவர்களுடைய தேவைகளையும் சமாளித்து வியாபாரம் செய்யும் அளவுக்கு கைத்தொழில் பகுதி வளர்ந்தது.

திடீரென்று ஒரு நாள் நெருக்கடி நேர்ந்தது. 1948-ம் வருஷம் மார்ச்சு மாதம் குதிரை லாயத்தைக் காலிசெய்துவிட வேண்டியதாயிற்று. உடனே சர்க்காரே உதவி செய்தார்கள். சமுத்திரக் கரையோரமாக உள்ள பகுதியில் பத்து எகரா நிலம்

மான்யமாகக் கொடுத்தார்கள். சிறுவர்கள் அந்த இடத்தைப் போய்ப் பார்த்தார்கள். அங்கு போய் வசிக்கத் தீர்மானம் செய்தார்கள். ஒரு பிரஞ்சு எஞ்சினீயர் ஊதியமின்றி அவர் களுக்கு உதவுவதற்கு முன்வந்தார். சிறுவர்களும் உத்சாக மாக, தாங்களே கட்டிட வேலை செய்தார்கள். அவர்களுடைய ஊக்கத்தைக் கண்டு பல நண்பர்கள் உதவி யளித்தார்கள். கட்டடம் கட்டும்போது உபரியாக உணவு தேவையிருக்கும் என்று எண்ணிய சர்க்கார் அதிகாரிகள் 'யுனிசெப்' ஸ்தாபனத்தின் மூலம் உணவுப் பொருள்கள் கிடைக்க ஏற்பாடு செய்தார்கள். கட்டடம் கட்டிக்கொண்டிருக்கும்போதே வேறு சில பையன்கள், தோட்டம் கொத்தி காய்கறி போட்டார்கள். அங்கு குடி யேறும்போது தேவையான காய்கறிகள் தோட்டத்திலிருந்தே கிடைத்துவிட்டது. ஒற்றுமையுடன் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு வேலை செய்ததில் அவர்களுக்கு பொறுப்புணர்ச்சி யுடன் கட்டுப்பாடும், ஒழுக்கமும் உடலுறுதியும் ஏற்பட்டுவிட்டன. எப்பேற்பட்ட வேலையும் எடுத்துமுடிக்கும் ஆற்றலும் துணிச்ச லும் அவர்களுக்கு வந்துவிட்டது.

ஐரோப்பா, பர்மா, இந்தியா, மலேயா முதலிய பல நாடுகளிலும் அனைதகளை ஆதரிக்க சமூக ஊழியர்கள் ஆசிர மங்களும் அனைத விடுதிகளும் நிறுவியிருக்கிறார்கள். பழக்க வழக்கங்கள் வேறுபட்டாலும் சிறுவர்களுக்கு வாழ வசதியும், எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக வாழவேண்டும் என்று கல்வியும் பயிற்சியும் அளிப்பதில் உலகமெங்குமுள்ள சமூக ஊழியர்கள் ஏகோபித்த மனோபாவத்துடன் திட்டம் போட்டு வேலை செய்கிறார்கள்.

அனைத ஆசிரமம் நிறுவுவது புதிய திட்டமல்ல. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னேயே பல நாடுகளில் அறிஞர்கள் இந்தத் துறையில் வெற்றி கண்டிருக்கிறார்கள். நியூயார்க்கைச் சேர்ந்த பிரீவில்லி (Freeville) என்னுமிடத்தில் சுமார் ஐம்பது வருஷங் களுக்கு முன்பு வில்லியம் ஜார்ஜ் (William George) என்பவர் ஓர் அனைத விடுதியை ஆரம்பித்தார். அந்தக் காலத்தில்

புது முயற்சி என்றுலும், அங்கு தங்கிய பல வாலிபர்கள் பிற் காலத்தில் சிறந்த மேதைகளாகவும், சுகமாகவும் வாழ்ந்தார் கள். பிளானகன் பாதிரியாரின் சிறுவர் நகரம், இங்கிலாந்தி லுள்ள பார்ணடோ இல்லம், ஹாலந்திலுள்ள பில்தோவன் குழந்தைகள் சமூகவிடுதி, பிரஸல்ஸிலுள்ள மோலன்பீக் தோட்டவீடு இவை எல்லாம் உலகப் பிரசித்திபெற்ற அனுதை விடுதிகள்.

யுத்தத்திலுல் அனுதைகளான குழந்தைகளைக் காப்பாற்ற ஐரோப்பிய நாடுகளில் பல விடுதிகள் ஏற்பட்டன. புடாபெஸ்ட் நகரத்தில் சேஹ்லோ பாதிரியார் (Pastor Sztehlo) ஏற்பாட்டால் ஒரு மாணவர் இல்லம் இருக்கிறது. பிரிட்டனில் பால் லே லேவ்ரே (Paul Le Lievre) ஒரு அனுதை ஆசிரமம் நடத்து கிறார். மோலின்வே (Moulin Vieux) என்னும் ஊரில் ஹென்றி ஜூலியன் தம்பதிகள் ' சிறுவர்கள் குடியரசு' ஒன்றை ஸ்தாபித்திருக்கிறார்கள். ஜர்மனியிலிருந்து வெளியேறிய பிட் குரூகர் (Pit Kruger) தம்பதிகள், பிரீனிஸ் (Pyrenees) மலைச்சாரலில் அகதிகள் முகாம் ஒன்று நடத்திவருகிறார்கள். இவைபோல பல இடங்களில் சின்னச் சின்ன அனுதைகள் இல்லம் ஐரோப்பா முழுவதும் இருக்கின்றன.

பல்வேறு பிரச்னைகளைப்பற்றி விவாதிக்கவும், அனுபவங்களைச் சொல்லிக்கொள்ளவும் கல்வித்துறையில் ஈடுபட்டவர்களைக் கூப் பிட்டு மகாநாடு நடத்தியதுபோல, 1948-ஆம் வருஷ ஆரம் பத்தில் அனுதை விடுதிகளை நடத்தும் · ஊழியர்களுடைய பிரச்னைகளைக் கவனிக்க 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் ஒரு மகாநாடு கூட்டிற்று. ஸ்விட்ஜர்லாந்திலுள்ள பெஸ்டலோஷி (Pestalozzi) கிராமத்தில் மகாநாடு நடந்தது.

பெஸ்டலோஷி கிராமத்தையே ஒரு சிறு ஐரோப்பா என்று சொல்லிவிடலாம். டிரோகன் (Trogen) என்ற ஊருக்குப் பக்கத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கிராமம் அது. ஐரோப்பாவி லுள்ள பல்வேறு நாட்டு மக்கள் அந்தக் கிராமத்தில் வசிக்கிறார்

கள். ஒவ்வொரு தேசத்தவரும் தனித்தனியான தெருக்களில் வசித்து, பாஷை, கலாசாரம் கெடாமல் வாழமுடிகிறது. ஆனாலும், எல்லோரும் கலந்து பழகி பொதுப் பிரச்னைகளை விவாதிக்கிறார்கள். ஆங்கிலமோ, பிரஞ்சோ, ஜர்மானிய பாஷையோ பேச எல்லாருக்கும் தெரியும். வால்டர் கார்டி (Walter Corti) என்ற பத்திரிகை ஆசிரியர்தான் சர்வதேச கிராமம் ஒன்றை அமைக்கவேண்டும் என்று ஆசைப்பட்டார். அவருடைய ஆசையைக் கௌரவிக்க ஸ்விஸ் வாலிபர் சங்கத்தார் முன் வந்தார்கள். பல நாடுகளிலுள்ள அகதிச் சிறுவர்களுக்கும் சிறுமிகளுக்கும் குடியேற்றம் ஸ்தாபிக்கவேண்டும் என்ற திட்டத்தை ஸ்விஸ் மக்கள் ஆதரித்தார்கள். ட்ரோகன் வாசிகள் பத்து ஏகரா நிலத்தை மனமுவந்து கொடுத்தார்கள். ஏராளமாக பணமும் பண்டமும் நன்கொடையாகக் கிடைத்தது. ஸ்விஸ் பேராசிரியர் கிண்டர்டார்வ் பெஸ்டலோஷி (Kinderdorf Pestalozzi) ஸ்விஸ் மக்களின் கல்வி முன்னேற்றத்துக்காகப் பாடுபட்ட பெரியார். அவருடைய ஞாபகார்த்தமாக கிராமத்துக்கே அவர் பெயரை வைத்துவிட்டார்கள். கிராம நிர்மாணத்தில் ஸ்விஸ் வாலிபர்களில் பலர் உதவி செய்தார்கள். ட்ரோகனிலுள்ள பெண்கள், கிராமத்துக்கு வரப்போகும் சிறுவர் சிறுமியருக்குத் தேவையான ஆடைகளைத் தைத்துக் கொடுத்தார்கள். 1946-ஆம் ஆண்டில் பிரான்ஸ், போலந்து, ஆஸ்டிரியா, ஹங்கேரி, ஜர்மனி ஆகிய நாடுகளிலிருந்து 112 அனைதைச் சிறுவர்களும் சிறுமிகளும், பெஸ்டலோஷி கிராமத்துக்கு வந்தார்கள். தங்களுக்குள்ளேயே நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அவர்கள் கிராம நிர்வாகம் செய்தார்கள். ஒவ்வொரு நாட்டினரும் தனித்தனியாக வசித்தார்கள். அந்தப் பகுதியில் அவர்கள் தாய் பாஷையே பேசுவார்கள். பன்னிரண்டு வயதுவரையுள்ள சிறுவர்களுக்குத் தாய் பாஷையில் கல்வி போதித்தார்கள். அதற்குமேற்பட்ட சிறுவர்களுக்கு ஜர்மன் பாஷையைக் கற்றுக் கொடுத்தார்கள். சிறு குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பை யுவ யுவதிகள் ஏற்றுக்கொண்டார்கள். டான் கிடோ மாணவர் இல்லத்தைப்போல இந்தக் கிராமத்திலும் கருமான், தச்சு

பட்டரைகளும், விஞ்ஞானம், சரித்திரம், இலக்கியம் முதலிய பாடங்களைப் போதிக்க வசதியும் ஏற்பட்டது.

ஆறு நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்து ட்ரோகன் மகாநாட்டில் கலந்துகொண்டார்கள். மாணவர் இல்லம் நடத்தும் பதினைந்து ஊழியர்களும் கல்வித்துறையில் அனுபவம் மிகுந்த பதினேழு பேராசிரியர்களும் வந்திருந்தார்கள். பொதுவாக 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் அங்கத்தினர் நாடுகளில் பதினாறு நாடுகளுக்கு பிரதிநிதித்வம் இருந்தது. அமெரிக்கப் பேராசிரியர் டாக்டர் கார்ல்டன் வாஷ்பர்னும் (Carlton Washburne) விசேஷ அழைப்பின் பேரில் வந்திருந்தார்.

யுத்தத்தினால் அனாதைகளான சிறுவர்களைக் காப்பாற்றுவது என்றில்லாமல், பொதுவாக எல்லா நாடுகளுக்கும் பயன்படும்படி அனாதை இல்லங்களின் நிர்வாகம் பற்றியும் அந்தக் குழந்தைகளுடைய எதிர்காலத்தைப்பற்றியும், சர்ச்சை செய்தார்கள். மகாநாட்டில் விவாதித்த பிரச்னைகளையும், நிறைவேற்றிய தீர்மானங்களையும் அறிக்கையாகத் தயாரித்து 'அனாதைச் சிறுவர்' என்ற பெயரில் வெளியிட்டார்கள். அனாதை இல்லங்களை நடத்தும் நிர்வாகிகளுக்குமட்டுமின்றி புதிதாக ஏற்படுத்துகிறவர்களுக்கும் உபயோகமாயிற்று அது. பெஸ்டலோஷி கிராமத்தைப்போலும் டான் கிடோ இல்லத்தைப்போலும் ஐரோப்பாவில் 63 ஸ்தாபனங்களுண்டு. 'அனாதைகளின் வாழ்க்கை' என்ற பெயரில், இவர்களுடைய சேவை - தேவை பற்றியும் 'யுனெஸ்கோ' ஓர் அறிக்கை தயாரித்து வெளியிட்டது. அதைப் படித்து சர்க்கார்களைத் தவிர தர்மசிந்தனையுடைய பல பிரமுகர்கள் உடனே மனமுவந்து உதவியளித்தார்கள்.

அனாதைக் குழந்தைகள் பராமரிப்பு சமூக ஊழியத்தில் நிரந்தர வேலையாயிற்று. ஒவ்வொரு நாட்டிலும் அனாதைக் குழந்தைகள் சகஜமாகக் காணப்படுகிறார்கள். இவர்களைக் காப்பாற்றி, எதிர் காலத்தில் சிறந்த பிரஜைகளாக வாழ

பயிற்சியும் வசதியும் கொடுக்கவேண்டிய பொறுப்பு சமூக ஊழியர்களையும் சர்க்காரையுமே சேர்ந்தது. ஆகவே அனுதை இல்லங்களை நிர்வகிப்பதுப்பற்றி, ஊழியர்களுக்கு பயிற்சி வகுப்பு நடத்தவும், குழந்தை வளர்ப்பைப்பற்றி போதிக்கவும், உலகி லுள்ள பல ஸ்தாபனங்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொள்ள வும், ட்ரோகன் மகாநாட்டில் சர்வதேச அனுதை ஆசிரம சமஷ்டி (International Federation of Children's Communities) என்றொரு சங்கத்தை ஆரம்பிக்க நிச்சயித் தார்கள். 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் ஆதரவில் ட்ரோகனில் தலைமைக் கார்யாலயமாகக் கொண்டு இந்தச் சங்கம் வேலைசெய்து வருகிறது.

மற்றுமொரு முக்கியமான ஸ்தாபனமும் ட்ரோகன் மகா நாட்டில் உருவாயிற்று. மகாநாட்டில் கலந்துகொள்ள மோலின்வேயிலிருந்து ஹென்றி ஜூலியன் இளம்பியபோது, அவருடைய சிறுவர்கள் கேட்டார்கள் : "அப்பா, நாங்களும் மற்ற ஊர்களிலுள்ள சிறுவர்களுடன் கலந்து பழக முடியாதா? எங்களுக்குள் ஒரு மாணவர் சங்கம் அமைத்துக்கொள்ள முடி யாதா?" என்று. அவர்களுடைய கேள்வியும் ஆவலும் நியாயமான கோரிக்கை என்றே ஹென்றி ஜூலியனுக்குத் தோன்றிற்று. மகாநாட்டில், அவர் அனுதைச் சிறுவர் கள் பரஸ்பரம் பழகிக்கொள்ள சந்தர்ப்பம் அளிப்பதற்காக, உல்லாச யாத்திரைகளும், விழாக்களும், நடத்தவேண்டும் என்று யோசனை கூறினர். அதை எல்லோருமே ஏற்றுக் கொண்டார்கள். 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் ஆதரவில் முதல் உல்லாச யாத்திரை முகாம் மோலின்வேயில் நடத்த ஏற்பாடாயிற்று. பெல்ஜியம், பிரான்ஸ், ஹங்கேரி, இத்தாலி, ஸ்விட்ஜர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து சிறுவர்கள் வந்தார்கள். அவர்களுடைய பிரயாணச் செலவை 'யுனெஸ்கோ' ஸ்தா பனம் ஏற்றுக்கொண்டது. நாடகம், விளையாட்டு, நடனம் என்று பல கேளிக்கைகளில் சிறுவர்கள் ஈடுபட்டுச் சந்தோஷ மாக இருந்தார்கள். இந்த முகாம் வெற்றிகரமாக நடக்கவே,

சர்வதேச ரீதியில் முகாம்களை நடத்தவேண்டும் என்று அவர்கள் நிச்சயித்தார்கள்.

மோலின்வே உல்லாச முகாம் நடக்கும்போதே பல நாடுகளில் அந்த மாதிரி உல்லாச யாத்திரைகளை தனிப்பட்டவர்களின் உதவியினால் நடத்தினார்கள். ஆஸ்டிரியா, பெல்ஜியம், டென்மார்க், இங்கிலாந்து, பின்லந்து, ஜர்மனி, போன்ற நாடுகளிலிருந்து கூடிய வாலிபர்கள், உல்லாசமாகப் பொழுது போக்கினாலும், பிரயாணத்தை சமூகத்துக்கு உபயோககரமாகச் செய்யவேண்டும் என்று விரும்பினார்கள். யுத்தத்தினால் நாசமடைந்த தேசங்களில், டென்மார்க், ஹாலந்து, யுகோஸ்லாவாகியா போன்ற தேசங்களிலுள்ள யுவர்கள் தேசப்புனருத்தாரண வேலைகளில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்கள். உல்லாசமாக எல்லோரும் கூடும்போது, அந்த முகாமின் இன்ப நினைவுகளிருப்பதற்காக முகாம் நடக்கும் ஊரில் புனருத்தாரண வேலைகளில் பங்கெடுத்துக்கொள்ள விரும்பினார்கள். பெர்லினுக்குச் சமீபமாக நடந்த முகாமில் ஏழு நாடுகளிலிருந்து வாலிபர்கள் வந்து கலந்துகொண்டார்கள். அவர்களில் இருவர் அமெரிக்கச் சிறுவர்கள். அவர்கள் ஊரிலிருக்கும் நண்பர்களுக்குக் கடிதம் எழுதும்போது பின்வருமாறு எழுதினார்கள்: "எங்களுடைய முகாம் நடந்த இடத்தில் ஒரு பள்ளிக்கூடத்துக்கு கட்டடம் அவசியமாக இருந்தது. நாங்கள் எல்லோரும் உள்ளூர் வாலிபர்களுடன் கலந்துகொண்டு அதைக் கட்டிமுடிக்க உதவிசெய்தோம்."

லாப்லந்து, டென்மார்க் போன்ற தேசங்களிலுள்ள யுவர்கள் உல்லாச முகாம்களுக்கு ஏற்பாடுசெய்து பிறநாட்டுச் சிறுவர்களை அழைத்தார்கள். வாலிபர் முகாம் நடத்துவது ஐரோப்பிய மக்களுக்குப் புதிதல்ல. பல வருஷங்களுக்கு முன்பு, அதாவது 1919-ஆம் வருஷம் பியரே ஸிரிஸோ (Pierre Ceresole) என்ற ஸ்விஸ் எஞ்சினீயர், ஐரோப்பிய இளைஞர்களுக்குள் ஒற்றுமையும் நட்பும் வளர சர்வதேச இளைஞர் முகாம் நடத்த வேண்டும் என்று எண்ணினார். இன, வர்க்க துவேஷமோ, பாஷை, பிரதேசப்

பிரிவோ இல்லாமல் எல்லோரும் ஒன்றுகப் பழகி, சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதே அவருடைய ஆசை. சர்வதேச சேவா சமாஜம் என்ற பெயரில் அவர் பொழுதுபோக்கு முகாம் நடத்தினர். பிறருடைய நலனுக்காக உழைக்கிறோம், வாழ்கிறோம் என்ற எண்ணம் இளைஞர்களுக்குத் தோன்றிவிட்டால், பகைநாட்டு இளைஞர்கள்கூட துவேஷமும் பகைமையும் மறந்து அன்புடன் கலந்து பழக முடியும் என்று அவர் எண்ணினர். ஆகவே சமூக நலனுக்கான ஆக்கவேலைகளில் இளைஞர்களின் கவனத்தை இழுத்தார். இதுவே சர்வதேச சமாதானத்துக்கு பூர்வாங்க வேலை என்று அவர் கருதினர். ஆகவே அவர் பிற்காலத்தில் நடத்திய முகாம்களை, கஷ்டநிவாரண தொண்டர் படை முகாமைப்போலவே நடத்த ஆரம்பித்தார். இதை இளைஞர்களும் ரசித்தார்கள். 1920-ஆம் வருஷம் அவர் வெர்டனில் நடத்திய முகாமில் பிரஞ்சு வாலிபர்களும் ஜெர்மன் வாலிபர்களும் கலந்துகொண்டார்கள். பரஸ்பரம் ஜெர்மனியும் பிரான்ஸும் பகைநாடுகளாஞலும், அந்த வாலிபர்கள் பகையை மறந்து ஒரே குடும்பத்தவரைப்போல பழகினர்கள். அந்த முகாமில்தான் சமூக சேவை ஆரம்பமாயிற்று. முகாமைச் சுற்றியிருந்த ஏழைகளுக்குக் குடிசைகள் கட்டித் தரவும், பொதுவாக சுகாதாரவசதிகளைக் கவனிக்கவும் இளைஞர்கள் முயன்றார்கள். அதுமுதல் முகாம் எங்கு நடந்தாலும் சமூக சேவையைப் பிரதானமாக எடுத்துக்கொண்டது. 1928-ஆம் ஆண்டில் ரைன் நதி வெள்ளப்பெருக்கெடுத்து லிச்சென்ஸ்டின் (Lichtenstein) பகுதி நாசமடைந்தபோது பியரேயின் சேவா சமாஜ முகாம் அவர்களுக்கு உதவி செய்ய ஓடிற்று. "தினசரி எட்டு மணிநேரம் வேலை செய்யவேண்டும். டேராக்களிலும், குடிசைகளிலும்தான் தொண்டர்கள் தங்கவேண்டும். மழை வெயில் என்று பாராமல் உழைக்கவேண்டும். சௌகரியங்களை எதிர்பார்க்கும் இளைஞர்கள் இங்கு வர வேண்டாம்" என்று பியரே எச்சரித்தார். அப்படியிருந்தும் இருபத்திரண்டு நாடுகளிலிருந்து எழுநூறு தொண்டர்கள் அங்கு வந்து கூடிவிட்டார்கள்.

பிற்காலத்தில் பல நாடுகளில் இந்த மாதிரி முகாம்கள் தோன்றின. இரண்டாவது யுத்தத்திலும் இந்த இயக்கம் தடைபட்டிருந்தது. 1949-ஆம் வருஷத்தில், உலகம் முழுவதும்—அதாவது ஐஸைக்காவிலிருந்து கிழக்கே ஜப்பான் வரையிலும், கிரீட்டிலிருந்து வடக்கே லாப்லந்து வரையிலும் கிட்டத்தட்ட ஆயிரம் சங்கங்களிருப்பதாகக் கணக்கெடுத்தார்கள். 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் தூண்டுதலால் மத்தியக் கிழக்கு நாடுகளிலும், மற்ற நாடுகளிலும், இளைஞர் முகாம்கள் ஏற்படலாயின. மரம் நடுதல், ரோடு செப்பனிடுதல், கட்டடங்கள் கட்டுதல், பூகம்பம், வெள்ளம் போன்ற இயற்கையின் கோபத்தாலேற்படும் கஷ்டங்களில் தவிக்கும் மக்களுக்கு நிவாரணமளித்தல் போன்ற வேலைகளில்தான் இளைஞர் முகாம் கவனம் செலுத்துகிறது.

முதியவர் கல்வியிலும் புனருத்தாரண வேலைகளிலும்கூட இளைஞர்கள் கவனம் செலுத்துகிறார்கள். யுகோஸ்லாவியாவில் சமாக்கிலிருந்து சராஜிவோவுக்கு ரெயில்வே லைன் போடும் போது சுமார் இருபத்தையாயிரம் வாலிபர்கள் வேலை செய்தார்கள். அவர்களில் யுகோ வாலிபர் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட ஐயாயிரம் பேர்களிருந்தார்கள். தினசரி வேலை முடிந்ததும், வாலிபர் சங்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் எழுதப்படிக்கத் தெரியாத தொழிலாளர்களுக்கு வகுப்பு நடத்துவார்கள். அமெரிக்காவில் ஒரு சமயம் சர்வதேச தொண்டர் முகாம் நடந்தது. பன்னிரண்டு ஐரோப்பிய நாடுகளிலிருந்து தொண்டர்கள் வந்திருந்தார்கள். முகாம் நடந்த கிராமத்திற்குப் பக்கத்தில், அமெரிக்காவின் பூர்வீகக் குடிகளான சிவப்பு இந்தியச் சிறுவர்கள் தங்கவும், படிக்கவும், சிறுவர் இல்லமும் பள்ளிக்கூடமும் கட்டினர்கள் முகாம் தொண்டர்கள். பிரதிவருஷமும் கோடை காலத்தில் நடக்கும் முகாம்களில், உலகின் பல்வேறு பாகங்களில் ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வாலிபர்கள்கூடி சமூகப் புனருத்தாரண வேலை செய்கிறார்கள்.

பின்லந்திலிருந்து யுத்த காலத்தில் வெளியேறிய அகதி களுக்கு, சொந்த கிராமங்களில் வீடுகளைக் கட்டிக்கொடுக்க நிச்ச யித்தார்கள். டெர்வோல்ா ஜில்லாவில் கிராம நிர்மாணம் செய்ய தொண்டர் படையினர் உதவினர்கள். அதில் கலந்து கொள்ள அமெரிக்காவிலிருந்து வாலிபர்களும் யுவதிகளும் சென்றார்கள். அமெரிக்காவிலுள்ள ஜூனியர் லீக் மாகளை னுக்கு (Junior League Magazine) தம்முடைய அனுப வத்தைப்பற்றி எழுதும்போது அமெரிக்க நண்பர்கள் சேவா சமாஜத்தைச் சேர்ந்த லேடா கிராம்வெல் (Leta Cromwell) பின்வருமாறு குறிப்பிட்டார் : "ஸ்விஸ், டேனிஷ் மக்கள், ஸ்வீடன் தேசத்தார், அமெரிக்கர் என்று பலதேசத்து வாலிபர்கள் எங்களுடன் இருந்தார்கள். எங்களுடைய உழைப்போ அதிகம், கிடைத்ததோ மிகவும் எளிய உணவு. தொண்டு செய்கிறோம் என்ற உத்சாகம்தான் எங்களைக் காப் பாற்றிற்று. ஊரிலிருந்து இரண்டு தடவை வெளியேறி ஓடிய ஒரு குடும்பத்தாருக்கு உதவி செய்ய நாங்கள் தங்கினோம். மிகவும் சின்னதொரு அறையில் ஐந்து குழந்தைகளுடன் வாழும் தம்பதிகள் அவர்கள். ஒரு நாயும், பன்றியும் தவிர ஆஸ்தி எதும் அவர்களுக்குக் கிடையாது. மற்ற அகதிகளைப் போலவே இந்தக் குடும்பமும் உத்சாகமாக இருந்தார்கள். சென்றுபோன நாட்களை எண்ணி வருந்தாமல் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ்கிறார்கள்.

"வடதுருவ மண்டலத்திலுள்ள பனிக் காடுகளிலும் கூட நம்முடைய ஊழியர்கள் போய்ச் சேவை செய்கிறார்கள். எந்த தேசத்துக்குச் செல்கிறோமோ அங்குள்ள பாஷை தெரிந்தால் தான் மக்களுடன் பழக முடியும் என்று எண்ணுவார்கள். ஆனால் பின்லந்தில் ஆர்வத்துடன் பல ஊழியர்கள் சேவை செய்தார்கள். பாஷா ஞானம் அவர்களுக்குக் குறைவுதான். லாப்லந்தில், துருவ மண்டலத்துக்கு இருநூறு மைலுக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் காபி யருந்திக்கொண்டு உத் சாகமாகப் பேசிக்கொண்டிருந்த ஓர் அமெரிக்கப் பெண்மணியை

நான் சந்தித்தேன். பின்லந்தை விட்டுக் கிளம்பும்போது ஒரு விவசாயி எங்களிடம் பிரியாவிடை பெற்றுக்கொண்டான். "வசந்த காலத்தில் வந்து, குளிர்காலத்தில் பறந்து செல்லும் பறவைகளைப்போல நீங்களும் வந்துபோகிறீர்கள். நீங்கள் நிர்மாணித்த வீடுகளைப் பார்க்கும்போதெல்லாம் உங்களுடைய ஞாபகம் வந்துவிடும். உங்களை ஆண்டவன் காப்பாற்றட்டும்" என்று கூறி விடை கொடுத்தான்.

வாலிபர் சேவா சமாஜ் முகாம் வேலைகளில் 1947-ஆம் வருஷம் கோடை காலத்தில்தான் 'யுனெஸ்கோ' நிர்வாகிகள் விசேஷ கவனம் செலுத்தினர்கள். அந்த ஆண்டு பெல்ஜியம், செக்கோஸ்லாவாகியா, பிரான்ஸ், போலந்து ஆகிய நாடுகளில் நடந்த முகாம்களுக்கு 'யுனெஸ்கோ' பிரதிநிதிகள் விஜயம் செய்தார்கள். யுகோஸ்லாவியா போன்ற நாடுகளில் வாலிபர் சங்கங்கள் நிரந்தரமாகவே ஓய்வு நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும், புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டிருப்பது அவர்களுக்கு ஆச்சர்யமளித்தது. இச்சாபூர்வமாக வேலை செய்ததால், துரிதமாகவும் கணிசமாகவும் வேலை நடந்தது என்றும், முகாம் ஊழியர்கள், மகத்தான கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு வேலை செய்வதும் தெரிந்தது. அவர்களால் நினைத்தது நினைத்தபடிச் செய்யமுடியவில்லை. சில இடங்களில் தேவையான சாமான்கள் கிடைக்கவில்லை; சில இடங்களில் போக்குவரத்து வசதிகளில்லாததால் துரிதமாகப் பிரயாணம் செய்ய முடியவில்லை. சில இடங்களில் முகாம் நடத்தவே போதுமான பணம் கிடைக்கவில்லை. பொதுவேலைகளில் ஈடுபட்டாலும் முகாம் ஊழியர்களுக்கு உணவுப் பொருள்களைச் சேகரிப்பதில் சர்க்கார் கட்டுப்பாடு போன்ற பிரச்னைகள் குறுக்கிட்டன. இந்தப் பிரச்னைகளைப்பற்றி விவாதிக்கவும், சர்க்கார்-யுனெஸ்கோ கூட்டுறவில், வாலிபர் முகாம்கள் சிறப்பாக வேலை செய்யவும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் முயற்சியினால் 1948-ஆம் வருஷம் பாரிஸில் ஒரு மகாநாடு நடந்தது. ஒன்பது நாடுகளிலிருந்து, பத்தொன்பது வாலிபர் சங்க முகாம்களின்

பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். புனருத்தாரண வேலை களும் நிர்மாண வேலைகளும் சர்வதேச தொழிற்சங்கத்தின் (International Labour Organisation of the United Nations) ஆலோசனைப்படியும் நிர்ணயப்படியுமே நடந்ததால், மகாநாட்டுக்கு அந்தச் சங்கத்தின் பிரதிநிதிகளையும் அழைத்தார் கள். ஐரோப்பாவில் நடக்கும் வேலைகளைக் கவனிக்கவும், நிர்மாண வேலைகளில் தொண்டர்படைகள் சேர்ந்து உழைப்பது பற்றியும் ஆலோசிக்க, ஐரோப்பா நாடுகளுக்காக, ஒரு தொண்டர்படை ஒத்துழைப்புக் கமிட்டி (Work-Camp Co-ordinating Committee) ஒன்று நியமிக்கப்பட்டது. மாதா மாதம் இந்தக் கமிட்டி பாரிஸில் கூடுவது வழக்கம். தொண்டர் முகாம்களுக்கு உதவி செய்வதுடன், முகாம்களில் சேர விரும் பும் வாலிபர்களுக்கு ஆலோசனை கூறுவதும், புதிதாகத் தொண்டர்படை ஆரம்பிக்க உதவி செய்வதும், பல்வேறு இடங் களிலுள்ள தொண்டர்முகாம்கள் செய்யும் வேலைகளைச் சேக ரித்து அறிக்கை தயாரிப்பதும், தொண்டர் முகாம்களுக்கும், சர்வதேச ஸ்தாபனங்களுக்கும், சர்க்கார்களுக்கும் இணைப்பாக நின்று வேலை செய்வதுமே இந்தக் கமிட்டியின் முக்கியவேலை களாகும். தொண்டர் முகாம் நடத்துவதுபற்றி பாரிஸ் மகா நாடு நடந்ததும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் ஓர் அறிக்கையைப் பிரசுரித்தது.

சர்வதேச விவகாரங்களைப்பற்றி புத்தகங்களும் அறிக்கை களும் சிறு குறிப்புகளுமாக சுமார் 250 வெளியீடுகளை 'யுனெஸ் கோ' பிரசுரித்திருக்கிறது. தொண்டர் முகாம் நடக்குமிடங் களுக்கெல்லாம், ஒரு சிறு புத்தகசாலையை நிறுவி இந்த வெளியீடுகளை அனுப்புவதுடன், வெளி நாடுகளிலுள்ள வாலி பர் சங்கங்களுக்கும் அனுப்புகிறது.

பாரிஸ் மகாநாட்டுக்குப் பிறகு 1949-ஆம் வருஷம் தொண் டர்படை முகாம் ரேமண்ட் (L' Abbaye de Royaumont) என்ற இடத்தில் நடத்த உத்தேசித்து பல்வேறு நாடுகளி லிருந்து இளைஞர்களை அழைத்தது. பதினைந்து தேசங்களி

லிருந்து வந்த 48 தொண்டர்கள் அதில் கலந்துகொண்டார்கள். மூன்று நாட்கள் முகாம் நடந்தது. அதில் கலந்துகொண்ட தொண்டர்கள் 'யுனெஸ்கோ' பொதுச் சபை கூடியபோது, பின்வருமாறு செய்தி யனுப்பினர்கள்: "அரசாங்க ரீதியில் நீங்கள் உலக மக்களுக்குப் பிரதிநிதிகளாக இருக்கிறீர்கள். எங்களுடைய நட்பும், உழைப்பும் சர்வதேச மக்களை ஒன்று சேர்க்கிறது. ஆகவே நாங்களும் உலகமக்களின் பிரதிநிதிகள் தான். மனிதனுக்கு மனிதன் பழகி உடனிருந்து உழைத்து, மனம் விட்டுப்பேசுவதில் நட்பு ஏற்படுவதுடன் உலக அமைதி யும், சர்வதேச சமரஸமும் சமாதானமும் ஏற்படும் என்பதற்கு எங்களுடைய உழைப்பே அத்தாட்சி."

'எல்லோரும் உழைப்போம், ஒன்றுக வாழ்வோம், உலக சமாதானத்துக்கு வழிகோலுவோம்' என்பதே தொண்டர் முகாமின் பிரதான கோஷம். ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது இந்தத் தாரகத்தையே அவர்கள் ஞாபகப்படுத்திக் கொள்கிறார்கள்.

9. எல்லோரும் ஓரினம்.

"'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் உதவியினால் நமக்குள் கடிதப்போக்குவரத்தும் நட்பும் வளரலாயிற்று. தன் கையே தனக்கு உதவி என்ற வாக்கியத்தில் 'யுனெஸ்கோ' நிர்வாகிகளுக்கு நம்பிக்கையதிகம். தன்னம்பிக்கையுடன் வாழ்கிறவர்களுக்கு அவர்கள் உதவி செய்கிறார்கள். நாமும் நம்முடைய செயலை உலகறியச் செய்யவேண்டும். தேசத்துக்குத் தேசம் சென்று நம்முடைய கடமையைச் செய்யவேண்டும்" என்று இருபத்திரண்டு வயதுள்ள கீஸ் மேஜர்ஸ் (Kees Meijers) என்ற ஹாலந்து தேசத்து விஞ்ஞான மாணவன் பிரான்ஸில் நடந்த இளம் விஞ்ஞானிகள் மகாநாட்டில் பேசினான். மற்றத் துறைகளில் கவனம் செலுத்துவதுபோல, விஞ்ஞானக் கழகங்களை ஆதரித்து சர்வதேச நல்லுறவு ஏற்படுத்த 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் வேலை செய்திருக்கிறது. விஞ்ஞானத்துறையில் ஈடுபட்டுள்ள மாணவர்களை ஒன்று சேர்க்கவும், பல நாடுகளில் விஞ்ஞானக் கழகங்களை ஆரம்பிக்கவும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் முயன்றது. பாரிஸில் பூர்வாங்க மகாநாடு மூன்று நாட்கள் நடந்தது. ஒன்பது நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் டைரெக்டர் ஜனரல் ஜேம் டாரஸ் போடட்டும் (Jaime Torres Bodet) ஜூலியன் ஹக்ஸியும் மகா நாட்டில் கலந்துகொண்டார்கள்.

டாரஸ் போடட் மெக்ஸிகோவில் பல வருஷங்களாக கல்வி மந்திரி பதவி வகித்தவர். கல்வித் துறையில் அவர் செய்துள்ள சேவை சர்வதேச அறிஞர்களின் பாராட்டைப் பெற்றிருக்கிறது. மகாநாட்டில் அவர் பேசும்போது பின்வருமாறு சொன்னார்: "விஞ்ஞானப் புதுமைகளைக் கண்டுபிடித்ததற்காக நாம் பலரைப் பாராட்டுகிறோம். கண்டுபிடித்த ரகசியம் பெரிதாக இல்லாவிட்டாலும் அதைக் கண்டுபிடித்தவர் ஓர்

இளைஞர் என்று அறிந்தால் பெருமைப்படக்கூடிய விஷயமாகும். ஜோசப் பிளாக் (Joseph Black) என்ற விஞ்ஞானியும், உலக மேதை ஈன்ஸ்டினும் (Einstein) முப்பது வயது நிரம்புவதற்குள்ளேயே பிரபலமாகிவிட்டார்கள் என்பதைக்கண்டு நாம் வியக்காமலிருக்க முடியாது. சென்ற வருஷம் அமெரிக்க விஞ்ஞான நுணுக்கப்பரிசு ஒரு பதினைந்து வயது சிறுவனுக்கு அளிக்கப்பட்டது என்பது உங்களுக்குத் தெரியவேண்டிய விஷயம். விஞ்ஞானத்துறையில் இளைஞர்கள் உத்சாகத்துடனும் ஊக்கத்துடனும் ஈடுபடவேண்டும் என்றே இதை எல்லாம் சொல்கிறேன். பெயரும் புகழும் கிடைக்குமா, மனித சமூகத்துக்கு உழைத்து திருப்தியுடன் வாழ்வோமா, என்று எல்லாம் எண்ணிக்கொண்டிராதீர்கள். விஞ்ஞானப் புதுமைகளைக் காணவேண்டும் என்பது மட்டும் உங்களுடைய லக்ஷ்யமல்ல. நீங்கள் எல்லோரும் ஐக்யமாக வேலை செய்வதின்மூலம், துவேஷத்தையும் பொறுமையையும் அறியாமையையும் விரட்டியடிக்கிறீர்கள். மனித சமுதாயத்தில் ஒற்றுமை யேற்படவும், மனம் விரிந்து எல்லோரும் சகஜமாகப் பழகவும், நீங்கள் விசுவாசமாகவும், நேர்மையுடனும் சேவை செய்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்."

விஞ்ஞானத்துறையில் வாலிபர்களுக்கு ஊக்கம் ஏற்படவும், இளம் விஞ்ஞானிகளையும் மாணவர்களையும் ஒன்று சேர்க்கவும், தங்களுடைய ஆராய்ச்சிகளைப்பற்றி பரஸ்பரம் தெரிவித்துக் கொண்டு தொடர்ந்து வேலை செய்யவும் அங்கங்கே விஞ்ஞானக் கழகங்களை ஏற்படுத்த 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் முயன்றது. மேலும் விவசாயம், வான சாஸ்திரம், பௌதிகம், பூகர்ப்பம், சமூத்திர சாஸ்திரம், ரசாயனம் போன்ற பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளுக்குள் அறிமுகமும் சர்வதேச ரீதியில் கூட்டுறவும் ஏற்படுத்த 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் முயன்றது. இந்த மாதிரிக் கழகங்கள் அமெரிக்காவில் 16,000 இருக்கின்றன. இந்தியாவில் கல்லூரி மாணவர் சங்கங்களும், தனிப்பட்ட சங்கங்களுமாக நானூறுக்கும்

அதிகம் இருக்கின்றன. இளம் விஞ்ஞானிகளின் கூட்டங்கள், ஆராய்ச்சி இவைகளைப்பற்றி வாராவாரம் ரேடியோமூலம் தெரிவிப்பதுடன் அறிக்கைகளும், குறிப்புகளும், புத்தகங்களும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தார் வெளியிடுகிறார்கள். 'யுனெஸ்கோ கூரியர்' என்று ஒருமாதாந்திர பத்திரிக்கையும் வெளியிடுகிறார்கள். பிரான்ஸிலும் பெல்ஜியத்திலும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் தேசீயப் பிரிவுக் கமிட்டி, விஞ்ஞானக் கழகங்களை ஆரம்பிப்பதிலும், ஆரம்பித்த கழகங்கள் சிறப்பாக வேலை செய்வதிலும் கவனம் செலுத்துகிறது. பல்வேறு நாடுகளிலுள்ள இளம் விஞ்ஞானிகளும், கழகங்களும் செய்யும் ஆராய்ச்சிகளைப்பற்றியும், 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் அனுப்பிய விஞ்ஞானக் கண்காட்சிப் பொருள்களையும் மோட்டார்வானில் வைத்து தென் அமெரிக்க நாடுகளில் ஊர் ஊராக அனுப்பிஞர்கள்.

சர்வதேச விஞ்ஞான மகாநாடுகளைப்பற்றியும், 'யுனெஸ்கோ' வின் வேண்டுகோளுக்கு இணங்க விஞ்ஞானிகள் ஏற்றுள்ள ஆராய்ச்சிகளைப் பற்றியும், தெரிந்துகொள்ள விஞ்ஞான மாணவர்கள் ஆவலாக இருக்கிறார்கள். இளம் விஞ்ஞானிகளுக்கு தேசம்விட்டு தேசம் சென்று ஆராய்ச்சிகள் நடத்தவும், மேல் படிப்புக்காக வசதிகள் தரவும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் விசேஷமான்யங்களைக் கொடுத்து உதவுகிறது.

'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் விஞ்ஞானப் பகுதி விரிவடைந்த பிறகு, தனியாக ஒரு தகவல் பகுதியே வேலை செய்ய வேண்டியதாயிற்று. விஞ்ஞானிகளைத் தவிர, ஆசிரியர்களும், ஆராய்ச்சியாளர்களும், நவீன ஆராய்ச்சிகளுக்காகவும், சமீபத்திய செய்திகளுக்காகவும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் உதவியை நாடுகிறார்கள். மேலும், ஆராய்ச்சிக்கு வேண்டிய சாதனங்கள் எங்கே கிடைக்கும் என்றும் விஞ்ஞான கூடங்கள் நிறுவ உதவி வேண்டும் என்றும் கேட்டு தினசரி பல கடிதங்கள் வருகின்றன. 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் ஆராய்ச்சி நிபுணர்கள், உலகிலுள்ள பல்வேறு ஆராய்ச்சியாளர்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு விஞ்

ஞானப் புதுமைகளை மனிதசமூகம் பயன்படுத்திக்கொள்ளுமாறு துரிதமாக வேலை செய்தார்கள். பரஸ்பரம் பழகிக்கொள்வ தால், தற்செயலாகக் கிடைக்கும் விஞ்ஞான ரகஸ்யங்களைக் கூடத் தொடர்ந்து ஆராய்ந்து பூரண பலனைக் கண்டுபிடிப்பது சாத்யமாயிற்று. விஞ்ஞானிகளுக்குள் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தவும் அவர்களுடைய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளி யிடவும் ஒரு சர்வதேச பத்திரிகையும் 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் ஆரம்பித்ததுடன், பலநாட்டு விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், ஆராய்ச்சிக்குறிப்புகளையும் சேக ரித்து ஆங்கிலத்திலும், பிற மொழிகளிலும் வெளியிட்டார்கள். சர்வதேச ரீதியில் வேலை செய்யும் தனிப்பட்ட விஞ்ஞான கழகங்கள் இந்தத் துறையில் பல வருஷங்களாக சேவைசெய்து வருகின்றன. என்றாலும், உலகிலுள்ள எல்லா விஞ்ஞானி களுக்கும் கிடைக்குமாறு, சர்வதேச சஞ்சிகையோ, வெளியீடு களோ இதுவரையில் வரவில்லை. மேலும் தனிப்பட்ட விஞ் ஞானக் கழகங்கள் வியாபார ரீதியில், சந்தா வசூலித்து பத்திரி கைகளை அனுப்பிவந்தனவே தவிர, மனித சமூகத்தின் உயர் வுக்கும் முன்னேற்றத்துக்கும் சேவை செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் வேலை செய்யவில்லை. ரசாயனத்தில் மட்டும் ஐயாயிரத்துக்கும் அதிகமான கட்டுரைகளையும் குறிப்புக்களையும் மூப்பத்தோரு பாஷைகளில் மொழிபெயர்த்து சந்தாதாரர் களுக்கு அனுப்பியிருக்கின்றன. இது பெரிய சாதனைதான் என்றாலும் சர்வதேச ரீதியில் இன்னும் விரிவாக வேலை செய்யவேண்டியிருக்கிறது. ஆகவே இந்தத் துறையிலும், கவனம் செலுத்த 'யுனெஸ்கோ' நிர்வாகிகள் நிச்சயித்து பாரிஸில் ஒரு மகாநாடு நடத்தினர்கள்.

இருபத்தெட்டு தேசங்களிலிருந்து 147 விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் வந்திருந்தார்கள். இந்த மகாநாட் டுக்கு பல்வேறு நாடுகளிலிருந்து புத்தகாலய அதிபர்களையும் அழைத்திருந்தார்கள். உலகத்தில் பேசப்படும் முக்கியமான பதினைந்து பாஷைகளின் பிரதிநிதிகள் இவர்கள். உலகி

லுள்ள பல விஞ்ஞானிகள் பரஸ்பரம் பழகிக்கொள்வதுடன் விஞ்ஞான கழக அதிபர்களும், வெளியீட்டுப் பிரசுரகர்த்தர் களும் அறிமுகம் செய்துகொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தது. மத்திய கிழக்கு நாடுகளில் விஞ்ஞானிகளுக்குமட்டும் பயன் படக்கூடிய பல சஞ்சிகைகள் பிரசுரமாகின்றன என்பதைக் கேட்டு மேலைட்டு விஞ்ஞானிகள் ஆச்சர்யமடைந்தார்கள். அந்தச் சஞ்சிகைகளின் பெயர்களைக்கூட அவர்கள் கேட்டதில்லை. மேலும், மீன் பிடித்தல், ஜலகர்ப்ப சாத்திரம், பரவெளி ஆராய்ச்சி, பூகர்ப்ப சாத்திரம், விலங்குநூல், தாவரநூல், முதலியவைகளைப்பற்றிய விசேஷ வெளியீடுகளோ, ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுதிகளோ, இதுவரையில் சரிவரத் தொகுக்கப் படவில்லை என்பதும் மகாநாட்டில் விவாதத்தின்போது தெரிந்தது.

நீண்டகாலத் திட்டம் போட்டுக்கொண்டு எல்லாத் துறைகளி லும் புத்தகங்களும், பிரசுரங்களும் வெளியிடுவதற்கு பல வருஷங்களாகும். ஆகவே உடனடியாக வேலை செய்யும் நோக்கத்துடன் விஞ்ஞானத்துறையிலீடுபட்டிருக்கும் பிரசுரகர்த் தர்களைப்பற்றியும் விஞ்ஞான சஞ்சிகைகளைப்பற்றியும் தகவல் சேகரித்தார்கள். 'யுனெஸ்கோ' செய்தி இலாகா ஒன்றை ஆரம்பித்தார்கள். இதன்மூலம் உலகிலுள்ள ஆராய்ச்சியாளர் களுடனும் விஞ்ஞானிகளுடனும் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு அவர்களுக்கும் உதவி செய்வது சாத்யமாயிற்று. மத்தியக் கார்யாலயமே, உலகம் முழுவதுக்கும் சேவை செய்யமுடியாது என்பது அதிசீக்கிரம் தெரிந்தது. ஆகவே தென் அமெரிக்கா நாடுகளுக்காக மான்டீவீடோவிலும் கிழக்கு ஆசியா நாடுகளுக் காக மணிலாவிலும், தெற்கு ஆசியா நாடுகளுக்காக டில்லி யிலும் மத்தியகிழக்கு நாடுகளுக்காக கெய்ரோவிலும், செய்தி இலாகாக்களை ஆரம்பித்தார்கள். இவைமூலம், விஞ்ஞானக் குறிப்புகளும், ஆராய்ச்சிக்கட்டுரைகளும் விஞ்ஞானப் புதுமை களைப்பற்றிய செய்திகளும் விஞ்ஞானத்துறையிலீடுபட்டிருப்பவர் களுக்கும், கல்லூரிகளுக்கும் அனுப்பினர்கள். மேலும் விஞ்

ஞானத்துறையில் யார் யார் என்ன என்ன உதவி கோரு கிறார்களோ அதைச் செய்யவும் இந்த இலாகா முன்வந்தது. எந்தச் சமயத்தில் எந்த மாதிரி தகவல் கேட்பார்கள் என்று தெரியாது; ஆகவே கிடைக்கக்கூடிய தகவல்களை எல்லாம் சேகரிப்பதுடன், புதிய செய்திகளைச் சேகரிக்கவும் பல நாடு களிலுள்ள விஞ்ஞானிகளுடனும், ஆராய்ச்சி நிலையங்களுடனும் கடிதப் போக்குவரத்து ஏற்படுத்திக்கொண்டார்கள்.

உருகுவே நாட்டாருக்கு உயர்நிலைப்பள்ளிக்கூடங்களுக்கு விஞ் ஞானப் பாடப்புத்தகங்கள் வேண்டும்; அர்ஜென்டைனாவிலுள்ள ஒரு விஞ்ஞானிக்கு வெளிநாடுகளுக்குச் சென்று ஆராய்ச்சி நடத்த வசதிவேண்டும்; எகிப்திலுள்ள ஆஸ்பத்திரிக்கு எக்ஸ்ரே யூனிட்டுகள் வேண்டும்; பூமிசாஸ்திர மகாநாட்டைப்பற்றி கொலம்பியாவுக்குத் தகவல் வேண்டும்; காஸ்மிக் கதிர்களைப் பற்றி ஆராய்ச்சிக் குறிப்புகளைப்பற்றி லெபனான் கேட்கும்— இப்படி பல நாட்டினர் கோரும் உதவிகளை 'யுனெஸ்கோ' செய்தி இலாகா கொடுக்கிறது. பலதுறைகளிலுள்ள விஞ்ஞானி களைப்பற்றியும் ஆராய்ச்சிகளைப்பற்றியும், விஞ்ஞான உறவு (Science Liaison) என்ற பெயரில் ஒரு சிறு புத்தகத்தை யுனெஸ்கோ செய்தி இலாகா வெளியிட்டது. யுனெஸ்கோ செய்தி இலாகாவுடன், ஐ.நா.வின் ஏஜன்ஸிகளான மற்ற சர்வதேச ஸ்தாபனங்களும் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டிருக் கின்றன. குறிப்பாக உணவு, விவசாய ஸ்தாபனம் ஒரே கோஷ்டியாக நின்று வேலை செய்கிறது.

இந்தோனேஷியாவில் ஒருவித நீலாம்பல் செடி நதிகளில் வளர்ந்து படகுப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைவித்தது. அதனால் மீன்களும் பலுகாமல் நசித்துப் போவதாகத் தெரிந் தது. சர்க்கார் உடனே 'யுனெஸ்கோவின்' உதவியை நாடி னார்கள். விஞ்ஞானிகள் ஒரு மருந்தைச் சிபாரிசு செய்தார் கள். செடிகள் நசித்துப்போயின என்றாலும் அவற்றை அப்புறப்படுத்துவது மிகப் பெரிய பிரச்னையாகிவிட்டது. இதற்கு என்ன செய்வது என்று நிபுணர்கள் சிந்தித்துக்கொண்டிருக்

கும்போது, உணவு, விவசாய ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் உதவிக்கு வந்தார்கள். மேற்கு வங்காளத்தில் தழை உரமும் எருவும் கிடைக்காமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்று தகவல் கொடுத்தார்கள். உடனே நீலாம்பல் செடிகளை பதப் படுத்திக் கட்டுக்கட்டாக கப்பலில் ஏற்றி வங்காளத்துக்கு அனுப் பினர்கள். இப்போது, இந்தோனேஷியாவில் நீலாம்பல் செடியை உரமாக உபயோகிப்பது சகஜமாகிவிட்டது. லக்ஷக்கணக் கான ரூபாய்களுக்கு வெளிநாடுகளிலிருந்து செயற்கை உரம் வாங்குவதை விவசாயிகள் நிறுத்திவிட்டார்கள்.

விஞ்ஞானிகளுகுக்மட்டுமின்றி, மாணவர்களுக்கும் உதவி செய்ய 'யுனெஸ்கோ' ஸ்தாபனம் திட்டமிட்டிருக்கிறது. வான சாஸ்திரம், உயிர்த் தத்துவநூல், ரசாயனம், மண்வளம், பௌதிகம், ஜலகர்ப்பம், பூகர்ப்பம், வானநிலை ஆராய்ச்சி என்று பலபல துறைகளில் ஆராய்ச்சி நடத்தவும், வெளி நாடுகளுக்குச் சென்று படிக்கவும் மாணவர்களுக்கு வசதியும் மான்யமும் அளிக்கிறது. பதினைந்து தேசங்களில் சுமார் 150 வித ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகளுக்கு வருஷாவருஷம் மான்யம் அளிக்கிறது.

பாலைவனத்திலும், வரட்சிப் பிரதேசத்திலும், காலநிலை எப்படியிருக்கிறது, ஜீவராசிகள் எப்படி வாழ்கின்றன எனறு அறிந்துகொள்ள ரிட்சி கால்டர் (Ritchie Calder) விரும்பினர். அவர் லண்டன் நியூஸ் கிரானிகள் பத்திரிகையின் விஞ்ஞானப் பகுதி ஆசிரியர். தம்முடைய அனுபவங்களை அவர் தெளிவாகவும் தொடர்ச்சியாகவும் பத்திரிகைகளில் எழுதினர். பிரிட்டனிலுள்ள பதினையாயிரம் பள்ளிக்கூடங்களிலுள்ள மாணவர்களும், வேறு நாட்டு மாணவர்களும் உத்சாகத்துடன் அந்தக் கட்டுரை களைப் படித்தார்கள். அல்ஜீரியாவிலுள்ள பேனி அப்பாஸி (Bene Abbas) லிருந்து வட ஆபிரிகா கரையோரமாக பாலை வனப் பிரதேசத்தில் பிரயாணம் செய்து எகிப்து, பாக்தாத், டெஹ்ரான் வழியாக இஸ்ரேலுக்கு வந்தார்; கிட்டத்தட்ட 15,000 மைல் பிரயாணம்.

நீங்கள் எதற்காகப் பாலைவனத்தில் பிரயாணம் செய்ய விரும்புகிறீர்கள்? அங்குபோய் என்ன செய்யப்போகிறீர்கள்? —என்று பிரிட்டனிலுள்ள பல மாணவர்கள் அவரைக் கேட்டார் கள். பல மாணவர்கள் அவருடன் புறப்படத் தயாராஞர்கள். அவர் சொன்ன பதில் இதுதான்: இப்போது உலகத்தில் மூன்றில் இரண்டு பங்குப் பிரதேசங்கள் தான் விவசாயத்துக்கு லாயக்குள்ள பகுதி. இங்கு உற்பத்தியாகும் உணவு நமக்குப் போதவில்லை. வரண்ட பிரதேசங்கள் எப்படி இருக்கின்றன என்று தெரிந்துகொள்ளவேண்டும். அங்கு ஏதாவது பயிரிட முடியுமா என்று பரிசீலனை செய்யவேண்டும். அவற்றை உபயோகிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

அவருடைய பிரயாண திட்டமும், விஜயம் செய்யும் பகுதி களும் நியூஸ்கிரானிகளில் வெளியாயிற்று. பிரதேசப் படம் ஒன்றும் பிரசுரமாயிற்று. பிரிட்டனிலுள்ள ஒவ்வொரு பள்ளிக் கூடத்திலும் அந்தப் படத்தை மாட்டி வைத்துக்கொண்டார்கள். வாராவாரம் அவர் எழுதும் அனுபவங்களைப்படித்து, பிரயா ணம் செய்த பகுதிகளையும் குறித்துக் கொண்டார்கள். கால்டர் பல போட்டோக்களையும் வெளியிட்டார். அவருடைய கட் டுரைகளை முப்பத்திரண்டு நாடுகளிலுள்ள 43 பத்திரிகைகள் பிரசுரித்தன. பிற்பாடு கால்டர் அந்தக் கட்டுரைகளைத் தொகுத்து புத்தகமாக வெளியிட்டார்.

டுனீஷியாவிலும், வேறு பல பாலைவனப் பிரதேசங்களிலும் கால்டரைப்போல பலர் ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்தார் கள். கால்டருடைய விஜயத்தினால் அவர்களுக்குள் தொடர்பு ஏற்பட்டதுமல்லாமல் அந்தத் துறையில் விசேஷ ஆராய்ச்சி செய்வதும் சுலபமாயிற்று. சார்லஸ் சாமேன் (Charles Saumagne) என்பவர் டுனீஷியாவில் இன்ஸ்பெக்டர்-ஜனரல். ஒருநாள் கால்டருடன் பேசிக் கொண்டிருக்கும்போது அவர் சொன்னார்: "பாலைவனத்தை உழுது பயிரிடமுடியும்; அங்கு மனிதன் சுகமாக வாழமுடியும் என்று என்னைப்போல

பத்துப்பேர்கள் நம்புகிறார்கள் என்று தெரிந்தால்கூடப்போதும். நான் நிம்மதியாக இறப்பேன்" என்று.

சார்லஹின் ஆசையும் கனவும், உத்வேகத்தில் எழுந்த தல்ல. நீண்டகால ஆராய்ச்சியில் ஏற்பட்டவை. தம்மைப் போல பாலைவனப்பிரதேசங்களில் பலர் கனவு கண்டுகொண்டு வாழ்கிறார்கள் என்பது அவருக்குத் தெரியாது. கால்டர் அவர்களை யெல்லாம் சந்தித்தார்; பேசினார். அவர்களுடைய அனுபவங்களையும் ஆராய்ச்சிகளையும் சேகரித்துக்கொண்டார்.

கால்டருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள், பல வாலிபர்களுடைய சிந்தனையைத் தூண்டிவிட்டன. ஹாலந்திலும் பிரிட்டனி லும் உள்ள மாணவர்கள் உணவுப் பிரச்னையில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். பள்ளிக்கூடங்களில் விவாதங் களை நடத்தியும், உணவு உற்பத்திக்கான வேலைகளில் ஈடுபட்டும் சேவை செய்தார்கள். உணவு உற்பத்தியைப்பற்றி, சிறுவர் களுக்குப் பயன்படும்படி 'யுனெஸ்கோ' ஸ்தாபனம்; 'உணவும் மக்களும்' என்ற வரிசையில் சில புத்தகங்களை வெளியிட்டது.

இவை எல்லாவற்றையும் விட மாணவர்களுக்கு சர்வதேச அரசியல் ஞானமூட்ட 'யுனெஸ்கோ' எடுத்துக்கொண்ட முயற்சி தான் அற்புதமானது. கானடாவிலுள்ள ஹக்ஸ்லி லாயல்டி (Loyalty School in Huxley) ஸ்கூல் பிரின்ஸிபால் ஜி.ஜி. பெல்லோஸ் (G. G. Fellowes) ஐரோப்பாவுக்குச்சென்று சமூக ஊழியம் செய்தார். நாடு திரும்பியதும், ஐ.நா. சபையும் அதன் பல்வேறு ஸ்தாபனங்களும் செய்யும் சேவையை மாணவர்களுக்குப் போதிக்க நிச்சயித்தார். சில நாடுகளில் மாணவர்கள் ஐ.நா. சபையைப்போல விளையாட்டுச் சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டு அரசியல் பிரச்னைகளை விவாதித்தனர். மாணவர்களுக்கு அரசியல் சாத்திரம் போதிக்கவும், எதிர் காலத்தில் சர்வதேச சமரஸ மனப்பான்மை வளரவும், இந்த மாதிரி விவாதச் சங்கங்கள் பெரிதும் பயன்படும் என்று அவர் எண்ணினார். ஐ.நா. சபையின் பொதுசெய்தி இலாகாவிலிருந்து

தேவையான தகவல்களைச் சேகரித்துக்கொண்டார். பள்ளிக் கூடத்தில் பொம்மைச் சபையை ஏற்படுத்திக்கொண்டதுடன், யொது அசெம்பிளி, தர்மகர்த்தா சபை, என்ற பல விபாகங் களையும் ஏற்படுத்தினர். அங்கு மாணவர்கள் நடத்தும் விவாதங்களை ரேடியோவில் ஒலிபரப்பவும் ஏற்பாடு செய்தார். கனடா முழுவதிலும் உள்ள மாணவர்கள் இதைக் கேட்டதும் உத்சாகம் காட்டினர்கள். பெரியவர்கள்கூட சிரத்தை காட்டி னர்கள். பத்திரிகைகளில் அவர்களுடைய பிரசங்கங்களும், விவாதங்களும் வெளிவந்தன. தம்தம் ஊர்களிலுள்ள மாணவர்களுக்கு பயிற்சி தரவேண்டும் என்று பெல்லோஸைப் பலர் அழைத்தார்கள். பெல்லோவின் முயற்சியை 'யுனெஸ்கோ' நிர்வாகிகளும் பாராட்டினர்கள். லேக் சக்ஸெஸில் ஐ.நா. ஸ்தாபனம் வேலை செய்வதையும், சர்வதேச அரசியலில் சிரத்தையுள்ள ஜனாதிபதி ட்ரூமன் வாழும் வெள்ளை மாளிகையும் நேரில்பார்த்து மகிழ பெல்லோஸையும் அவருடைய மாணவர்களையும் ஸ்தாபன அதிகாரிகள் அழைத்தார்கள்.

இப்போது, மாணவர்களுக்கு சர்வதேச அரசியலைப்பற்றியும் ஐ.நா. சபையின் பல்வேறு வேலைகளைப்பற்றியும் தெரிவிப்ப தற்காக, பேராசிரியர்கள் குழு ஒன்று இருக்கிறது. மனித உரிமைச் சாசனத்தையும், மற்றும் முக்கிய தீர்மானங்களையும் சிறுவர்களுக்குப் புரியும்படியான எளிய நடையில் எழுதி புத்தகங்களாக வெளியிடுகிறார்கள். சினிமாப் படங்களை எடுத்து அனுப்புகிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் ஐ.நா. சபையின் சேவையைப்பற்றி பல படங்களையும் போட்டோக்களையும் சேகரித்து ஒரு கண்காட்சி நடத்தினர்கள். மனித உரிமைக்காகவும் சுதந்தரத்துக்காகவும் போரிட்ட வீரர்களைப்பற்றியும் சுதந்தரப் பிரகடனத்தின் கைப்பிரதிகளையும் பல நாடுகளிலிருந்து வர வழைத்துவைத்தார்கள். தாமஸ் ஜெப்பர்ஸன் (Thomas Jefferson) எழுதிய சுதந்தரப் பிரகடனமும், அடிமை வியா பாரத்தை ஒழித்த ஆபிரகாம் லிங்கனின் (Abraham Lincoln)

கெட்டிஸ்பர்க் (Gettysburg) பிரசங்கமும், அமெரிக்காவி லிருந்து அனுப்பியிருந்தார்கள்.

பள்ளி மாணவர்களுக்கு வேண்டிய பல பாடப் புத்தகங்களைக் கூட—எல்லா நாட்டு மாணவர்களுக்கும் பயன்படும்படி, யுனெஸ்கோ ஸ்தாபனத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் தயா ரித்திருக்கிறார்கள். 'மனித உரிமைகளைப் புரிந்துகொள்ள வேண்டும். அவற்றை மதித்து அந்தப் பண்புடன் வாழ பயிலவேண்டும். அதுதான் யுனெஸ்கோ வழி—சமரஸ சன் மார்க்க சமத்துவம்' என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

10. ஒரே கீதம்—ஒரே உலகம்.

கையில் களிமண்ணை உருட்டிக்கொண்டே சயீதா யோசனையிலாழ்ந்தாள். சிங்கத்தைப்போல ஒரு பொம்மை செய்ய வேண்டும் என்பது அவளுக்கு ஆசை. வீரன் டேனியல் கதையை அவள் எத்தனையோ முறை கேள்விப் பட்டிருக்கிறாள். டேனியல் சிங்கத்தின் குகைக்குள் நுழையும்போது, சிங்கம் பாய்ந்துவருகிறது. அதைப்போன்ற காட்சியை நிருமாணிக்க சயீதா முயன்றாள். ஆனால் சிங்கத்தை அவள் பார்த்ததேயில்லை; சிங்கத்தின் படத்தைக்கூடப் பார்த்ததில்லை. வாத்தியாரம்மாள் சிங்கத்தைப்பற்றிக் கூறும் வர்ணனைகளைத்தான் அவள் கேட்டிருக்கிறாள். சிங்கம் பாய்ந்துவரும், மிகவும் கொடூரமான பிராணி என்பதுமட்டும் அவளுடைய மனத்தில் பதிந்திருந்தது. அவள் பொம்மையைச் செய்து முடித்தாள் அது சிங்கத்தைப்போல இல்லை. ஆனாலும் பாய்ந்துவரும் கொடூர மிருகம்தான். அவளுடைய கற்பனையையும் கைத் திறமையையும் ஹபீப் கார்கி (Habib Gorgi) பார்த்து வியந்தார். எகிப்திலுள்ள சித்திர, சிற்ப கலைகளின் ஆராய்ச்சித் தலைவர் அவர். சயீதாவைத் தம்முடன் அழைத்துச்சென்று வீட்டிலே வைத்துக்கொண்டு, சிற்பம், சித்திரம் ஆகிய கலைகளில் பயிற்சி அளித்தார்.

கார்கி ஒரு பிறவிக்கலைஞர். எகிப்திய கலையில் ஆராய்ச்சியுள்ளவர். சிறுவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதில் அவருக்கு அலாதி ஆசையும் உத்சாகமுமுண்டு. பல சிறுவர்களுக்கு, சித்திரம், சிற்பம் இவைகளைக் கற்றுக்கொடுத்து சிறந்த கலைஞர்களாக்கி யிருக்கிறார். 'யுனெஸ்கோ' ஸ்தாபனத்தின் கலாசாரப் பகுதியினர் கார்கியை பாரிஸுக்கு அழைத்ததுடன், அவருடைய மாணவர்கள் சிருஷ்டித்த கலைச் செல்வங்களை ஒரு கண்காட்சியில் வைக்கவும் ஏற்பாடுகளைச் செய்தார்கள்.

தம்மிடம் பயிலும் சிறுவர்களின் படங்களையும், சித்திரங்களையும், பூவேலை நிறைந்த எகிப்திய நாட்டுக் கம்பளங்களையும் கண் காட்சியில்வைத்து சர்வதேச கலைஞர்களின் பாராட்டை கார்ஸி பெற்றார்.

எகிப்திய கலைக்காட்சி மிகவும் பெரியதொரு வெற்றி என்றே சொல்லவேண்டும். அதன்பிறகு 'யுனெஸ்கோ' நிர்வாகிகள் பல நாடுகளிலுள்ள சிறுவர்களின் கலை ஆர்வத்தில் கவனம் செலுத்த ஆரம்பித்தார்கள். 'யுனிசெப்' ஸ்தாபனத்தின் மூலம் பல நாட்டுச் சிறுவர்கள் வர்ணச்சித்திரங்கள் எழுதிப் பிரபலமடைந்தது யுனெஸ்கோ நிர்வாகிகளுக்குத் தெரியும். "எல்லோரும் இன்புற்று வாழ வழி" என்பதைப் பொருளாகக் கொண்டு கட்டுரைகளும், சித்திரங்களும் எழுத மாணவர் களுக்கு ஒரு சர்வதேசப்போட்டி நடத்தினர்கள். உண்மையி லேயே அது ஒரு சர்வதேசப் போட்டியாக அமைந்தது. போட்டி யில் கலந்து கொண்டவர்களைப்போல, அவர்களுடைய கட்டுரை களையும் சித்திரங்களையும் பரிசீலனை செய்ய சர்வதேசப் பஞ்சாயத்துதாரர்கள் நியமிக்கப்பட்டார்கள். பிரஹில், சீனு, பிரான்ஸ், இந்தியா, ஸிவிட்ஜர்லந்து, இங்கிலாந்து ஆகிய நாட்டு அறிஞர்கள் பஞ்சாயத்துதாரர்களாக இருந்தார்கள். ஆஸ்டிரேலியா, பெல்ஜியம், டென்மார்க், இந்தியா, மெக்ஸிகோ, வட அயர்லந்து, ஸ்காட்லந்து, தென் ஆபிரிகா, ஸிவிட்ஜர்லந்து ஆகியநாட்டு வாலிபர்கள் போட்டியில் கலந்துகொண்டார்கள். பரிசுபெற்ற பன்னிரண்டு யுவர்களையும் பாரிஸுக்கு அழைத்துக் கௌரவித்தார்கள். பரிசுபெற்ற கட்டுரைகளையும் சித்திரங்களை யும் யுனெஸ்கோவின் மாளிகையான யுனெஸ்கோ கூரியரில் பிரசுரித்தார்கள்.

சிற்பம், சித்திரம் போல லலிதகலைகள் எல்லாவற்றிலுமே யுனெஸ்கோ ஸ்தாபனம் கவனம் செலுத்துகிறது. சர்வதேச ரீதியில் ஒவ்வொரு நாட்டு நடனம், சங்கீதம், நாடகம், சிற்பம், சித்திரங்களை பிரசித்திசெய்து மக்களுக்கு கலையார்வம் ஊட்டு கிறது. எல்லா மக்களும் பார்த்து ரசிப்பதற்காக 1860-ம்

வருஷத்திலிருந்து நாளது வரையிலுள்ள பிரபல சித்திரக் காரர்களுடைய படங்களைத் தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிட்டார்கள். பல நாடுகளில் கலைக் கண்காட்சிகளை அமைக்கவும் யுனெஸ்கோ கலைப்பகுதி உதவி செய்தது. பெரு, ஆஸ்டிரேலியா, பிரஸில், ஈக்வடார், ஹைட்டி, மெக்ஸிகோ, நார்வே, டுனீஷியா, உருகுவே முதலிய நாடுகளில் கலை விழாக்கள் நடந்தன. ஊர் ஊராகச் சுற்றும் கலைக் காட்சிகளும் நடந்தன.

சங்கீதத்துறையில் கவனம் செலுத்திய யுனெஸ்கோ கலைப் பகுதியினர், பல நாடுகளிலுள்ள சாகித்ய கர்த்தாக்களை பாரிஸ் தலைமைக் கார்யாலயத்துக்கு வரவழைத்துக் கௌரவித்தார்கள். உருகுவே நாட்டின் சங்கீத விற்பன்னரான ஹெக்டர் டோஸ்ரே, பெல்ஜியத்திலுள்ள கரோல் கோவார்ட்ஸ், ஐக்கிய அமெரிக்காவின் சார்லஸ் ஜோன்ஸ், ஸ்பெயினிலிருந்து நார்ஸஸ் பாஜெட், பிரான்ஸின் சாகித்திய கர்த்தாவான ஆலிவர் ஆலெயின் ஆகியவர்களை அழைத்து, சொந்த சாகித்யங்களைப் பாடிக் காட்டும்படி 'சதஸ்' ஏற்படுத்தினர்கள். எந்த நாட்டிலும் பொதுவாக சாகித்ய கர்த்தாக்களைப்பற்றி பொதுஜனங்கள் தெரிந்துகொள்வதில்லை. யுனெஸ்கோ கலைப்பகுதியினர் தங்களுக்கு ஒரு சந்தர்ப்பமளித்து விளம்பரப் படுத்தியதை சாகித்ய கர்த்தாக்கள் நன்றியுடன் வரவேற்றார்கள். அவர்களுடைய சாகித்தியங்களை நேரில்கேட்டு ரசித்தவர்களும் பாராட்டினர்கள்.

சங்கீத விற்பன்னர்களையும் சாகித்ய கர்த்தாக்களையும் எப்படிக் கண்டுபிடித்தார்கள்? அரசியலில் சிரத்தையுள்ளவர்களுக்கும் லலித கலைவிற்பன்னர்களுக்கும் எப்படிப் பரிச்சயம் ஏற்பட்டது? ஐரோப்பிய நாடுகளில் சங்கீத வளர்ச்சிக்காகவும் சாகித்ய கர்த்தாக்களை ஆதரிக்கவும் சர்வதேச சங்கீத கௌன்சில் என்று ஒரு சங்கம் பல வருஷங்களாக வேலை செய்து கொண்டிருக்கிறது. அதன் உதவியினால்தான் யுனெஸ்கோ சங்கீதத்துறையிலுள்ள பிரபலஸ்தர்களை அறிமுகம் செய்து கொள்ள முடிந்தது. சர்வதேச சங்கீத கௌன்சிலின் கூட்

டுறவினுல், சங்கீத விற்பன்னர்களையும் சாகித்யகர்த்தாக்களையும் ஒன்று சேர்க்கவும், சங்கீத விநிகைகளும் விழாக்களும் நடத்தவும் ஏற்பாடு செய்கிறார்கள். வெளிநாடுகளில் பிரயாணம் செய்யவும் வாத்திய கோஷ்டிகளுக்கும், சங்கீத வித்வான்களுக்கும் வசதிகளைச் செய்து தருகிறார்கள். முக்கியமாக சிறுவர், சிறுமிகளுக்கு கலையார்வம் ஏற்படவும் சங்கீதஞானம் ஏற்படவுமே 'யுனெஸ்கோ' கலைப்பகுதியின் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இளம்வித்வான்கள் சங்கம், சங்கீத மாணவர்கள் சங்கம், என்று பல பல சங்கங்களைத் தோற்றுவித்து உத்சாக மூட்டுகிறார்கள். யுனெஸ்கோவின் ஆதரவில் இந்தமாதிரிச் சங்கங்கள் ஆஸ்டிரேலியா, பெல்ஜியம், டென்மார்க், இந்தியா, மெக்ஸிகோ, வட அயர்லந்து, ஸ்காட்லந்து, தென் ஆபிரிகா, ஸ்விட்ஜர்லந்து, போன்ற பல நாடுகளிலிருக்கின்றன. வருஷா வருஷம் சர்வதேச சங்கீத மகாநாடுகளும் நடக்கின்றன.

சர்வதேச நாடக அரங்கம் ஒன்றும் யுனெஸ்கோ மாளிகையிலிருக்கிறது. நாடகக்கலையை அபிவிருத்தி செய்யவும், நாடோடி நாட்டியம், நடனம், நடன நாடகங்கள், கூத்து இவைகளை ஆதரிக்கவுமே, இந்த அரங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. வருஷாவருஷம் சர்வதேச நாடக விழா நடத்தவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிரதி வருஷமும் மார்ச் மாதத்தில் விழா கொண்டாடப்படுகிறது. இதுவரையில் நடந்த விழாக்களில் அமெரிக்காவில் நடந்த விழாத்தான் மிகவும் விமரிசையாக நடந்தது. அதில் நாநூறு நாடக கோஷ்டியினர் கலந்துகொண்டார்கள். பெரும்பாலும் பள்ளி மாணவர்களுடைய கோஷ்டிகள்தான் என்றாலும் சுவையுடனும், திறமையுடனும் ஆர்வத்துடனும் அவர்கள் நடித்தார்கள். நாடக அரங்கத்துக்கு சிறப்பான எதிர்காலம் இருக்கிறது என்பதை அந்த விழா ஊர்ஜிதம் செய்தது. அமெரிக்க நாடகங்களைத் தவிர வெளிநாட்டு நாடகங்களையும் இவர்கள் நடித்து மகிழ்ந்தார்கள். யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் லக்ஷி

யத்தை வற்புறுத்த பென்சில்வேனியா மாகாணத்திலுள்ள பள்ளி மாணவர்கள் நடித்த "ஒரே பாட்டு—நாட்டியம்—உலகம்" என்ற நாடகம் எல்லோரையும் கவர்ந்தது. மாணவர்கள் பல நாட்டு ஆடைகளையும் அணிகளையும் அணிந்து கொண்டு நாடக கூத்து, நடன நாடகம், இவைகளை ஆடி, மகிழ்ந்தார்கள்.

நடனம், சங்கீதம், நாடகம், சித்திரம், சிற்பம் போன்ற கலைகளைப்பற்றி புத்தகங்களை வெளியிடும் முயற்சியும் இப்போது நடக்கிறது.

இரண்டாவது உலகயுத்தம் ஆரம்பிப்பதற்குப் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே ஸ்ரீமதி ஜோஹன்ன ரெபெக்கா உல்ப் (Miss Johanna Rebecca Wolff) சிறுவர்களுக்கும் குழந்தைகளுக்கும் பயன்படக்கூடிய புத்தகங்களைச் சேகரிப்பதில் ஊக்கம் காட்டினர். ஹேக் (Hague) நகரிலுள்ள புத்தகாலயத்தின் தலைவிதான் ஸ்ரீமதி ரெபெக்கா. சிறுவர் இலக்கியத்தில் அவளுக்கு விசேஷப்பற்று உண்டு. பெற்றோர்களையும் பள்ளி ஆசிரியர்களையும் அடிக்கடி சந்தித்து ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சிறு வாசகசாலை அமைக்க ரெபக்கா முயன்றார். அவருடைய முயற்சியினால் நாடெங்கும் வாசக சாலைகள் ஏற்பட்டன.

யுனெஸ்கோவின் மான்யம் பெற்று அமெரிக்காவில் புத்தகாலயம் இயக்கம் நடைபெறுவதைத் தெரிந்து வர ஸ்ரீமதி ரெபெக்கா விரும்பினர். புத்தகாலய இயக்கத்திலும், சிறப்பாக குழந்தைகள் இலக்கியங்களிலும் ரெபெக்கா காட்டும் உத்சாகத்தை அறிந்த யுனெஸ்கோ நிர்வாகிகள் ஆறுமாத காலம் அமெரிக்காவில் தங்கி பல புத்தகாலயங்களைப் பார்க்கவும், புத்தகாலய இயக்கத்தாருடன் நெருங்கிப் பழகவும் வசதிகளைச் செய்துகொடுத்தார்கள். சிகாகோவிலுள்ள அமெரிக்க புத்தகாலய சங்கத்தார் அவரை, விருந்தாளியாக ஏற்றுக்கொண்டார்கள். குழந்தைகள் இலக்கிய சங்கத்தாரும், குழந்தை

கள் புத்தகாலய சங்கத்தாரும் அவரை உபசரித்தார்கள். கிளீவ்லந்திலுள்ள பொதுஜன வாசக சாலையின் சிறுவர் பகுதி இலாகா தலைவி ஸ்ரீமதி ஜீன்ரூஸும் (Jean Roos), எலிஜபெத் பிரிக்ஸும் (Elizabeth Briggs) ரெபெக்காவுக்கு உதவி செய்தார்கள். புத்தகாலயங்களில் வேலை செய்ததுடன், சிறுவர்களுடன் நெருங்கிப் பழகவும், அவர்களுடைய இலக்கிய ரசனையைத் தெரிந்துகொள்ளவும் ரெபெக்கா அவகாசம் ஏற்படுத்திக் கொண்டார். அந்தச் சிறுவர்களுக்குத் தம்முடைய அனுபவங்களை எடுத்துச் சொன்னார். தாய் நாட்டிலுள்ள சிறுவர்களுக்காக தாம் எப்படி எப்படி வேலை செய்கிறோம் என்பதைச் சொன்னார். அவருடைய அனுபவங்களையும், அன்பையும் மாணவர்கள் மட்டுமின்றி பெரியவர்களும் போற்றினர்கள்.

அமெரிக்க மக்களுடைய அன்பு மட்டுமின்றி, ஹாலந்திலுள்ள சிறுவர்களுக்காக நூற்றுக்கணக்கான புத்தகங்களையும் பெற்றுக்கொண்டு தாய்நாடு திரும்பினர்.

புத்தகாலய இயக்கத்தைப் பரப்ப யுனெஸ்கோ தனி இலாகா ஒன்றை நடத்துகிறது. பல நாடுகளில் புதுப்புது வாசக சாலைகளை ஏற்படுத்தவும், சிறுவர்களுக்கும் வாலிபர்களுக்கும் உலகஞானம் ஏற்படுவதற்கான புத்தகங்களை வெளியிடவும், விரிவான திட்டங்களும், ஆலோசனைகளும் கூறவே இந்த இலாகா ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. புத்தகாலய இயக்கம் சம்பந்தமாக பல குறிப்புக்களும், அறிக்கைகளும் அச்சிட்டு பல நாடுகளுக்கு அனுப்புகிறது. இரண்டாவது உலகயுத்தத்துக்கு முன்பு ஜினிவாவில் தலைமைக் கார்யாலயம் வைத்துக் கொண்டு வேலை செய்த சர்வதேச சங்கம், குழந்தைகளுக்காக சர்வதேச வாசகசாலை ஒன்றை அமைக்க முயன்று ஓரளவு வெற்றியும் பெற்றது. அதில் பல பாஷைகளிலுள்ள நூல்களை சேகரித்து வைத்தார்கள். அதே போன்றதொரு நூல் நிலையத்தை சர்வதேச இளைஞர்களுக்காக ம்யூனிச்சில் ஏற்படுத்தினர்கள். இதை உருவாக்கியவர் ஸ்ரீமதி ஜெல்லா லெப்மன் (Mrs. Jella Lepman). அமெரிக்காவிலுள்ள ராக்

பெல்லர் தரும ஸ்தாபனமும், ஜெர்மனியிலுள்ள பிரமுகர்களும், புத்தகாலய இயக்கத்தாரும் இதை வெற்றிபெற அமைக்க உதவி செய்தார்கள்.

புத்தகாலய இயக்கத்தில் யுனெஸ்கோ ஸ்தாபனம் சிரத்தை எடுத்துக்கொண்டதும் மிகப் பெரியதொரு பிரச்னை குறுக்கிட்டது. வாசகசாலைகளை நிறுவும்படி உத்சாகம் கொடுத்தபிறகு புத்தகங்கள் கிடைக்காவிட்டால் என்ன செய்வது? பிற நாடுகளிலிருந்து சமூகம், விஞ்ஞானம், கலாசாரம், நாட்டியம், சங்கீதம் போன்ற துறைகளிலுள்ள புத்தகங்களை வரவழைக்க புத்தகசாலைகள் விரும்பின. நாடுவிட்டு நாடு செல்லும்போது, சுங்க வரியும் கட்டுக்கூலியும் தபால் செலவும் சேர்ந்து புத்தகத்தின் விலையைவிட அதிகமாயின. சில நாடுகளில் சுங்கவரிமட்டும் புத்தக விலைக்கு இரட்டிப்பாயிற்று. இந்தத் தொல்லையை நீக்க யுனெஸ்கோ பொதுச் சபையில் விவாதித்தார்கள். கல்வி, கலாசாரம், சினிமா, சம்பந்தமான எல்லாப் புத்தகங்களுக்கு சுங்க வரி போடக்கூடாது என்று அங்கத்தினர் நாடுகளைக் கேட்டுக்கொண்டு ஒரு தீர்மானம் நிறைவேற்றினர்கள். பல நாடுகள் உடனே இணங்கின.

சுங்கவரி எடுபட்டதும், விலைமலிவாகப் பல புத்தகங்களைக் கொள்முதல் செய்ய பல வாசகசாலைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தன. ஆனால் நாட்டுக்கு நாடு செலாவணி முறையில் வித்தியாசமிருந்ததால் பணம் அனுப்புவதிலும் சிரமம் ஏற்பட்டது. உலக நாடுகளில் டாலரும் பவுனும்தான் பிரதான செலாவணி நாணயங்கள். மேலும், கடின செலாவணிப் பகுதி சுலப செலாவணிப் பகுதி என்று இரு பகுதிகளாக தேசங்கள் வியாபாரத்துறையில் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவ் விரண்டு பகுதிகளுக்குள்ளும் பணம் அனுப்புவதும் பண்டம் அனுப்புவதும் சுலபமான காரியமல்ல. இதற்கும் யுனெஸ்கோ நிர்வாகிகள் ஒரு மாற்றுக் கண்டு பிடித்தார்கள். அங்கத்தினர் நாடுகளுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு சர்வதேச செலாவணியுள்ள கூபன்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்

தார்கள். இதனால் நாட்டுக்கு நாடு புத்தகங்கள் அனுப்புவது சாத்தியமாயிற்று.

பாரசீகம் சுமை செலாவணிப் பகுதியைச் சேர்ந்த நாடு. அங்குள்ள ஒருவர் அமெரிக்காவிலிருந்து சில விஞ்ஞானப் புத்தகங்களை வாங்க விரும்புகிறார் என்று வைத்துக்கொள்வோம். "யுனெஸ்கோ'வின் ஏற்பாட்டுப்படி அவர் புத்தகத்தின் கிரையத்துக்கு கூபன் வாங்கி அமெரிக்க வியாபாரிக்கு தபால்மூலம் அனுப்பலாம். அந்த வியாபாரி, அமெரிக்க புத்தக வியாபாரிகள் சங்கத்தின்மூலம் கூபனை மாற்றிக் கொண்டு புத்தகங்களை அனுப்பிவிடுவார். அமெரிக்க புத்தக வியாபாரிகளிடமுள்ள கூபன்களை யுனெஸ்கோ ஸ்தாபனம் வாங்கிக்கொண்டு பணம் கட்டிவிடுகிறது. இதேபோல மற்ற கடின செலாவணிப் பகுதிகளிலுள்ள நாடுகளிலும், கூபனை மாற்ற யுனெஸ்கோ ஸ்தாபனம் வசதி செய்திருக்கிறது.

இளைஞர்களுக்கு சர்வதேச ஞானமும் பரஸ்பரம் நட்பும் ஏற்பட அன்பளிப்புத்திட்டம் ஒன்றை யுனெஸ்கோ ஸ்தாபனம் ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் புத்தகாலய இயக்கமும் பரவுவது சாத்தியமாகிறது. ஒரு நாட்டிலுள்ள பள்ளிக்கூட மாணவர்களோ, சாரணர்படையோ, அல்லது சங்கமோ, வேறு நாட்டிலுள்ள நண்பர்களுக்கு, அவர்களுக்கு வேண்டிய புத்தகங்களை வாங்கிக்கொள்ள அன்பளிப்புக் கூப்பன்களை வாங்கியனுப்பலாம். அந்த நாட்டு வாலிபர்கள், அதை உள்ளூர் புத்தக வியாபாரியிடம் கொடுத்துவிட்டுத் தேவையான புத்தகங்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இதனால் புத்தகங்கள் மட்டுமின்றி, உள்ளூரிலுள்ள புத்தகங்களை வாங்கியனுப்ப பணமும் அனுப்ப முடிகிறது. தபால் செலவு, கட்டுக்கூலி முதலிய செலவுகள் குறைவதால் அதிகப் புத்தகங்களும் வாங்குவது சாத்தியமாகிறது. 25 சதம் முதல் பத்து டாலர்கள் வரையில் இந்தக் கூப்பன்கள் விற்கப்படுகின்றன. இவை எல்லா நாடுகளிலும் செலாவணியாகக் கூடியவை.

கல்வித்துறையில் பாராட்டக்கூடியதொரு சேவையை யுனெஸ்கோ ஸ்தாபனம் செய்திருப்பது குருடர்களுக்கும் படிக்க வசதி செய்திருப்பதுதான். சர்வதேச சமரஸத்தைக் காட்டுவது மட்டுமின்றி எல்லாரும் ஓர் குலம், எல்லாருக்கும் சம உரிமை யுடன் வாழ வழியுண்டு என்பதை வற்புறுத்துவது போலவே இருக்கிறது இந்த முயற்சி. பல வருஷங்களுக்கு முன்பு லூயி பிரெய்லி (Louis Braille) என்பவன் குருடர்கள் படிப்ப தற்காக ஒருவித எழுத்துக்களைக் கண்டுபிடித்தான். அவனே ஒரு குருடன்தான். கையினல் தடவிப் பார்த்துப் படித்துவிடக்கூடிய முறையில் எழுத்துக்கள் அமைந்திருந்தன. பாஷைக்குத் தக்கபடி அவற்றின் அதன் அமைப்புச் சிறிது மாறுதலடையும். இன்று சுமார் இருபத்தைந்து பிரெய்லி எழுத்து வகைகள் பழக்கத்திலிருக்கின்றன. இதனல் அதிகமாகப் புத்தகங்களை அச்சிடுவதோ விநியோகிப்பதோ சாத்யமில்லாமலிருந்தது. குருடர்களுக்குப் படிப்பு வசதி தருவதைப்பற்றி யுனெஸ்கோ மாளிகையில் நடந்த மகாநாட்டில் கலந்துகொண்ட நியூஜி லந்தைச் சேர்ந்த ஸர் க்ளுதா மெக்கென்ஸி, (Sir Clutha Mackenzie) எல்லாருக்கும் பொதுவான ஒரே பிரெய்லி எழுத்துக்கள் அமைக்க முயலவேண்டும் என்று வற்புறுத்தினர். முதல் மகாயுத்தத்தின்போது அவர் கண்களை இழந்து குருட ரானர். அது முதல் அவர் குருடர்கள் கல்வியில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார்.

பல பாஷைகளுக்கும் பொதுவான லிபியைக் கண்டுபிடிப்பது சுலபமான கார்யமல்ல. நிபுணர்கள் பல தடவைகளில் கூடி ஆலோசித்தார்கள். தேவையும் அவசியமும் வந்துவிட்டால் வழியும் தோன்றிவிடும் அல்லவா? சிறு மாறுதலுடன் ஒரே அமைப்புள்ள எழுத்துக்களைக் கடைசியில் கண்டுபிடித்துவிட்டார் கள். இது நாள்வரையில் இடதுபுறமிருந்து வலதுபுறமாக எழுத் துக்களைச் சேர்த்து வாசித்த முறையைமாற்றி வலது புறத்தி லிருந்து இடதுபுறமாக வாசிக்கும்படி அமைத்தார்கள். சர்வ தேச பாஷா விற்பன்னர்களின் கூட்டுறவினல்தான் இது சாத்திய

மாயிற்று. இதை அறிந்த ஸர் க்ளுதா சந்தோஷமடைந்தார். "உலகிலுள்ள குருடர்கள் ஒரே பாஷை—ஒரே இனம் என்று சேர்ந்துவிட்டோம். கண்ணுள்ள உங்களுக்குத்தான் ஒற்றுமை எற்படவில்லை" என்றார். அர்த்த புஷ்டியுள்ள வாசகம்தான்!

படிக்கத் தெரிந்தவர்களுக்குத்தானே வசதி? படிக்கத் தெரிந்தவர்களுக்குத்தானே உதவி? இதுவா சர்வதேச சமரஸம்? உலக நாடுகளின் நல்லுறவு? இல்லை—இல்லை. படிக்கத் தெரியாத பாமரர்களுக்கும் வசதியும் கல்வியறிவும் கொடுக்க யுனெஸ்கோ ஸ்தாபனம் தயார்தான். பொதுவாக எந்த நாட்டினர் உதவி கேட்கிறார்களோ அவர்களுக்கு உதவி செய்வதுதான் ஐ.நா. சபையின் ஏஜன்ஸிகளுக்கு வழக்கம். சர்க்கார்-ஸ்தாபன கூட்டுறவிலும் சமபங்குச் செலவிலும்தான் ஒவ்வொரு நாட்டிலும் பிரச்னைகள் சமாளிக்கப்படுகின்றன. உதவி கோராத நாடுகளுக்கு யுனெஸ்கோ ஸ்தாபனம் செல்வதில்லை. எல்லா நாடுகளுக்கும், மக்களுக்கும் உதவ வேண்டும் என்பது யுனெஸ்கோ ஸ்தாபனத்தின் திட்டம் என்றாலும் உதவி கோரும் நாடுகளுக்கே முதல் சலுகையளிக்கப்படுகிறது.

மேற்கிந்திய தீவுகளில் ஒன்றான ஹைட்டியில் மக்களின் பொருளாதார நிலைமை நிலைகுலைந்தது. அறியாமையிலும் வாழ வகையற்று வறுமையில் உழன்றார்கள் அங்குள்ள மக்கள். சர்க்கார் கோரிக்கையின்பேரில் யுனெஸ்கோ ஊழியர்கள் அங்கு சென்றார்கள். திட்டம் வகுத்து வேலை செய்தார்கள். இரண்டே வருஷங்களில் புரட்சிகரமான மாறுதலேற்பட்டுவிட்டது. திருமகளும் கலைமகளும் கைகோத்து நடனமாடுகிறார்கள் அங்கே.

ஜோஸப் கட்டிளங் காளை. அவனுடைய மனைவி கெஹிலா ஊக்கம் நிறைந்த யுவதி—உடலுழைப்புக்கு அஞ்சாத தம்பதிகள். ஆனாலும் அவர்கள் சுகமாக வாழமுடியவில்லை. ஒற்றை அறையுள்ள குடிசையில் நோயுற்ற தந்தையும் தாயும் வைத்துக்கொண்டு வாழ்ந்தார்கள். கீழே நசநசப்பு. நோயாளி

யின்மீது ஈ மொய்க்கும். கை ஓயாது விசிறிக்கொண்டே யிருக்கவேண்டும். விதைத் தான்யத்தையும் எடுத்துச் சாப்பிடவேண்டிய நெருக்கடி ஒரு சமயம் வந்துவிட்டது. அதுவும் கூட இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குத்தான் வரும். பிறகு பட்டினிதான். நினைத்துக்கூடப் பார்க்கமுடியாத பயங்கர நிலைமை. வீதியில் வரும் ரொட்டியைக்கூட வாங்க காசு இல்லை. தள்ளு வண்டியில் வரும் மாங்காய் வியாபாரியிடம் ஒரு மாங்காய் வாங்கக்கூடக் கையில் காசில்லை. வீட்டிலே எல்லாப் பண்டங்களும் காலி.

வஞ்சனையில்லாமல் கிழவன் ஆயுள்முழுவதும் உழைத்தான். ஆரோக்கியமாக இருக்கும்போது தினந்தோறும் மண்வெட்டியும் கோடறியும் எடுத்துக்கொண்டு மலைக்குக் கிளம்பிவிடுவான். விறகும் புல்லும் எடுத்துக்கொண்டு கீழே வருவான். பள்ளத்தாக்கிலுள்ள நகரில் சென்று விற்றுவிடுவான். மலைச்சரிவில் எதாவது விதைகளைத் தூவுவான். விளைந்தால் சாப்பாட்டுக்குத் தான்யம் கிடைக்கும். ஜோசப்புக்குப் பதினைந்து வயதாகும் வரையில்கூட கிழவன் அவனைச் செல்லமாக வளர்த்தான். காட்டுக்கு அழைத்துச்செல்லும்போது, சரிவில் வழுக்கி விழுந்து விடாமலிருக்க இடுப்பில் கயிறைக்கட்டி அழைத்துச் செல்வான். அந்தக் கிராமவாசிகளுக்கு மரம்வெட்டிப்பிழைப்பதுதான் முக்கிய ஜீவனம். புதிதாக செடிகளை நடுவதுமில்லை. வெட்டிய மரங்கள் துளிர்ப்பதற்குக்கூட அவகாசமில்லாமல் காடுகளை அழித்தார்கள். மேல்மண் கரைந்து பூமி வரண்டது. புல் பூண்டுகள்கூட சரிவர முளைப்பதில்லை. விதைத் தான்யங்களைத் தூவினாலும் விளைச்சல் கிடையாது. கால மழையும் தவறி விட்டது. ஜோசப் வாழ்ந்த பள்ளத்தாக்கின் சிறு சிறு கிராமங்களில் இருபத்தாறுயிரம் மக்கள் வசித்தார்கள்.

ஹைட்டி மக்களுக்கு உதவி செய்ய 'யுனெஸ்கோ' நிபுணர்கள் சென்றார்கள். அந்தத் தீவிலுள்ள மக்களின் விவசாயம், கைத்தொழில், பள்ளிக்கூடம், சுகாதாரம், பொரு

னாதாரம் ஆகிய பல துறைகளில் பரிசீலனை செய்தார்கள். முன்னேற்றத்துக்கான திட்டம் வகுத்தார்கள்.

அந்தப் பிராந்தியத்திலே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் களுக்குப் படிக்கத் தெரியாது. பள்ளத்தாக்கில் நீர்த் தேக்க மிருந்ததால் கொசுக்கள் சதா இருந்துகொண்டிருந்தன ; மக்கள் மலேரியாத்தினால் கஷ்டப்பட்டார்கள். சுகாதார வசதியே தெரியாத மக்கள். வீடுகளைச் சுத்தமாக வைத்துக்கொள் ளாததால் பெரும்பான்மையோர் கொக்கிப்புழுக்களால் அவஸ் தைப்பட்டார்கள். அந்த பிராந்தியத்தில் மக்களுடைய வசதி யைக் கவனிக்க டாக்டரோ சுகாதார அதிகாரிகளோ கிடையவே கிடையாது. ஒன்றிரண்டு கிராமங்களில் பள்ளிக்கூடங்களிலிருந் தும் அறியாமையினால் பெற்றோர்கள், குழந்தைகளை அனுப்பு வதுமில்லை.

டாக்டர் ஆல்ப்ரெட் மெட்ராக்ஸ் (Dr. Alfred Metraux) தலைமையில் யுனெஸ்கோ ஊழியர்கள், ஹைட்டியிலுள்ள மார்பியல் பள்ளத்தாக்குக்குச் சென்றார்கள். முதலில் வறுமையையும் பட்டினியையும் போக்க ஏற்பாடுகளைச் செய்தார் கள். குழந்தைகளுக்கும் வாலிபர்களுக்கும் உணவுதர கஞ்சித் தொட்டிகளை ஆரம்பித்தார்கள். குறுகிய காலச்சோள தானியங் களை விவசாயிகளுக்குக் கொடுத்தார்கள். விவசாயம் செய்ய வசதியில்லாதவர்களுக்கும் உதவி யளித்தார்கள். பிறகுதான் நிரந்தரமாகச் செய்யவேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டார்கள்.

குடி தண்ணீர் வசதி, கிராமச்சாவடி, சுகாதார முறையி லமைந்த கக்கூஸ் என்று கிராமந்தோறும் வசதிகள் ஏற் பட்டன. டாக்டர்களும் நர்ஸுகளும் கிராமம் கிராமமாகச் சென்று சேவை செய்தார்கள். மக்களுடைய முகத்தில் தெளிவு ஏற்பட்டது. காய்கறித் தோட்டம் போடவும், நாற்று விட்டுப் பயிர் செய்யவும் கிராமவாசிகளுக்குக் கற்றுக்கொடுத் தார்கள். வீட்டுக்கு வீடு, அவரையும், சோளமும், கத்தரிக்காயும்

காய்த்துக் குலுங்கின. தங்களுக்குப் போக, சந்தைக்கும் எடுத்துச் சென்று விற்கும்படி காய்கறிகள் கிடைத்தன. பள்ளத் தாக்கிலுள்ள கோஸலின் ஆற்றில் வெள்ளம் பெருகிவிட்டால், எங்குமே செல்லமுடியாதபடி கிராமவாசிகள் தவிப்பார்கள். இப்போது யுனெஸ்கோ நிபுணர்களின் மேற்பார்வையில் கிராம வாசிகள் அதற்கு ஒரு பாலம் கட்டினர்கள். பக்கத்திலுள்ள நகரமான ஜேக்மலுக்குச் (Jacmel) செல்ல நல்லதொரு ரோடும் அமைத்தார்கள். கூலியே இல்லாமல் இச்சாபூர்வமாக பள்ளத் தாக்கில் வாழும் ஒவ்வொரு கிராமவாசியும் ரோடுபோட முன் வந்தான். ஒரு பகுதிக்கு ரோட் அமைத்ததும் அவர்களுக்குப் பெருமை படவில்லை. 'யுனெஸ்கோவின் முயற்சிக்கு உதவி யளியுங்கள்' என்று ஒரு பலகையில் எழுதி நிருத்தினர்கள். நாற்றுங்கால் விடுதல், வீடுகட்டுதல், போன்ற ஒவ்வொரு வேலை யிலும் யுனெஸ்கோ ஊழியர்கள் புதுவழி காட்டினர்கள். புதிய முறையில் முதல் வீடு கட்டியதும் கிராமவாசிகள் சந்தோஷத்துடன் விழாக் கொண்டாடுவார்கள். ஒவ்வொரு வசதியும் அவர்களுக்குப் புதுமையாக இருந்தது. கூத்தும் கொம்மாளமும் அங்கு சகஜமாகிவிட்டது. சுகாதாரமாக வாழத் தெரிவதுடன், லாபகரமாகப் பயிரிடவும் அவர்களுக்குத் தெரியும் இப்போது. மலைச் சரிவுகளில் புதுச் செடிகளை நட்டதுடன், மண் சரியாமலிருப்பதற்காக, மேடும் பள்ளமுமாக வாய்க்கால் வெட்டி விட்டார்கள். வரண்டு கிடந்த மலைச்சரிவுகள் அதி சீக்கிரத்தில் பசுமை தோன்றிக் காட்சியளித்தது.

குழந்தைகளுக்காகப் பள்ளிக்கூடம் நிறுவுவதில் யுனெஸ் கோ நிபுணர்கள் முயன்றபோது கிராமத்துக்கு ஒரு பள்ளிக் கூடம் கட்டவேண்டியதுடன் முதியவர் கல்வியிலும் கவனம் செலுத்தவேண்டியதாயிற்று. குழந்தைகளுடன் பெரியவர் களும் பள்ளிக்கூடங்களுக்கு வந்தார்கள். பெண்களும், உத் சாகத்துடன் படிக்க வந்தார்கள். தையல், பூவேலை, சமையல் முதலிய வகுப்புகளை ஆசிரியர்கள் நடத்தினர்கள். விவசாயம், மண்வளம், பால்பண்ணை என்று பல துறைகளில் பாடுபட

வாலிபர்களுக்குப் பயிற்சியளித்தார்கள். மலைச்சரிவுகளில் கற்முழைகளைப் பயிரிட யுனெஸ்கோ நிபுணர்கள் கற்றுக் கொடுத்ததுடன், அதிலிருந்து நார் எடுத்துக் கயிறு திரிக்கவும், கற்றுக்கொடுத்தார்கள். ஓய்வு நேரங்களில் பாய் பின்னவும் கூடை முடையவும் மக்கள் கற்றுக்கொண்டார்கள். ஜேக்மல் நகர வியாபாரிகள் கிராமங்களுக்கு வந்து அவற்றைக் கொள் முதல் செய்தார்கள்.

பள்ளிக்கூடங்களில் நவீன வசதிகள்; அழகான படங்கள், பாடங்களைப் போதிக்க சினிமா; நாட்டியப் பாடங்களைக் கற்றுத் தர கிராமபோன் ரிகார்டுகள், வாலிபர்களுக்கு விளையாட வாலி பால்போன்ற சாதனங்கள். இவை எல்லாவற்றையும் கிராம வாசிகள் சந்தோஷத்துடன் வரவேற்றனர். கல்வி போதிப்ப திலும், உள் நாட்டுக் கலாசாரத்தையும் பாஷையும் வளர்ப்பதில் தான் யுனெஸ்கோ ஊழியர்கள் சிரத்தை காட்டினர்கள். அங்குள்ள குழந்தைகளுக்கு பாடப்புத்தகங்களும் கதைப் புத்த கங்களும் தயாரிப்பதற்கென்றே பாரிஸில் உள்ள யுனெஸ்கோ மாளிகையிலிருந்து ஒரு கல்வி நிபுணர் ஹைட்டிக்கு வந்து சேர்ந்தார். உள்ளூரிலுள்ள சித்திரக்காரர்களின் உதவியினால், பல காட்சிகளை எழுதி பாடப்புத்தகங்களில் சேர்த்தார்கள். ஹைட்டி மக்கள் பேசும் 'கிரியேல்' பாஷையில் பல புத்த கங்களை அச்சிட்டு விநியோகித்தார்கள். கிராமம் தோறும் வாசகசாலைகள் நிறுவப்பட்டன.

ஜோஸப்பும் கெஸிலாவும் அவனுடைய பெற்றோர்களும்கூட போட்டி போட்டுக்கொண்டு எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டார் கள். முதலில் கற்றுக்கொள்ளவேண்டும் என்று எல்லோரும் படித்தார்கள்; அதில் கெஸிலாதான் வெற்றி பெற்றாள். மார்பியல் பள்ளத்தாக்கில் படிக்கத்தெரியாதவர்களே இப் போது கிடையாது. அவர்களுக்கு கல்வி போதிக்க புத்தகங் களும் ஆசிரியர்களும் யுனெஸ்கோ ஸ்தாபனம் உதவிற்று என்று சொல்வது மிகையாகும். அறியாமையை ஒழித்து, எல்லா மக்களுக்கும் எழுத்தறிவு ஏற்பட, முதியோர் கல்வி

நிதி ஒன்றை யுனெஸ்கோ ஸ்தாபனம் ஒதுக்கிற்று. முதியவர் கல்விக்கான புத்தகங்களும், பிரசுரங்களும் வெளியிடவும், உலக மக்களுடன் தொடர்பு வைத்துக்கொண்டு உதவி செய்யும் ஓர் இலாகாவையும் யுனெஸ்கோ மாளிகையில் ஏற்படுத்தினர்கள்.

உலகிலுள்ள ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியாது என்று கல்வி நிபுணர்களுக்குத் தெரியும். அறியாமையை விரட்டி எல்லா மக்களையும் அறிவாளிகளாக்கினால், பொய்யும், சூதும் வாதும் மாண்டுபோம் என்பதுடன், உலக நிகழ்ச்சிகளைப் புரிந்துகொள்ளவும் சிந்திக்கவும் முடியும். ஒவ்வொருவரும் அரசியல் பிரச்னைகளைப்பற்றியும் சர்வதேச உறவைப்பற்றியும் சிந்திக்க ஆரம்பித்தால், துவேஷமும் பகையும் மறைந்துவிடும். பிறகுதான் சௌஜன்யமும் சர்வதேச சமரஸமும் ஏற்படும் என்பது அறிஞர்களின் துணிபு.

முதியவர் கல்வியில் பலவருஷகாலம் கவனம் செலுத்தியுள்ள பல அறிஞர்களை யுனெஸ்கோ நிர்வாகிகள் அழைத்து ஆலோசித்தார்கள். பல மகாநாடுகளை நடத்தி முதியவர் கல்விக்காக திட்டம் வகுத்தார்கள். மெக்ஸிகோ நாட்டில் இரண்டே வருஷங்களில் பதினேழு லக்ஷம் மக்களுக்குக் கல்வி போதிக்க திட்டமிட்டு வெற்றியும் பெற்ற ஜெம் டாரஸ் போபட் இந்தத் துறையில் விசேஷ உத்சாகம் காட்டி உதவி செய்தார். முதியவர்களுக்காகப் பாடப் புத்தகங்களும் படங்களும் அச்சிட்டு விநியோகிப்பதிலும் மிகவும் ஜாக்கிரதையாக யுனெஸ்கோ நிபுணர்கள் வேலை செய்தார்கள். உலகின் பல பாகங்களிலிருந்து முதியவர் கல்விக்கான பாடப்புத்தகங்களை வரவழைத்துப் பரிசீலனை செய்தார்கள். பிலிப்பைன் தீவுகளில் பூர்வீகக் குடிகளுக்கு கல்வி புகட்ட லாபாக் (Laubach) பாதிரி கையாண்ட முறைகளும், பாடப் புத்தகங்களும், எளிய முறையிலிருந்தன. அதே பாணியில் பல பாடப் புத்தகங்களைத் தயாரித்தார்கள். அத்துடன் பல புதுப்புத்தகங்களும், படங்களும், சினிமாப் படங்களும் தயாரித்துப் பல நாடுகளுக்கு அனுப்பினர்கள். சர்க்கார்

யுனெஸ்கோ கூட்டுறவில், ஒவ்வொரு நாட்டிலும் முதியவர் கல்விப்பிரசாரம் நடக்கிறது. இந்தியாவுக்கும் யுனெஸ்கோ ஸ்தாபனம் உதவி செய்திருக்கிறது. வடக்கே அடிலாபாத் என்னுமிடத்தில் யுனெஸ்கோ—சர்க்கார் கூட்டு முயற்சியில் முதியவர் கல்வி முகாம் நடந்தது.

மார்பியல் பள்ளத்தாக்கில் கிடைத்த அனுபவத்தைக் கொண்டு பிற்போக்கான நாடுகளில் அறியாமையை ஒழிக்க ஒரு திட்டம் வகுக்க யுனெஸ்கோ நிபுணர்கள் நிச்சயித்தார்கள். விவசாயம், உணவு, சுகாதாரம் போன்ற பல விஷயங்களில் மக்களுக்கு நவீன முறைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டியிருப் பதால், உணவு விவசாய ஸ்தாபனம், சர்வதேச சுகாதார ஸ்தாபனம் இவற்றுடன் கலந்து ஆலோசித்து அடிப்படைக் கல்வித்திட்டம் ஒன்றை வகுத்தார்கள். ஆரோக்கியமான சந்தோஷவாழ்வு வாழ்வதற்கு அறிவு புகட்டவே அவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஹைட்டி மக்கள் எங்கிய வாழ்வு வாழ்கிறார்களா? அங்கு அறியாமையே கிடையாதா? தரிசு நிலமே கிடையாதா? பாலும் தேனும் வழிந்தோடும் சுவர்க்க பூமியாகிவிட்டதா? இல்லை. மார்பியல் பள்ளத்தாக்கில் செய்த முயற்சி ஹைட்டி மக்களை சுகவாழ்வு வாழச் செய்த திருப்பம்தான். அங்குள்ள திடல்களில் பசுமை படர்ந்துவிட்டது; அதிக விளைச்சலுக்கான முயற்சிகளை உணவு-விவசாய ஸ்தாபன நிபுணர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நிரந்தரமான சுக வாழ்வுக்கான நீண்ட காலத் திட்டங்களை அமலாக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு பிரச்னையும் கஷ்டமும், ஒரு படிப்பினையேதான். ஹைட்டியில் கிடைத்த அனுபவங்கள் யுனெஸ்கோ நிபுணர் களின் சிந்தனையைத் தூண்டிவிட்டன. ஐ.நா. சபையும் அத னுடைய ஏஜன்ஸிகளான பல சர்வதேச ஸ்தாபனங்களும் மகத் தான பொறுப்புக்கள் ஏற்றுக்கொண்டாலும் இன்னும் குழந் தைப்பருவத்திலேதான் இருக்கின்றன. ஒவ்வொரு அனு

பவமும் பாடமாகக் கொண்டு மேலே மேலே செல்கிறது. மக்களுக்கு அறிவு ஊட்ட திட்டம் வகுக்கிறார்கள். அது ஓர் அனுபவம், கோஷ்டிகளாகச் சென்று வேலை செய்யும்போது கிடைக்கும் அனுபவம்; சுகாதாரச் சேவை செய்யும் கிராம நர்ஸின் அனுபவம், காட்டிலும், மலையிலும் ஜீப் கார்களில் சுற்றி மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றும் ஊழியர் களின் அனுபவம், ஒவ்வொன்றும் படிப்பினையே. இப்போது கிடைக்கும் அனுபவங்களைக் கொண்டுதான், மக்களின் மனத் தையும் தேவைகளையும் அறிந்துகொள்ள முடியும். சர்வதேச சமரஸமும், உலக சமாதானமும்தான் நம்முடைய லக்ஷியம் என்று பிரகடனப் படுத்திவிட்டோம், அதையடைய முன்னேறிச் செல்ல, இந்த அனுபவங்கள் பெரிதும் உதவி செய்கின்றன. மக்களுக்குள் நேசமும் பாசமும் ஏற்பட இவை உதவி செய் கின்றன. மனித உரிமைகளும், ஜீவாதாரப் பிரச்னைகளும் பற்றி நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம். அதை அனுபவ சாத்தியமாக்கி, அனுபவிக்கும்படி இளைஞர்களைத் தயார் செய் வதே இப்போதுள்ள அறிஞர்கள் செய்யும் வேலையாகும்.

11. ஜீவாதார உரிமைகள்.

மனித உரிமைகளுக்காக ஐக்கிய நாடுகள் ஏன் இவ்வளவு சிரத்தை காட்டுகின்றன என்று பல இளைஞர்கள் ஆச்சர்யப்படக் கூடும். மனித உரிமைகளுக்காக தலைமுறை தலைமுறையாக போராட்டம் நடந்துவருகிறது. ஆதிநாளிலிருந்து வாழ்வதற்காக மட்டும் இன்றி அடிப்படையான சுதந்தரத்தையும் மனித உரிமைகளையும் பெறவேண்டும் என்றுமே போராடிஞர்கள். ஜீவாதாரமான மனித உரிமைகளையும், வாழ்க்கைச் சுதந்தரத தையும்பற்றி எல்லா தேசத்தவரும் பரஸ்பரம் கூடிப்பேசி, ஒரு முடிவுக்கு வந்தால் நிரந்தரமான உலக சமாதானத்துக்கு அடிகோலியவர்களாவோம். இதைச் சாதிக்க ஐ.நா. சபை யிஞல்தான் முடியும்.

மனித சுதந்தரத்துக்கும், ஜீவாதார உரிமைகளுக்கும் யுத்தம் பகையாகும். இரண்டு நாடுகளோ அல்லது பல நாடுகளோ யுத தத்தில் ஈடுபட்டால், இந்த நாடுகளிலுள்ள எல்லா மக்களும் சுதந் தரத்தை இழந்துவிடுகிறர்கள்; உயிருடன் வாழும் உரிமை யைக்கூட இழந்து யுத்த தேவனுக்குப் பலியாகிவிடுகிறர்கள். ஐ.நா. சபையின் மனித உரிமைக் கமிஷனில் பல நாட்டுப் பிரதிநிதிகள் இருக்கிறர்கள். டென்மார்க் தேசத்திலும், மற்ற ஸ்காண்டினேவியா தேசங்களிலும், தனிப்பட்ட மனித ஞடைய உரிமைகளையும் சுதந்தரத்தையும் மதிக்கும் பண்பு விசேஷமாக உண்டு. அந்த நாட்டினருடைய பரம்பரைக்குணம் அது. அதஞல்தான் மனித உரிமைகளைப்பற்றிப் பேசும்போது டென்மார்க் தேசப்பிரதிநிதி உத்வேகத்துடன் பேசுவதுடன் எல்லா மக்களும் சம உரிமைகளுடன் வாழவேண்டும் என்று வற்புறுத்துகிறர்.

தென் அமெரிக்கர்களும் சுதந்தரப் பிரியர்கள்தான். சர் வாதிகார ஆட்சியிலிருந்து மக்களை விடுவிக்க போராட்டம்

நடத்திய சுதந்தரவீரன் பொலிவாரையே (Bolivar) அவர்கள் நினைத்து வணங்குகிறார்கள். மனித உரிமைகளை மதித்து நடக்கவேண்டும், எல்லா மக்களும் சுகமாகவும் சமமாகவும் வாழவேண்டும் என்று அந்த நாட்டுமக்கள் எண்ணுகிறார்கள். அந்த நாடுகளில் பல பிற்போக்காக இருப்பதால், மனித உரிமைக்கு மதிப்புக் கொடுத்தாலும் எல்லாரும் சுகமாக வாழ முடியவில்லை.

ருஷ்யாவிலும், சர்வாதிகார ஆட்சிக்குட்பட்ட மற்ற நாடுகளிலும், தனி மனிதனுடைய உரிமைகளைப்பற்றிய கவலையே கிடையாது. மக்களுடைய சுகவாழ்வு என்று ஆளும் தலைவர்கள் எதை எதை எண்ணுகிறார்களோ அவைதான் வாழும் சுதந்தரம். பொருளாதாரத்துறையிலும் சமூக அந்தஸ்திலும் மக்கள் மேம்படுவதுதான் அடிப்படையான மனித உரிமைகள் என்று அங்கு நினைக்கிறார்கள். தனி மனிதனுடைய சிந்தனையை மதித்தும், அவனுடைய அபிப்பிராயத்துக்குக் கௌரவம் கொடுத்தும் வாழ்வதுதான் முக்கியமான ஜீவாதார உரிமைகள் என்று அவர்கள் கருதவில்லை.

வேறுசில நாடுகளில் மக்களுடைய அரசியல் சுதந்தரத்தைப் பற்றி ஆளும் வர்க்கத்தார் சிந்திக்கவேயில்லை. சுதந்தரம் கிட்டினாலும் ஆளும் திறமை ஏற்படுவதற்கான கல்வி வசதியை அளிக்காமலே மக்களை மௌட்டியர்களாக வைத்திருக்கிறார்கள். மத்திய கிழக்கிலும் ஆபிரிக்காவிலும் இந்த நிலையிலுள்ள நாடுகள் பல இருக்கின்றன.

ஜீவாதார உரிமைகள் என்று சொல்லும்போதே விவசாயம், கைத்தொழில், அறிவு வளர்ச்சி ஆகிய துறைகளில் ஒவ்வொரு நாட்டின் வளர்ச்சிக்கு ஏற்றபடி ஒரு கற்பனை தென்பட்டுவிடும். உலகின் ஒவ்வொரு பகுதியின் பிரச்னைகளை அலசிப் பார்த்து, எல்லோரும் சமநிலையடைந்து சுதந்தரமாக வாழ வழியைக் கண்டுபிடிப்பதில்தான் கமிஷனிலுள்ள அங்கத்தினர்கள் ஆலோசிக்கிறார்கள். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைக் கவனிக்

காமல் உலகிலுள்ள எல்லா மக்களும் சமூக, கலாசார, பொருளாதார அம்சங்களில் சமநிலையடைந்து பரஸ்பரம் நல்லுணர்ச்சியுடன் சௌக்கியமாக வாழவேண்டும் என்று எண்ணியே பொருளாதார சமூக கௌன்சில், மனித உரிமைகளைப்பற்றி ஆராய ஒரு கமிஷனை நியமித்தது. மனித சுதந்தரமும் உரிமைகளும் விவரித்து, அவற்றை மதித்து நடப்பதுபற்றி பல்வேறு நாட்டினரின் அபிப்பிராயத்தைத் தெரிந்து சர்வ சம்மதமான ஒரு பிரகடனம் செய்யவே முயற்சி செய்தார்கள்.

அமெரிக்காவின் சுதந்தரப் பிரகடனத்தைப்போல மனித உரிமைகளைப்பற்றியும் ஒரு பிரகடனம் தயாரிக்க கமிஷன் முடிவு செய்தது. மனித உரிமைகளைக் கௌரவிக்கும் முற்போக்கு நாடுகளிலும், சுதந்தர விழிப்பேற்பட்டுப் போராடிக்கொண்டிருக்கும் நாடுகளிலும் இந்தப் பிரகடனம் வற்புறுத்தப்படும். மற்ற நாடுகளில் சட்டபூர்வமாக உரிமைகளை வழங்க ஒப்பந்தங்கள்மூலமும் உடன்படிக்கைகள் மூலமும் படிப்படியாக ஜீவாதார உரிமைகளை அமல் நடத்தவேண்டும். ஜீவாதார உரிமைகளை ஏற்றுக்கொள்வது பெரிதல்ல. அவற்றை மதித்து, மக்களுக்கு வாழ்வுதர சட்டங்களைத் திருத்தியமைக்கவும், அனுசரணையான சூழ்நிலை ஏற்படுத்தவும் வேண்டும்.

ஜீவாதார உரிமைகளில் முற்பகுதியான, அரசியல், சமூக உரிமைகளை, இன, நிற, வர்க்கபேதமின்றி எல்லாரும் சமமாக அனுபவிக்கவேண்டும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டது. இதை பல வருஷங்களுக்கு முன்பே அமெரிக்கர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சட்டபூர்வமாக அமல் நடத்துவதுபற்றியும், ஒவ்வொரு நாட்டிலும் சட்ட பூர்வமான உரிமைகளை வழங்குவது பற்றியும் யோசனை செய்யவேண்டும்.

சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால்தான், மனித சமூகத்தின் வளர்ச்சியையும் ஜீவாதார உரிமைப் பிரகடனத்துக்காக கமிஷன் செய்துவரும் முயற்சியின் முக்யத்துவமும் விளங்கும்.

பனி, வெயில், மழை போன்ற இயற்கையின் வெப்ப, தட்ப நிலைகளிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள தங்க இடமும், வயிற்றுக்கு உணவும்தான் மனிதனின் முதல் தேவைகள். உயிருடன் வாழ அத்யாவசியமான தேவைகள் தான் இவை. மனிதனுடைய ஆசை விரிந்தது. வாழ்க்கை யில் வாழ வசதிவேண்டும் என்று அவன் விரும்பினான். வசதிகளைச் செய்துகொள்ள வகை தேடினான். மனத்தில் தோன்றியதை மற்றவர்களிடம் சொல்ல ஜாடை காட்டினான். பிறகு சித்திரங்களை வரைந்து மனத்தின் எழுச்சிகளைக் கொட்டி னான்; தெளிவாகச் சொல்ல எழுத்துக்களையும் கண்டு பிடித் தான். வாழ்க்கை இன்பமாயிற்று. அவனுடைய அறிவு விரிந்தது. ஆணவம் பெருகிற்று. பலம் பொருந்திய கை களில் மனத்தில் தோன்றியதைச் செய்யும் ஆற்றலைப் பெற்றான். மனிதனோடு மனிதன் பழகப்பழகதான், தன்னுடையது என்ற எண்ணமும் சிறுகச் சிறுக வளர்ந்தது. புத்தி விகசித்தது. சாமர்த்தியம், வீரம் என்ற சொற்களும் அர்த்தமும் தோன் றின. மனிதன் உரிமை கொண்டாட ஆரம்பித்தான். தன் னுடைய ஆணையை மதித்து நடக்க மற்றவர்களை அடக்க முயன்றான். அவனுடைய புஜவலிமை உதவிற்று. தலை வன், வம்சம், ஜாதி, நாடு, என்று சமுதாயம் வளரலாயிற்று. மனித சமூகம் தோன்றிற்று; அடிமைப்பட்டது.

மனித உரிமைகளையும் சுதந்தரத்தையும் சட்டபூர்வமாக வற்புறுத்தி, மன்னன் மதித்துக் கையெழுத்திட்டது கி.பி. 1215-ஆம் ஆண்டில்தான். ரன்னிமீட் (Runnymede) என்ற இடத்தில் ஆங்கில அரசன் ஜான் (King John) மக்களுடைய உரிமைகளை அங்கீகரித்து மகா சாசனம் (Magna Charta) ஒன்றில் கையெழுத்திட்டுப் பிரகடனப்படுத்தினான். அதன்மூலம் தனிமனிதனுடைய உயிரும், சொத்தும், காப்பாற்றிக்கொள்ளும் உரிமையும் நியாயஸ்தலத்தில் விசாரணையும் ஆங்கில மக்களுக் குக் கிடைத்தது.

பிலடெல்பியாவில் 1776-ஆம் ஆண்டில் ஜூலை மாதம் 4-ம் தேதியன்று அமெரிக்க மக்களின் சுதந்தரம் பிரகடனப் படுத்தப்பட்டது. அமெரிக்காவில் குடியேறி, அந்த நாட்டைத் தாயகமாக ஏற்றுக்கொண்டு நாட்டின் சுதந்தரத்துக்காகப் போராடிய வீரர்கள் அந்நிய ஆட்சியினால் மனித உரிமை பறிமுதல் செய்யப்பட்டுவிட்டதாகக் கருதினர்கள். எல்லோரும் சமமாகவும், சுதந்தரமாகவும் வாழவேண்டும் என்று அவர்கள் எண்ணினர்கள். அதனால்தான் சுதந்தரப் பிரகடனத்தின் முன்னுரையையும் பின்வருமாறு எழுதினர்கள் : "எல்லா மனிதர்களையும், சம அந்தஸ்துடன்தான் ஆண்டவன் படைத்தான் ; எல்லாருக்கும் சம உரிமைகளைக் கொடுத்தான். வாழ்க்கையில் சுகமும், ஆனந்தமும் சுதந்தரமும் கிடைக்க எல்லோருக்கும் உரிமையுண்டு என்பதை நாங்கள் மனப்பூர்வமாக நம்புகிறோம். இந்த உரிமைகளை அனுபவிக்கவும் பராமரிக்கவும் மனிதர்கள் சர்க்காரை அமைக்கிறார்கள். மக்களுடைய அனுமதிபெற்று அவர்களுடைய உரிமைகளைக் காக்க சர்க்கார் வேலை செய்கிறது . . . . . "

மனித உரிமைகளுக்காக அடுத்தபடியாகப் போராடி வெற்றி பெற்றது பிரான்ஸ் தேசம்தான். 1789-ஆம் வருஷம் பிரஞ்சுப் புரட்சி நடந்ததும், பிரான்ஸின் தேசிய அசெம்பிளி கூடி, மனித உரிமைகளைப் பிரகடனம் செய்தார்கள். பிறகு 1793-ஆம் ஆண்டு முதல் குடியரசு அரசியல் சட்டம் ஏற்படுத்தியதும் அதில் சேர்த்து ஊர்ஜிதம் செய்தார்கள். அரசியல் சுதந்தரம், சமத்துவம், பேச்சு சுதந்தரம், தெய்வவழிபாட்டுச் சுதந்தரம், போன்ற புனிதமான உரிமைகள் இதன்மூலம் மக்களுக்குக் கிடைத்தது.

மனித உரிமைகளைப்பற்றி பல அறிஞர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். அமெரிக்கச் சரித்திரத்தில், ஆபிரகாம் லிங்கன் சொல்லியுள்ள பகுதி அதன் பொன் ஏடுகள். சுதந்தரப் பிரகடனம் செய்த முன்னோர்களைப்பற்றிச் சொல்லும்போது பின்வருமாறு அவர் குறிப்பிட்டார் : 'சுதந்தரப் பிரகடனம்

செய்த நம்முடைய முன்னோர்களைப்பற்றி நாம் குறை கூறமுடியாது. எல்லாரும் சமம் என்றோ, எல்லாரும் சமமாக வாழ்கிறார்கள் என்றோ, சமமாக வாழும் உரிமையை எல்லாருக்கும் வழங்கவேண்டும் என்றோ அவர்கள் சொல்லிக்கொண்டிருக்கவில்லை. அந்தமாதிரி ஒரு வரம் கொடுக்கவும் அவர்களால் முடியாது; உண்மையில் அவர்களுக்குச் சக்தியும் கிடையாது. மனித உரிமைகளை அவர்கள் பிரகடனம் செய்தார்கள். சமயமும் சந்தர்ப்பமும் கிடைக்கும்போது அமல் நடக்கட்டும் என்று எண்ணினார்கள்.'

லிங்கன் கூறியது போல, உலகமக்கள் எல்லோரையும் ஒரே குடும்பமாகப் பாவித்து, எல்லோருக்கும் சம உரிமை வழங்கவேண்டும் என்ற முயற்சியைத்தான் ஐ.நா. சபை செய்கிறது. மனித உரிமைகளை வற்புறுத்திச் செயலாற்றும் முயற்சியில் ஆபிரகாம் லிங்கன் இறங்கினார். அமெரிக்க நாடுகளின் ஜனாதிபதி ஆவதற்குப் பலவருஷங்களுக்கு முன்பேயே, அடிமைகளைக்காணும்போது, 'சந்தர்ப்பம் கிடைத்தால் அடிமைத்தனத்தை ஒழித்துவிடுவேன்' என்று அவர் சொல்லிக்கொள்வதுண்டாம்.

உள்நாட்டு யுத்தம் நடந்து கொண்டிருக்கும்போதே, 1863-ஆம் ஆண்டு வருஷப்பிறப்பன்று, அவர் அடிமைகளின் விடுதலைப்பிரகடனம் செய்து, குறிப்பிட்ட சில மாகாணங்களிலுள்ள அடிமைகளுக்கு சுதந்தரம் வழங்கினார். கெட்டிஸ்பர்கில் அவர் செய்த பிரசங்கம் சரித்திரப் பிரசித்தி வாய்ந்தது. அன்று அவர் பேசியதன் பகுதி வருமாறு: "எண்பத்தேழு வருஷங்களுக்கு முன்பு நம்முடைய முன்னோர்கள், நம்முடைய தேசத்தில் புது சமுதாயத்தைத் தோற்றுவித்தார்கள். ஆண்டவன் படைத்த அத்தனை மக்களும் சமமாகவும் சுகமாகவும் சுதந்தரமாகவும் வாழ உரிமையுண்டென்று பிரகடனம் செய்தார்கள்.... அவர்களுடைய (ஆசையை) வாக்கைக் காப்பாற்றி, அடிமைகளை விடுதலைசெய்து எல்லாரும் சமமாக வாழச் செய்யவேண்டியது நம்முடைய கடமை. ஆண்டவனுடைய கருணை

யினுல், சுதந்தரம் பெற்ற இந்தத் தேசத்தில் மக்களுக்காக மக்களின், மக்களாலான சர்க்கார், தீர்க்காயுள் பெற்று வளர்ந்து வாழட்டும்.''

உள்நாட்டுச் சண்டையின் முடிவில், அமெரிக்காவின் அரசியல் சட்டத்தில் பதின்மூன்று, பதினுன்கு, பதினைந்தாவது திருத்த ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டன. இதற்கு முந்திய ஷரத்துக்கள் ஜீவாதாரமானவையே. மனித உரிமைச் சட்டம் என்ற பெயரில் முதல் பத்து ஷரத்துக்களும் குறிப்பிடப்பட்டன. இவை 1791-ஆம் ஆண்டில் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டன. தனி மனிதனை சட்டவிரோதமாக சிறைப்படுத்திவிட்டால் நியாய ஸ்தலத்தின்மூலம் நீதிகோரும் உரிமையை இந்த ஷரத்துக்கள் அளிக்கின்றன. சில செயல்களைக் குற்றமாகக் கருதி சட்டம் தண்டிக்க முன்வரும்போது, தார்மீக ஆதரவில் மனிதனைக் காப்பாற்ற உரிமையும், அரசாங்கத்துக்குக் கட்டுப்படாமல், நெறியுடன் புகார்களை விசாரித்து நீதி வழங்க நியாய ஸ்தலங்களுக்கு உரிமையும், அதிகாரமும், மத சுதந்தரம், பேச்சு சுதந்தரம், அபிப்பிராய சுதந்தரம் இவற்றுடன் பத்திரிகை சுதந்தரமும் தனி மனிதனுக்கு அளித்தன. ஜூரிகள்மூலம் விசாரணை செய்யும் சலுகையும், குறைகளைத் தீர்த்துக்கொள்ள, பொதுக் கூட்டம் போடவும், தூதுகோஷ்டியாக சர்க்காரிடம் சென்று முறையிட்டுக்கொள்ளவும் உரிமைகள் வழங்கப்பட்டன.

குற்றத்துக்குத் தண்டனையாக அடிமைப் பட்டிருப்பதைத் தவிர, வேறு எந்தவிதமான அடிமைத்தனமும் நாட்டில் இருப்பது சட்டவிரோதம் என்பதே பதின்மூன்றுவது ஷரத்து. தனி மனிதனின் வாழ்க்கை, சொத்து, சுதந்தரம், இவற்றைப் பறிமுதல் செய்வதோ, தனி மனிதனுக்கு சட்டபூர்வமான பாதுகாப்பு அளிக்க மறுப்பதோ தவறு என்பதே பதினுன்காவது ஷரத்து. இனம், மதம், நிறம் என்ற காரணத்தாலோ, அடிமைகளாக வாழ்ந்தார்கள் என்பதற்காகவோ எந்த மனிதனுக்கும் வோட்டுரிமை மறுக்கக்கூடாது என்பதே பதினைந்தாவது ஷரத்தின் சாராம்சம். 1919-ஆம் வருஷம், 19-வது

ஷரத்து ஒன்று அரசியல் சட்டத்தில் சேர்க்கப்பட்டது. அதன் படி பெண்களுக்கும் வோட் உரிமை அளிக்கப்பட்டது. மத்திய சர்க்காரின் அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்ட பாதுகாப்புக் களைத் தவிர மாகாண சர்க்காரின் அமைப்பு விதிகளில், மனித உரிமைகளை மதித்து நடக்கும் ஷரத்துக்கள் பல சேர்க்கப்பட் டிருக்கின்றன.

பல வருஷங்களாகவே, மனித உரிமைகளை சட்டபூர்வமாக மதித்து நடக்க அமெரிக்கர்களாகிய நாம் முயன்று வருகிறோம் என்பது சரித்திர உண்மை. இந்த உரிமைகளை அனுபவித்து வருவதாகவே பலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். சட்ட பூர்வமாக மனித உரிமைகள் வழங்கப்பட்டிருப்பதால், அவற்றை அனுபவிக்க செயலாற்ற வேண்டும் என்று அவர்கள் எண் ணவே இல்லை.

நாம் சட்டத்தில் எழுதுவதற்கும் தினசரி வாழ்க்கையில் நடப்பதற்கும் எவ்வளவோ வித்யாசம் இருக்கிறது. இந்த (அமெரிக்க) நாட்டிலேயே சட்டத்தில் எல்லாரும் சமம் என் றிருந்தாலும் தனிப்பட்ட முறையில் பலர் அதை மதித்து நடப்பதில்லை. சட்டபூர்வமாக ஜீவாதார உரிமைகளைப் பெற்று லும், அனுபவிக்க முடியாமல் தவிக்கும் பல பிரஜைகள் அமெ ரிக்காவிலேயே இருக்கிறார்கள். மற்ற நாடுகளைவிட அதிகமான உரிமைகளையும் சுகங்களையும் தனி மனிதனுக்கு அளித்திருப்ப தாக அமெரிக்கா சொல்லிக்கொள்ள முடியும். உலக சரித் திரத்தில், மற்ற நாடுகளைவிட குழந்தைப் பருவத்திலிருக்கும் அமெரிக்கா நாடு, மனித உரிமைகளை மதித்து நடப்பதுடன், அடிக்கடி நம்முடைய செயல்களையும், மனித உரிமைகளை மதித்து நடப்பதில் நம்முடைய அந்தஸ்தையும் அடிக்கடி சோதி பார்த்துக்கொண்டு செயலையும் ஒன்றுக்க முயலவேண்டும். அப் படிச் செய்தால்தான் பிற நாடுகளுக்கு அமெரிக்க வழிகாட்டி யாக இருக்க முடியும்.

ஸான்பிரான்ஸிஸ்கோவில் 1945-ஆம் வருஷம் ஐ.நா. சபையின் சாசனத்தைப் பிரகடனம் செய்ய பிரதிநிதிகள் கூடிய

போது, மனித உரிமைகளை வற்புறுத்த எழு குறிப்புக்களைக் கொடுத்தார்கள். அந்தச் சாசனத்தின் 55-வது ஷரத்து வருமாறு : இனம், பால், பாஷை, மதம், என்ற பேத மில்லாமல் எல்லா மக்களுக்கும் மனித உரிமைகளை வழங்கி, கௌரவித்து நடக்க ஐ.நா. சபை சகல நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளும். ஐ.நா. சபையிலுள்ள எல்லா அங்கத் தினர்களும், இந்த ஷரத்தை வற்புறுத்தி, மதித்து நடக்க, தனித்தனியாகவும், எகோபித்தும் ஒத்துழைக்கிறோம் என்று வாக்குறுதி எடுத்துக்கொள்வதே 56-வது ஷரத்து.

மனித உரிமைகளில் சிலவற்றைப் பல நாடுகளில் பல்லாண்டு களாகவே மதித்து வாழ்கிறார்கள். உதாரணமாக, மதச் சுதந்தரத்தில் எல்லாருக்கும் சம உரிமையிருக்கிறது. ஒருவர் இஷ்டப்பட்டபடி தெய்வ வழிபாடு செய்வதை பிறர் தடுப்பதில்லை.

அடுத்தபடியாக, அமைதியாகவும், பகிரங்கமாகவும் பலர் கூடிப்பேசித் தங்களுடைய குறைகளைத் தீர்க்க பரிகாரம் தேடு வதும், சர்க்காரிடம் முறையிட்டுக்கொள்வதும் அங்கீகரிக்கப் பட்ட உரிமையாகும். பலாத்காரத்தைக் கைப்பிடிக்காமல், பிறரை வற்புறுத்தாமல், அரசாங்க நிர்வாகத்தைப்பற்றிச் சுதந் தரமாக அபிப்பிராயம்கூறவும், அதிருப்தியை வெளியிடவும், பரிகாரம் தேட மக்களின் சக்தியை உருவாக்கவும், உரிமை யுண்டு. இந்த உரிமையின் கீழ் பேச்சு சுதந்தரம், அபிப் பிராய சுதந்தரம், பத்திரிகை சுதந்தரம் எல்லாம் வந்து விடுகின்றன. சட்டபூர்வமாக இந்த உரிமைகளை அமெரிக்கா விலும், வேறு பல நாடுகளிலும் மக்கள் அனுபவித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

சர்க்கார் நிர்வாகத்தில் பங்கெடுத்துக்கொள்ள மக்களுக்கு உரிமையுண்டு. ஜனநாயக முறையில் அமெரிக்கர்களுக்குத் தீவிரமான நம்பிக்கையுண்டு. அதனால்தான் அமைதியான வழிகளில்கூட அபிப்பிராயத்தைச் சொல்லவோ, சர்க்காரிடம் அதிருப்திகாட்டவோ, வழியில்லாத நாஜி ஆட்சி முறையையும்

சர்வாதிகார ஆட்சி முறையையும் அமெரிக்கர்களாகிய நாம் வெறுக்கிறோம்.

சமீபகாலமாக, பரம்பரையாக எண்ணிவரும் அரசியல் சமூக சுதந்தரத்துடன், பொருளாதார உரிமைகளும் மனிதனுக்கு அவசியம் என்று சிலர் நினைக்க ஆரம்பித்திருக்கிறார்கள். சோற்றுக்கு வழியில்லாமல் கும்பி கொதிக்கும்போது சுதந்தரமும் உரிமையும் பேசிக்கொண்டு சர்க்கார் நிர்வாகத்தில் எவரும் தலையிடமுடியாது. அதனால்தான் சர்வாதிகார நாடுகள், மனிதனுக்கு மற்ற உரிமைகளைவிட பொருளாதார சமத்துவம் வேண்டும் என்று பசப்புகின்றன. அரசியல் சுதந்தரம் இருந்தால்தான், மதவழிபாட்டுச் சுதந்தரமும், மற்ற உரிமைகளும் அவசியம். இல்லாவிட்டால் சோற்றுப் பிரச்னையுடன் எல்லாம் முடிந்துவிடும்.

யுத்த காலத்தில், கையெழுத்தான அட்லாண்டிக் சாசனத்தில், முக்கியமான நான்கு சுதந்தரங்கள், மனிதனுடைய ஜீவாதார உரிமைகளைக் கொண்டவையேதான். ஆக்ரமிப்புப் பயம் இல்லாமலிருத்தல், வறுமையில் சிக்காமல் வாழ்தல், சுதந்தரமான தெய்வ வழிபாடு, மனச்சாட்சிப்படி நடக்கும் உரிமை, பேச்சு சுதந்தரம், அபிப்பிராய சுதந்தரம் இவைகளை அடைந்துவிட்டாலே ஐ.நா. சாசனத்தின் மனித உரிமைப் பிரகடனத்தின் முதற் பகுதிகளை நிறைவேற்றியவர்களாவோம். அட்லாண்டிக் சாசனத்தையும் ஐ.நா. சபையின் சாசனத்தையும் உருவாக்கியவர்களின் எண்ணத்தைப் புரிந்துகொண்டு மனித உரிமைகளை மதித்து நடக்கவேண்டுமானால், இவைகளை மிகவும் தெளிவாகவும், விரிவாகவும் எழுதி மனித சமுதாயத்துக்கு அளிக்க வேண்டும்.

மனித உரிமைகளை வற்புறுத்தும் இந்தச் சாசனம் வெறும் பிரகடனமல்ல. நாம் எல்லோரும் தினசரி வாழ்க்கையில், நம்மை நல்வழிபடுத்திக்கொண்டு மனச் சாட்சிக்கு விரோதமில்லாமல், பிறரையும் அவர்களுடைய உரிமைகளையும் மதித்து

நடக்கத் தூண்டும் நெறிமொழிகளாகும். இன, மத, நிற, வேறுபாடின்றி, நீதியும் நெறியுமுள்ள அடிப்படையில் மனித உரிமைகளை மதித்து நடக்கும் ஜனநாயக முறையில் நமக்கு நம்பிக்கை இருக்கிறது என்றும், மனித குலத்தை மதித்து நாம் நேர்மையாக வாழ்கிறோம் என்று எண்ணுவதிலும்தான் நம்முடைய லக்ஷியம் நிறைவேறுகிறது. ஆனந்த வாழ்வு கிடைக்கிறது.